மது, போதைப்பொருட்கள், பகடை (தாயம்) ஆடுதல் போன்றவற்றை ஒழித்தான். சர்தார்களின் கூட்டம், சாதாரன மக்களுட்ன ஆன நட்பு முறை மற்றும் பெருங்குடி மக்கள் இடையேயான உறவினை கட்டாயப்படுத்தினான். இவன் காலத்தில் சிறிய சிறிய சாகுபடி பூமிகளில் விவசாயம் செய்த கீழ்வாக்க விவசாயிகள் முதல் பெரிய பெரிய (ஜமீன்தார்கள்) திலச்சுவான்தாரர்கள் கூட வரி கட்ட வேண்டி வலியுறுத்தப்பட்டது. விவசாயிகளினால் குறிப்பிட்ட அளவு முறையில் வரியை வசூல் செய்வதற்கு வரி அதிகாரிகளை நியமித்தான்.

©KTBS Not to be republished

### இராணுவ சீர்திருத்தம்:

வீரர்களின் நியமனம், பயிற்சி மற்றும் குதிரைகளை கவனிக்கும் பொறுப்பினை இராணவு மந்திரிக்கு வழங்கப்பட்டது. வீரர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அவர்களின் சம்பளம் ஒவ்வொரு மாதமும் அம்மாத இறுதிக்குள் ரொக்க வடிவில் வீரர்களின் அடையாளம் கண்டு பதிவு செய்துகொள்ளும் முறை ஆரம்பமானது. இச் செயல்களுக்காக ஹலியா எனும் பெயரில் (தாஸ்தாவேஜிகளை) பதிவேடுகள் நடைமுறைக்கு கொண்டு வரலாயிற்று. குதிரைகளுக்கு 'தாக்' என்றால் அடையாள முத்திரை பதிக்கும் முறை நடைமுறைக்கு வந்தது. வீரன் தனது ஊதியம் பெறுவதில் ஏதாவது பிரச்னை இருந்தால் நேரடியாக சுல்தானிடமே புகார் அளிக்கலாம்.

**உங்களுக்கு இது தெரிந்திருக்கட்டும்**

***தோ -அப்***

இரு நதிகளின் இடையேயான பகுதியை தோ-அப் என்கிறார்கள். உதாரணம் கங்கா - யமுனா தோ-அப்

### சந்தை சீர்திருத்தங்கள்:

அல்லாவூத்தீன் நடைமுறைக்கு தந்த சந்தை சீர்திருத்தங்கள் அவனுக்கு வரலாற்றில் அபாரமான இடத்தை பெற்றுத்தந்தது. சாதாரண மக்களுக்கும் கூட வாழ்வின் அவசியமான பொருட்களான தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், சர்க்கரை, உப்பு மற்றும் எண்ணெய்களை நியாயமான விலைக்கு கிடைக்கும் வகையினை செய்தான் அவ்வாறே குதிரை மற்றும் அடிமைககளின் விற்பனைக்கும் வழிகோலினான். சந்தையை கட்டுப்படுத்த ஸ்ஹனா - இ - மண்டி எனும் சிறந்த அதிகாரிகளை நியமித்தான். மோசம் செய்தவர்களுக்கு கடுமையான தண்டனையை அளித்தான்.

### துக்ளக் வம்சம் (கி.பி. 1320 - 1399)

துக்ளக் வம்சத்தை கியாசுத்தீன் நிறுவினான். கியாசுத்தீனனை ஆட்சியமைப்பின் நீதி மூலம் தில்லியில் அமைதி மற்றும் சுயகட்டுப்பாடு நிலை நிறுத்தினான். மங்கோலியரின் படையெடுப்பினை தடைசெய்ய எல்லைப்பாதுகாப்பினை ஏற்படுத்தினான். விவசாயிகளுக்கு நீர்பாசனத்திற்காக கால்வாய்களை அமைத்து, நிலவரியைக் குறைத்தான். குதிரை மற்றும் (கால்நடையாக செல்லும்) ஆட்கள் மூலமாக தபால்களை விநியோகம் செய்தனர். தில்லி அருகே துகலகாபாத் கோட்டையை கட்டினான். வாரங்கல், மதுரையை வசப்படுத்திக்கொண்டு குஜராத் மற்றும் வங்காளத்தில் சுயாட்சியைக் காப்பாற்றினான். இவ்வம்சத்தில் மற்றுமுள்ள முக்கிய சுல்தானென்றால் முகம்மது பின் துக்ளக் மற்றும் ஃபிரோஜ் துக்ளக் ஆவர்.

©KTBS Not to be republished

### முகம்மது பின் துக்ளக்

இவன் பாரசீகம் மற்றும் அரேபிய மொழிகளில் புலமைப் பெற்றிருந்தான். கணிதம், பூகோளம் அறிவியல், மருத்துவ இயல், பாரசீகக் காவியம், வாணவியல் முதலான விஷயங்களில் புலமைப் பெற்றிருந்தான். அபாரமான அறிவு பெற்றிருந்தான். எனினும் அவனின் நடத்தையில் மாறுபட்டு காணப்பட்டான். முகம்மது பின் துக்ளக் தனது காலத்திற்கும் அப்பாற்பட்ட நூற்றாண்டுகளில் நின்று யோசித்தான். ஆனால் அவனின் திட்டங்களை செயல்வடிவம் தருவதில் பக்குவமும், நிர்வாக சிறப்பும் அதிகாரிகளுக்கு இல்லை.

### நிர்வாக (ஆட்சியமைப்பில்) சீர்திருத்தங்கள்:

**வரிசீர்த்திருத்தம்:** அரசின் நிலவரிக்கு சம்பந்தமான நிலத்தின் அனைத்து விவரங்கள் கொண்ட அதிகார பூர்வமான தகவல்கள் கொண்ட புத்தகத்தை நடைமுறைக்கு கொண்டு வந்தான். விவசாயத் துறையை ஏற்படுத்தினான். விவசாயத்திற்கு பயன்படாத நிலத்தை சாகுபடிக்கு பயன்படும்படி செய்தான் விவசாயிகளுக்கு நிதி உதவி அளிக்க பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தினான். ஆனாலும் தோ-அப் பகுதிகளின் விவசாயிகள் இவனின் காலத்தில் அதிகமான நிலவரியை செலுத்த வேண்டியதானது.

**இதனை அறிக**

**வரிகள்:**

1. கராஜ் - முகமதியர் அல்லாதோரின் மீதுவிதிக்கப்பட்ட நிலவரி
2. உஷ்ரா - முகமதியர் மேல் விதிக்கப்பட்ட விவசாய வரி
3. ஜாகாத் - இஸ்லாமியர் மேல் விதிக்கப்பட்டவரி
4. ஜெசியா - இந்துக்கள் மீது விதிக்கப்பட்ட சமயவரி

### தலைநகர் மாற்றம்:

முகம்மது பின் துக்ளக் தனது தலைநகரை தில்லியிலிருந்து மத்திய இந்தியாவின் தேவகிரிக்கு மாற்றினான். இதன் முக்கிய நோக்கம் பரந்த பேரரசிற்கு தலைநகரம் மையப்பகுதியில் இருக்கவேண்டும் மேலும் வெளிநாட்டினர் படையெடுப்பிலிருந்து காக்கவும் வசதிக்காகவுமாக இருந்தது திட்டம் நலம்பயப்பதாக இருப்பினும் மாற்றத்திற்கான சரியான முன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எண்ணிக்கையற்ற மக்கள் துன்பத்திற்கு ஆளானார்கள்.

### புதிய நாணய வெளியீடு:

நாணயங்களின் மதிப்பை தனது காலத்தில் தங்கம் மற்றும் வெள்ளியின் மதிப்பிற்கு சமமாகுமாறு செய்தார் 'தினார்' எனும் தங்க நாணயத்தையும் 'அதலி' எனும் வெள்ளி நாணயங்களையும் புழக்கத்திற்கு தந்தார். அவைகளை இலை

©KTBS Not to be republished

நுணுக்கமுடன் வடிவமைத்திருந்தனர் சில வருடங்களுக்குப் பிறகு தாமிரம் மற்றும் பித்தளைகளினால் ஆன நாணயங்களை புழக்கத்திற்கு தந்தார்.

நாணயங்களை அச்சிடுவது அரசின் உரிமையாக தலைமுறைகளாக நாணயங்களை அச்சிடும் உரிமையைப் பெற்றிருந்த குடும்பங்கள் இருந்தன. சுல்தானின் அனுமதி பெறாமல் உபயோகத்திற்கும் அதிகமான நாணயங்களை வெளியிட்டதினால் பெரும் குழப்பம் ஏற்பட்டது. அதிகமான செலவினால் நிர்வாகத்தின் நடவடிக்கைகள் கடுமையான வறட்சிகாலம், தலைநகர் மாற்றம், மீண்டும் பழைய தலைநகருக்கே திரும்பி வந்தமை, முதலானவைகளினால் அரசின் கருவூலம் காலியானது.

***தக்காணக்கொள்கை:***

முகம்மது பின் துக்ளக் தக்காணத்தில் வென்ற பகுதகளினின் மீது தன் ஆட்சியை ஏற்படுத்தினார். காகத்தீயர்களின் தலைநகரமான வாரங்கல்லினை கைப்பற்றினான் அவ்வாறே ஹொய்சளர்களின் தலைநகரான துவாரசமுத்திரத்தை நிர்மூலமாக்கினான். தென் இந்தியாவில் இருக்கும் மதுரையை வென்று அதன் ஆட்சி பொறுப்பில் ஜலாலுத்தீன் ஹஸன்ஷானை ஆளுநராக நியமித்தான். இவ்வாறு இந்தியாவில் பரந்த பேரரசை நிறுவிய தில்லி சுல்தான்களில் முகம்மது பின் துக்ளக் முதலாமவன். முகம்மது பின் துக்ளக் பெரிய படையை வைத்திருந்தான். இவனின் இறுதி பதினோரு வருடங்கள் ஆட்சிக்காலத்தில் தென் இந்தியாவில் இருபத்தேழு புரட்சிகள் நடந்து விஜயநகர் மற்றும் பஹமனி அரசின் தோற்றத்திற்கு காரணமாயின.

முகம்மது பின் துக்ளக்கிற்கு பிறகு வந்த ஃபிரோஜ் ஷா துக்ளக் காலத்தில் பல்வேறு குடிமக்களுக்கு நலம் பயக்கும் செயல்கள் நடைமுறைக்கு வந்தன. குடிமக்களுக்கு நன்மை ஏற்படுத்தும் குறிக்கோளுடன் தகாவி கடனை தள்ளுபடி செய்தார். முகம்மது பின் துக்ளக்கின் தாக்குதலினால் பாதிப்படைந்த குடிமக்களுக்கு உதவும் நோக்கில் பணம் அளித்தான். சுமார் இருபது வரிகளை இரத்து செய்தான் தனியார் சுரங்கவரியும் மற்றும் நீர்பாசன வரியும் வசூலிக்கப்பட்டன.

பல நகரங்களையும், மசூதிகளையும், மதரஸாக்களையும் அணைகட்டுகளையும், கால்வாய்களையும் கட்டினான். இவன் ஹிஸ்ஸாரா, ஃபிரோஜாபுரா, பிரோஸாபாத், ஜானபுரா அன்றைய புகழ்பெற்ற கல்விமையமாக விளங்கின. பயணிகளின் வசதிக்காக தர்மசாலைகளைக் கட்டினார்.

***சையத் வம்சம்***

முல்தானின் ஆளுநரான கிஜர்கான் சையத் தில்லியைக் கைப்பற்றி இவ்வம்சத்தின் ஆட்சிக்கு அடிகோலினான். தோஹா, பியான் மற்றும்



©KTBS Not to be republished

குவாலியர்களில் ஆட்சி அமைத்தான் மற்றும் பல கிளர்ச்சிகளை ஒடுக்கி அமைதியையும், சட்டம் ஒழுங்கையும் மற்றும் பாதுகாப்பையும் நிலைநாட்டினான். முகம்மது ஷா, அல்லா - உத்-தீன் மற்றும் அலம் ஷா இவ்வம்சத்தின் பிற முக்கிய சுல்தான்கள். அலம் ஷானை பஹலோல் லோதி தோற்கடித்து சையத் வம்சத்தின ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தான்.

### லோதி வம்சம் (கி.பி. 1451 - 1526)

இது தில்லியை ஆண்ட கடைசி சுல்தான் வம்சம். பஹ்லோல் லோதி சிக்கந்தர் லோதி மற்றும் இப்பிராஹிம் லோதி இவ்வம்சத்தின் சுல்தான்கள். சிக்கந்தர் லோதி பிஹார், வங்காளம், தோல்புர் மற்றும் சந்தேரிகளை கைப்பற்றினான். தில்லியில் அமைதி நடவடிக்கை எடுத்தான்.

அவனின் வாரிசுதாரன் இப்ராஹிம் லோதி இவனுக்குப் பின் தலைமை ஏற்றான். இந்தியாவின் மீது படையெடுத்து தாக்குதல் நடத்துமாறு ஆலம்கான் மற்றும தௌலத்கான் ஆப்கானியர்களுக்கு வருவதற்கான வாயப்பை அளித்தனர். அதன்படி பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து கி.பி **1526**ல் நடந்த பானிபட் போரில் இப்ராஹிம் லோதியை தோற்கடித்து முகலாயரின் ஆட்சிக்கு அடிகோலினான்.

### தில்லி சுல்தான்களின் கொடைகள்:

#### நிர்வாக முறை:

பெரும்பாலான தில்லி சுல்தான்கள் சர்வாதிகார ஆட்சியாளர்களாவார்கள். படையின் தளபதிகளாகவும் முதன்மை நீதிபதிகளாகவும் விளங்கினர். சுல்தான்களின் ஆட்சி குரானின்படி நடந்தன. சர்தார்கள், அமீர்கள், மற்றும் உலேமர்கள் ஆட்சியில் தமது பங்கை வகித்தனர். மைய அரசின் ஆட்சி நிர்வாகத்திற்கு இராணுவத் துறை, வெளிநாட்டுத் துறை, செய்தித் துறை, தான-தர்மம் மற்றும் கொடை துறைகள் இருந்து அவைகளின் மேற்பார்வைக்கு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் இருந்தனர்.

நாடு பல மண்டலங்களாக பிரிக்கப்பட்டன. ஆட்சி நிர்வாகத்திற்காக சிக்தார், அமீன் மற்றும் சௌகிதார் நியமிக்கப்பட்டனர். வரி வசூலித்தல், அமைதியை காப்பாற்றுதல் கல்வி அளித்தல், சுற்றுப்புறத்தூய்மையைப் பாதுகாத்தல் இவர்களின் முக்கிய கடமைகளாகும்.

சுல்தான்களின் காலத்தில் கராஜ் (நிலவரி) ஜகாத், உஷ்ரு, கம்ஸ் (போரில் கொள்ளையடித்த செல்வத்திற்கான வரி) ஜெசியா, வாரிசுதாரர் இல்லாத சொத்தின் மீதான வரி, இறக்குமது வரி, வீட்டு வரி முதலானவைகளினால் கிடைக்கும் வருமானம் முதன்மையானவைகளாக இருந்தன. வரி வசூலிப்பதற்கு அதிகாரிகள் இருந்தனர். காஜிகள் மாகாணம் மற்றும் பட்டணங்களில் நீதி நியாயம் வழங்குதல் சுலத்தான்களுக்கு உறுதுணையாக இருந்தனர்.



©KTBS Not to be republished

**சமூக அமைப்பு முறை:**

சுல்தான்களின் ஆட்சியில் முஸ்லிம் மற்றும் இந்து சமுதாயங்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் மற்றும் சடங்குகளைப் பின்பற்றினர். பழைய சமூக அமைப்பிற்கு பல்வேறு சீர்திருத்தங்கள் இந்து பக்தி முறை அடியார்கள் மற்றும் முஸ்லிம் சமூகத்தின் சூபி பிரிவின் இறை அடியார்களால் தரப்பட்டன்.

சுல்தான்களின் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் துருக்கியின் மூலம் சார்ந்த சர்தார்களையே நிர்வாகத்தின் முக்கியமான பணிகளுக்கு நியமனம் செய்தனர். துருக்கியரின் வலிமை படிப்படியாக மங்கியது.

கில்ஜி மற்றும் துக்ளக் வம்சத்தின் ஆட்சியில் இஸ்லாம் சமயம் சார்ந்தவர்கள் அதிலும் சேவை செய்த சமுதாயத்தவர்களுக்கு, கூடிய கல்வியாளர், அறிஞர்களுக்கும மற்றும் இந்துக்களில் மிகவும் முக்கியமான பணிகளே கிடைத்தன. இதனால் இக் காலத்தின மரியாதை மிகுந்த பிரிவினருக்கு இந்தியாவின் நடை உடை பழக்க வழக்கம், ஆடை அலங்காரம், உணவு, பானங்கள, இசை பிற கலாச்சார அம்சங்கள் அறிமுகமாயின வரி வசூலிப்பு துறையில் அந்துகளுக்கும் கூட அதிகாரிகள் மற்றும் அலுவலர்களை நியமிக்கப்பட்டன.

அடிமை வம்ச முறை இருந்தது. போர்க் கைதிகளை அடிமைகளாக நியமித்தனர். அரண்மனையில் மிகுதியான பெண் அடிமைகள் இருந்தனர். பெண்களின் நிலை சிறப்பாக இல்லை. பர்தா மற்றும் குழந்தை மணம் முறைகள் வழக்கத்தில் இருந்தன உயர்குடி பெண்கள் கலைகளில் பங்குபெற்றனர். கிராமத்து பெண்கள் விவசாயம், வீட்டு வேலைகளில் ஈடுப்பட்டிருந்தனர்.

**பொருளாதார நிலைமை :**

விவசாயத்திற்கு உகந்த பெரும்பான்மையான மாற்றங்களை சுல்தான்கள் அளித்தனர். வரி வசூலிக்கும் முறை மற்றும் தீர்மானித்து முன்காலத்தில் இருந்த முறைகள் மாற்றம் அடைந்தன. ஏழை விவசாயி இடம் இருந்து துவங்கி பணக்கார விவசாயிக்கும் கூட வரி செலுத்த வேண்டும் என்பது சுல்தான்கள் காலத்தின் வரி வசூலிப்பு முறையில் அமைந்த முக்கிய பண்பாகும்.

போக்குவரத்து சாதனங்கள் மேம்பட்டன குஜராத்திலிருந்து துவங்கி வங்காளம் வரையிலான சாலை வழிகள் அமைக்கப்பட்டன. வெளிநாட்டு வியாபாரிகள் இடை (மத்திய) காலத்தின் அனத்து சிறிய, பெரிய பட்டணங்களின் சந்தைகளுக்கும் வந்தார்கள் மற்றும் இங்கேயே நிலைத்தனர். இதனால் கைவினைஞர்களுக்கு ஊக்கம் கிடைத்தது இந்தியாவில் கைத்தொழில் பொருட்கள் ஐரோப்பாவின் சந்தைகளினை அடைந்தன. தில்லி மற்றும் பிற முக்கிய நகரங்களில் சுல்தான்கள் மற்றும் பெரும் வணிகர்கள் தங்கம், வெள்ளி ஆபாரணங்கள் மற்றும் பட்டுத் துணிகள் தயாரிப்பு தொழிற்சாலைகள் நடத்தினர்.

©KTBS Not to be republished

**இலக்கியம்:**

அயல்நாட்டு எழுத்தாளர்கள் மற்றும் வரலாற்று அறிஞர்கள் சுல்தான்களின் அரசவையில் மதிப்பும் ஆதரவும் பெற்றிருந்தனர். அவர்களின் படைப்புகள் அரபிக், பர்ஷியன் மொழிகளில் உள்ளன. முகம்மது கஜனியின் அரசவையில் அல்பெருனி எனும் புகழ்பெற்ற கல்விமான் இருந்தார் இவன் தத்துவஞானி, கணித வரலாற்று ஆசிரியனும் ஆவார். இந்தியாவின் சமூக தார்மீக, செய்திகளை கொண்ட தாரீக் - இ - யாமினி பொருளாதார ஹசன் நிஜாமின் 'தாஜுல் மாசிக்' எணும நூல்களை இயற்றினார். மின்ஹாஜ் உஸ் அரசன் 'தபகத் - ஈ - நாசிரி' எனும் நூலை இயற்றினார். அமீர் குஸ்ரு ஆறு முக்கிய நூல்களை இயற்றி இந்து முஸ்லிம் பண்பாடுகளைப் பற்றிய விவரங்களை அளித்துள்ளான். இவனை 'இந்தியாவின் கிளி' என்று அழைத்தனர். ஜியாயுத்தீன் பரணியும் 'தாரிக் - இ - ஃபிரோஜ்ஷாஹி' மற்றும் ஃபிரோஜ் துக்ளக் 'புதுஹத் -இ-ஃபிரோஜ்ஷாஹி' எனும் நூல்களை இயற்றி உள்ளார்.

**கலை மற்றும் கட்டிடக்கலை:**

சுல்தான்கள் இந்தியாவில் 'இந்தோ-இஸ்லாமிக்' புதிய பாணி கட்டிடக்கலையை அறிமுகப்படுத்தினர். வளைவுகளும் மற்றும் குவிந்த மேற்கூரையும், சுற்றுச்சுவர்களும் இப்பாணியின் முக்கிய பண்புகள். தில்லி சுல்தான்கள் கோட்டை, மசூதி, அரண்மனை, பொதுக் கட்டிடங்கள், மதரசா, இலவச கல்விக்கூடங்கள் ஆகியவற்றைக் கட்டினர். இந்தோ இஸ்லாமி பாணிக்கு உதாரணங்கள்: தில்லியின் குவத் - உல் - இஸ்லாம் மசூதி, குதுப் மினார். அலை தரவாஜா, ஜமைத் கானா மசூதிகள்.


அலைய்தர்வாசா


குவாத்-உல்-இஸ்லாம்

©KTBS Not to be republished

## பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்களை சரியான சொற்களினால் நிரப்புக:**

1) குர்ஜர - பிரதிஹார இராஜபுத்திர வம்சத்தை நிறுவியவர் ________
2) பிருத்விராஜ சௌவாஹணன் முதலாம் தரெயின் போரில் ________ தோற்கடித்தார்.
3) முகம்மது கோரியின் முதன்மை படைத்தளபதி ________
4) தில்லி சுல்தான்களில் முதல்பெண் ஆட்சியாளர் ________
5) கில்ஜி வம்சத்தின் புகழ் பெற்ற சுல்தான் ________
6) துக்ளக் காலத்தில் தலைநகரை தில்லியில் இருந்து ________ ற்கு மாற்றப்பட்டது

**II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி:**

1) இராஜபுத்திர அரசர்கள் இலக்கியத்துறைக்கு அளித் கொடைகளை விவரி.
2) இல்தமஷின் நிர்வாக முறையை விவரமாகக் கூறுக.
3) அல்லாவுத்தீன் கில்ஜியின் நிர்வாக சீர்திருத்தங்கள் யாவை?
4) முகம்மது - பின்-துக்ளக் நடை முறைப்படுதிய நிர்வாக சீர்த்திருத்தங்கள் யாவை?
5) தில்லி சுல்தான்கள் கலை மற்றும் கட்டிடக்கலைக்கு அளித்த கொடைகள் யாவை? உதாரணம் கூறுக.

**III. செயல்பாடுகள்**

1) இந்திய வரைபடத்தில் இராஜபுத்திரர்களின் ஆட்சிபரப்பைக் குறிக்கவும்.
2) இந்திய வரைபடத்தில் தில்லி சுல்தான்கள் வென்ற இடங்களைக் குறிக்கவும்.

**IV. செயல்திட்டம்**

ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் தில்லி சுல்தான்கள் பற்றி படங்கள் மற்றும் தகவல்களை சேகரித்து படத்தொகுப்பு தயாரிக்கவும்.

*****

©KTBS Not to be republished

*அத்தியாயம் - 3*

# சமய பரப்பளர்கள் மற்றும் சமூக சீர்த்திருத்தவாதிகள்

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களைப் பற்றி அறிகின்றோம்.**

- இந்தியாவின் சமய பரப்பளார்கள் அறிமுகம் மற்றும் போதித்த தத்துவம் மற்றும் போதனைகள்.
- சங்கராச்சாரியார், மத்வாச்சாரியார், இராமனுஜாச் சாரியார், பசவண்ணர் ஆகியோரி வாழ்க்கை மற்றும் போதனைகள்.
- த்வைதம், அத்வைதம் மற்றும் விசிஸ்டாத்வைதம் கொள்கைகள்.

கர்நாடகாவின் சமூக, தார்மீக வரலாற்றில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் இருந்து 13 ஆம் நூற்றாண்டின் முதல் அரை நூற்றாண்டு வரையிலான காலம் மிகவும் முக்கியமானதாகும். இந்த காலத்திலேயே மூன்று வைதீக சமயங்களை வளர்த்து காத்து புகழ் பெற்றவர்களான ஆச்சார்யத்ரயர் சங்கரா், மத்வர் மற்றும் இராமனுஜர் வாழ்ந்தார்கள். மூன்று முக்கிய வேதாந்த கிளைகளான அத்வைதம், த்வைதம் மற்றும விசிஸ்டாத்வைதம் கொள்கைகள் பிரசாரத்திற்கு வந்தன. அன்றி சாதி மற்றும் பால் சமன்பாட்டின்மையையும் எதிர்த்து பசவேஸ்வரர் கல்யாணில் சமூக புரட்சிக்கு அடிப்படையானது அவை குறைந்தபட்சம் ஆன்மீக தத்துவ கொள்கைகள் ஆகாது. சமூக மற்றும் மதத்தினை பகுத்தறிவளவில் சீர்திருத்தின. இந் நோக்கம் சாதனைக்காக குலம், மதம் மற்றும் இனப்பாகுபாடின்றி அனைத்து இன மக்களும் கடவுளிடம் சரண்டையுமாறு போதித்து பக்திமார்கத்தின் மூலம் சமூக மற்றும் மதத்தினை மறுசீரமைத்தனர்.

**சங்கர ஆச்சாரியார்**

**சங்கராச்சாரியார் மற்றும் அத்வைதக் கொள்கை:**



**சங்கராச்சாரியார்**

சங்கரர் கேரளாவின் காலடி கிராமத்தில் நம்பூதிரி பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். தந்தை சிவகுரு, தாய் ஆர்யாம்பா ஆவர். சிறந்த ஞானம் பெற்றிருந்த சங்கரர் தமது ஏழாம் வயதிலேயே அனைத்து சாஸ்திரங்களிலும் புலமை பெற்றிருந்தார். கோவிந்த பகவத் பட்டர் எனும் குருகளிடம் இவர் வேத - சாஸ்திரங்களை முழுமையாகக் கற்றார்.

சங்கரர் உபநிடதங்கள் மற்றும் பிரமம் சூத்திரங்களுனையும் ஆழ்ந்து கற்று அத்வைத கொள்கையினை எடுத்துரைத்தார். அத்வைதம் என்றால் ஒரு அல்லது ஒன்றே எனும் பொருள். இதன்

©KTBS Not to be republished

படி ஜீவத்மா மற்றும் பரமாத்மா வேறு வேறு அல்ல. இரண்டும் ஒன்றே. பிரம்மன் ஒருவனே உண்மை பிற உலகம் பொய்.

உலகம் ஒரு மாயை. பிரம்மா மட்டுமே உண்மை. ஞானமார்க்த்தின் மூலம் நாம் உலகின் மாயை அறிந்து பரம உண்மையான பிரம்மனுடன் நமது ஜிவாத்மாவை ஒன்றுபடுத்துதல் அப்போது மட்டுமே அனைவருக்கும் பேரின்பப் பெருவீடு கிடைப்பது உறுதி. இவ்வாறு சங்கரர் ஞானமார்கத்தின் முதன்மையானவரானர் ஜீவாத்மாக்கு தனிப்பட்ட வாழ்வாதாரம் இல்லையென உறுதிபடக் கூறிய சங்கரர் இதனையே ''நானே பிரம்மன்'' அல்லது ''அகம் பிரம்மாஸ்மி'' என்பதாக (நான் பிரம்மன்) உறுதி எடுத்துரைத்து அனைத்து உயிரினங்களிலும் இருக்கும் உயிர்ப்பு மேலானது என்று உறுதிப்படுத்துவதன் மூலம் வாழ்வாதார மேலானது என்று உறிதப்படுத்துவதன் மூலம் வாழ்வாதார நிலையில் சமத்துவத்தைப் போதித்தார். பிரம்மா உண்மை. அது வரையறை அற்றது அதற்கு பண்புகள் இல்லை மற்றும் அவகாசம் இல்லை என்றும் எடுத்துரைத்தார்.

**சங்கரர் இயற்றிய இலக்கியங்கள்:**

சங்கரபாஸ்யம், ஆனந்தலஹரி, சௌந்தர்யலஹரி, சிவானந்த லஹரி, விவேக சூடாமணி, ப்ருபுத்த சுதாகரா, மற்றும் தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரம் முதலான முக்கியமான இலங்கியங்களை சங்கரர் ''பஜகோவிந்தம்'' ஸ்தோத்திரம் மிகவும் புகழ்பெற்றதாகும்.

சங்கரர் கால்நடையாகவே கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீரம் வரை இந்தியாவின் அனைத்து பகுதிகளுக்கும் சென்று தமது அத்வைதக் கொள்கையை எடுத்துரைத்தார். தமது அத்வைதக் கொள்கையின் பிரசாரத்திற்காக அதனை பரப்புவதற்காக இந்தியாவின் பல பாகங்களிலும் 5 மடங்களை நிறுவினார். சங்கரர் இந்தியாவின் பகுத்தறிவு சிந்தனைக்கு புதிய வடிவம் மற்றும் உயிர்ப்பு அளித்தார்.

**சங்கரர்ச்சாரியார் நிறுவிய மடங்கள்**

*1. பத்ரிநாத் - ஜோதிர் மடம், 2. துவாரகா - காளிகா மடம் 3. பூரி - கோவர்த்தன மடம் 4. சிருங்கேரி - சாரதா மடம், 5. காஞ்சி - காமகோட்டி மடம்.*

**இராமானுஜாச்சாரியார் விசிஸ்டாத்வைதம்**

**இராமானுஜ ஆச்சாரியார்**

இராமானுஜ ஆச்சாரியர் தமிழ்நாட்டில் சென்னைக்கு அருகில் ஸ்ரீ பெரும்புதூர் எனும் கிராமத்தில் பிறந்தார். தந்தை கேசவ சோமயாஜி, தாயார் காந்திதேவி ஆவர். தென் இந்தியாவின் புகழ்பெற்ற கல்வி மையமான காஞ்சியில்

©KTBS Not to be republished

யாதவ பிரகாஷர் என்பவரிடம் வேதம், உபநிடதங்களைக் கற்றார். பிறகு ஸ்ரீரங்கத்திற்கு சென்று அங்குள்ள மடத்தின் தலைவரானார். சைவ சமயத்தினைப் பின்பற்றிய சோழ அரசன் இராமனுஜ ஆச்சார்யரை அச்சுறுத்தினான். பல்வேறு துன்பங்களை அளித்தான். அதுசமயம் கர்நாடக இராச்சியத்தின் ஹொய்சள அரசன் (பிட்டிதேவன்) விஷ்ணுவர்த்தனன் இவரை வரவேற்றான். பின்னர் அரசன் பிட்டிதேவன் வைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு சமயமாற்றம் அடைந்து விஷ்ணுவர்ததனன் எனும் பெயர் பெற்றான் எனக் கூறலாகிறது. இராமானுஜர் மேல்கோட்டைக்கு சென்று செலுவநாராயணா கோயிலைக் கட்டினார்.



ராமானுஜாச்சாரியார்

இராமனுஜ ஆச்சாரியார் அனைத்து மக்களுக்கும் வீடுபேற்றினை அடையும் வழியைக் காட்டும் பணியில் அதிகமாக ஆர்வம். அவர் எடுத்துரைத்த கொள்கையை 'விஷிஸ்டாத்வைதம்' என அழைக்கலாகின்றது. இதன்படி உயிர் மற்றும் இயற்கை பிரம்மனுள் அடக்கம் ஆத்மா மற்றும் பிரமாத்மா ஒரே சமயத்தில் ஒன்றாக இயலாத ஒன்று என்று தெளிவுப்படுத்தினான். வீடுபேற்றிற்கு பக்தி மற்றும் அதீதமான பணிவுடனான (சரண்டையும் பக்தி) மிகவும் முக்கியம் என்றுக் கூறினார். சாதி வேறுபாட்டை கண்டித்த இராமானுஜர் பக்தி தத்துவத்தை அனைத்து சாதி மக்களுக்கும் உபதேசித்தார் ஆசைகளில் இருந்து தூரமாகி ஆத்மா பரிசுத்தத்தினால் இறைவனுக்கு சரணாக வேண்டும் என்று போதித்தார். இவ்வாறு வீடுபேற்றின் சாதனைக்காக பக்திமார்க்கத்தை எடுத்துக் கூறினார். சாதி வேறுபாட்டை கண்டித்த இராமானுஜர் பக்தி தத்துவத்தை அனைத்து சாதி மக்களுக்கும் உபதேசித்தார் ஆசைகளில் இருந்து தூரமாகி ஆத்மா பரிசுத்தத்தினால் இறைவனுக்கு சரணாக வேண்டும் என்று போதித்தார். இவ்வாறு வீடுபேற்றின் சாதனைக்காக பக்திமார்க்கத்தை எடுத்துக்கூறினார்.

இராமானுஜர் வேதங்களைக் கற்று பல்வேறு நூல்களை இயற்றினார். வேதாந்தங்களின் சங்கரஹா, வேதாந்தா சாரா, வேதாந்தா தீபிகா, ஸ்ரீபாஷ்ய மற்றும் தமது பெருமை வாய்ந்த இலக்கியமான "கீதாபாஷ்யத்" தில் பக்தி கொள்கைக்கு பெருஞ் சிறப்பு மற்றும் முக்கியத்துவத்தை பெற்றிருந்தார்.

வட இந்திய அடியார் இராமானந்தா, இராமதாசர், இராமானுஜர் தத்துவத்தினால் ஈர்க்கப்பட்டனர். இவர் வட இந்தியாவில் பக்திமார்க்கம் வளர்வதற்கு வழிகோலினார். அவ்வாறே விஜயநகரத்தின் துளுவா மற்றும் அரவீடு வம்சத்தின் அரசர்கள் இத்தத்துவத்தின் ஆதரவாளராயினர்.

©KTBS Not to be republished

**உங்களுக்கு தெரிந்திருக்கட்டும்**

தென் இந்தியாவின் சில முக்கிய ஸ்ரீவைஷ்ணவமடங்கள்

1. யதிராஜா மடம் - மேல்கோட்டை மற்றும் ஸ்ரீ பெரும்புதூர்
2. பரகால (பிரம்மதந்திரா மடம்) - மைசூர்
3. அஹோபல மடம் ஆஹோபல, (குண்டூர் ஆந்திர பிரதேசம்)
4. ஆண்டவன் மடம் - ஸ்ரீரங்கம்
5. வானமா மலை மடம் - சுசீந்திரம்

***மத்வாச்சார்யர்***

மத்வாச்சார்யர் கர்நாடகத்தில் உடுப்பி அருகில் பாஜகத்தில் பிறந்தார். மத்வகேஹபட்ட மற்றும் வேதாவதி இவரின் தந்தை - தாய் ஆவர். விஷ்ணு இவரின் இஷ்ட தெய்வம். மத்வாச்சாரியார் சிறுவயதிலேயே செறிந்த வேத அறிவையும், ஞானத்தையும் பெற்றிருந்தார் என காணலாகிறது. குருவான அச்யுதப்ரேக்ஷகரிடம் தீட்சை பெற்றுக்கொண்டார் குருவிடம் வேதங்களைக் கற்கும் போதே மத்வாச்சாரியார் சுதந்திரமாக தமது ஞானசக்தியை வளர்த்துக் கொண்டார், மேலும் தர்மசாஸ்திரங்களின் வாதத்தில் தமது குருவையே தோற்கடித்தார். இவர் 'த்வைதம்' கொள்கையை போதித்தார். 'த்வைதம்' என்றால் இரண்டு என்று பொருள் ஜீவாத்மா மற்றும் பரமாத்மா வேறு வேறு என்பதே த்வைதம் என்பதே இதன் பொருள்.



**மத்வாச்சாரியர்**

மத்வாச்சாரியார் தமது கொள்கையைப் பரப்புவதற்காக தீர்த்தயாத்திரை மேற்கொண்டு பல்வேறு வாதங்களில் கலந்து கொண்டார். ஹடகின் கோசந்தன் எனும் மண்ணின் மேட்டிலிருந்த ஸ்ரீ கிருஷ்ணனின் உருவச்சிலையை உடுப்பியில் நிறுவி வழிபட்டார். ஸ்ரீ கிருஷ்ணனின் பூசைக்காக அஷ்ட (எட்டு) மடங்களை நிறுவினார்.

***மத்வர் நிறுவிய அஷ்டமடங்கள்:*** பலிமாரு, அதமாரு, கிருஷ்ணபுரம், புத்திகெ, ஷிரூரு, சோதெ, காணியூரா மற்றும் பேஜாவரா மடங்கள் ஆகும்.

மத்வாச்சார்யரின் கொள்கையின்படி உலகம் மாயை அல்ல. அது பரமாத்மனைப் போன்றே உண்மையானது. இவைகளில் ஈஷ்வரன் மாத்திரம் சுதந்திரம். மிகுதியான உலகம் மித்யெ (பிரமை - பொய்) வடிவமானது. பரமாத்மனுக்கும், உயிர்களுக்கும் இறைவன்சேவகன் சம்பந்தம் உள்ளது.

©KTBS Not to be republished

விஷ்ணு அல்லது நாராயணா ஒருவனே. அனைத்து மானவன். விஷ்ணுவை பக்தியுடன் பூசிப்பதால் ஆத்மார்த்தமான அல்லது வீடுபேறு கிடைப்பது உறுதியானது என்று போதித்தார்.

***மத்வாச்சாரியாரின் நூல்கள்:***

*கீதாபாஷ்யா, கீதாதாத்பர்யா நிர்ணயா, மஹாபாரதத் தாத்பர்யநிர்ணயா விஷ்ணு தாத்பர்ய நிர்ணயா, பாகவத தாத்பர்யா மாயாவாத கண்டனே முதலானவைகள் ஆகும். மத்வாச்சாரியார் கொள்கைகளை பின்னர் பத்மநாப தீர்த்தர், நரஹரி தீர்த்தர், விஜயேந்திர தீர்த்தர் மற்றும் வாதிராஜ தீர்த்தர் ஆகியோர் பரப்பினர்.*

***பசவேஸ்வரர் - பசவேஷ்வரர்***



***பசவேசுவரர்***

*இடைக்காலத்தில் கர்நாடகத்தின் சமூகத்தை சீர்திருத்தப் போராடிய முதன்மையாக தோற்றுவித்தவர்களில் பசவேஷ்வரரும் ஒருவராக உள்ளார். இந்து மதத்தில் வேரூன்றிய எண்ணிக்கையற்ற சமய பழக்க வழக்கங்கள் மரபுச் செயல்கள் ஒதுக்கி விட்டு மனித நேய மாண்புகளின் அடிப்படையின் எளிமையான வீரசைவ கொள்கையை பசவேஷ்ரர் மற்றும் அவரின் ஆதரவாளர்களான சரணர்கள் பரப்பினர். பசவேஷ்வரர் இன்றைய விஜயபுரம் மாவட்டத்தில் பசவனின் பாகேவாடியில் மாதரஸா மற்றும் மாதலாம்பிகெ தம்பதியரின் மகனாவார். சாதி முறைக்கு கடுமையான எதிர்ப்பாளராக இருந்த பசவேஷ்வரர் தனது உபநயனம் நடந்த சமயத்தில் பூணுலினை அறுத்து எரிந்து விட்டு கூடலசங்கம்த்திற்கு சென்றார். அங்கு சைவகுருகளின் வழிகாட்டுதலில் லிங்க தீட்சையைப் பெற்று தியானத்தில் ஆழ்ந்தார்.*

*தமது திறைமையினால் பசவேஷ்வரர் கலச்சூரி அரசன் பிஜ்ஜளனின் கருவூல அதிகாரியானார். உயர்ந்த அதிகாரியாக இருப்பினும் செல்வம், அதிகாரம், ஆட்சி நிர்வாகம் இவை எதுவும் அவரின் மனதில் எவ்வித மனசஞ்சலனத்தை ஏற்படுத்தவில்லை. தமது சமூக மற்றும் மதத்திலிருந்து வாழ்க்கையையே தேவையற்ற பழக்கவக்கங்களை துடைத்தெறியதுவங்கினார்.*

*சமூகம் மற்றும் சமயத்தின் தேவையற்ற பழக்க வழக்கங்கள முழுமையாக களைத்தெறிய தம்மையே அர்ப்ணித்தார் வாழ்க்கை இந்த சமூக, சமய போராட்டங்களை பசவண்ணா மங்களகேடியல்லியில் கடுமையான போராட்டத்தை ஆரம்பித்தார். சிவசரணனானவன் சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க எண்ணினார். ஆத்ம பரிசுத்தமான பக்தியே சிவனை சேரும்*

©KTBS
Not to be republished

உண்மையான வழி என்று எடுத்து ரைத்தார். ஒவ்வொருவரும் உழைத்து உண்ண வேண்டும் எனும் சுய சுதந்திரமான கொள்கையை எடுத்துரைத்த பசவேஷ்வரர் காயகம் என்னும் தொழில் பெரியது சிறியது என்று ஏதுமில்லை என்று எடுத்துரைத்தார். தமது காயக தத்துவத்தின் நடைமுறைப்படுத்த மக்களில் உழைப்பு எனும் கலாச்சாரத்தை வளர்த்தார். காயகவே கைலாசம் என்று உரைத்த பசவண்ணர் இந்த தத்துவத்தை நடைமுறைக்கு தருவதற்கு முயற்சித்தார். இத்தகைய உணர்வுகள் இன்றும் நமது சமுதயத்திற்கு வழிகாட்டும் தீப ஒளியாக உள்ளன.

பசவேஷ்வரர் பீதர் மாவட்டம் பசவகல்யாணத்தில் 'அனுபவ மண்டபம்' எனும் பெயரில் சரணர்களின் ஒரு ஆன்மிக மையத்தை ஆரம்பித்தார். இங்கு பவசண்ண முதற்கொண்டு அனைத்து சிவசரணரும் சமூக பிரச்னைகளான சாதி மற்றும் பால் வேறுபாட்டினைக்குறித்த பிரச்சனைகளை விவாதித்தனர். அவ்வாறே தார்மிக, நிறை குறைகளை விவாதித்தனர் மேலும் அவைகளுக்கு சிகிச்சை முறை தகவல்களை பரிகாரங்களைக் காட்டினார். இதுமட்டுமின்றி ஆன்மீக செய்திகளை விவாதித்தனர். அந்தரங்கம் பகிரங்கம் எனும் உள்ளமும் உடலும் சுத்தமாக இருக்கவேண்டும். அதுவே உண்மை என்று கூறிய சரணர்கள் ஆன்மீக எண்ணங்கள் அவர்களின் நடை மற்றும் மொழி மூலம் வந்த அம்சங்களாக வசனங்களின் வடிவங்களாக தோன்றின.

சாதாரண மக்களுக்கும் பொருள் புரியும்படி வசனங்கள் கொண்ட சரணர்களின் வாழ்க்கை தகவல்கள் ஒரு புரட்சி அமைப்பை உருவாக்கின.

அவர் எளிமையான கன்னடமொழியில் பயன்படுத்தியதன் மூலம் தமது போராட்டம் பொதுமக்கள் அமைப்பானது

உலகின் மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள். பிறப்பினால் யாரும் தீண்டத்தகாதவர்கள் கிடையாது. ஆனால் நடை உடை, சிந்தனைகளால், செயலாலும் சொல்லாலும் மட்டுமே தீண்டத்தகாதவர்களாக ஆகின்றார்கள் என்று வசனங்கள் மூலம் பிரச்சாரம் செய்தார். அனைறைய சமூகத்தில் வேர் ஊன்றிய நிறை குறைகளை எடுத்து காண்பித்து தெளிவான அறிவினை ஏற்படுத்த முயற்சித்தார். இந்த வசனப் போராட்டத்தில் சாதி பேதமற்று அவரின் ஆதாரவாளர்கள் ஒன்று கூடினர். இவர்களில் முக்கியமானவர்கள் அல்லமபிரபு, அக்கமஹாதேவி, சித்தராமா, மோளிகெ மாரய்யா, அம்பிகர சௌடய்யா, மடிவாள மாசய்யா, மாதார சென்னய்யா, ஹரளய்யா, கின்னரி பொம்மய்யா மற்றும் ஏராளாமான எண்ணிக்கை அற்றவர்கள் மொத்தத்தில் சமத்துவத்தினையே விருப்பக் கொள்கையாகக் கொண்டிருந்த பசவேஷ்வரர் மற்றும் அவரின் ஆதரவாளர்களை கர்நாடகாவின் சூழலில் மனித உரிமைகள் போராட்டத்தின் தலைவர்கள் என்று கூறலாம்.

©KTBS Not to be republished

**உங்களுக்குத் தெரியுமா?**

பசவண்ணர் ஒரு வசனத்தில் இவ்வாறு கூறியுள்ளார். ஒவ்வொருவருக்கும் அவரின் ஏழ்மை வளமை சாதி - இனம் எதுவாக இருந்தாலும் சிவனின் கிருபைக்கு மற்றும் மோட்ச்த்திற்கு தகுதியானவன். அது யாருக்கும் இயலாத ஒன்று அல்ல. ஏனென்றால் சிவன் நம்முள்ளே நிலைத்து இருக்கின்றான்.

## பயிற்சிகள்

**I. கீழ்க்கண்ட கோடிட்ட இடங்களை சரியான சொற்களினால் பூர்த்தி செய்க.**

1. சங்கராச்சாரியார் கேரளாவின் ________ பிறந்தார்.
2. உலகம் மாயை, பிரம்மா மட்டும் உண்மை என்று எடுத்துரைத்தவர் ________ ஆவார்.
3. இராமானுஜாச்சார்யரின் சீடர்களை ________ என அழைக்கப்பட்டனர்.
4. த்வைதம் கொள்கையினை எடுத்துக்கூறியவர் ________

**II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு குழுவில் விவாதித்து பதிலளிக்கவும்.**

1. அத்வைதக் கொள்கையைக் குறித்து விவரி.
2. இராமனுஜாச்சாரியார் எடுத்துரைத்த கொள்கை யாது? அவரின் சமயத்தை என்னவென்று அழைக்கலாகிறது?
3. இராமனுஜாச்சாரியரின் விசிஷ்டாத்வைத கொள்கையை விவரிக்கவும்.
4. மத்வாச்சாரியார் எடுத்துரைத்த கொள்கை யாது?
5. பசவேஷ்வரரின் காயக தத்துவம் பற்றி எழுதுக.
6. அனுபவ மண்டபத்தை துவக்கியவர் யார்? அதன் நோக்கங்கள் யாவை?
7. சங்கராச்சாரியார் இயற்றிய நூல்களைக் குறிப்பிடுக்.

**III. செயல்பாடுகள்:**

1. வசனங்களை சேகரித்து ஒரு குழுவினில் வாசித்து விளக்க உரை அளிக்கவும்.
2. பசவண்ணரின் வசனகாரர்களின் படங்களை சேகரிக்கவும்.
3. வசனங்களின் பாட்டுப் போட்டியை ஏற்படுத்துக.

**IV. திட்டங்கள்**

1. ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் த்வைதம் மற்றும் அத்வைதம் கொள்கைகளின் தத்துவங்கள் பற்றி கட்டுரை எழுதுக.
2. இன்றைய வசனகாரர் ஒருவரை பள்ளிக்கு வரவழைத்து பல்வேறு வசனங்களை வாசிக்கச் செய்க.

©KTBS Not to be republished

*அத்தியாயம் - 4*

# *விஜயநகரப் பேரரசு மற்றும் பாமனி அரசு*

***இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்ச''ங்களைப்பற்றி அறிகிறோம்.***

- *விஜய நகரம் மற்றும் பாமினி இராச்சியங்களின் தோற்றம்*
- *விஜய நகரம் மற்றும் பாமினி இராச்சியங்களை ஆண்ட அரச வம்சங்கள்*
- *கிருஷ்ண தேவராயரின் சாதனைகள் மற்றும் கொடைகள்.*
- *விஜய நகரப் பேரரசின் காலாச்சார கொடைகள்.*
- *பாமினி பேரரசின் காலாச்சார சாதனைகள்.*

*விஜயநகரப்பேரசின் தோற்றம் இந்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை பறைசாற்றியது. தென்னிந்திய அரசு வழியினர்களாகிய தேவகிரியின் யாதவர்கள், வாரங்கல்லின் காகத்தீயர்கள், மதுரைப் பாண்டியர்கள், ஹளேபீடு ஒய்சாளர்கள் மற்றும் தஞ்சை சோழர்கள் ஆகியோர் அல்லா உத்தீன் கில்ஜியின் படையெடுப்புக்கு வீழ்ச்சியுற்றனர். இதன் விளைவாக பெருங்குழப்பம், அரசியல் நிலையின்மை அச்சம் மற்றும் சமயத்துன் புறுத்தல்களும் நாடெங்கும் நிலவின. இத்தகு சூழ்நிலையில்தான் இந்து மதத்தையும் இந்திய பண்பாட்டையும் போற்றி பாதுகாப்பது விஜய நகரப் பேரரசின் தலையாய கடமையாயிற்று. இப்பேரரசு 15 ஆம் நூற்றாண்டில் தெற்கில் இந்து மகா சமுத்திரம், கிழக்கில் வங்காள விரிகுடா மற்றும் மேற்கில் அரபிக் கடல் வரையுள்ள நிலப்பகுதிகளில் உள்ள அனைத்து இராச்சியங்களின் மீது தன்னுடைய அதிகாரத்தை நிலை நாட்டியது.*

*சங்கமாவின் புதல்வர்களான ஹரிஹரர், புக்கா, கம்பனா, மாரப்பா மற்றும் முத்தப்பா ஆகியோர் கி.பி. 1336ல் துங்கபத்திரா ஆற்றின் தென்கரையில் விஜய நகரப் பேரரசை நிறுவினர்.*

***விஜயநகர சாம்ராச்சியத்தை ஆண்ட நான்கு அரசு வம்சங்கள்***

↓

| சங்கம | சாளுவ | துளுவ | ஆரவீடு |
|---|---|---|---|

*சங்கம வம்சத்தின் (கி.பி. 1336-1486) புகழ் பெற்ற அரசர்களென்றால் ஹரிஹரர் மற்றும் புக்கர். இரண்டாம் ஹரிஹரர் மற்றும் பிரவுட தேவராயர் முதலானாவர்கள் ஆவர்.*

©KTBS Not to be republished

அக்க மற்றும் புக்க ஆகியோர் இப்போரரசை துங்கபத்திரா நதியின் தென்கரையில் ஏற்படுத்தினார். பிறகு ஹம்பி விஜயநகரப்பேரரசின் தலைநகராயிற்று.

முதலாம் ஹரிகரர் ! புக்கா, இரண்டாம் ஹரிகரர் மற்றும் பிரவுட **(prouda)** தேவராயர் ஆகியோர் சங்கமவழியினரின் புகழ்மிகு அரசர்களாவர், முதலாம் ஹரிஹரா குன்றுகள் சூழ்ந்த விஜயநகரத்தை புதியநகராக நிறுவி அதனை விரிவாக்கினார்.

**புக்கராயர்**

புக்காவின் மகன் கம்பனா மதுரை சுல்தானை வீழ்த்தி பேரரசை விரிவாக்கினார். கங்காதேவி வடமொழியில் இயற்றிய ஸ்ரீமதுரா விஜயம் என்ற நூல் இவ்வெற்றியைப்பற்றியத் தகவல்களை தருகிறது. புக்கா, கொண்டவீடு ரெட்டிகளை தோற்கடித்து பெனுகொண்டா பகுதிகளை பேரரசுடன் இணைத்தார். புக்கா வைணவர்களுக்கும் சமணர்களுக்கும் இடையே நிலவிய சமயப்பூசல்களை தீர்த்துவைத்து சமயப் பொறுமையையும் சமய நல்லிணக்கத்தையும் கைக்கொண்டார் என்று சரவண பெலகுளாவின் கல்வெட்டுபறைசாற்றுகின்றன. தலைநகரில் கோட்டையும் கோயில்களும் கட்டப்பட்டன. உழவுத்ததாழில்கள் பெரிதும் ஆதரிக்கப்பட்டன. சீன அரசவழியினராகிய மிங் **(Ming)** அரசவைக்கு ஒரு தூதுவர் அனுப்பி வைக்கப்பட்டார்.

***அறிக :***

ஹரிகரரின் ஆட்சிகாலத்இல் வேதவிளக்க உரைகள் முடிவுற்றது எனவே இரண்டாம் ஹரிஹரர், வைதிக மார்க்க ஸ்தாபானாச்சாரியா என்ற பட்டத்தைப் பெற்றார். அவர் தன் பேரரசு முக்கியமான 26 நகரங்களில் சந்தைகளை முன்னேற்றினார்.

***இத்தாலிய பயணி?***

நிக்கோலே கொந்த்தி என்னும் இத்தாலிய பயணி விஜய நகரத்திற்கு வருகைத்தந்தார். அவர் விஜயநகரத்தைப் பற்றி சுவையான செய்தியை அளித்துள்ளார். தலைநகரம் 60 மைல் பரப்பளவு உள்ளதாக இருந்தது என்று கூறியுள்ளார்.

***உங்களுக்கு தெரியுமா?***

கி.பி. 1443 ஏப்ரல் மாதத்தில பாரசீக அரசு தூதுவர் அப்துல் ரசாக் விஜய நகரப் பேரரசின் தலைநகரை பார்வையிட்டார். இப்பேரரறன் புகழால் பரவசமடைந்த அவர். இதுவரை விஜயநகரைப் போன்று, எந்த அரசை கண்களும் காணவில்லை, எந்த காதுகளும் கேட்கவில்லை. உலகில் விஜயநகருடன் ஒப்பிடுவதற்கு வேறு எந்த இடமும் இல்லை என்று கூறுகிறார்.

## இரண்டாம் ஹரிஹரர் (கி.பி. 1377 - 1404)

புக்கராயரின் இரண்டாவது மகன் இரண்டாம் ஹரிஹரரின் 27 ஆண்டு ஆட்சி காலத்தில் விஜய நகரப்பேரரசு மிகப்பரந்த ஆட்சிப் பகுதி



©KTBS Not to be republished

இணைக்கப்பட்டது. அவர் கொண்டவிடு, கர்நூல், நெல்லூர் மற்றும் ராமநகர் கோட்டைகளையும் வென்றார். கி.மி.1378-ல் பாமினி சுல்தானாகிய முஜாஹித் இறந்தபிறகு அவர் விஜயநகரப் பேரரசை வடக்கில் கோவா முதல் சாவுல் **(Chaul)** வரைக்கும் தாபோல், காரேபத்தான் முதல் கொங்கணம் கடற்கரை வரை விரிவுப்படுத்தினார்.

அவர் கி.மி. 1378-ல் கிருஷ்ணா ஆற்றின் வடபகுதியாகிய பாங்களாவை வென்றார். ஏரிகள் மற்றும் கால்வாய்களை அமைத்தின் மூலம் விவசாய விளைப்பொருட்களின் உற்பத்தி அதிகப் படுத்தப்பட்டன. திருக்கோயில்களுக்கு மானியங்கள் ஏராளமாக வழங்கப்பட்டன. இரண்டாம் ஹரிகரருக்குப் பிறகு முதலாம் விருபாக்ஷா மற்றும் இரண்டாம் புக்கராயா போன்றோர் ஆட்சிபுரிந்தனர்.

### இரண்டாம் தேவராயர் (கி.பு. 1424 -1446)

சங்கம அரச வழியினரின் இரண்டாம் தேவராயர் ஓர் ஒப்பற்ற ஆட்சியாளர் ஆவார். அவர் "பிரவுடதேவராயர்" **(Prouda Devaraya)** என்றும் அழைக்கப்பட்டார். அவர் மேலும் கஜபெண்டகாரா (யானைவேடர்) என்ற பட்டத்தையும் கொண்டார். அவர் இராணுவ சீர்திருத்தம் மேற்கொண்டு இஸ்லாமியர் களையும் தன்படையில் சேர்த்துக்கொண்டார். அவர் ஒரிசாவின் கஜபத தேவேந்திராவை **(Gajapa devendra)** வென்று கொண்டவீடு பகுதியையும் வென்றார். அவர் எல்லைப்பகுதிகளில் இருந்த அரசர்களை வீழ்த்தி அரசின் கிழக்கு எல்லையை கிருஷ்ணா வரை நீடித்தார். அவர் கேரளாவையும் வென்று இலங்கையிலிருந்து கப்பம் வசூலித்தார். இவ்வாறு அவர், தக்ஷிணபதாதா சக்ரவர்த்தி என்றழைக்கப்பட்டார். இவ்வாறு விஜய நகரப் பேரரசின் எல்லைகள் இலங்கை முதல் குல்பர்கா வரையிலும் வங்காளம் முதல் மலபார் வரையிலும் பரந்துவிரிந்திருந்தது.



**இராஜ இலச்சினை**

அவர் தன்னுடைய நேர் எதிரியான பாமனி அகமது ஷாவை பீஜப்பூர் வரை துரத்தியடித்து முத்து முத்கல் மற்றும் பங்காப்பூர் கோட்டைகளை மீட்டார். ஆட்சிப்பரப்பை விரிவுப்படுத்துவதில் இரண்டாம் தேவராயரின் படைத்தளபதி லக்கண்ணா தாண்டேஷா பெரும் பங்கு வகித்தார். சமய ஒப்புரவு,

©KTBS Not to be republished

மதநல்லிணக்கம் இரண்டாம் தேவராயரின் உயர் கொள்கையாக விளங்கியது. தலைநகரில் மசூதி ஒன்று கட்டப்பட்டது. சமண மற்றும் வைணவ ஆலயங்களும் கட்டப்பட்டன. சிறந்த கவிஞரான இரண்டாம் தேவராயர் அரசவையில் தெலுங்கு கவிஞர் ஸ்ரீநாதா, வடமொழி அறிஞர் குண்டாவின் திண்டிமா மற்றும் கன்டைக்கவி லக்கண்ண தண்டேஸ்வரர் இருந்தார்கள். தேவராயர்காலத்தில் வீரசைவமும் மற்றும் இலக்கம் கலாச்சாரங்கள் செழித்தோங்கியது. கி.பி. **1446** ல் பிறகு வந்த அரசர்கள் வலிமை குன்றியவர்களாக இருந்ததினால் சங்கம வம்சத்தில் ஆட்சி முடிவடைந்தது.

படைத்தளபதியுமான லக்கண்ணா தாண்டேஷ் போன்றோர்களும் வீற்றிருந்தனர். தேவராயரின் ஆட்சி காலத்தில் வீரசைவதாயர் கி.பு. **1446**ல் இறந்தார். பிறகு சங்கம அரசவழியினரில் வலிமையற்ற மல்லிகார்ஜுனா மற்றும் இரண்டாம் விருபாக்ஷா ஆகியோரின் ஆட்சியோடு சங்கம அரச வழியினரின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

©KTBS Not to be republished

### கிருஷ்ண தேவராயர்

துளுவ அரசவழியினரான நரசநாயக்காவின் இரண்டாம் மனைவி நாகலாம்பிக்கைக்கு கிருஷ்ண தேவராயர் மகனாகப் பிறந்தார். விஜயநகரப் பேராசின் ஓர் ஒப்பார்ந்த அரசராக அவர் திகழ்ந்தார். அவருடைய ஆட்சிகாலத்தில் விஜயநகரப்பேரரசு புகழின் உச்சத்தை தொட்டது. அவர் உலகப்புகழ்வாய்ந்த அசோகர் சமுத்திரகுப்தர் மற்றும் ஹர்ஷவர்த்தனர் ஆகிய அரசர்களின் வரிசையில் வைத்து போற்றப்படுகிறார். அவர் ஏறத்தாழ **21** ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். அவர் ஆட்சி பொறுப்பை ஏற்றபோது பேரரசின் உள்ளும் புறமும் பலப்பிரச்சனைகள் தலைதூக்கின. புதியகடல் வழிமூலம் இந்திய கடற்கரையில் நுழைந்த ஐரோப்பியர்கள் தங்களின் குடியேற்றங்களை நிறுவி மேற்கத்திய பண்பாட்டை பரப்பினர். வடக்கில் ஆட்சிபுரிந்த மொகலாயர்கள் தென்னகத்தில் தங்களின் ஆட்சித் தடங்களை பதிக்க முயன்றனர். பாமனி ஷாஹி சுல்தான்கள் கிருஷ்ணதேவராயருடன் ஓயாப்போரில் ஈடுபட்டனர். மேலும் விஜய நகரப்பேரரசின் வளர்ச்சிகண்டு உம்மத்தாரு மற்றும் ஒரிசா. ஆட்சியாளர்கள் வெறுப்பை உமிழ்ந்து உதட்டைப்பிதுக்கி செய்வதறியாது திகைத்தனர்.



**கிருஷ்ண தேவராயர்**

**கிருஷ்ணதேவராயரின் இராணுவ சாதனைகள் :**

கிருஷ்ண தேவராயர் பட்டத்திற்கு வந்தபோது உள் நாட்டு கலவரம் ஓங்கி, சட்டம் சீர் குலைந்து காணப்பட்டது கி.பி. 1510 முதல் 1521 வரை நீண்ட காலம் முற்றுகை போர் மற்றும் வெற்றிகளுடன் நிறைந்திருந்தது 14 முக்கிய போர்களை நடத்தி வெற்றி கொண்டார்.

கிருஷ்ணதேவராயர் ஓர் தனித்தன்மைவாய்ந்த போராளி, அரிவார்ந்த வீரர் மற்றும் கைத்தேர்ந்த ஒரு ராஜதந்திரி என்று ஆங்கில வரலாற்றாளர் ராபர்ட் சீவல்விளம்புகிறார். அவர் எதிர்கொண்ட எல்லாப்போர்களிலும் வெற்றி வாகைச் சூடி இந்தியாவில் விஜய நகரப்போரரசின் எல்லையை விரிவுப்படுத்தினார். அவர் கி.பி. 1510 உம்மத்தூரின் நிலக்கிழாரான கங்கராஜாவை தோற்கடித்து சிவன சமுத்திர கோட்டையைக்கைப்பற்றினார். அதே வருடத்தில் அவர் ராய்ச்சூர் கோட்டையையும் கைப்பற்றினார். அவர், கோவாவை விஜயாபுர சுல்தானிடமிருந்து போர்த்துக் கீசியர்கள் கைப்பற்ற உதவினார். எனவே, போர்த்துக்கீசியர்களோடு அவர் வாணிக உறவை மேற்கொண்டார்.

உதயகிரி கோட்டையை கைப்பற்ற படையெடுத்தார். என்னால் கைப்பற்ற முடியாத கோட்டையா இது? இதோ ஒரே நாளில் இதை கைப்பற்றுவேன் என்று அவர் கூறிக்கொண்டார். இது அவருடைய வீரத்தையும் சவால்




©KTBS Not to be republished

மனப்பான்மையையும் நமக்கு மறைசாற்றுகிறது. அவர் கி.பி. 1512-1518ல் கலிங்கத் தலைநகரான கட்டாக்கை வென்று அதன் அரசர் கஜபதி பிரதாபருத்ராவை தோற்கடித்து அவருடன் அமைதி உடன்படிக்கையை மேற்கொண்டார்.

கிருஷ்ண தேவராயர் விஜயாபுரம் ஆதில் ஷாவை வீழத்தி ராய்ச்சூரை வென்றார். ராய்ச்சூரை தகர்க்கும்முன் தன்னுடைய வீரர்களிடம், ஒவ்வொருவரும் உலகில் இறப்போரே ஆனால் இப்போரில் மடிவோர் விண்ணகத்தில் இடம்பிடிப்பர் எனவே எல்லோரும் என்னுடன் கிளம்புக களம்புக ; கொழையாயிராதீர்கள் எனஉரைத்தார்.

ராய்ச்சூர் வெற்றிக்குப்பிறகு அவர் பீதர் மற்றும் கலபுரகி கோட்டைகளையும் வென்றார். மேலும் அவர் பாமனியின் தலைமை அமைச்சரான காசிம் பரித்தை வீழத்தி பாமனியின் மைந்தரான ரோயாவை பீதர் ஆட்சி கட்டிலிலிருந்து இறக்கினார். இதனால் அவர், யவனராஜ்ய பிரதிஸ்தாப்னாச்சாரியா என்ற பட்டத்தைக் கொண்டார். கிருஷ்ணதேவராயர் இறந்தபோது விஜய நகரப்பேரரசு பரந்து எல்லா திசைகளிலும் விரிந்திருந்தது.

> **செயல்பாடு :**
> தெனாலி ராமக்கிருஷ்ணாவின் அறிவு நுட்பத்தை வெளிப் படுத்தும் அவருடைய கதைகளை படிக்கவும்.

கிருஷ்ணதேவராயர் போர்களத்தில் திறமையுள்ளது போலவே, நிர்வாகத்திலும் கைத்தேர்ந்தவராக விளங்கினார். அவருடைய ஆட்சித்திறன் அறிவை நாம் அவர் இயற்றிய ஆமுக்த மால்யதா என்ற நூலில் காணமுடிகிறது. அவர் அனைத்து சமயத்தினருக்கும் முழு ஆதரவை நல்கி உழவர் பெருங்குடி மக்கள் விளைபொருள் உற்பத்தியைப் பெருக்க நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தினார். அவர் போர்த்துக்கீசியர்களின் தோழமைப்பண்போடு வெளிநாட்டு வாணிகத்தை அதிகப்படுத்தினார். திருமணவரியை ஒழித்தார். கலை, இலக்கியம், மற்றும் மத நல்லிணக்கத்தையும் பேணிகாத்தார். அவருடைய அரசவை அஷ்டதிக்கஜங்கள் என்ற எட்டு தெலுங்கு கவிஞர்களால் அலங்கரிக்கப்பட்டது. கவிஞரான கிருஷ்ணதேவராயர் ஆமுக்தமால்யதாவை தெலுங்கிலும் ஜாம்பாவதி கல்யாணம் என்ற நாடகத்தை வடமொழியிலும் இயற்றினார். அல்லசாணி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, தூர்ஜூட்டி (Dorjooti) தெனாலி ராமகிருஷ்ணா மற்றும் பலர் இவருடைய ஆட்சி காலத்தில் இருந்த முதன்மையான அரசவை தெலுங்கு கவிஞர்கள் ஆவர். கவி திம்மண்ணா என்ற கன்னட கவிதையை இயற்றினார்கள்.

கிருஷ்ணதேவராயர் ஹம்பியில் கிருஷ்ணர் கோயிலை கட்டினார். இன்னும் பல கோயில்களை கட்டியதோடு அவர் விருபாக்ஷா கோயிலையும் அதனையொட்டியே கல்யாண மண்டபத்தையும் கட்டி முடித்தார்.

©KTBS Not to be republished

போர்த்துக்கீசிய பயணி பார்போசா எல்லாசமய மக்களும் முழு உரிமைப் பெற்று மகிழ்வுடன் வாழ்ந்ததை கண்டுணர்ந்து எழுதினார். அவருடைய திறன்மிகு ஆட்சியையும் புகழ்ந்துள்ளனார்.

## விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சி

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும் :** பெனுகொண்டர், சந்திரகிரி, பட்டேபீடு, திருவாடி (திருநாவுக்கரசு) திருவாடி (முலுபாகல்) சாந்தலிகே (சிவமுக்கா பகுதி) மற்றும் மங்களூஷி போன்றவை விஜயநகரப்ப பேரரசின் முக்கிய மண்டலங்கள் ஆகும்.

கிருஷ்ண தேவராயருக்குபின் அச்சுத ராயருக்குப்பின் சதாசிவராயார் ஆட்சிக்கு வந்தார். அவருடைய ஆட்சிகாலத்தில் அரவிடு அரசவழியினராகிய கிருஷ்ண தேவராயரின் மருமகனான ராமராயரின் கையில் ஆட்சி நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. அவர் **23** வருடங்கள் இப்பேரரசுக்கு புகழை ஏற்படுத்தினாலும், விஜயநகரப் பேரரசுக்கு எண்ணற்ற எதிரிகள் எழுந்தனர்.

ராம ராயரின் விஜயாபுர மற்றும் கோல்கொண்டாவின் வெற்றிகள் தக்காண சுல்தான்கள் மற்றும் விஜயநகரப்பேரரசுக்குமிடையே ஓயாத போர்களை ஏற்படுத்தின. விஜய நகரப்பேரரசின் வளர்ச்சியையும் வளமையையும் கண்ணுற்ற தக்கான சுல்தான்களுக்கு பொறாமையை ஏற்படுத்தியதால் தங்களின் அரசியல்பகையை மறந்து சமயத்தின் பெயரால் ஒன்றிணைந்தனர்.

கி.பி. **1565**, ஐந்து தக்காணப்படைகள் ஒன்று கூடி விஜய நகரப்பேரரசை தாக்கின. ராமராயர் தலைமை ஏற்ற படைகள் ரக்காசதங்கடி என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டது. ராமராயர்போரில் கொல்லப்பட்டார். வெற்றிபெற்ற தக்கண சுல்தான்கள் விஜயநகரப்பேரரசின் அளவற்றச் செல்வங்களை கொள்ளையடித்தனர். விஜயநகரம் தன்மங்காப்புகழை நிரந்தரமாக இழந்தது. இதனால் தலைநகர் வெறுமையுற்ற நகராயிற்று. பிறகு அரவீடு அரசு மரபினர் தங்களுடைய ஆட்சியை கி.பி. **1646**வரை பெனுகொண்டா, சந்திரகிரி மற்றும் வேலூர் போன்ற இடங்களில் தொடர்ந்தனர். கருநாடகத்தின மைசூரு, கெலடி மற்றும் சித்ரதுர்கா போன்ற விஜயநகரப் பேரரசின் ஆட்சிப்பகுதிகள் விடுதலையடைந்தன.

## பண்பாட்டிற்கு விஜய நகரப்பேரரசின் பங்களிப்புகள் :

**ஆட்சி முறை :** விஜயநகரப்பேரரசின் ஆட்சிமுறை மரபு வழியில் தொடரப்பட்டது. அரசப்பதவி மன்னர்களின் மூத்த மகளுக்கு வழங்கப்பட்டது. பகுக்கப்பட்ட அதிகார அமைப்பைக் கொண்ட திறன்மிகு ஆட்சி முறையை கைக்கொண்டிருந்தது. அமைச்சர்கள், படை அதிகாரிகள், மாநில ஆளுநர்கள்,



©KTBS Not to be republished

இவைசெர்கள் (நாயக்கர்கள்) ராஜ்யமண்டல அதிகாரிகள் கிராம அதிகாரிகள் ஆகியோர் அரசருக்கு ஆட்சிமுறையில் உதவினர். ராயரின் ஆட்சி காலத்தில் திம்ம ராசா ஒரு அரசியல் மேதையாக விளங்கினார். இப்பேரரசு ராஜ்யம், நாடு மற்றும் கிராமம் போன்றனவாக நிர்வாக நலனுக்காக பிரிக்கப்பட்டிருந்தன.

நீதி வழங்குவதில் அரசர் முழு அதிகாரம் படைத்தவராக விளங்கினார். மாநில அளவில் ஆளுநர்கள் நீதி வழங்கினர். தண்டனைகள் மிகக் கடுமையாக இருந்தன. நாடு விஷ்யா (தற்போதைய மாவட்டம் முறை) எனப்பட்டது. கிராமங்கள் ஆட்சி முறையின் அடிப்படையாக இருந்தது. கிராம நிர்வாகத்தை கிராம சபை பொறுப்பேற்றது. சிறப்பான கிராம ஆட்சிமுறையில் கௌடா, கர்ணம் (ஷாண்பக்) மற்றும் தலையாரி போன்றோர் உதவினர். நாடகௌடா மாவட்ட நிர்வாகத்தையும் பட்டண சாமி நகரத்தின் நிர்வாகத்தையும் மேற்கொண்டனர்.

கி.பி. 1805 ல் வருகைப்புரிந்த பிரன்சிஸ் புக்கன் கிராமத்தில் நடைமுறையில் இருந்த ஆயகார முறையைப்பற்றி குறிப்பிடுகிறார். அம்முறை முழு அதிகாரம் படைத்த தங்களின் தேவைகளை நிறைவேற்றும் அமைப்பாக விளங்கியது.

நிலவரி முக்கிய வருவாயாக இருந்தது. அரசுக்கு உழவர்கள் விளைச்சலில் 1/4 பங்சை செலுத்தினர். தொழில்வரி, சொத்துவரி, நுழைவுவரி, வணிகவரி, சுங்கவரி, ஏற்றுமதி இறக்குமதி வரிகள் மற்றும் மற்ற பொருட்களும் அரசின் பிற வரிகளாகும்.

விஜய நகரப்பேரரசு மிக திறன்மிகு படையை கொண்டிருந்தது. நிலையான படை மற்றும் சிற்றரசர்களால் அனுப்பப்படும். படையும் இராணுவ முறையின் சிறப்பாகும். அரசரின் பாதுகாப்புக்காக படைகள் முன்றாகப்பிரிக்கப்பட்டன. படையில் தரைப்படை, குதிரைப்படை, யானைப்படை மற்றும் பீரங்கிப்படை போன்றன இருந்தன. கி.பு. 1368ல் நடைபெற்ற போரிலிருந்து பீரங்கிபடை வழக்கில் இருந்தது. இதில் யானைகள் பெரும்பங்காற்றின. அரபுக்குதிரைகள் விஜயநகரப் பேரசின் முதன்மை கவர்ச்சிக்குரியனவாக அமைந்தன. ஒரு கப்பற்படையும் பராமரிக்கப்பட்டது. மக்களில் எந்த இனத்தவரும் படையில் சேர்ந்து தங்களின் உழைப்பையும் திறனையும் வேளிப்படுத்தி உயர் பதவிகளைப்பெற வாய்ப்பு அளிக்கப்பட்டது. இவ்வாறே, போரில் பெரும் பங்காற்றி ஒக்கலிகர்களும் வேடர்களும் குறுநிலமன்னர்களாயினர். நாட்டின் பாதுகாப்பில் கோட்டைகள் பெரும் பங்காற்றின. படைக்கலன் பெருமளவில் பராமரித்து போர்க்காலங்களில் அரசருக்கு உதவும் நோக்கொர்களான நாயக்கர்



©KTBS Not to be republished

மற்றும் பாளைய காரர்களுக்கு நிலமானியம் வழங்குவது விஜயநகரப்பேரரசின் ஒரு தனிச்சிறப்பாகும்.

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்**

***அயல் நாட்டு யாத்திரிக்கர்கள்:***

*விஜய நகர ஆட்சி காலத்தில அதனைப்பற்றி அறிந்து கௌள்ள அயல்நாட்டு யாத்திரகர்களின் குறிப்புகள் மிக முக்கிய மானவைகளாகும். இக்காலத்தில் கணக்கிடலங்கா யாத்திரிக்கர்கள் விஜய நகரத்திற்கு வந்து சென்றனர் வெளி நாட்டு யாத்திரிகாகளின் குறிப்புகள் மூலம் விஜய நகரத்தின் அரசியல், பொருளாதாம், சமுதாயம் மற்றும் கலாச்சாரம், சமகாலத்திலிருந்து அரசாங்கங்களைப்பற்றிய விவரங்களை அளிக்கின்றன. விஜய நகரத்திற்கு வந்தடைந்த முக்கிய மான யாத்திரிக்கரிகள் என்றால் 1 வது ஹரிஹர- இபன் பதுத் (மொரெக்கோ) பிரவுட தேவராயர் - நிக் கோலோ - டி கொந்த்தி (வெனிசியா), அப்துல் ரஜாக் (பர்ஸியா) நிகிடின் (ரஷ்யா) 2 ஆம் நரசிம்மர் - லொடெவி கோ - டி வர்த்தெமா (இத்தாலி) கிருஷ்ண தேவராயர் பார்போஸ் (போர்ச்சுக்கல்) டோமிகோ பயாஸ், (போர்ச்சுக்கல்) அச்சுத்த தேவரராயர் - நூனிஜ் (போர்ச்சுக்கல்) ரக்கத்தங்கடி போருக்குப் பின் சீஜர் பேட்ரிக் (வெனிஸ்) முதலாம் அரசர் வெங்கட்டின் மரணத்திற்கு பிறகு பாரடஸ் (இங்குலாந்து) போன்றோர்கள். இவர்களில் ஐரோப்பியர் அதிகமாகிருக்கக்காரணம் ஐரோப்பாவிலிருந்து. வியாபாரத்திற்கு கிழக்கு நாடுகளுக்கு கடல் மார்கம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இதனுடன் அரேபியரின் வசமிருந்து அயல் நாட்டு வியாபாரம் போர்ச்சுகீசியர் வசமாகி நடந்து வந்தது.*

**செயல்பாடு :**
இன்றைய தசரா மற்றும் அன்றை விஜய நகரப்பேரரசின் தசரா பண்டியைப் பற்றி ஒப்பிடு மற்றும் ஆய்வுசெய்

***சமூகம் மற்றும் பொருளாதாரம் :*** சமூகம் நான்கு இனங்களின் (Varna) அடிப்படையில் இருந்தது. சாதிவழி தொழில்கள் பரவலாக வழக்கில் இருந்தன. கைவினைஞர்கள், குயவர், பொற்கொல்லர் மற்றும் பிற கொல்லர்களும் இருந்தனர். தச்சர் நெசவாளர்கள் மற்றும் சமகார்கள் (Samagar) பெரும் எண்ணிக்கையில் இருந்தனர். குழந்தை திருமணம், உடன்கட்டை ஏறும் வழக்கம் (சதிப்பழக்கம்) மற்றும் தேவதாசி முறையும் சமூக வழக்கில் இருந்தன. பெரும்பாலும் ஒருதாரமுறை வழக்கத்தில் இருந்தது. அரசர்கள் மற்றும் செல்வந்தர்கள் பலதார முறையைப் பின்பற்றினர். சமூகத்தில் பெண்டிர் சிறப்பான மதிப்பைப் பெற்றனர். பெண் எழுத்தாளர்கள்

©KTBS Not to be republished

மற்றும் அரண்மனையை பாதுகாத்தோரும் வாணிகத் துறையில் சிறப்புற்றிருந்தனர்.

ஹோலி, தீபாவளியும் மற்றும் தசரா பண்டிகையும் பொதுமக்களின் முக்கிய விழக்களாகும். ஹம்பியில் அரசர்களின் முன்னிலையில் நடைபெற்றன. இசை நடனம் போன்றன மக்களின் ஆதரவைப்பபெற்று இருந்தன. பயிர் வகைகளான தானியங்கள் விவசாயம் நாட்டின் முதுகெலும்பாக இருந்தது. பழங்கள் மற்றும் காய்களும் விளைவிக்கப்பட்டன. கிணறுகள், ஏரிகள் மற்றும் கால்வாய்களை ஏற்படுத்துவதின் மூலம் விஜய நகரப்பேரரசு விவசாயத்தை பெரிதும் ஊக்கப்படுத்தியது. நீர்ப்பாசன வசதிகளும் மேம்படுத்தப்பட்டன.

**உங்களுக்குத் தெரியுமா ?**

- இரண்டாம் தேவராயரின் அரசபையில் ஹொன்னம்மா ஒரு செய்தி தொடர்பாளராக இருந்தார்.
- விஜயநகர ஆட்சி காலத்தில் மற்போர் மிகவும் புகழுடைய விளையாட்டு ஆகும் அக்காலத்திய புகழ்மிகு பெண் மற்போர் வீராங்கனை ஹரியாக்கா ஆவார்.

விஜயநகரம் பொருளாதாரத்தில் தன்னிறைப்பெற்று இருந்தது நிலவரியே நாட்டின் முக்கிய வருமானமாகிருந்தது. விவசாயிகள் தங்கள் உற்பத்தியில் 1/4 பாகத்தை அரசுக்கு வரியாக செலுத்தினார் தொழில்வரி, வீட்டுவரி, வழிவரி, சந்தை வரி, வணிக வரி, ஏற்றுமதி இறக்கு மதி வரிகள், வருமான வரிகள் விதிக்கப்பட்டன. நாட்டிற்கு வரிகளே முதுகெலும்பாகிருந்தது.

ஆண்டில் முங்காரு மற்றும் இங்காரு விளைப் பொருட்களை விளைவித்தனர். சோளம், கேழ்வரகு, கோதுமை, நெல், கம்பு, அவரை துவரை, பச்சைப்பயிறு, உளுந்து, எள், நிலக்கடலை பருத்தி, கரும்பு, தென்னை முதலியன முக்கிய விளைப்பொருட்களாகும். விஜய நகரத்து அரசர்கள் கிணறு, ஏரி கால்வாய்கள் மூலம் நீர்ப்பாசன வசதியை அளித்தனர்.

கனி, குட்டிகே (Guttige) ரித்தய்யா, வரா மற்றுகாடி என உழுநிலங்கள் வகையாகப் பிரிக்கப்பட்டன. தொழிற்சாலையும் வாணிகமும் விஜயநகரப்பேரரசின் ஆட்சிகாலத்தில் மிகவும் முன்னேற்றமடைந்தன. நறுமணப் பொருட்கள் இரும்புதாது, வைரம், சந்தனம் மற்றும் வாசனைதிரவியங்கள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. நெசவாலைகள் ஏற்படுத்தப்பட்டன. மிளகு, லவங்கம், ஏலக்காய் போன்ற வாசனைப் பொருட்கள் விளைவிக்கப்பட்டன. உப்பு, இரும்புத்தாது வைரம், பனங்கற்கண்டு, கஸ்துரி, சந்தனம் முதலிய வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

©KTBS Not to be republished

தங்கம் வராகம், காதியானாஸ், பக்கோடா, வெள்ளிதாரா, அலுமினியப்பணம், துட்டு மற்றும் காசு போன்ற நாணயங்கள் பழக்கத்தில் இருந்தன.

ஆனந்தபூர் மாவட்டத்திலுள்ள குட்டிக்கு அருகிலுள்ள வஜ்ரகரூர் வைரத்தின் மையமாக விளங்கியது. காலநெட்டில் (Calnut) பவளம் ஏராளமாக கிடைக்கப்பெற்றன. பட்கல்லில் இரும்புதாதுவுக்கு பெயர்பெற்ற இடமாகும். ரோஜாமலரிலிருந்து வாசனைத்திரவியம் புலிக்கட்டில் தயாரிக்கப்பட்டது. போர்த்துக்கீசிய பயணி பஜாசென் (Fajasen) பல இடங்களில் பகல் சந்தைகள் அமைக்கப்பட்டதாக குறிப்பிடுகிறார். விருபாக்ஷா, கிருஷ்ணா, பன்சபாரி, வரதராஜவர்மா விட்டலா மற்றும் மால்யவந்தா ஆகியவைகள் முக்கியமான ஏழுசந்தைக்கூடங்களாகும்.

பட்கல், ஹொன்னாவரா மற்றும் மங்களூர் போன்றவை விஜயநகரப் பேரரசின் முக்கியமான துறை முகங்களாகும். விஜயநகரப்பேரரசுடன் அராபியா, சீனா, போர்த்துக்கல் மற்றும் உலகின் பிறபாகங்களிலுள்ள வணிகர்களோடு தொடர்பிருந்தது.

**செயல்பாடு :**
முற்காலத்தில் பணம், நாணயங்கள் மற்றும் காசுகளை அல்லது படங்களை சேகரிக்கவும்.

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்**

அனந்தபுரம் மாவட்டத்திலுள்ள குத்திக்கு அருகிலுள்ள வஜ்ரகரூர் வைரவியாபாரத்திற்கு மையமாகிருந்தது கள்ளிக் கோட்டையில் நீலக்கற்கள் அதிகமாகக் கிடைத்து வந்தது. பட்கல்லில் இரும்புத்தாது விற்கு மையமாகத் திகழ்ந்தது. புலிக்கட்டில் ரோஜாப்பூக்களின் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் தொழிலகம் இருந்தது விஜயநகரத்தின் தலை நகரில் போர்ச்சு கீசிய யாத்திரிகர் பேஸ்ன் அவர்கள் நாளுக்கொரு சந்தை நடந்து வந்தது என்று எழுதியுள்ளார். விருபாக்ஸ, கிருஷ்ணா, பான்சப்பாரி, வரதராஜம்மா, அச்சுத், விட்டல் மற்றும் மால்யவந்தம். இவை முக்கிய ஏழு சந்தைகளாகும்.

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்**

பங்காபுரம், பட்கள், கோவா, சிவனசமுத்திரம் இராயச்சூர் காஞ்சி, சிதம்பரம் - மதுரை, ராமேஸ்வரம் போன்றன அக்காலத்தின் முக்கிய வியாபார மையங்களாகிருந்தன அயல் நாட்டு வியாபாரமும் சிறப்பாக நடைபெற்றது ஜாவா, சுமித்ரா, போர்னியா, சீனா, அரேபியா, பர்ஸியா, கிழக்கு ஆப்பிரிக்கா, அபிசீனியா, போர்ச்சுக்கல் போன்ற நாடுகளுடன்

©KTBS Not to be republished

முக்கியமாக வியாபாரம் நடைபெற்றது ஆடைகள், அரிசி, இரும்பு உப்பு சர்க்கரை மற்றும் வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன குதிரை, யானை, முத்து செம்பு, பவழம், பாதரஸம் சிந்துரம், சீனா பட்டு மற்றும் வெல்வெட் ஆடைகள் முக்கியமாக இறக்குமதி செய்யப்பட்டது.

**மதம் : (சமயநிலை)**

இந்துமதத்தையும் பண்பாட்டையும் பாதுகாப்பதற்காக விஜய நகரப்பேரரசு ஏற்படுத்தப்பட்டாலும், இப்பேரரசு பிற எல்லா மதங்களையும் ஆதரித்து போற்றி வளர்த்தது. வைணவர்களும் சமணர்களும் தங்களுடைய வேறுபாட்டினை மறந்தனர். வைணவர்கள் மற்றும் சமணர்கள் ஒருவருக்கொருவர் மதித்து நடக்கவேண்டுமென புக்கராயர் வலியுறுத்தினார். சரவண பெலகோளாவின் கல்வெட்டு நமக்கு இதனை வெளிப்படுத்துகிறது. விஜயநகரப்பேரரசின் தொடக்ககால அரசர்கள் சைவத்துக்கும் வீரசைவத்துக்கும் ஆதரவாளர்களாக விளங்கினர். பிறகு வந்த ஆட்சியாளர்கள் வைணவர் களாயினர்.

இஸ்லாமியர்களுக்கு மசூதிகளும் தர்காக்களும் கட்டியெழுப்பிய தோடல்லாமல் அவர்கள் இராணுவத்திலும் இணைய அனுமதிக்கப்பட்டனர். இரண்டாம் தேவராயர் ஆட்சிகாலத்தில் இஸ்லாமிய அதிகாரியான அகமதுகான் பெயரில் ஒரு மசூதி கட்டப்பட்டது. விஜய நகரப்பேரரசின் ஆட்சியாளர்கள் கிறிஸ்தவ மதத்தை ஆதரித்து கிறிஸ்தவக் கோயில்களையும் கட்டுவதற்கு பேராதரவை நல்கினர்.

> **உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்:**
> கிரிஸ்த்துவோ, யூதனோ, மகம்மதுவோ அல்லது இந்துவோ யாராகிலும் நிரந்தரமாக இந்நாட்டில் வாழலாம். பர்போஸா - அயல் நாட்டுயாத்திரிகர்.

**இலக்கியம் :**

இப்பேராசில் அமைதி, ஒழுங்கு மற்றும் பொருளாதாரவளர்ச்சி நிலவியதால் எண்ணிக்கையற்ற செறிவுள்ள இலக்கிய வளர்ச்சி தோன்றுவதற்கு வழிகோலின. கன்னடம், வடமொழி (சமஸ்கிருதம்) தெலுங்கு மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் இலக்கியங்கள் இயற்றப்பட்டன.

சமணப் புலவர் பாரததேச வைபவாவை படைத்தார். சாமராசா பிரபுலிங்க லீலையை இயற்றினார். குமாரவியாசர், கதுகினபாரதம் என்ற நூலை இயற்றினார். இம்மூன்றும் கன்னட மொழியில் எழுதப்பட்ட முக்கிய படைப்புகளாகும். பாரத தேச வைபவ என்ற இலக்கியம் 10,000 பாடல்களை

©KTBS Not to be republished

கொண்டுள்ளது. அது முதலாம் தீர்த்தங்கரரை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. சோமநாதர் தெலுங்குமொழியில் இயற்றிய பசவபுராணத்தை பீமகவி கன்னடமொழியில் எழுதினார். வீரசைவத்தின் வசனங்களை உள்ளடக்கிய சூனிய சம்பாதனே என்ற இலக்கியங்கள் இக்காலக்கட்டத்தில் எழுதப்பட்டன. சிவதத்துவ சிந்தாமணி என்ற நூலை லக்கண்ணா தண்டேஷா என்பவர் இயற்றினார். மருத்துவம், விலங்குகள் சிகிச்சை மற்றும் சோதிடம் ஆகிய துறைகளைச் சார்ந்த நூல்களும் எழுதப்பட்டன. ஹரிதாச இலக்கியம் ஸ்ரீ பாதராயர், புரந்தரதாசர், கனகதாசர் போன்றோரால் இயற்றப்பட்டன. மோகன தரங்கினி, நளசரிதம், ஹரிபக்தி ரசம் மற்றும் ராமதன்யசரிதம் போன்ற நூல்கள் கனகதாசரால் இயற்றப்பட்டன.

வித்யாரண்யர் சங்கர விஜயம் மற்றும் சர்வதர்ஷன் சங்கிரஹா என்னும் நூல்களை வடமொழியில் எழுதினார். அவர் முதலாம் ஹரிஹரா முதலாம் புக்கா ஆகியோருக்கு நெருங்கிய தொழமை உடைய புலவர் ஆவர். வித்யாரண்யரின் சகோதரர் சமனாச்சாரியா வேதார்த்த பிரகாஷா, ஆயுர் வேத சுதாநிதி மற்றும் புருஷார்த்த சுதாநிதி போன்ற நூல்களை இயற்றினார்.

புக்கராயரின் மருமகளும் சம்பன்னராயரின் மனைவியுமான சங்காவதி, மதுரா விஜயம் என்ற நூலை இயற்றினார். அதில் அவர் சம்பன்னாவின் மதுரா வெற்றியையும் அதனை சூழ்ந்த பகுதிகளை வென்றது பற்றிகுறிக் குறிப்பிடுகிறார்.

இரண்டாம் தேவராயரின் அரசசபையில் வீற்றிருந்த தெலுங்கு கவிஞரான ஸ்ரீநாதா, கவி சக்ரவர்த்தி என்ற பட்டத்தைக் கொண்டிருந்தார். “ஆமுக்த மால்யதா” என்ற தெலுகு நூல் ஸ்ரீகிருஷ்ண தேவராயரின் முதன்மைவாய்ந்த இலக்கியமாகும். கிருஷ்ண தேவராயரின் அரசவையை எட்டுபுலவர்கள் (அஷ்டதிக்கஜங்கள்) அலங்கரித்தனர். அவர்கள் அல்லசாணி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, ராமபத்ரா, தூர்ஜதா, மல்லண்ணா, பிஸ்காலி சூரா, ராமராய அபுசனா மற்றும் தெனாலி இராமகிருஷ்ணா ஆகியோர் ஆவர். அல்லசாணி பெத்தண்ணாவின் மஞ்சுசரிதம் மற்றுமம திம்மண்ணாவின் பாரிஜாத அபகரனம் (Parijatha Paharnam) மற்றும் தெனாலி ராமகிருஷ்ணாவின் உபதாரதி சரிதம் ஆகிய முதன்மைவாய்ந்த இலக்கியப்படைப்புகளாகும்.

பரஞ்ஜோதியார். வீரராகவர், மண்டலபுருஷா, ஞான பிரகாசா, ஹரிகரர் மற்றும் பலர் ஸ்ரீகிருஷ்ண தேவராயரின் அரசவையை அலங்கரித்த தமிழ் புலவர்கள் ஆவர். பரம்ஜோதி புலவர் திருவிளையாடல் புராணத்தை இயற்றினார். விஜயநகரப் பேரரசு வடமொழி, கன்னடம், தெலுங்கு, தமிழ் மற்றும் பல மொழிகளுக்கு பேராதரவை அளித்தமைக்கு சான்றுபகர்கிறது.

©KTBS Not to be republished

### கலை மற்றும் கட்டிடக்கலை :

விஜயநகரப்பேரரசின் ஆட்சியாளர்கள் கலை மற்றும் கட்டிடக்கலைக்கு ஆற்றிய பங்களிப்புகள் நினைவுகூரத்தக்கவையாகும். அவர்கள் கட்டிடக்கலையின் பேராதரவாளர்களாக விளங்கினர். ஆலயங்கள், அரண்மனைகள், கோட்டைகள், கோபுரங்கள், மகாமண்டபங்கள், வசந் தமகால்கள், பொதுக்கட்டிடங்கள், ஏரிகள், கால் வாய்கள், அணைக்கட்டுகள் மற்றும் பிற எழிலார்ந்த கட்டிடங்களைக் கட்டியெழுப்பினர்

### விஜயநகரக்கலையின் சிறப்பியல் சிறப்பியல் புகள் :

விஜயநகர அரசர்கள், சாளுக்கியர், சோழர் மற்றும் ஒய்சாளர்களின் கட்டிடகலை பாணியை தொடர்ந்தனர். ஆயிரங்கால் தூண்களுடன் மண்டபத்துடன் கூடிய கட்டிடத்தை கட்டியெழுப்புவது இப்பாணியின் தனிச்சிறப்பாகும். கோயிலின் உச்சியில் ராஜ கோபுரத்தை அமைப்பதும் இதனுடைய சிறப்பாகும். மண்டபங்களில் எழுத்துவடிவ வளைவுகளை அமைப்பதும் சிறப்பாகும். கட்டிடங்களுக்கு அழகு சேர்ப்பது என்பது மட்டுமல்லாமல் பெருந்தன்மை தெய்வீகத்தன்மை மற்றும் பயபக்தியை எதிரொலிப்பவையாக அமைக்கப்பட்டன. கட்டிடங்கள் கலவை மற்றும் கருங்கற்களால் கட்டப்பட்டன.

**செயல்பாடு :**
ஹம்பி நகரைப் பார்வையிட்டு அங்குள்ள கோயில்கள் மற்ற அமைப்புகள் பற்றிய தகவலைத் திரட்டுக.

### முதன்மையான கோயில்கள் :

ஹம்பி, ஸ்ரீங்கேரி, திருப்பதி, காஞ்சி, லேபாக்ஷி, கார்கலா, மூடபித்ரி, பட்கலா, சிதம்பரம், காளஹஸ்தி, நந்தி, ஸ்ரீசைலம் மற்றும் காளர் போன்ற இடங்களில் கோயில்கள் இக்காலக்கட்டத்தில் கட்டப்பட்டன.

ஸ்ரீங்கேரியில் உள்ள வித்யாசங்கர கோயில் விஜயநகரப் பேரரசின் ஆட்சிகாலத்தில் அடித்தளமிடப்பட்ட ஒரு முக்கிய கோயிலாகும். இந்தியாவிலேயே இதனுடைய பாணி மிகவும் தனித்தன்மை வாய்ந்ததாகும். ஹம்பியில் கட்டப்பட்ட விருபாட்ச்சா கோயில் விஜய நகரத்தின் மிகப்பழையான கோயிலாகும். அது பலசெதுக்கப் பட்ட தூண்களுடன் அலங்கார கூறையை உடையதாகும். மிகப்பரந்த முற்றத்தையுடைய கோயிலுமாகும். ராமசந்திரா அல்லது ஹசாரா ராமா கோயில் ராமாயணக்காட்சிகளால் அலங்கரிக்கப்பட்ட கோயிலாகும்.

©KTBS Not to be republished



***விஜய விட்டலா திருக்கோயில்***



***விருபாக்ஷா திருக்கோயில் ஹம்பி***

விஜயநகரிலுள்ள கோயில்களில் மிகவும் கலைநய வேலைபாடுக்கு புகழ்பெற்ற கோயில் ஹம்பியிலுள்ள விஜய விட்டலா கோயில் ஆகும். இங்குள்ள ஏழிசையை இசைக்கும் தூண்களும், பரந்து விரிந்துள்ள கல்யாண மண்டபங்களும் கல்லில் செதுக்கப்பட்ட கல்தேரும் இக்கோயிலை மேலும் மெருகூட்டுகிறது.



**கல்தேர்**

கிருஷ்ணதேவராயர் கட்டிய மகாநவமி திப்பா ஹம்பியில் அமைந்துள்ளது. அது "விஜயபாவானா" என்றும் அழைக்கப்படுகிறது. இங்கு நவராத்திரி விழாகொண்டாடப்படுகிறது. அரசரின் ஆணைக்கிணங்க இங்கு பல்நாட்டு அரசர்களும் மண்டல அதிகாரிகளும் கூடுவது வழக்கம். அவர்கள் வெகுதொலைவிலிருந்து வந்து கூடுவதற்கு மூன்று அல்லது நான்கு மாதங்களாகின்றன. கமல மகால் என்பது யானைகளின் பயிற்சி வளாகமாகம். குளியல்குளம் இந்தோ சார்சேனிக் பாணியில்

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்:**
இவர்கள் கட்டிய ஆலயங்கள், கட்டடிடங்கள் மற்றும் அமைத்த சிறப்ங்களைக்குறித்து புகழ் பெற்ற கலை வரலாற்றாளரான பற்றி பரவுன் அவர்கள் விஜயநகர சிற்ப கலையின் சாயல் திராவிட சாயல் சிறப்பான உருவம் என்று வர்னித்துள்ளார்.

©KTBS Not to be republished

கட்டப்பட்டுள்ளன. லட்சுமி நரசிம்மா, கடலேகாலு கணேசா, சாசுவேகாலு கணேசா, தோட்டங்கள் மற்றும் வீரபத்திரா சிலைகள் காண்போறை கவருவனவாகும். விருபாக்சர் கோயிலை தொடர்ந்து விஜயநகர ஒவியங்களை லேபக்ஷி, கும்பகோணம், திருவரங்கம் மற்றும் திருப்பதிபோன்ற இடங்களில் கட்டப்பட்ட கோயில்களிலும் நாம் காண முடிகிறது. ஹம்பியைச் சுற்றி ஏழு சுற்றும்கோட்டை பாதுகாப்பு அரணாக விஜயநகர ப்பேரரசு ஆட்சி காலத்தில் கட்டப்பட்டது. தற்போது ஒருசில கோட்டைகளே எஞ்சியுள்ளன.

***இசை மற்றும் நடனம் :***

விஜயநகரப் பேரரசு ஆட்சியாளர்கள் இசை, நடனம், நாடகம் மற்றும் யக்ட்சகான போன்ற கலைகளுக்கு பேராதரவு தந்தனர். அரண்மனையிலும் கோயில்களிலும் பாடகர் இசைமேதைகள், மற்றும் கலைஞர்களும் மிகுந்த மதிப்பை பெற்றிருந்தனர். புரந்தர தாசர் மற்றும் கனகதாசர் ஆகியோர் தாசர்களின் இயக்கத்தை வழிநடத்தி தனித்தன்மை வாய்ந்த கர்நாடக இசையை வழங்கினர். அவர்கள் இயற்றிய கீர்த்தனைகளின் மூலம் கருநாடக இசையை வளர்த்தனர். நடனமங்கையர் தன் நடன திறமைகளை அரண்மனைகளிலும் கோயில்களிலும் அரங்கேற்றம் செய்தனர்.

## பஹமனி அரசு

பதினான்காம் நூற்றாண்டில் தென் இந்தியாவில் இரு முக்கிய நிகழ்வுகள் ஏற்பட்டன. அவற்றுள் முதலாவதாக விஜயநகரப்பேரரசு தோற்றுவிக்கப்பட்டது. இரண்டாவதாக பஹமனி அரசின் தோற்றம். அல்லா-உத்-தின் ஹசன் பஹமன் ஷா என்பவர் கி.பி. 1347ல் பஹமனி அரசை ஏற்படுத்தினார். பீஜப்பூரின் பஹமனி மற்றும் ஆதில்ஷாகி மரபு கி.பி. 1347 முதல் கி.பி. 1686 வரை ஆட்சிபுரிந்தது. இம்மரபுகளில் முதலாம் முகமது ஸா, இரண்டாம் முகமதுஷா, பெரோஸ் ஷா, முகமது கவான், யூசுப் ஆதில் ஷா, முதலாம் இப்ராகிம் ஆதில்ஷா, மற்றும் இரண்டாம் இப்ராகிம் ஆதில்ஷா ஆகியோர் முதன்மையான ஆட்சியாளர்கள் ஆவர். அல்லா-உத்-தின் ஹசனின் மகனான முகமது ஷா குல்பர்காவில் கி.பு. 1367ல் புகழ்மிகு ஜாமியா மசூதியை கட்டினார். அதேபோன்று பேரோஸ் ஷா பெரோஸ் ஷா பாத் என்ற புதிய கலைநகரை கட்டியெழுப்பினார். அவர் ஒரு கல்விமான் ஆவர். அவர் இங்கு ஒரு வானிலை ஆய்வு கூடத்தை நிறுவினார்.

***முகமது கவான் கி.பி. 1411 - 1481 :***

கி.பி. 1347 முதல் 1426 வரை பஹமணி அரசின் தலைநகராக கல்புர்கி (Kalbargi) இருந்தது. தன்னுடைய ஆட்சி காலத்தில் முகமது கவான் நேர்மையாளராகவும் கொடுத்த வாக்குறுதிபடியாகவும் இருந்தார். தலைமை



©KTBS Not to be republished

அமைச்சரான கவான் பஹமனி அரசை தன்னலமின்றி ஆண்டு புகழின் உச்சிக்கு இட்டுச் சென்றார். அவர் பெர்சியாவிலுள்ள ஜிலானில் (Gilan) பிறந்து கெய்ரோவில் இஸ்லாமிய இறைமை நூல் மற்றும் சட்டம் ஆகியவற்றை நன்கு பயின்று கல்விமான் ஆனார். அரபி மற்றும் பெர்சிய மொழிகளில் தேர்ச்சி பெற்று சிறந்து விளங்கினார். அவர் ஹுமாயூன், நசம்ஷா, மற்றும் பஹமனி அரசின் முன்றாம் முகமது ஷா ஆகியோரின் கீழ் அமைச்சராகவும் மற்றும் தலைமை அமைச்சராகவும் பணிபுரிந்தார். அவர் தன்னுடைய வெற்றிகளாலும் சிறப்பான ஆட்சிமுறையாலும் பஹமனி அரசுக்கு நற்புகழை ஈட்டினார்.

கவான் கி.பு. *1469*-ல் கொஹ்களன், கோவா மற்றும் பெலகாம் போன்ற இடங்களை கைப்பற்றினார். பிறகு ஒரிசா மற்றும் கொண்டவீடு பகுதிகளையும் தன் அரசோடு இணைத்துக்கொண்டார். அவர் கிபி. *1481*-ல் காஞ்சியின் மீது படையெடுப்பை நிகழ்த்தி பெருஞ்செல்வத்தைப் பெற்றார். அனைத்து




©KTBS Not to be republished

துறையிலும் பஹமனி அரசுக்கு பெருமை சேர்த்த முகமது கவானை அவருடைய எதிரிகளின் கூட்டு சதியால் கி.பி. 1481ல் அவர் தூக்கிலேற்றப்பட்டார். பிறகு அரசுபல மற்றுசிதைவுற்றது.

> **உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்:**
> கவானுக்கு அரசர் மூன்றாம் மகம்மது அளித்த விருதுகளென்றால் குவாஜா-இ-ஜஹான் மற்றும் மல்லிக் உல்தாஜ்.

**பஹமனி அரசின் பிரிவுகள் கி.பி. 1518**

| | | | | |
|---|---|---|---|---|
| அகமதுநகர் | விஜயாபுர | பிர்ரார் | பீதர் | கோல்கொண்டா |
| (நிசாம்ஷாகி) | (ஆதில்ஷாஷி) | (இமத்ஷாகி) | (பரித்ஷாகி) | (குதுப்ஷாகி) |

மேற்கண்ட ஐந்து ஷாகிகுடும்பங்களில், ஆதில் ஷாகி யூசப் ஆதில் ஷா மாறும் முதலாம் இப்ராகிம் ஆதில்ஷா ஆகியோர் முதன்மையான அரசர்கள் ஆவர்.

## இரண்டாம் இப்ராகிம் ஆதில் ஷா (கி.பி. 1580 - 1627) :

ஆதில் ஷா குடும்ப ஆட்சியாளர்களில் இரண்டாம் இப்ராகிம் ஆதில்ஷா மிகவும் போற்றக்கூடிய அரசர் ஆவார். அவர் தன் ஒன்பதாவது வயதில் ஆட்சிகட்டிலில் அமர்ந்தார். அவருடைய 47 ஆண்டு ஆட்சி காலம் பல வரலாற்று நிகழ்ச்சிகளை உள்ளடக்கியுள்ளது. அவருடைய திறன்மிகு ஆட்சியால் விஜயாபுர அரசியல் புகழின் உச்சத்தை தொட்டது. கலை, இலக்கியம் மற்றும் கல்வித்துறைகள் நல்லாதரவைப் பெற்று வியப்புக்குரிய முன்னேற்றம் அடைந்து சாதனைப் படைத்தது.

அவர் சித்தாப் - இ - நவரசா என்ற நூலை எழுதினார். இலக்கிய தொடக்கத்தில் சரஸ்வதி, கணேசர் மற்றும் நரசிம்மர் ஆகிய தெய்வங்களை போற்றிப்பாடுவது ஒரு தனிச்சிறப்பாகும். அவர் முகமது பைகம்பரைப் பற்றியும் புகழ்ந்து கவிதைப் படைத்துள்ளார். அது சமயப்பொறுமையையும் அவருடைய கல்விமான் சிறப்பையும் சான்று பகர்கிறது.

©KTBS Not to be republished

**பஹமனி சுல்தான்கள் பண்பாட்டுக்கு ஆற்றிய தொண்டுகள் :**

பஹமனி மற்றும் ஷாகி சுல்தான்கள் கருநாடகத்தை இருநூற்றாண்டுகளாக ஆட்சிபுரிந்தனர். அவர்களுடைய அரசு கருநாடகத்தை கடந்து தமிழ் நாட்டின் தஞ்சாவூர் வரை பரவி இருந்தது. அவர்களுடைய ஆட்சிமுறை இஸ்லாமிய இறைமைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

> **உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும் :**
> இரண்டாம் இப்ஆகிம் ஆதில்ஷா அவருடைய அரசவையில் மகிபட்டிதாவை கசாந்தார் அதிகாரியாக நியமித்தார். மிகபட்டிதாசாவின் பாகவத்தின் பக்தி பாது ஷாவின் இதயத்தையும் தொட்டது.

**ஆட்சிமுறை :**

ஆட்சிமுறை மூவகையாகப் பிரிக்கப்பட்டது. அவைகள் மைய மண்டல மற்றும் கிராம ஆட்சி முறைகளாகும். நிலவரி நிர்வாகத்தை விடுத்து. இராணுவ மற்றும் நிதி நிர்வாகத்துறைகளும் இருந்தன. மைய அமைச்சரவை என அழைக்கப்பட்ட மஜ்லிஸ்-இ-இஜ்ஜாத் (Majlis-E-Ijjath) அமைப்பின் ஆட்சித் தலைவராக சுல்தான் விளங்கினார். உயர் அதிகாரிகளான உக்கீமாஸ் (Ukeemas) மற்றும் ஆமீர்கள் (Ameers) நெருங்கிய தோழர்களாகவும் உறவினர்களாக இருந்தனர்.

கவான் நான்கு மண்டலங்களை எட்டாகப் பிரித்து தரப்தார்களையும் செல்வ குலினாக்களையும் (kuleenas) அடக்கி ஒடுக்கினார். தரப்கள் குழு அரசாகப்பிரிக்கப்பட்டது. அரசாங்கத்தில் சுபேதார் முதன்மை நிர்வகாகியாக விளங்கினார். அரசுகள் பர்கானாக்களாக பிரிக்கப் பட்டன. கொத்வால், தேஷமுக் மற்றும் தேசாய் ஆகியோர் பர்கானாக்களில் அதிகாரிகளாவர். கிராமஸ்கான் நிர்வாகத்தின் சிறுபகுதிகளாக இருந்தன. பட்டேல், குல்கர்னி மற்றும் காவல்காரர் ஆகியோர் கிராமங்களின் மூன்று அதிகாரிகளாவர். கிராம பஞ்சாயத்து என்ற சபை கிராமங்களின் ஆட்சிபொறுப்பை ஏற்றது. கிராம நிர்வாகம் பெரும்பாலும் அதிகாரமும் சுதந்திரமும் கொண்டதாக இருந்தது.

**நிலவருவாய், இராணுவ மற்றும் நீதி ஆட்சிமுறை :**

நிலவருவாயின் நிர்வாகி அமீர்-இ-ஜும்லா (Ameer-e-Jumla) எனப்பட்டார். நிலவருவாய் அரசின் முக்கியமான வருவாய் ஆகும். உற்பத்தியில் 1/3 பங்கை நிலவரியாக வசூலிக்கப்பட்டது. சுங்கவரி, வீட்டுவரி, சுரங்கவரி, புகையிலைவரி, மேய்ச்சல்நிலவரி, வணிகவரி மற்றும் தொழில்வரி போன்ற 50 வகையான வரிகள் வதிக்கப்பட்டன. வசூலிக்கப்பட்ட தொகை அரண்மனைகள் கோட்டைகள் மற்றும் அலுவலக கட்டிடங்களை கட்டவும் படைகளை

©KTBS Not to be republished

பராமரிக்கவும் கல்விமான்களுக்கு ஊத்கத்தொகைவழங்கவும் மற்றும் போர்செலவினங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டது.

**செயல்பாடு :**
யூகப் ஆதில்ஷாலிக் மனைவி பிபிஜிகானும், தில்ஷா அஹா, சந்தபிபி மற்றும் சகார் பானு பேகம் ஆகியோர் இவ்வம்சத்தின் புகழ் மிகு பெண்டிர் ஆவர்.

பஹமனி மற்றும் ஷாகி அரசு அதனுடைய படைபலத்தையே நம்பி இருந்தது. படைபலத்திற்கான செலவு அதிகமாகமாவதைத் தவிர்க்க முடியாததாகவும் இருந்தது. படைகள் நால்வகையாக பிரிக்கப்பட்டன. அவைகள் நிலையான படை, போர்க்காலங்களில் மட்டும் ஏற்படுத்தப்பட்டபடை, மதத்திற்காக போரிடும் படை மற்றும் அரசரையும் கோட்டைகளையும் பாதுகாக்கும் படை ஆகியவைகளாகும். படையின் முக்கியப் பிரிவுகள் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை மற்றும் பீரங்கிப்படை ஆகியவைகளாகும். ஆதில்ஷாவின் நாட்டில் பலக் கோட்டைகள் இருந்தன. பீஜாப்பூர் கோட்டை மிகவும் வலிமை வாய்ந்ததாகும். கப்பற்படை இன்மையே இராணுவத்தின் குறைபாடாக இருந்ததது. அரசரே தலையாய நீதி வழங்கு நீதிபதியாக இருந்தார். நீதித்துறை பழக்கவழக்கங்கள், மரபு, மதம் மற்றும் காஜிகள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டிருந்தது. சட்டத்தை நிலை நாட்ட அரசருக்கு அதிகாரிகள் உதவினர். அரசரின் திறன்மிகு ஆட்சியல் அரசு பொருளாதாரம், சமூகம் மற்றும் பண்பாட்டுத்துறைகளில் வியத்தகு முன்னேற்றம்கண்டது.

பொருளாதார, சமூக மற்றும் சமயநிலைகள்: கிராமங்களில் உழவுத்தொழிலே முதன்மைத் தொழிலாக விளங்கியது. நெசவு, எண்ணெய் எடுத்தல், சார்க்கரை மற்றும் வெல்லம் தயாரித்தல், தச்சு, மட்பாண்டம் தயாரித்தல், பொன் அணிகலன் செய்தல் மற்றும கைவினைப் பொருள் தயாரித்தல் போன்றவை பிற தொழில்களாகும்.

டாபோல், ராஜாபூர், செளலா, பட்கல் மற்றும் கார்வார் போன்ற சில துறை முகங்களாகும். பட்டு, மது, பொன் வெள்ளி, ஈயம், கண்ணாடி மற்றும குதிரைகள் முக்கிய இறக்குமதிகள் ஆகும். வணிக மற்றும் தொழிற்சங்கங்கள் இருந்தன. நாணயங்கள் அச்சிடப்பட்டன. ஹொன்னு என்ற தங்க நாணயமும் லாரி, மற்றும் டங்கா போன்ற வெள்ளி நாணயங்களும் பழக்கத்தில் இருந்தன.

தந்தையை தலைமையாகக் கொண்ட பிளவுறா கூட்டுக் குடும்பங்கள் சமூகத்தில் இருந்தன. சாதியின் அடிப்படையில் வாழ்க்கை முறை தீர்மானிக்கப்பட்டது. ஒருதார மற்றும் பலதார முறையும் சமூகத்தில் இருந்தது. பெண்களின் நிலை மதிப்புக்குரியதாக இருந்தது. இஸ்லாமியர்கள் இந்துக்களுடன் தொடர்ந்து போரிட்டுக் கொண்டனர். ஹரிதாஸ் மற்றும்

©KTBS Not to be republished

இஸ்லாமி சுபிமகான்கள் இரு மதங்களிலும் ஒற்றுமை ஓங்க பாடுபட்டனர். இஸ்லாமியர்களிடையே சுன்னி, ஷியா, சையத், ஷேக் மற்றும் பட்டான்கள் போன்ற பிரிவுகள் இருந்தன. இஸ்லாமிய பெண்களிடம் பர்தா அணியும் வழக்கம் தொடர்ந்து காணப்படது.

பலதரப்பட்ட பண்பாட்டு ஒற்றுமைக்கு அடித்தளம் அமைக்கப்பட்டது. அரசில் இந்துக்கள் இஸ்லாமியர், சமணர்கள், புத்தசமயத்தினர் மற்றும் கிறிஸ்தவர்கள் ஆகியோர் வாழ்ந்திருந்தனர். வைணவம் இவர்கள் ஆட்சி காலத்தில் புகழ்பெற்றிருந்தது. தூய்மை பக்தியே வீடுபேறு அடையும் வழி என்று ஹரி தாசர் போதித்தார்.

அரச குடும்ப பெண்டிர் ஆட்சி முறையில் ஈடுபட்டனர். இம்மரபின் முக்கிய புகழ்மிகு அரச பெண்டிர்கள் யூசப் அதிக் ஷாவின் மனைவி பிபிஜி காணும் ஐஸ்வியாவின் மாற்றாந்தாய் தில்ஷா அகர, சந்த் பிபி மற்றும் ஷா பானுபேகம் ஆகியோர்களாவர்.

***கல்வி, கலை மற்றும் கட்டிடக்கலை :*** இஸ்லாமிய பண்பாட்டை வளர்க்கும் நோக்கில் கல்வித்திட்டம் இருந்தது. மசூதிகளின் கட்டுப் பாட்டில் இயங்கும் பள்ளிகள் முக்தாப்சா எனப்பட்டன. அங்கு இலக்கியத்துடன் இஸ்லாமிய சமய அறநெறி முறைகள், சட்டம், கவிதை மற்றும் செய்யுள் ஆகியவை கற்பிக்கப்பட்டன. மதராசர்க்கள் உயர்கல்வியின் மையங்களாக செயலாற்றின. கல்வி மானாகிய முகமது கவான் கி.பி. 1461 ல் பீதரில் இஸ்லாமிய சமயத்தையும் சட்டப்படிப்பையும் கற்றுத்தேற ஒரு மதராசாவை ஏற்படுத்தினார். இது தக்காண பாணியில் கட்டப்பட்ட மூன்றடுக்கு பிரமாண்ட கட்டமாகும் அது 242 அடி நீளத்தையும் 222 அடி அகலத்தையும் 56 அடி உயரத்தையும் கொண்டுள்ளது. அங்கு 3000 சுவடிகளைக் கொண்ட நூலகமும் உள்ளது. அது மாணாக்கர், ஆசிரியர்கள் மற்றும் சமயத்துறையாளர்களின் உறைவிடமாகவும் அமைந்தது. அங்கு விண்ணியல், இலக்கணம், கணிதம், தத்துவம், வரலாறு மற்றும் ஆட்சி இயல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

அரசர்கள் இந்திய சார்செனிக் கட்டிட கலையை வளர்த்தனர். ஜூமா மசூதி இவ்வகைபாணியில் கட்டப்பட்ட ஒரு பழமையான நினைவகமாக சான்று பகர்கிறது. முதலாம் அலி ஆதில்ஷா இந்த மசூதியை கட்டிமுடித்தார்.

இப்ராகிம் ரோசா, கோல்கும்பாஸ், ககன்மகால் மற்றும் அசர் மகால் போன்றவை முக்கியமானவைகளாகும். உலகில் மிகப்பெரிய கட்டிடங்களுள் கோல் கும்பாசும் ஒன்றாகும். கட்டிடக்கலையால் ஆதில் ஷாகிக்கள் உலகப்புகழை எய்துகின்றனர். கோல்கும்பாஸ் பெரிய கல்லறையின் மொத்த பரப்பளவு 1800 சதுர அடிகளாகும். அங்கு நான்கு முனையிலும் கோபுரங்கள்

©KTBS Not to be republished

வடிவமைக்கப்பட்டுள்ளன. அந்நான்கு கோபுரங்களும் ஏழடுக்கு கொண்டதாகவும் கவிழ்ந்த டோமை தாங்குவனவாகவும் உள்ளது.

கோல்கும்பஸ் : இது கர்நாடக மாநில விஜயபுரியில் உள்ளது. முகமது ஆதில்ஷா இதனைக் கட்டினர். கட்டிடவேலை கி.பி.1626 ல் தொடங்கி கி.பி. 1656 ல் முடிக்கப்பட்டது. அது 51 மீட்டர் உயரமும் பரந்து விரிந்த கூரையும் கொண்டுள்ளது. இக்கவிழந்த கூரை நான்கு தூண்களால் தாங்கபட்டுள்ளது. நான்கு தூண்களிலும் படிக்கட்டுக்கள் உள்ளன. ஒரு முறை பேசினால் பல முறை திரும்ப கேட்கும். (இதனை எதிரொலி என்பார்) இந்தியாவின் மிகப் பெரிய கவிகை கூறை கட்டமாடும் (டோம்).



**கோல்கும்பஸ்**

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும் - அயல் மொழி சொற்கள்**

அமர்தயா - அரசனுக்கு வெவ்வேறு செல்களில் உதவும் அமைச்சர்.

ராயஸம் - அமைச்சரவையின் செயலாளர்

ராயஸஸ்வாமி - முதன்மை செயலாளர்

கரணிக - கணக்காளர் - அதிகாரி

மனெ பிரதானி - அரண் மனையின் மேலாளர்

கார்யகர்த்தா - அரசரின் செயல்களில் உதவுபவர்

அமர நாயக்கர் / நாயக்கர பத்ததி - விஜய நகர அரசர்களுக்கு அடிபணிந்த அனே நாயக்கர்கள் அரசனுக்கு போர்களில் உதவி செய்து வந்தனர். இவர்களி சேவையை ஆதரித்து அரசன் நிலங்களை அளித்தான். இங்கு இவர் நிர்வாகத்தை நடத்தினர். இப்பிரதேசங்களை அமர என்பார்கள்.

ஆயகார பத்தத்தி - ஒவ்வொரு விவசாய முதலிட்டாலார் தம்முடைய ஆண்டு உற்பத்தியின் ஒரு பங்கை கௌட, கானுபோக, தச்சன், கருமான், வண்ணான், தலையாரி, குயவன், தங்க நகை செய்பவன், நாவிதன் போன்றவர்களுக்கு அளிக்க வேண்டும். கிராமத்திற்கு தொடர்பான நிர்வாகத்தில் இவர்கள் அனைவரின் பங்கு மகத்துவமானது.

©KTBS Not to be republished

அஃபாக்கிகள்: இரான், டிரான்ஸ் கோஸ்நியன் மற்றும இராக்கிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் வக்கீல - இ-சுல்தானத் - முதன்மை அமைச்சர். அமார் - இ - ஜுமல - பொருளாதார அமைச்சர் (நிதி அமைச்சர்கள்) முஸ்தாப் - உல் - முலக் - உதவி பொருளாதார அமைச்சர் நாஜிர் - இ - அஸ்ரப் - அயல்நாட்டு அமைச்சர் (வெளியுறவு அமைமச்சர்)



ஜாமியா மசூரி



பீதர் கோட்டை

©KTBS Not to be republished

## பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. விஜயநகரப்பேரசு __________ ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
2. மதுரா விஜயம் என்று நூலை இயற்றியவர் __________ ஆவார்.
3. பிரவுட தேவராயரின் அமைச்சர் __________ ஆவார்.
4. ஆமுக்த மால்யதா என்ற தெலுங்கு நூலை இயற்றிவர் __________ ஆவார்.
5. பீதரில் உள்ள மதராசாவை கட்டிய அரசர் __________ ஆவார்.
6. கித்தாப்-இ-நவரசா என்ற நூல் __________ என்பவரால் இயற்றப்பட்டது.

**II. பின்வரும் வினாக்கட்கு விடையளி :**

1. விஜய நகரப்பேரரசை ஆண்ட நான்கு அரசகுடும்ப மரபுகள் யாவை?
2. இரண்டாம் தேவராயரின் சாதனைகள் யாவை ?
3. ஆட்சிய கட்டில் ஏறியவுடன் கிருஷ்ண தேவராயர் எதிர்கொண்ட சவால்கள் (பிரச்சனைகள்) யாவை ?
4. சமூகம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு விஜயநகரப்பேரரசின் பங்களிப்புகள் யாவை ?
5. விஜய நகரப்பேரரசின் ஆட்சிகாலத்தின் கலை மற்றும் கட்டிடக்கலைப்பற்றி எழுதுக.

6. முகமது கவானின் சாதனைகளை விவரி.

7. பஹமனி சுல்தான்களின் நிர்வாக வருவாய் அமைப்புப்பற்றி விவரி.

8. பஹமனி சுல்தான் காலத்தின் கல்வி, கலை மற்றும் கட்டிடக்கலை ஆகியவை குறித்து விவரி.

## III. செயல்பாடுகள் :

1. ஹம்பி நகர நினைவகங்கள் பற்றிய படங்களை சேகரிக்கவும்.

2. பல நூல்களை கற்று, ஹம்பியின் மகாநவமி திப்பாவில் கொண்டாடப்படும் விஜய தசமி குறித்து புரிந்துகொள்க.

3. கல்தேர் ஓவியம் ஒன்று தீட்டுக.

## IV. செயல்திட்டம் :

1. ஹம்பியை பார்வையிட்டு அதன் நினைவகங்கள் குறித்து கட்டுரை என்று எழுதுக.

2. ஹம்பியின் சந்தை குறித்து கட்டுரை ஒன்று எழுதுக.

*****

©KTBS Not to be republished

## குடிமை இயல்

### அத்தியாயம் - 1

# நமது அரசியலமைப்புச்சட்டம்

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களைப்பற்றி அறிகிறோம்.**

- *அரசியல் சாசன அமைப்பு.*
- *அரசியல் அமைப்பு வரைவுகுழு.*
- *அரசியல் அமைப்பின் முன்னுரை.*
- *அரசியல் அமைப்பின் முக்கிய அம்சங்கள்.*
- *அடிப்படை உரிமைகள், கடமைகள், மாநிலங்களின் வழிகாட்டும் அடிப்படைக் கொள்கைகள்.*

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்.**

*லார்ட ; பெதிக லாரென்ஸ் இந்தியாவிவகார காரியதரிசி சர். ஸ்டாஃபோர்ச் கிரிபஸ் வாணிக மண்டலத்தின் தலைவர் எ.வி. அலெக்சான்டர் கப்பற்படையின் தலைவர்.*

நம்து நாடு சுதந்திரம் அடைந்தபிறகு அனேக சவால்களை எதிர்க்கொள்ள வேண்டியதாயிற்று. இச்சமயத்தில் பாகிஸ்தானத் திலிருந்து குடியேற வந்த அகதிகளுக்கு மறுவசதி அளிக்க வேண்டியிருந்தது. சமஸ்த்தானங்கள் ஒருங்கிணைப்பு, ஆங்கிலேயரால் ஆளப்பட்ட எட்டு மாகாணகங்களும், உள் நாட்டு சிற்றாசர்களால் ஆளப்பட்ட 552க்கும் அதிகமான சிற்றரசுகளும், இருந்தன. இவைகள் அனைத்தும் ஆங்கில அரசின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தன இரும்புமனிதர் என்று அழைக்கப்பட்ட சர்தார் வல்லபாய் படேல் இதனைத் திறமையாக இந்திய யூனியனுடன் இணைத்தார். நாட்டின் ஆட்சி நிர்வாகத்திற்காக கட்டங்களின் அவசியம் மற்றும் அரசியல் அமைப்புப்போன்ற சவால்களையும் கூட சரியாக நிர்வாகிக்க அமைக்கப்பட்ட இவ்வகையான அரசியல் அமைப்பு அதனுடைய முக்கிய அம்சங்கள் மற்றும் அதில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி அறிந்து கொள்வோம்.

### இந்திய அரசியல் அமைப்புக் குழு :

நாடுமுழுவதையும் ஒரு சட்டத்தின்கீழ் எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டுமென்று தெரியபடுத்தும் ஏற்பாட்டை அரசியல் நிர்ணய சபை என்பார்கள். இக்குழு ஒன்றை அமைப்பதற்கு தொடர்பான மோதிலால் நேரு குழுவின் சிபாரிசு மற்றும் தேசிய காங்கிரிசின் கராச்சி மாநாட்டின் தீர்மானங்கள் வலியுறுத்தின்.

©KTBS Not to be republished



டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்



டாக்டர் இராஜேந்திர பிரசாத்

***புதிய அரசியல் நிர்ணய சபையின் வரைவுக் குழு :*** டிசம்பர் 9, 1946 அன்று நடைபெற்றது. டிசம்பர் 11, 1946 அன்று டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் தலைமை தாங்கினார். இச்சபையில் ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் படேல் டாக்டர், பீ.ஆர். அம்பேத்கர் மௌலான அப்துல்கலாம் ஆசாத், சீ. ராஜகோபாலாச்சாரி, கெ.எம். முனிஸி, டி.டி. கிருஷ்ணமாச்சாரி, திருமதி சரோஜினி நாயுடு, திருமதி சுசேத கிருபலானி, கர்நாடகத்தின் எஸ். நிஜலிங்கப்பா, கெ.சி. ரெட்டி, கெங்கல் ஹனுமந்தைய்யா, டேக்கூரு சுப்பிரமணியம் போன்றோர்கள் பங்கேற்றனர்.

***வரைவுக் குழு*** : அரசியல் நிர்ணய சபை நாட்டிற்குத் தொடர்பான விஷயங்களை விவரமாக பரிசீலிக்க அனேக குழுக்களை ஏற்படுத்தியது. அவைகளில் முக்கியமானது வரைவுக்குழு. டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் தலைவராக இருந்தார். இக்குழுவில் என். கோபால சுவாமி அய்யங்கார், அல்லாடி கிருஷ்ண சுவாமி அய்யர், கெ.எம், முன்ஸி டி.டி. கிருஷ்ணமாச்சாரி போன்ற பிரசித்திப் பெற்றவர்கள் உறுப்பினர்களாக இருந்தனர்.

> ***உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்.***
>
> *1930, ஜனவரி 26 அன்று லாகூர் மாநாட்டில் இந்தியா பூரண சுயராஜ்ஜியம் என்னும் அறிவிப்பை வெளியிட்டது. ஒப்புக்கொள்ளப் பட்டது. அதனுடைய நினைவாக புதிய அரசியல் அமைப்புச்சட்டம் ஜனவரி 26, 1950 அன்று நடைமுறைக்கு வந்தது.*

***அரசியல் அமைப்புச்சட்டத்தின் முகவுரை :*** இந்திய அரசியல் அமைப்பு சட்டம் தனக்கே உரியதான முகவுரையைக் கொண்டுள்ளது. உலகின் பல்வேறு அரசியல் அமைப்புச் சட்டங்களையும் அவற்றிலுள்ள சிறந்த அம்சங்களை தேர்வு செய்து அமைக்கப்பட்டது. இம்முகவுரையில் அரசியல் அமைப்புச்சட்டத்தின் அடிப்படை தத்துவங்கள், அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை தத்துவங்கள், அரசியல் அமைப்புச்சட்டத்தின் உயர்வு, சராம்சத்தை உட்கொண்டுள்ளது. அரசியல் அமைப்புச்சட்டத்தின் அமைப்பு, மதிப்பு, குறிக்கோள்கள், மற்றும் குறிகளைக் கொண்டுள்ளது. இது மக்களின் அபிலாஷைகள் இலட்சிய கொள்கைகளின் சராம்சமே அரசியல் அமைப்புச் சட்டத்தின் முன்னுரையில் கூறப்பட்ட புனிதமான தத்துவங்களாக உள்ளன.

©KTBS Not to be republished

இம்முன்னுரையை டிசம்பர் 13, 1946 அன்று நேரு அவர்கள் சமர்ப்பித்த தீர்மானங்களின் கருத்து (objective resolution) ஐ அரசியல் அமைப்புக் குழு ஜனவரி 22, 1947 அன்று அங்கீகிரித்தது. அப்பொழுது இந்திய பிரிவினை ஆகவில்லை. 1947 ஆகஸ்டில் பிரிவினை மற்றும் சுதந்திரம் வந்த பின் தீர்மானங்களின் கருத்து இதனை சிறிது மாற்றங்களுடன் அங்கிகிரிக்கப்பட்டது. இந்தீர்மானத்தில் இந்திய சுதந்திரம், குடியரசு, மக்களின் அதிகாரங்களை உட்கொண்டுள்ளது. மக்கள் சமூகம், பொருளாதாரம் மேலும் அரசியல் நீதி, அளிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. சிறுபான்மையினர் மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்கு பாதுகாப்பு அளிப்பதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

நமது அரசியல் அமைப்பு சட்டத்தின் முன்னுரையில் மிகவும் பொருளுள்ளதாகவும் (Meaningful) நாட்டின் அரசியல் சம்பிரதாயத்தின் சித்திரத்தை சித்தரிக்கிறது மற்றும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கைவிளக்காக உள்ளது. இதனை சிலர் அரசியல் அமைப்பின் ஆபரணம் (Jewel) என்று வர்ணித்தால் கே.எம். முன்ஸி அரசியலின் ஜாதகம் என்று அழைத்துள்ளார்.

**இந்திய குடிமக்களாகிய நாம் :** இந்திய அரசியல் அமைப்பு சட்டம் இந்தியராலேயே எழுதப்பட்டது. இந்திய குடிமக்களாகிய நாம் அனைவரும் இந்தியர் என்னும் பாவனைக் கொண்டு அனைவரின் ஆசையையும் காப்பாற்றுவதில் பாடுபட்டுள்ளனர்.

**வல்லமைப்பொருந்திய (Sovereign) :** இந்தியா உலகில் உள்ள எந்த ஒரு நாட்டின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை, வல்லமைப் பொருந்திய நாடாக உள்ளது. உலகின் எந்த ஒரு கூட்டமைப்பிலும் சேராமல் தனக்கென்று சுதந்திரமான வெளியுறவுக் கொள்கை, கூட்டுச் சேரக் கொள்கை, ஐந்தாண்டு திட்ட முறைகளை அனுசரித்து உள்ளேயும் மற்றும் வெளியேயும் சுயாட்சியைப் பெற்றுள்ளது.

**பொதுவுடைமை (Socialist) :** இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் நோக்கம் நல அரசு மற்றும் பொதுவுடைமை நாடாக செய்வதாகும். பொதுவுடைமைநாடு நிர்மாணத்தின் அடித்தளமான மாநில செயலாக்க தத்துவங்களை அரசியல் அமைப்புச் சட்டத்தின் 42 திருத்தத்தின் மூலமாக நடைமுறைப் படுத்தப்பட்டது.

©KTBS Not to be republished




[redacted]

## நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டம்

இந்திய மக்களாகிய நாம் மனமுவந்து தீர்மானித்து இந்தியாவின் **அரசுரிமை, பொதுவுடைமை, மத சார்பின்மை, ஜனநாயக குடியரசு** ஆகியவை எல்லாக குடிமக்களும் பெற உருவாக்குகிறோம்.

(பொதுவுடைமை, மதசார்பின்மை போன்றவை 1976 ஆம் ஆண்டு 42 ஆம் சட்டதிருத்த மசோதாவில் சேர்க்கப்பட்டன)

**நீதி**, பொதுவுடைமை, பொருளாதார, அரசியல் கருத்துரிமை, சொல்லுரிமை, நம்பிக்கை, விசுவாசம், **சம அந்தஸ்து** மற்றும் சம வாய்ப்பு மற்றும் எல்லோரிடமும் உயர்த்துகின்ற **சகோதரத்துவம்** உறுதியான தனிமனித கண்ணியம் நாட்டின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும்.

நமது அரசியல் நிர்ணய சபையில் **1949** ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் **26** ஆம் நாள் நாங்களே இயற்றி, ஏற்றுக் கொண்டோம், எங்களுக்கு நாங்களே அர்ப்பணித்துக் கொண்டுள்ளோம்.



©KTBS Not to be republished

***மதசார்பற்ற* (Secular) :** மதசார்பற்ற என்னும் பதம் அரசியல் அமைப்புச்சட்டம் 42 வது திருத்தத்தம் மூலம் 1976 நடைமுறைக்கு வந்தது. அரசாங்கம் எவ்விதமான மதத்தையும் தேசியமதமாக அங்கிகீரிக்கவில்லை. அதனால் இந்தியா மதசார்பற்ற ஒரு நாடாகும். மக்கள் தங்களுக்கு விருப்பமான மதத்தை பின்பற்றி, அனுசரிக்க சுதந்திரம் பெற்றுள்ளனர். இதனால் இந்தியரிடையே சர்வமத சமபாவனையைக் காணலாம்.

***குடியரசை பின்பற்றும் குடியரசு* (Democratic Republic) :** மக்களாட்சியில் அனைவரின் நன்மையை சாதிக்கும் பொருப்பு அரசுக்குள்ளது நாட்டின் பிரச்னைகளை விவாதிப்பதின் மூலமாக தீர்த்துக் கொள்ள முடிகிறது. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பொதுத்தேர்தல்களில் சுயேச்சையாக வாக்களிக்கும் முறையை நமது மக்களாட்சி நிருபிக்கிறது. இந்திய குடியரசுத் தலைவரை ஐந்தாண்டுகள் காலத்திற்கு தேர்தல் மூலம் தேர்ந்தெடுப்பது. இந்திய ஒரு குடியரசு என்பதை குறிப்பிடுகிறது.

## *இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய சிறப்பியல்புகள்* (Sailent and lengthy constitution) :

இந்தய அரசியலமைப்புச் சட்டம் கீழ்க்காணும் சிறப்பியல்களைக் கொண்டுள்ளது.

### *1. எழுத்து பூர்வமான* (Written) *மாபெரும் அரசியல் அமைப்பு :*

இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுத்து வடிவத்திலுள்ளது. அரசின் உறுப்புகளான மக்களவை ஆட்சி மன்றம் மற்றும் நீதித்துறைகளால் உருவாக்கப்பட்டுள்ளது. அதிகாரம் மற்றும் செயலாக்கம் எழுத்து பூர்வ ஆதாரமாக உள்ளது. அடிப்படை உரிமைகள் குறிக்கப்பட்டுள்ளன. நம்முடைய அரசியலமைப்புச்சட்டம் மூலம் 22 அத்தியாயங்கள் 8 பட்டியல்களையும் 395 விதிகளையும் கொண்டுள்ளது. அதன்பிறகு பல்வேறு திருத்தங்களினால் 24 அத்தியாயங்கள் 12 பட்டியல்கள் மற்றும் 450 விதிகளை உட்கொண்ட மாபெரும் அரசியல் அமைப்புச்சட்டமாக உள்ளது.

## *எளிய கடின, இணக்கமுள்ள அரசியலமைப்புச்சட்டங்கள்* (Flexible constitution) *:*

எந்த ஒரு நாடு அரசியலமைப்பை எளிதாக திருத்தி மாற்றி அமைக்கிறதோ அதனை எளிய (சுலபமான) அரசியலமைப்பு என்று அழைக்கிறார்கள். எந்த அரசியலமைப்பு திருத்தம் விசேஷ விதானத்தை உட்கொண்டு உள்ளதோ

©KTBS Not to be republished

அதனை கடின அரசியலமைப்பு என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவின் அரசியலமைப்பு மிக எளிமையாகல்லாமல், மிக கடினமாகில்லாமல், எளிய மற்றும் கடினமானவைகளுடன் கூடியுள்ளது.

***நாடாளுமன்ற அமைப்புடன் கூடிய அரசு* (Parliamentary form of Govt.):** நம்முடைய அரசியலமைப்பு நாடாளுமன்ற அரசு முறைக்கு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம் அதிகாரத்தைக் கொண்டு உள்ளது. மைய மற்றும் மாநிலங்களில் ஆட்சிமன்றம் சட்டமன்றத்திற்குக் கட்டுப்பட்டுள்ளது. அமைச்சரவை சட்டமன்றத்தின் நம்பிக்கையை இழந்துவிட்டால் உடனடியாக இராஜினாமாவை அளிக்க வேண்டியதாகிறது.

***குடியரசுமுறை* (Republican System) :** அரசியல் அமைப்புச்சட்டம் இந்தியாவை குடியரசு மாநிலமென்றே சாற்றியுள்ளது. இம்முறையில் வம்ச பரம்பரையாக யாரும் நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டிருப்பதில்லை ஆனால் இங்கிலாந்தில் இம்முறை வழக்கத்திலுள்ளது. ஆகையினால் அது மக்களாட்சி முறையைக் கொண்டிருந்தாலும் குடியரசு நாடல்ல. ஆனால் இந்தியாவில் குடியரசுத்தலைவர் நாட்டின் அரசியலமைப்பில் மிகவும் முக்கியமானவராக உள்ளார். அவரைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கிறார்கள். அதனால் இது குடியரசாகும்.

***கூட்டுப்பொது அரசுமுறை* (Fedaral System) :** இந்தியாவில் வெவ்வேறு மொழி, ஜாதி, இனம் மற்றும் விசாலமான நிலப்பகுதியைக் கொண்டிருப்பதால் அரசியல் அமைப்புச் சட்டம் கூட்டுப்பொது அரசு முறைக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மைய மற்றும் மாநிலங்களில் அதிகாரத்தைப் பகிர்ந்து அளித்துள்ளது. (மையம்பட்டியலில் 100 விஷயங்கள், பட்டியலில் 52 விஷயங்களையும் உட்கொண்டதைப் போன்று அதிகாரங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.) இவ்விரண்டு அரசகளின் இடையில் உண்டாகும் விவாதங்களை தீர்த்துவைக்க உச்சநீதி மன்றத்திற்கு அதிகாரமுள்ளது.

***அடிப்படை உரிமைகள்* (Fundamental Right) :** நம்முடைய இந்திய இரசியல் அமைப்புச் சட்டம் மக்களுக்கு நேரடியாக அளித்துள்ள உரிமைகளே அடிப்படை உரிமைகள். இவ்வுரிமைகளை நாட்டின் எவ்வித சட்டங்களாலும் செயல்களிளாலும், மைய அரசு, மாநில அரசு மற்றும் கீழ்நிலை நிறுவனங்களாலும் இவைகளைப் பறித்துக் கொள்ள முடியாது. அடிப்படை உரிமைகளுக்கு அரசியல் அமைப்பால் ஆபத்து நேரிட்டால் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தில் நேரடியாக முறையிடலாம். இவ்விதமாக அடிப்படை உரிமைகளை அரசியல் அமைப்புச் சட்டம் 3வது பாகத்தில்

©KTBS Not to be republished

கூறப்பட்டுள்ளது. அவைகளென்றால் அரசியல் அமைப்புச்சட்டம் 3வது பாகத்தில் மக்களுக்கு சுதந்திர உரிமை சம உரிமை, சுரண்டலுக்கு எதிரான உரிமை, மத உரிமை, கலாச்சாரம் மற்றும் கல்விப் பெறும் உரிமை, மேலும் அரிசியல் அமைப்பின் பரிகார உரிமை என்னும் ஆறு அடிப்படை உரிமைகளைக் காணலாம். இவ்வுரிமைகளைப் பாதுகாக்கும் பொருப்பை உச்சநீதி மன்றம் பெற்றுள்ளது. அதனால் உச்சநீதி மன்றத்தை அடிப்படை உரிமைகளின் பாதுகாவலன் (The protector of fundamental) என்று அழைக்கலாம்.

**அடிப்படைக் கடமைகள் :** நாம் நாட்டிற்கு எதனைச்செய்ய வேண்டும் என்பதே கடமைகள். நமது அரசியல் அமைப்புச்சட்டம் 4வது 'ஏ' பாகத்தில் 51'ஏ' விதியில் 11வது அடிப்படைக கடமைகளைக் கூறப்பட்டுள்ளது. 2002ல் அரசியல் அமைப்புச்சட்டம் 86வது திருத்தம் மூலம் 6 முதல் 14 ஆண்டுகள் வயதுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் பாதுகாவலர் (பெற்றோர்) கட்டாயக் கல்வியை அளிக்க வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது என்னும் 11 வது கடமையைச் சேர்த்துள்ளனர்.

**நாட்டின் பொதுக் கொள்கைகள் (Directive principles of state policy) :** நமது அரசியல் அமைப்புச் சட்டத்திலிருந்து பெறப்பட்டுள்ளது. இவைகள் சமுதாய மற்றும் பொருளாதார மக்களாட்சியை தொடங்குவதற்கு அடிப்படையாக உள்ளன. இவைகளை அரசாங்கம் நடைமுறைப் படுத்தாவிடில் நீதிமன்றத்தில் வினா எழுப்ப முடியாது. ஆயினும் இவை நாட்டின் ஆட்சிமுறைக்கு அடிப்படை விதிகளாக உள்ளன. சட்டத்தைத் உருவாக்கி அதனை நடைமுறைப் படுத்தும்போது அரசாங்கம் இவைகளுக்கு அதிகக் கவனத்தை அளிக்க வேண்டும்.

**சுதந்திரம் மற்றும் மைய நீதிமன்றங்களின் அமைப்புமுறை (Independent and centralized judiciary system) :** நமது நீதித்துறை சுதந்திரமானது மற்றும் மையமானது, மக்களின் உரிமைகளை காப்பாற்றி பயமற்று செயலாற்றுவதற்கு நீதிமன்றங்கள் சுதந்திரத்தைப் பெற்றுள்ளன. நாடாளுமன்றம் மற்றும் ஆட்சிமன்றங்கள் நீதிமன்றங்களின் முக்கியமானது. அதனடியிலுள்ள உயர்நீதிமன்றம் மற்றும் இதர நீதிமன்றங்கள் துணைநீதி மன்றங்கள் சுதந்திரமாக செயலாற்றி வருகின்றன.

**தனிக்குடியுரிமை (Single citizenslip) :** நமது அரசியல் அமைப்புச்சட்டம், மக்களுக்கு குறுகிய மனப்பான்மையுடைய பிராந்திய மனப் பான்மையைக் கட்டுப்படுப்படுத்தி தேசிய மனோபாவனையவளரச் செய்ய தனிக் குடியுரிமை

©KTBS Not to be republished

வாய்ப்பை ஏற்படுத்தி அளித்துள்ளது. இந்தியாவின் எந்த குடிமகனும் எந்த விதமான நாட்டில் பிறந்திருந்தாலும், எந்தபிரதேசத்தில் வசித்தாலும் அனைவருக்கும் ஒரே குடியுரிமையும் அதற்கு தொடர்புடைய சட்டத்தை உருவாக்க நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

***வயது வந்தவர்களுக்கு ஓட்டுரிமை* (Adult Franchise) :** நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டம் வயதுவந்தவர்களுக்கு ஓட்டுரிமை அளிக்கிறது. 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் ஓட்டளிக்கும் உரிமைய அளிக்கப்பட்டுள்ளது அனைவருக்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கான அடையாளமாகும்.

***கட்சி முறை* (Party system) :** அரசியல் கட்சிகள் மக்களாட்சியின் அஸ்த்திவாரம் (Foundation) ஆகும். இந்தியாவில் அனேக அரசியல்கட்சிகள் இருப்பதினால் பலகட்சிகள் முறை வழக்கில் உள்ளது. பொதுத் தேர்தலில் அதிக அரும் பெரும்பானமை பெற்றக் கட்சியே ஆளுங்கட்ச்சியாகும் மற்றுமுள்ள இதரக்கட்சிகள் எதிர்கட்சிகளாக இருக்கும்.

***அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள்* (Fundamental Rights and Duties) :** மக்களின் தனிப்பட்ட குணங்கள், முன்னேற்றத்துக்கு தேவையான சமுதாய மற்றும் அரசியல் சூழ்நிலையையே அடிப்படை உரிமைகள் என்று அழைக்கிறோம். சமுதாயத்தில் மனிதனின் நாகரீக வாழ்க்கையை நடத்துவதற்கு அடிப்படை உரிமைகள் அவசியமாகும். இவ்வுரிமைகள் மக்களாட்சியின் வெற்றிக்கு அவசியமாகும். இவ்வுரிமைகள் மக்களாட்சியின் வெற்றிக்கு அவசியமானவைகளாகும். நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் 3ம் பாகத்தில் 7 அடிப்படை உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் அரசியல் அமைப்புச்சட்டத்தின் 44 வது திருத்தத்தில் சொத்துரிமையைதடை செய்யப்பட்டிருந்தது. தற்போது 6 அடிப்படை உரிமைகள் உள்ளன.

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும் :**

*1895ல் இந்திய தேசிய காங்கிரஸ், மக்கள் உரிமைகள் பற்றி வலியுறுத்தியது.*

*1895ல் பாலகங்காதரதிலகர் தம்முடைய 'ஸ்வராஜ்பில்லில்' உரிமைகளை வலியுறுத்தினார்.*

*1925ல் திருமதி அன்னிபெசன்ட் 'காமன்வெல்த் ஆப் இந்தியா' பில்லில் தனிமனித சுதந்திரம், ஆத்மாசாஷி சுதந்திரம், பேச்சுரிமை, சட்டத்தின் முன் சமமானவர்கள் என்பதை எடுத்துரைத்தார்.*

*1945ல் அறிக்கை 1946 ல் காபினெட் மிஷன் அடிப்படை உரிமைகளை ஆதரித்தது.*

©KTBS Not to be republished




***சம உரிமை* (Right to Equality) *:*** மக்களாட்சியின் வெற்றிக்கு இந்த உரிமை மிகவும் அவசியமானது. அரசியல் அமைப்பாகவும், சமுதாயமாகவும், பொருளாதார ரீதியாகவும் சம உரிமை அளிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள். சட்டத்தை விட சிறந்தவர்கள் யாருமில்லை. ஒவ்வொரு மாநில சட்டத்திற்கு பணிந்திருக்க வேண்டும். ஜாதி, மதம், பால், பிறப்பிடங்களின் ஆதாரத்தின்படி பேத பாவங்கள், கடைகள், பொழுது போக்கு இடங்கள், வழிபாட்டுத்தலங்கள் ஆலயங்கள் போன்ற இடங்களில் யார் ஒருவர் நுழைவதையும் நிராகரிக்கக் கூடாது. அரசு வேலைகளில் சேர ஒவ்வொருவருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும். தீண்டாமையை நடை முறைப் படுத்தக்கூடாது.

***சுதந்திர உரிமை* (Right to particular freedom) *:*** அடிப்படை உரிமைகளில் சுதந்திர உரிமை மகத்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. இந்த உரிமையினடியில் பேச்சு மற்றும் எண்ணத்தை வெளியிடுவது, ஆயுதங்களற்று அமைதியாக சபையைக் கூட்டுவது. சங்க, நிறுவனங்களை துவக்குவது இந்திய நாட்டில் பயணம் செய்வது, வசிப்பது, எந்தத் தொழிலையும் இது பாதுகாப்பான உரிமையாகும். சரியான காரணமில்லாமல் ஒருவரை கைது செய்யமுடியாது மற்றும் மாநில சட்டம் இயற்றுவதன் மூலம் ஒருவரின் வாழ்க்கை அல்லது சுதந்திரத்தை பறித்துக் கொள்வதிற்கில்லை.

©KTBS Not to be republished

***சுரண்டலுக்கு எதிரான உருவம்* (Right against exploitation) :** *சுரண்டல் என்பது ஒரு சமுதாயத்தில் தொற்று நோயாக உள்ளது. இத்தொற்று நோயை நீர்மூலம் செய்ய சுரண்டலுக்கு எதிரான உரிமையை நமது அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. மாநிலமாகட்டும். யாரோ ஒரு தனிமனிதராகட்டும், பலவீனமானவர் ஏழைகளை பெண்களை, குழந்தைகளை சுரண்டக் கூடாது. பிச்சையெடுப்பது தேவதாசிமுறை, சதிமுறை, நீதியற்ற செயல்கள் மற்றும் பலவந்தப்படுத்தி உழைக்கச் செய்வதுபோன்ற செயல்கள் தடுக்கப்பட்டுள்ளன. 14 வயதுக்கும் குறைவான குழந்தைகளை தொழிற்சாலை, சுரங்கம் அல்லது அபாயமான வேலைகளுக்கு நியமிக்கக்கூடாது.*

> ***உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும் :***
>
> ***சுரண்டலைத்தடுக்க மைய அரசு அனேக விதிகள் அமலுக்குக் கொண்டுள்ளது.***
>
> *குறைந்தளவு கூலி விதி 1948* — *துன்மார்க்கவிவகாரங்கள் விதி 1956*
>
> *காலணிகள் தடுப்பு விதி 1961* — *கொத்தடிமை தடுப்புசட்டம் 1976*
>
> *சதித்தடுப்பு விதி 1987* — *மனித உரிமைகள் காக்கும் சட்டம் 1993,*
>
> *குடும்ப பலத்கார விதி 2005*

***மத உரிமை* (Right to freedom of religion) :** *இந்தியா மதசார்பற்ற நாடு, எந்த மதத்தையும் தேசிய மதமாக அரசு ஒப்புக் கொள்ளவில்லை. குடிமக்கள் தங்களுடைய மனசாட்சிக்கு ஏற்றார் போன்று எந்தமதத்திலும் இணையலாம், பின் நிர்வாகத்திற்காக வரி கட்டவண்டும் என கட்டாயப் படுத்தப் படுவதில்லை. மதநிறுவனங்களை அரசியல் நோக்கங்களுக்கு பயன்படுத்த வேண்டி இருப்பதில்லை.*

***கலாச்சாரம் மற்றும் கல்விகற்கும் உரிமை* (cultural and educational rights) :** *நாட்டில் வசிக்கும் குடிமக்கள் தங்களுக்கென மொழி, எழுத்து கலாச்சாரத்தைக் கொண்டுள்ளார்கள். இவைகளின் பாதுகாப்பு மாநிலங்களி (நாட்டின்) கடமையாகும். மதம் மொழி சிறுபான்மையினரின் முன்னுரிமைகளை காப்பாற்றும் நோக்கத்துடன் இவ்வுரிமையை அரசியல் அமைப்புச் சட்டம் கொண்டுள்ளது. சிறுபான்மையினரின் நிறுவனங்கள் மற்றும் நாட்டின் பொருள் உதவியைப் பெற்று நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் யாராக இருந்தாலும் அனுமதி நிராகரிக்க் கூடாது.*

©KTBS Not to be republished

*உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும் :*

*அரசியல் அமைப்புச் சட்டத்தின் 86வது திருத்தம் செய்து 21ஏ விதியை 2002ல் கல்வி ஒரு உரிமையாக மாற்றப் பட்டுள்ளது. இதனால் 14 வயதுக்குப்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் மாநிலமே இலவச மற்றும் கட்டாயக் கல்வியை அளிக்கவேண்டும். கருநாடக மாநிலம் கல்வி உரிமையை சட்டம் (ஆர்.டி.இ. 2009) ஐ நிராகரிக்க முடிவதில்லை.*

***அரசியலமைப்புச் சட்டத்தின் பரிகார உரிமை* (Right to constitutional remedies) :** அடிப்படை உரிமைகளின் பாதுகாப்புக்காக அரசியல் அமைப்புச் சட்டம் 32வது விதியில் வாய்ப்பு ஏற்படுத்தித்தரப்பட்டுள்ளது. அரசியலமைப்பில் மற்றொரு விசேஷ பண்பாக உள்ளது. அதனால் பி.ஆர். அம்பேத்கர் இந்த உரிமையை அரசியல் அமைப்புச் சட்டத்தின் உயிர் மற்றும் இருதயம் என்று கூறியுள்ளார். அடிப்படை உரிமைகளுக்கு யாதொரு தனிமனிதரினாலோ, மாநிலம் அல்லது மைய அரசினாலோ இடையூறு ஏற்பட்டால் பாதுகாப்புக்காக நேரடியாக ஊச்சநீதி மன்றத்தில் மணுவை அளிக்கலாம். அதனால் உச்ச நீதிமன்றத்தை ‘அடிப்படை உரிமைகளின் பாதுகாவலன்’ என்று அழைக்கப்படுகிறது. இந்நீதிமன்றம் உரிமைகளின் பாதுகாப்புக்காக கீழ்க்காணும் ரிட் மணுக்களைப் பெருகிறது.

**ஏ) கைதியை ஆஜர்படுத்துதல் (Habeas corpus) :** காரணமில்லாமல் ஒருவரை போலிசார் கைதுசெய்தால் அவனாகட்டும் அல்லது அவனுக்காக யாராவது விடுவிக்க இந்த ரிட் மணுவை சமர்ப்பிக்கலாம். கைது செய்த ஒரு நபரை 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்தில் ஆஜாராக்க வேண்டும் (கிரிமினல் தண்டனைக்கு இந்த ரிட் மணு பயன்படாது)

**பி) பரமதேச (Mandamus) :** அதிகாரி ஒருவர் தன்னுடைய அதிகாரத்தைச் செலுத்த நிராகரிக்கும்போது அல்லது பொதுமக்களின் செயல்களை செய்வதற்கு நிராகரிக்கும்போது மற்றும் துணை நீதிமன்றங்கள் தன்னுடைய செயலை நிர்வாகிக்க மறுக்கும்போது வயர் நீதிமன்றம் அல்லது உச்சநீதி

*செயல்பாடு :*

*மாநிலத்தில் மனித உரிமைகள் ஆணையத்தின் செயல்களைப் பற்றிய விவரங்களை சேகரிக்க, மனித உரிமைகள் மீறும்போது ஆணையம் எடுத்த முயற்சிகளைப் பற்றி செய்தி ஊடகங்களில் அறிந்து விவரங்களை சேகரித்து கட்டுரைத் தயாரிக்கவும்.*

©KTBS Not to be republished

மன்றத்தில் சம்பந்தப்பட்ட உர்களுக்கு தங்களுடைய செயலை ஆற்றுவதற்கு கட்டளை அறிப்பதே பரமாதேச ஆகும்.

**சி) தடையுத்தரவு (Prohibition) :** இதுவும் கூட நீதிமன்றத்திற்கு தொடர்புடைய மனுவாகிருந்து துணை நீதி மன்றங்கள் தங்களுடைய அதிகார எல்லையைத் தாண்டி வழக்கை விசாரணை செய்யக்கூடாதென்று அல்லது தீர்ப்பை அளிக்கக் கூடாதென்று உச்சநீதிமன்றம் வெளியிடும் எழுத்துபூர்வமான தடையுத்தரவை எதிர்ப்பது.

**டி) சர்ஷியோரரி (Certiorari) :** இந்த ரிட் மனுவின்படி கீழ்நீதிமன்றங்கள் தங்களுடைய அதிகார எல்லையைக் கடந்து தீர்ப்பை அளித்தால் அதனை ரத்து செய்து அதற்கு தொடர்புடைய வழக்கை சம்பந்தப்பட்ட மேல் நீதி மன்றத்திற்கு மாற்ற வேண்டுமென்று உயர்நீதி மன்றத்தின் கீழுள்ள நீதிமன்றங்களுக்கு அளிக்கும் ஆணையப் பத்திரமே ரத்து செய்ததாகும்.

**இ) கோ - வாரன்ட் (co-warrant) :** அருகதையற்ற ஒருவர் சட்டத்தால் சுகிஷ்க்கரப்பட்டவன் அரசாங்க வேலையிலிருந்தால், அம்மாதரியான மனிதர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வினா எழுப்புவதற்கு கோ - வாரன்ட் என்பார்கள்.

சமூதாயரீதியாக இழந்த உரிமைகளை காக்க அல்லது பொதுமக்களின் விருப்பத்தைக் காப்பதற்காக பொதுமக்களு விருப்ப வழக்குகளை அளிக்கப்படுகிறது. சாசன உரிமைகள், வாழ்க்கையின் அவசியங்களைப் பெறும் உரிமை, சுற்றுச் சூழல் மாசுகளிலிருந்து உயிர் முதலியனவற்றிற்கு சம்பந்தமுள்ள இவ்வழக்குகளைத் தொடர வேண்டியுள்ளது. சங்க நிறுவனங்கள், தனி மனிதர்கள் சாதாரணமாக நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர வேண்டியதாகிறது. தற்காலத்தில் ஊடகங்கள் மூலமாகவும் ஆதாரத்தின்படி நீதிமன்றங்களே சுயமாக பொதுமக்களின் நன்மைக்காக வழக்குகளை பதிவுசெய்து வருவதைக் கவனித்து வரலாம்.

### அடிப்படைக் கடமைகள் :

உரிமைகள் மற்றும் கடமைகள் இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும். கடமைகளற்ற உரிமைகளுக்கு முக்கியத்துவமும் மதிப்பும் இருப்பதில்லை. அரசியல் அமைப்புச்சட்டம் 42 வது திருத்தம் செய்து 4 ஏ பாகம் 51 ஏ விதியில் 10 அடிப்படைக் கடமைகளைச் சேர்த்துள்ளனர். 2002ல்

©KTBS Not to be republished

86வது அரசியல் அமைப்பு திருத்தத்தின்படி 11வது அடிப்படைக் கடமைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவைகள் கீழ் வருமாறு.

1. நமது அரசியல் அமைப்புச் சட்டம், தேசியக்கொடி மற்றும் தேசிய கீதத்தை கௌரவித்தல்.
2. சுதந்திரப் போராட்டத்தின் புனிதக் கோட்பாடுகள், தத்துவங்களைப் பின்பற்றுதல்.
3. தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுதல் மற்றும் காப்பது.
4. அவசியம் ஏற்பட்டால் நாட்டைக் காப்பாற்ற நாட்டிற்கு சேவையாற்றுவது.
5. இந்தியரிடையே சமத்துவம் மற்றும் சகோதர பாவனையை வளர்க்க வேண்டும் மற்றும் பெண்களின் கௌரவத்திற்கு இழுக்கு உண்டாக்கும் ஆச்சாரங்களை புறக் கணிக்க வேண்டும்.
6. நம்முடைய உயர்ந்த பாரம்பரியத்தைக் காப்பாற்றுதல்.
7. நம்முடைய இயற்கை சூழ்நிலைகளை பெருக்கி மற்றும் முன்னேற்றமடையச் செய்தல்.
8. அறிவியல் இயல்பை மற்றும் சக்தியை அறிதல்.
9. பொதுமக்களின் சொத்துக்களைக் காப்பாற்றவேண்டும் மற்றும் இம்சை செய்வதைத் தடுக்க வேண்டும்.
10. தனியார், சமூக செயல்பாடுகளில் மிகச் சிறப்பாகக் காட்டி நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுப்படுவது.
11. தந்தை அல்லது காப்பாளர் 6 ஆண்டுகள் மதல் 14 ஆண்டுகள்வரை தங்கள் குழந்தையின் கல்விக்கு வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

அடிப்படை உரிமைகளுக்குள்ளது போன்று கடமைகளுக்கும் நீதிமன்றத்தின் பாதுகாப்பு இருப்பதில்லை. கடமைகளை மீறியவர்களுக்கு சாதாரண சட்டத்திற்கு உட்பட்டு தண்டனை விதிக்கப்படும்.

**நல அரசின் தத்துவங்கள். கொள்கைகள் (Directive principles of state policy) :** நல அரசின் விதிகள் நாட்டின் தத்துவங்களை அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இத்தத்துவங்கள் மாநில அரசு நிர்வாகம் செய்யவேண்டிய செயல்திட்டங்கள், வழிகாட்டுதல்களிருந்து நம்முடைய அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் ஐரிஷ் அரசியல் அமைப்பின்

©KTBS Not to be republished

வழிகாட்டுதல்லிருந்து (சமுதாய தத்துவங்கள்) நம்முடைய அரசியல் அமைப்பிலும் இவைகளைப் பயன்படுத்தியுள்ளனர். மாநில அறிவுரைத்தத்துவங்கள் மைய மற்றும் மாநிலங்களுக்கு அறிய தத்துவங்கள் உள்ளது. அரசு மக்களுக்கு பொருளாதாரம், சமுதாயம், அரசியல் நீதி கிடைக்கக்கூடிய உத்தேசத்தைக் கொண்டுள்ளது. ஆனால் இவைகள் அறிவியல் நன்னடத்தை அடிப்படையின் மீது நின்றுள்ளன. அரசாங்கம் இவைகளை (மைய-மாநில - உள்ளாட்சி செயல்படுத்தாமலிருந்தால் நீதிமன்றத்தில் வினா எழுப்புவதிற்கில்லை. இத்தத்துவங்களை ஆதரித்து உருக்கொண்டு நிர்வாகத்தை நடத்த வேண்டும். அதனால் இவைகளை வழிகாட்டும் தத்துவங்கள் என்று அழைக்கிறோம்.

1. அனைத்து குடிமக்களுக்கும் தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருவது.

2. சமுதாயத்தில் செல்வம் மற்றும் உற்பத்தி சாதன்கள் சில மக்களுடைய சொத்தாவாதைத் தடுப்பது.

3. பெண்கள் மற்றும் ஆண்களுக்கு சமமான வேலைக்கு சமமான சம்பளம் அளிப்பது. தொழிலாளரின் ஆரோக்கிய நலனைக் காப்பது.

4. முதியோர், நோயாளிகள், பலவீனமானவர்கள் மற்றும் உதவி ஆற்றவர்களுக்கு உதவிப்பணம் அளிப்பது.

5. நாடுமுழுமைக்கும் ஒரேமாதரியான குடிமக்கள் சட்டங்களை அமல்படுத்துவது.

6. 6 வயதுக்கும் குறைவான அனைத்துக் குழந்தைகளுக்கு சத்துணவு மற்றும் பள்ளி முன் பள்ளி கல்வியை (Pre-school education) அளிக்க மாநிலங்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

7. வரலாற்று நினைவுச் சின்னங்கள் மற்றும் நினைவிடங்களை காப்பது.

8. நீதிமன்றங்களை ஆட்சி மன்றங்களிலிருந்து வேறுபடுத்துவது.

9. அனைத்துலக அமைதியையும் வெளிநாட்டு சட்டங்களை மதிப்பது.

10. கிராம பஞ்சாயத்துக்களை அமைப்பது.

11. கிராமியக் கைத்தொழில், குடிசைத் தொழில்கள் வளர உற்சாக மூட்டுதல்.

©KTBS Not to be republished

12. வேளாண்மை, கால் நடைகளை மேம்படுத்த அறிவியல் வளர்ச்சியை நவீனமாக்குவது.

13. மதுவிலக்கை நடைமுறைப்படுத்துவது.

14. அறிவியல் ஆதாரத்தின்படி வேளாண்மை முறைகளை மேம்படுத்துவது.

மாநில பொதுத் தத்துவங்கள் மிகவும் முக்கியமானவை. அனைவரின் நலனையும் மேம்படுத்துவதே நோக்கமாக உள்ளது. அடிப்படை உரிமை தனிமனிதனுக்கு சம்பந்தம் மிருந்தால், மாநில பொதுத் தத்துவங்கள் சமுதாயத்திற்கு சம்பந்தப்பட்டதாகும். மைய மற்றும் மாநில அரசுகளின் மீது தத்துவங்களை நடைமுறைக்குத் தரும் முயற்சிகளை மேற்கொள்கிறோம். இந்தியா அனைத்து நிலைகளிலும் வளர்ச்சிப் பெறுவதற்கு இத்தத்துவங்கள் மாலுமியின் காம்பாஸ் (திசைக்காட்டியை) போன்றதாகும்.

> ***விவாதிக்க :***
>
> *அடிப்படை உரிமைகளை அனுபவிக்க விரும்புகிறோம் அதனைவிட அதிகமாக அடிப்படைக் கடமைகளை நிர்வாகிக்க வேண்டும்.*

## பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்களை தகுந்த சொற்களால் நிரப்புக.**

1. மாநிலத்தை நிர்வாகிக்கும் அடிப்படை சட்டமே ________________.
2. புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சபை ________________ அன்று நடைபெற்றது.
3. அரசியலமைப்பு வரைவுக் கமிட்டியின் தலைமையை வகித்தவர் ________________ .
4. நம்முடைய அரசியலமைப்புச் சட்டம் ________________ அரசின் முறையைக் கொண்டுள்ளது.
5. மக்களுக்கு உயரிய அதிகாரம் உள்ள மாநிலத்தை ________________ என்று அழைக்கப்படுகிறது.
6. நம்முடைய அரசியலமைப்புச் சட்டம் மக்களுக்கு ________________ குடியுரிமைக்கு வாய்ப்பை ஏற்படுத்தி அளித்துள்ளது.
7. அரசியல் அமைப்புச் சட்டத்தின் பரிகார உரிமையை ________________ வது விதியில் இணைத்துள்ளது.

©KTBS Not to be republished

8. மாநில வழிகாட்டு தத்துவங்களை ______________ அரசியல் அமைப்பிலிருந்து பெறப்பட்டுள்ளது.

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விவாதித்து விடையளிக்கவும்.**

1. புதிய அரசியல் அமைப்புச் சட்டவரைவு சபையின் தலைவர் யார் ?
2. நமது அரிசியல் அமைப்புச் சட்டம் என்று நடைமுறைப் படுத்தப்பட்டது ?
3. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் முன்னுரையில் எதனை உட்கொண்டுள்ளது ?
4. மத சார்பின்மை என்றால் என்ன ?
5. நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய பண்புகள் யாவை ?
6. நமது அரசியல் அமைப்பு அளித்துள்ள அடிப்படை உரிமைகள் யாவை?
7. அடிப்படைக் கடமைகள் பற்றி எழுதுக.
8. மாநிலத்தின் பொதுத் தத்துவங்கள் யாவை?

**III. செயல்பாடு :**

1. அரசியலமைப்பு சபையில் பங்கேற்ற முக்கியத் தலைவர்களின் படங்களை சேகரிக்கவும்.
2. நீங்கள் அனுபவித்துவரும் அடிப்படை உரிமைகள் பட்டியல் தயாரிக்கவும்.
3. நமது அடிப்படைக் கடமைகளைப் பட்டியல் தயாரிக்கவும்.
4. நாடுமுழுவது ஒரேவிதமான சட்டம் நடைமுறைப் படுத்த இருந்த தடைகளைப் பற்றி விவாதிக்கவும்.

**III. செயல்திட்டம் :**

1. வகுப்பாசிரியரின் உதவியுடன் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய ஒரு கட்டுரைப் போட்டியை ஏற்படுத்தி, விவாதிக்கம்.

*****

©KTBS Not to be republished

## அத்தியாயம் - 2

# மைய (மத்திய) அரசு

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்ச"ங்களைப்பற்றி அறிகிறோம்.**

- நாடாளுமன்றத்தில் இராஜ்ய சபை (மைல்சபை) மக்களவை (லோக் சபை) அமைப்பு, உறுப்பினர், தகுதிகள் மற்றும் செயல்பாடுகள்.
- மைய அரசின் செயலகம், குடியரசுத்தலைவர் தேர்வு, தருதிகள் மற்றும் அதிகாரங்கள்.
- பிரதம மந்திரி, அவருடைய செயல்கள்
- நீதித்துறை அமைப்பின் உச்சநீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் பொருப்பு மற்றும் செயல்கள்.

இதற்கு முந்தை அத்தியாயத்தில் இந்திய இறையாண்மை, சுதந்திர, பொதுவுடைமை, மதசார்பற்ற, குடியாட்சி, குடியரசு என்று அறிந்துள்ளீர்கள். இங்கிலாந்து மற்றும் பிரான்சு ஒரே வகையான அரசு அமைப்பைக் கொண்டுள்ளன. என்றால் மத்தியில் மைய அரசு, மாநிலங்களால் ஒன்றுகூடியிருந்து, அதிகாரங்கள் மைய மற்றும் மாநிலங்களில் அரசியலமைப்பைக் கொண்டு பிரிக்க முடியாததாக உள்ளது. தேசிய ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பை மனதிலிருதிதி மைய அரசு அதிக அதிகாரங்களைக் கொண்டுள்ளது, அவைகளை மக்களவை, ஆட்சித்துறை மற்றும் நீதித்துறைகள் மூலமாக நடத்துகிறது.

## மைய மாமன்றம் (மத்திய சட்டமன்றம்)

இந்தியா கண்ணியமான நாடாளுமன்ற அரசைக் கொண்டுள்ளது மைய மக்கள் மன்றத்தை நாடாளுமன்றே என்று அழைக்கிறோம் நமது அரசியல் அமைப்பு 79 வது விதி நாடாளுமன்றத்தின் அமைப்புக்கு வாய்ப்பு அளிக்கிறது. நமது அரசியல் அமைப்பு இரண்டு சபைகளை நாடாளுமன்றத்திற்கு அளித்துள்ளது மேல் சபை (இராஜ்யசபை) என்றும் கீழ்சபையை லோக்சபை என்று அழைக்கிறோம்.

### இராஜ்ய சபை (மேல்சபை) :

இதனை மாநிலங்களின் அவை அல்லது இராஜ்ய சபை என்றும் அழைக்கிறோம். இது உறுப்பினர்களின் அதிகபட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை 250 உட்கொண்டிருக்கும். 238 உறுப்பினர்கள் மாநிலங்கள், மைய அரசு ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களின் சட்டமன்ற உருப்பினர்களால் தேர்ந்தெடுக் கப்படுகின்றனர்.

©KTBS Not to be republished

மற்றுமுள்ள 12 உறுப்பினர்களைக் கலை, இலக்கியம், அறிவியல் மற்றும் சமூக சேவையில் விசேஷ அனுபவம் பெற்றவர்களை குடியரசுத் தலைவர் நியமனம் செய்வார். இதனை அறிஞர்கள் சபை என்றும் அழைப்பார்கள்.

### பதவிக் காலம்

இராஜ்யசபை நிரந்தர சபையாகும், லோக்சபையைப் போன்று கலைக் கமுடியாதது. ஆனால் உறுப்பினர்களின் பதவிக் காலம் 6 ஆண்டுகளாகும். ஒவ்வொரு 2 ஆண்டுகளுக்கு மூன்றில் ஒரு பங்கு உருப்பினர்கள் ஓய்வு பெறுவார்கள். உறுப்பினர்கள் தங்களுடைய இடத்தில் (ஸ்தானத்தில்) தொடர விருப்பமில்லையென்றால் சபைத் தலைவருக்கு இராஜினாவை சமர்ப்பிக்கலாம்

**உறுப்பினர்களாவதற்கான தகுதிகள்:**

1) இந்திய குடிமகளாக இருக்கவேண்டும்
2) 30 ஆண்டுகள் வயதைக் கொண்டிருக்கவேண்டும்.
3) நீதிமன்ற தண்டனைகளுக்கு உட்பட்டிருக்கக் கூடாது
4) மனநிலை பாதிப்பு அடைந்தவராக இருக்கக் கூடாது.
5) நாடாளுமன்றம் அவ்வப்பொழுது வெளிப்படுத்தும் தகுதிகளைப் பெற்று இருக்கவேண்டும்.

துணைக் குடியரசுத்தலைவர் இராஜ்ய சபையின் சபைத்தலைவராக இருப்பார். உறுப்பினர்களில் ஒருவரை உபசபைத்தலைவராக தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். சபையின் கூட்டத்தொடர் நடைபெற வேண்டுமானால் $\frac{1}{10}$ பாகம் அளவு (குறைந்தது 25 உறுப்பினர்கள்) உறுப்பினர்கள் ஆஜராகி இருக்க வேண்டும். ஆண்டுக்கு ஒருறையாவது சபைக் கூட வேண்டும். உறுப்பினர்களின் வேண்டுகொளின்படி சிறப்புக் கூட்டம் அழைக்கப்படலாம்.

**மக்களைவ (Lok Sabha) :**

மக்களவையின் உறுப்பனர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் இதனை மக்கள் மன்றம் என்றும் அழைப்பார்கள். மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 545 இதில் 543 உறுப்பினர்கள் பொதுத் தேர்தல் மூலமாக தேர்வு செய்யப்படுவார்கள். மற்ற இரண்டு ஆங்கிலோ இந்தியர் உறுப்பினராக குடியரசுத் தலைவர் நியமிப்பார். தலித்இன மக்களுக்கு 79 இடங்களும் மற்றும் பழங்குடியினருக்கு 41 இடங்களும் ஒதுக்கப்படுகின்றன.

**பதவிக் காலம் :** மக்களவையின் பதவிக்காலம் 5 ஆண்டுகள். பதவிக்காலம்

©KTBS Not to be republished

முடியும் முன்பே பிரதமமந்திரியின் பரிந்துரையின் பெயரில் குடியரசுத்தலைவர் மக்களவையை ககலைக்கலாம். குடியரசுத்தலைவர் அவசரநிலைப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள நிலையில் பதவிக் காலத்தை ஒராண்டு நீட்டிக்கலாம்.

***மக்களவை உறுப்பினர்களின் தகுதிகள் :***

1. இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்.
2. 25 வயது அடைந்து இருக்க வேண்டும்.
3. அரசாங்கத்தில் எந்தப் பணியிலும் இருக்கக் கூடாது.
4. மனநிலை பாதிப்புள்ளவராக இருக்ககூடாது.
5. நீதித் துறையினால் அபராதம், தண்டனைக்கு உட்பட்டு இருக்கக் கூடாது.
6. நாடாளுமன்றம் அவ்வப்பொழுது வெளியிடும் தகுதிகயைப் பெற்று இருக்க வேண்டும்.

***சபாநாயகர் (சபைத்தலைவர்) :*** மக்களவை உறுப்பினர்களில் ஒருவரை அவைத் தலைவராக (ஸ்பீக்கர்) மற்றொருவரை துணை அவைத் தலைவராக (டெபுடி ஸ்பீக்கர்) நேர்ந்தெடுத்துக் கொள்ள வாய்ப்புள்ளது. சபைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவையின் செயல்பாடுகளில் பங்கேற்க வேண்டியதாகிறது. மக்களவையின் நடவடிக்கைகள் சபையின் நெறிமுறைகளுக்கு ஏற்ப நடைபெறும் வகையில் செயலாற்றுவது மற்றும் கவனித்துக் கொள்வது. சபையில் விவாதங்கள், ஓட்டெடுப்பு தீர்மானங்கள், விதிகளின் படி சபையை நடத்தும் பொருப்பு சபா நாயகருக்குண்டு. விதிகள் பற்றி தெளிவாகவும், தீர்மானம் (Ruling) அளிக்கும் அதிகாரம் இவருடையதாக இருக்கும். அவையில் உள்ள அனைவரும் (பிரதமமந்திரியையும் உட்கொண்டு) சபைத் தலைவருக்கு மரியாதை அளிக்க வேண்டும். மசோதாக்கள் பற்றிய விவதாத்தில் ஓட்டெடுப்பு நடைபெறும்போது சம அளவு ஓட்டுக்கள் விழும்போது நிர்ணயம் செய்ய ஓட்டளிப்பார். சபைத்தலைவர் இல்லாத பொழுது துணைத்தலைவர் சபையை நடத்துவார்.

***எதிர்க் கட்சித் தலைவர் :***

- எதிர்க்கட்சி தலைவரின் பங்கு மற்றும் செயல்கள்.
- ஆளும் அரசு தவறுகள் செய்தால் அவைகளை சுட்டிக்காட்டுவது.

| செயல்பாடு : |
|---|
| *பள்ளியில் இளைய சட்டசபை/பிக்களவை போட்டியை ஏற்படுத்தி, இதில் பிரதமமந்திரி மற்றும் சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சி தலைவராக பங்கேற்று அனுபவத்தைப் பெறுங்கள்.* |

©KTBS Not to be republished

- *அரசாங்கத்தின் நீதி, விதிகளை விமர்சிப்பது.*
- *அரசாங்கம், அமைச்சரவை மற்றும் அதிகாரிகளை எச்சரிக்கை அடையச் செய்வது.*

***நாடாளுமன்றத்தின் அதிகாரங்களும், செயல் முறைகளும்* (Power and Functions of the Parliament) :**

***சட்டங்கள் இயற்றும் செயல் :*** நாடாளுமன்றத்தின் அடிப்படையே, சட்டங்கள் இயற்றுவதே முக்கியமான செயலாகும். மையப்பட்டியலிலுள்ள விஷயங்களுக்குத் தொடர்புள்ள சாசனங்களை இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உண்டு. நிதி நிலை மசோதாவை நாடாளுமன்றத்தில் மட்டும சமர்ப்பிக்கப்படுகிறது. மற்ற மசோதாக்கள் எந்த சபையிலும் சமர்ப்பிக்கலாம். ஆனால் மசோதா செல்லுபடியாக விவாதங்கள் மூலமாக மற்ற சபைகளின் ஒப்புதலைப் பெற வேண்டும். மசோதாவை ஆதரித்தும் மற்றும் எதிர்த்தும் சமமான ஓட்டுகள் விழும்போது சபைத்தலைவர் (ஸ்பீக்கர்) தன்னுடைய தீர்மான ஓட்டை அளிப்பார். மசோதாவைப் பற்றி சபைகளின் இடையே பின்னபிப்பிராயம் ஏற்பட்டால் குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தின் இருசபைகளையும் கூட்டித் தீர்மானிக்கலாம். சபைகளின் ஒப்புதல் கிடைத்தால் அமா மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டும். குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தின் இரு சபைகளையும் கூட்டித் தீர்மானக்கலாம். சபைகளின் ஒப்புதல் கிடைத்தால் அம்மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்படும். குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குப் பிறகு மசோதா சட்டமாக நடைமுறைக்கு வரும்.

***நிர்வாக அதிகாரம் :*** இந்திய நாடாளுமன்றத்தின் அரசாக இருப்பதினால் பிரதம மந்திரி மற்றும் ஆமைச்சரவை உண்மையான தீர்மானங்களை நிறைவேற்றும் அங்கமாக உள்ளது. மைய அமைச்சரவை நாடாளுமன்றத்திற்கு பொருப்பாக செயலாற்றி வருகிறது. நாடாளுமன்ற அமைச்சரவையை கேள்விகள் கேட்பதன் மூலமாக செயலகத்தின் மீது முழு கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும். நாடாளுமன்றத்தின் நம்பிக்கை உள்ளவரையில் அமைச்சரவை அதிகாரத்தில்

> ***செயல்பாடு:***
> *தொலைக்காட்சியில் மக்களவை நிகழ்வுகளை நேரலையில் பார்த்து கீழ்வருபவனைகள் பற்றி குறிப் பெழுதுங்கள்.*
> *1. சபா நாயகரின் பங்கு.*
> *2. ஆளுங்கட்சித் தலைவரின் பேச்சு.*
> *3. எதிர்க்கட்சி தலைவரின் பங்கு.*

©KTBS Not to be republished

தொடரும். நம்பிக்கை இழந்துவிடும்போது அமைச்சரவை இராஜினாமா அளிக்கவேண்டியதாகிறது. செயலகத்தின் மீது அதிலும் பிரதம மந்திரி மேலும் அமைச்சரவையின் மீது மக்களவை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளகிறது. அரசின் நன்னடத்தை உதவிகள் பற்றி மக்களவை பெருவாரியான உறுப்பினர்கள் நம்பிக்கையை இழந்தால் அரசாங்கம் (பிரதம மந்திரி, மேலும் அமைச்சரவை) இராஜினாமா அளிக்கவேண்டியதாகிறது.

***நிதித்துறை அதிகாரம் :*** மக்களவை நாட்டின் நிதி நிலையின் மீது முழுக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. மக்களவையின் அனுமதி (Approvel) இல்லாமல் அரசாங்கம் எவ்வகையான வரி வசூலித்தலுக்கோ, செலவு செய்வதற்கோ அதிகாரம் இருப்பதில்லை. நிதி மசோதா முதலில் மக்களவையில் தாக்கல் செய்யும் விதி உண்டு நிதி மசோதாவிற்கு மக்களவையின் அநுமதியைப் பெற்ற பிறகு இராஜ்ய சபைக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. இராஜ்ய சபை மசோதாவைப்பற்றி சில யோசனைகள் மற்றும் குறிப்புகள் அளிக்கும் மேலும் 14 நாட்கள் வரையில் திருப்பியனுப்பாவிடில் மசோதா அங்கிகாரம் பெற்றுள்ளது என்று எண்ணப்பட்டு அதனை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

***நீதித்துறை :*** குடியரசுத்தலைவரை பதவியிலிருந்து நீக்குவதற்கு (Remove) அல்லது உயர்நீதிமன்ற நீதிபதிகளை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளுக்கும் உண்டு. நீதித்துறைக்கு தொடர்பான சில புலன் விசாரணைகளின் அறிக்கைகளை விவாதிக்கும் அதிகாரம் இவ்விரு சபைகளுக்கும் உள்ளது.

***அரசியலமைப்பைத் திருத்தும் அதிகாரம் (Constitutional) :*** அரசியல் அமைபைத் திருத்தம் செய்யும் விஷயத்தில் மக்கள் அவை மற்றும் இராஜ்ய சபைக்கு சமமான அதிகாரமுள்ளது திருத்தங்களுக்குத் தொடர்பான மசோதாவுக்கு இருசபைகளின் ஒப்புதல் வேண்டும். ஒரு சபை அங்கிகரித்த மசோதவை மற்றொரு சபை தள்ளுபடி (Rejection) செய்தால் சட்டத்திருத்தம் சாத்தியமில்லை. சில சந்தர்ப்பங்களில் சட்டத்திருத்தம் செய்ய மாநில சட்ட சபைகளுக்கும் கூட வாய்ப்புள்ளது.

***மற்ற பிற அதிகாரங்கள் மற்றும் செயல்கள் :***

1. உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நிதி மன்றங்களுக்கான அதிகார எல்லைக்கு உட்பட்ட சட்டங்களை ஏற்படுத்துவது.
2. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஒரே உயர்நீதிமன்றத்தை ஏற்படுத்தும் அதிகாரம்.

©KTPS Not to be republished

3. புதிய மாநிலங்களை ஏற்படுத்துவது, பெயர்மாற்றம், மாநிலங்களின் எல்லைகளை வரையறுப்பது.

4. பொதுசேவை ஆணைக்குழு (Public Service Commision) நிதிக்குழு, தேர்தல் ஆணையம், பின்தங்கிய பிரிவினருக்கான ஆணைக்குழு முதலிய குழுக்களின் அறிக்கையைப் பற்றி விவாதித்து முடிவெடுப்பது.

5. தேசிய அவசர நிலை, மாநில அவசர நிலை மற்றும் நிதி நெருக்கடிநிலையை உறுதிமொழியுடன் ஆமோதித்தல்.



நாடாளு மன்றம்

**மையச் செயலகம் (நிர்வாகம்) (Union Excutive)**

மத்திய நாடாளுமன்றம் ஏற்படுத்தும் சட்டங்களை (மசோதாக்களை-) நடைமுறைப் படுத்துவதே செயலகம். இது மைய அரசின் செயல்திட்டங்களை மேலும் நன்னடத்தைகளை நடைமுறைப் படுத்துகிறது. இச்செயலகம் குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர். பிரதம மந்திரி மற்றும் அமைச்சரவையை உட்கொண்டுள்ளது. குடியரசுத் தலைவர் பெயருக்குமட்டும் செயலகத்தின் முக்கியமானவராக இருப்பார். பிரதம மந்திரியை உட் கொண்ட அமைச்சரவை உண்மையான மையச் செயலகமாக இருக்கும்.

## குடியரசுத்தலைவர் (President)

நமது அரசியல் அமைப்பு சட்டம் 52வது விதியின்படி குடியரசுத் தலைவரின் பதவிக்கு வாய்ப்பு அளித்துள்ளது. இந்திய குடியரசுத்தலைவர் நமது அரசியல் அமைப்பில் முக்கியமானவர் நாட்டின்முதல் குடிமகனும் செயலகத்தின் முக்கியமானவரும் மேலும் முப்படைகளின் சேனாதிபதி

Not to be republished

(விமானப்படை, நிலப்படை கப்பற்படை) முப்படைகளின் தலைமைதள பதியாவார். நாட்டின் அனைத்து அதிகாரங்களும் இவரைச் சேரும். சட்டத்தின் காவலர் மட்டுமின்றி நாட்டின் ஒருமைப் பாட்டின் சின்னமாக விளங்குகிறார். உயர்மதிப்பிடத்தைப்பெற்றுள்ளார் அவரது நிர்வாக செயல்பாட்டை எந்த நீதி மன்றத்திலும் வினவ முடியாது. இவ்விதமான ஸ்தானத்தை அலங்கரிக்கும் ஒவேர் இந்தியாவின் சிறந்த குடிமகனாக இருக்க வேண்டும்.

***குடியரசுத்தலைவரின் தேர்தல் முறை* (Election of the President) :** அரசியல் அமைப்பு 54 மற்றும் 55 வது விதியில் குடியரசுத்லைவரின் தேர்தல் முறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குடியரசுத்தலைவரை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அவை மாநிலங்களவை மற்றும் அனைத்து மாநிலங்களின் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் டெல்லி பாண்டிச்சேரி சட்ட மன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அடங்கிய வாக்காளர் பெருங்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். உச்ச நீதி மன்றத்தின் நீதிபதியவர்கள் இவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைப்பார். இவருடைய பதவிக் காலம் ஐந்தாண்டுகள் ஆகும். மேலும் மறுபடியும் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கும் தருதியைப் பெற்றுள்ளார். அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிராக செயல்பட்டால் அவரை நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாத தீர்மானம் மூலம் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உள்ளது.

***நம்பிக்கை இல்லாத்தீர்மானம்* (Motion of Impeachment) :** குடியரசுத்தலைவர் அரசியல் அமைப்பில் பிரிக்கமுடியாத ஒரு அங்கமாக உள்ளார். அல்லாமல் அரசியல் அமைப்பின் பாதுகாவலர் ஆவார். அதனால் யாரும் அரசியல் அமைப்புக்கு எதிராக செயல்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு வேளை குடியரசுத் தலைவரே அரசியல் அமைப்புச் சட்டத்தின் 61வது விதியை அவருக்கு எதிராக குற்றம் சுமத்தலாம். இதனை நாடாளுமன்றத்தின் எந்த சபையிலும் செய்யலாம். பிறகு 14 நாட்களுக்குள் விவாதத்திற்கு நாள் (தேதி) குறிப்பிட்டுத் தெரியப் படுத்த வேண்டும். இதற்கு சபையின் $\frac{1}{4}$ பாகம் அளவு உறுப்பினர்களின் ஆதரவு இருக்க வேண்டும். இரண்டு சபைகளிலும் விவாதித்து 2/3 பாகம் உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்தால் குடியரசுத்தலைவரை பதவி நீக்கம் செய்ய சாத்தியமாகும். ஆனால் இதுவரையில் இம்மாதரியான நிகழ்வு இந்தியாவில் நடை பெறவில்லை.

***தகுதிகள் :***

1. இந்திய குடிமகனாக இருக்கவேண்டும்.
2. 35 வயதுக்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.

©KTBS Not to be republished

3. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டிய அனைத்துத் தகுதிகளையும் பெற்று இருக்க வேண்டும்.

4. அரசில் எவ்விதப் பதவியையும் வகிக்கக் கூடாது.



குடியரசுத்தலைவர்மாளிகை, தில்லி

©KTBS Not to be republished

## குடியரசுத்தலைவரின் அதிகாரங்கள்

**செயலாக்க அதிகாரம் :** நாட்டின் அனைத்து நிர்வாகங்கள் குடியரசுத்தலைவரின் பெயரிலேயே நடைபெறும் பிரதம மந்திரியை குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். பிறகு பிரதம மந்திரியின் ஆலோசனைப்படி மற்ற அமைச்சர்களை நியமிக்கிறார். இந்தியாவின் உயர் பதவிகளான அட்டர்னி ஜெனரல், கன்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜென்ரல், உச்ச நீதி மன்றத்தின் நீதிபதிகள், உயர் நீதி மன்ற நீதிபதிகள், மாநில ஆளுநர்கள், நிதிகமிஷனின் உபதலைவர் பாதுகாப்புப் படைகளின் படைத்தலைவர்கள் மேலும் வெவ்வேறு நாடுகளுக்கான தூதுவர்களை நியமிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உள்ளது. அவ்வாறே மேற்கண்ட அதிகாரிகளை அரிசியல் அமைப்பின்படி அவர்களுடைய பதவியைத் துறக்கச் செய்யும் (Terminate) அதிகாரமும் உண்டு.

**சட்ட அதிகாரம் :** குடியரசுத்தலைவருக்கு நாடாளுமன்ற சபைகளை கூட்டுவதற்கும், அதனைத் தொடரச் செய்யவும் கூட்டுசபைகளில் உரை நிகழ்த்தும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார். நாடாளு மன்றத்தை கலைக்கும் அதிகாரத்தையும் கொண்டுள்ளார். நாடாளுமன்றத்தின் இரு சபைகளாலும் அங்கிகீரிக்கப்பட்ட மசோதக்களுக்கு ஒப்புதல் அளிப்பது. ஒரு மசோதா (சட்டவரையரை) ஐ மீண்டும் பரிசீலிக்கும்படி திருப்பி அனுப்பும் அதிகாரம் உள்ளது மற்றும் அதனைத் தடை செய்யும் அதிகாரமும் குடியரசுத்

## நம்முடைய குடியரசுத் தலைவர்கள்



டாக்டர்இராஜேந்திரபிரசாத்
**1950-1962**



டாக்டர் S. இராதா கிருஷ்ணன்
**1962-1967**



டாக்டர் ஜாக்கிர் ஹுசேன்
**1967-1969**



டாக்டர் வி.வி. கரி
**1969-1974**



டாக்டர் பக்ருதீன் அலி
அஹமது 1974–1977



நீலம் சஞ்சீவ ரெட்டி
**1977–1982**



கியானி ஜெயல் சிங்
**1982–1987**



ஆர். வெங்கடராமன்
**1987–1992**



டா. சங்கர் தயாள் சர்மா
**1992–1997**



டா. கே.ஆர். நாராயண்
**1997–2002**



டா. ஏ.பி.ஜே. அப்துல் கலாம்
**2002–2007**



திருமதி பிரத்திபா பாட்டில்
**2007–2012**



பிரனாப் முகர்ஜி
**2012–**

©KTBS
Not to be republished

தலைவருக்குள்ளது. நாடாளுமன்றத்திற்கு இரண்டு ஆங்கிலோ இந்தியரையும் மற்றும் இராஜ்ய சபைக்கு 12 பேரை நியமிக்கும் அதிகாரமுமுள்ளது. இவ்வெல்லா அதிகாரங்களையும் பிரதமமந்திரி மற்றும் அமைச்சரவையின் பரிந்துரையின் அடிப்படையில் செயலாக்க வேண்டும்.

***நீதித்துறை அதிகாரம் :*** நீதிமன்றங்களில் குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்ட தண்டனையைக் குறைக்கவும் மரணதண்டனைப் போன்ற கடினமான தண்டனையை ரத்து செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார். நாட்டின் சட்டத்திற்கு தொடர்புடைய மகத்துவமான விஷயங்களுக்கு உச்சநீத மன்றத்தின் அறிவுரைகளைக் கேட்கலாம்.

***நிதித்துறை அதிகாரம் :*** குடியரசுத்தலைவரின் இசைவு இல்லாமல் நிதி மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது. நிதிக் குழுவின் அறிக்கை, தலைமைக்கணக்காளர் மற்றும் கணக்கு பரிசீலனையாளர் அளித்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் விவாதிக்கக் குடியரசுத்தலைவர் பரிந்துரை செய்வார். சேகரிக்கப்பட்ட நிதி இவருடைய பெயரிலிருக்கும் (Public Service Commission) தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் இந்நிதியிலிருந்து சமபளம் அளிக்கப்படுகிறது. பொதுவாக நிதி மசோதா, சட்டமாக்க வேண்டுமெனில் அவருடைய இசைவு அவசியம்.

***இராணுவ அதிகாரிகள் (Military Powers) :*** குடியரசுத்தலைவர் அனைத்து படைப் பிரிவுகளுக்கு தலைமைதளபதியாவார் (Commonder-in-chief) நிலப்படை (இராணுவம்) விமானப்படை மற்றும் கப்பற் படைகளின் தளபதிகளை அமைச்சரவையின் ஆலோசனைப்படி இவர் நியமிக்கிறார். நாடாளுமன்றத்தின் இசைவின்பேரில் போர் மற்றும் அமைதியை பிரகடனம் செய்யும் அதிகாரம் இவருக்குள்ளது.

***அவசரக்கால அதிகாரங்கள் :*** அமைச்சரவையின் எழுத்துப் பூர்வமான பரிந்துரையின் பேரில் குடியரசுத்தலைவர் மூன்று சந்தர்ப் பங்களில் அவசர நிலையை (Emergency) நடைமுறைப்படுத்துவார். (1) 352 வது விதியின்படி நாட்டின் அவசர நிலை (2) மாநிலத்தின் அவசரநிலை (356 வது விதி) (3) பொருளாதர நிலை சீர்கேடு அவசரநிலை (360 வது விதி) மேற்கண்ட அவசர நிலைகளை அறிவிக்கும்போது அதற்கு ஒரு மாதத்திற்குள் நாடாளுமன்றத்தின் இசைவைப் பெற வேண்டும். நமது அரசியல் அமைப்பு 18வது பகுதியில் 3 வகையான அவசர நிலைகளுக்கு வாய்ப்பை அளித்துள்ளது.

> **விவாதிக்க:**
> கருநாடக மாநிலத்தில் அவசரகாலநிலை நடைமுறைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தை ஆசிரியருடன் விவாதிக்கவும்.

©KTBS Not to be republished

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும் :**

1. ***நாட்டின் அவசரநிலை (352 வது விதி) :*** *நாடு முழுவதிற்கும் அல்லது நாட்டின் ஏதாவது பாகம் பிரதேசத்தில் போர் அல்லது வெளியிலிருந்து ஊடுறுவதி (ஆக்ரமிப்பு) னால் கெடுதல் உண்டாகும்போது அல்லது உள்நாட்டு கலகங்களினால் கெடுதல் ஏற்பட்டால் இந்த அவசர நிலையை பிரகடனப் படுத்தலாம். எ.டு 1961, 1975ல்.*
2. ***மாநில அவசரநிலை (356 வது விதி) :*** *மாநிலத்தில் ஆளுநரின் அறிக்கையின் ஆதாரத்தின்படி அல்லது மற்றக் காரணங்களுக்காக மாநில அரசு அரசியல் அமைப்பு விதிகளுக்கு உட்பட்டு நிர்வாகம் நடைபெறாமலிருந்தால் 356வது விதியின்படி குடியரசுத்தலைவர் அவசரநிலையை பிரகடனப் படுத்துவார். (எ.டு : கர்நாடகத்தில் 20.012008 முதல் 29.05.2008 வரை) நாடு மற்றும் மாநில அவசர நிலையை பிரகரடனப் படுத்திய ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தவேண்டும்.*
3. ***நிதியஅவசரநிலை (360 வது விதி) :*** *நாட்டின் பொருளாதார நிலை சீர் கெட்டுள்ளது என்று காணப் பட்டால் 360வது விதியின் மூலம் பொருளாதார அவசர நிலையைப் பிரகடனப் படுத்தலாம். ஆனால் இதைன இதுவரையில் பிரகடனம் செய்யவில்லை.*

***நிர்ணயிக்கப்பட்ட அதிகாரங்கள்* (Discretionary Powers)** : நாட்டின் தலைவர் அமைச்சரவையின் ஒப்புதல் இல்லாமல் சில அதிகாரங்களை செயல்படுத்தலாம் அவைகள் :

1. மக்களவை பொதுத் தேர்தலில் எந்தகட்சியும் அறுதிபெரும் பான்மை பெறாமல் உள்ளபோது எந்தகட்சித் தலைவரை அழைத்து அரசு அமைக்கும்படி கூறும் அதிகாரம் உள்ளது.
2. நாடாளுமன்றம் அங்கிகாரம் அளித்த மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பியபோது அதனை மற்றொரு முறை பரிசீலிக்க திருப்பி அனுப்பலாம்.
3. பிரதம மந்திரியின் பரிந்துரையின்படி மக்களவையை கலைக்கும் அதிகாரம்.

### பிரதம மந்திரி

அரசியல் அமைப்பில் குறிப்பிட்டுள்ளபடி குடியரசுத் தலைவருக்கு நிர்வாகத்தில் உதவி மற்றும் பரிந்துரை அளிக்க பிரதம மந்திரியை உட்கொண்ட அமைச்சரவைக்கு வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளது. ஆயினும் பிரதமர் அவர்கள் அதிகாரிகளின் மையப்புள்ளியாகிருந்து நாட்டின் முழு நிர்வாகத்தை நிர்வாகிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார். குடியரசுத்தலைவர் நாட்டின் முழு

©KTBS Not to be republished

## நம்முடையை பிரதாம மந்திரிகள்



பண்டித ஜவஹர்லால் நேரு
*1947-1964*



திருலால் பகதூர் சாஸ்த்திரி
*1964-1966*



திருமதி இந்திரா காந்தி
*1966-77-1980-84*



திரு மொரார்ஜி தேசாய்
*1977-1979*



திரு சரண்சிங்
*1979-1980*



திரு இராஜிவ் காந்தி
*1984-89*



திரு வி.பி.சிங்
*1989-1990*



திருசந்திர சேகர்
*1990 நவ-1991ஜுன்*



திரு பி.வி.நரசிம்ராவ்
*1991-1996*



திரு எச்.டி.தேவேகவுடா
*1996 ஜுன்-1997 ஏப்ரல்*



திரு.ஐ.கே.குஜ்ரால்
*1997 ஏப்ரல்-1998 மார்ச்*



திரு அடல்பிஹாரி வாஜ்பேயி
*மே 18, 1996-31 மே 1996*
*19 மார்ச் 1998- மே 2004*



டாக்டர் மன்மோகன் சிங்
*2004 -2014*



நரேந்திர மோடி
*2014 -*

©KTBS Not to be republished

நிர்வாகத்தை நிரவாகிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார். குடியரசுத்தலைவர் நாட்டின் முக்கியமானவர் பிரதம மந்திரி அரசாங்கத்தில் முக்கியமானவராக இருப்பார். மக்களவையின் ஆதரவு உள்ளவரை இவர் பதவியில் இருப்பார்.

**மந்திரிகளை நியமித்தல், இலாக்கக்களை பங்கீடு செய்தல் மற்றும் மந்திரிகளை திரும்பப் பெறும் அதிகாரம் :**

அமைச்சரவையில் முக்கியமானவரான பிரதம மந்திரியவர்கள் வெவ்வேறு இலாக்காக்களுக்கு மந்திரிகளை நியமிக்குமாறு குடியரசுத்தலைவருக்கு பரிந்துரை செய்வார் மேலும் மந்திரிகளுக்கு வெவ்வேறு துறைகளை பங்கிடுவார். துறைகளை பங்கீடு செய்ய பிரதமருக்கு முழு அதிகாரமுள்ளது. தலைவர் அபவாதத்திற்கு குறியானவர்கள், விவாதங்களை உண்டாக்கும் மந்திரிகளை அமைச்சரவையிலிருந்து திரும்பப் பெறும் அதிகாரமுள்ளது.

**அரசின் தலைமை :** அரசாங்கத்தின் அனைத்து நிகழ்வுகளுக்கும் பிரதமர் அவர்களே பொருப்பாவார் வெவ்வேறு இலாக்கா மந்திரிகளின் இடையில் சம போக்குடன் செயலாற்றுகிறார். திட்டங்கள், பாதுகாப்பு, வெளியுறவு நீதியை உண்டாக்குவதில் சிறப்பு கவனத்தைச் செலுத்துவார்.

**அமைச்சரவையின் தலைவர் :** பிரதம மந்திரியின் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும். அமைச்சரவையின் செயல்பாடுகளில் தேசிய, அனைத்துலக விக்ஷயங்கள் விவாதிப்பது மற்றும் முடிவெடுப்பது இவருடைய தலைமையில் நடைபெறும். இவர் குடியரசுத் தலைவர் மற்றும் அமைச்சரவைக்கு இடையில் தொடர்பை ஏற்படுத்தும் செயலை ஆற்றுவார்.

**அமைச்சரவை :**

அமைச்சரவையே உண்மையான நிர்வாக செயலகமாகும் இரண்டு வகை அமைச்சர்கள் உள்ளனர். முதவாவது முக்கியத் துறை அமைச்சர்கள். இரண்டாவது மாநில அமைச்சர்கள். அமைச்சரவையில் அதிக எண்ணிக்கை என்றால் உறுப்பினர்கள் எண்ணிக்கையில் 15% அளவு இருக்க வேண்டும். இவ்வமைச்சரவை இரண்டு வகையான பொறுப்புகளைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு இலாக்காவின் அமைச்சர் தங்களுடைய துறையின் அனைத்து நிலைகளுக்கும் வெற்றித் தோல்விகளுக்கு சுயமாக பொருப்பு ஏற்க வேண்டும்.

சுயமான பொறுப்பைக் கொண்டிருப்பார்கள் மற்றும் அமைச்சரவை தன்னுடைய ஆட்சி நிர்வாகத்தில் நன்னடத்தையைப் பெறும் வழிமுறைகள் மேலும் செலாக்கங்குளுக்குத் தொடர்புள்ள நாடாளுமன்றத்திற்கான

©KTBS Not to be republished

பொருப்பைக் கொண்டிருப்பார்கள் டிருப்பார்கள். அதனால் அமைச்சரவை நாடாளுமன்றத்தின் நம்பிக்கை உள்ளவரை பதவியில் தொடர்ந்திருப்பார்கள். நம்பிக்கையை இழுந்துவிட்டால் நம்பிக்கை ஒட்டெடுப்பின் மூலமாக கீழிறக்கப்பட வேண்டியதாகிறது.

***உங்களுக்கிது தெரிந்திருக்கட்டும் :***

***நம்பிக்கை இல்லாத்தீர்மானம் :*** *ஆட்சியிலிருக்கும் பிரதமமந்திரி மேலும் அமைச்சரவையின் மீது மக்களவையின் அதிக உறுப்பினர்கள் நம்பிக்கை இழுந்துவிட்டால், ஆதரவைத் திரும்பப் பெற்றுக் கொண்டால் நம்பிக்கை இழந்துவிட்டால், ஆதரவைத் திரும்பப் பெற்றுக் கொண்டால் பிரதமமந்திரி, அமைச்சரவையின் இராஜினாமாவை சமர்ப்பிக்க வேண்டும். அதனை நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்னும் காரணத்தைக் காட்டி அரசின் அதிகாரத்தை இழக்கச் செய்ய வேண்டும் என்று மத்தியில் மக்களவை உறுப்பினர்கள், மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் அளிக்கும் தீர்மானமே, நம்பிக்கை இல்லாத தீர்மானம். அதனால் மத்திய மற்றும் மாநில அரசுகளின் அதிகாரத்தில் மக்களவை உறுப்பினர்கள், மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் அளிக்கும் தீர்மானமே, நம்பிக்கை இல்லதா தீர்மானம். அதனால் மத்திய மற்றும் மாநில அரசுகளின் அதிகாரத்தின் காலம் கிரமமாக மக்களவை மற்றும் சட்ட சபையின் நம்பிக்கையை சார்ந்திருக்கும். இராஜ்ய சாபா உறுப்பினர்கள் மேலும் மேலவை (விதானபரிஷித்-) உறுப்பினர்களுக்கு இவ்வாய்ப்பு இருப்பதில்லை. இந்திய வரலாற்றில் இதுவரையில் 34 நம்பிக்கை இல்லாத தீர்மானம் நிர்ணயத்தை சமர்ப்பித்துள்ளன.*

## ***பயிற்சி***

**I. *விடுப்பட்ட இடங்களை சரியான சொற்களால் நிரப்புக.***

1. இந்தியா ______________ களின் கூட்டமைப்பாக உள்ளது.
2. மைய மக்களவையை ______________ என்று அழைக்கப்படுகிறது.
3. இராஜ்ய சபையின் தலைவர் ______________ ஆக உள்ளார்.
4. மக்களவை உறுப்பினர்களாக ______________ ஆண்டுகள் வயது முழுமைப் பெற்று இருக்க வேண்டும்.
5. முப்படைகளின் முதன்மைதளபதி ______________
6. அரசியலமைப்பு ______________ மற்றும் ______________ விதியில் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறையை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.
7. மைய மக்கள் சேவை கமிஷனின் தலைவரை ______________ அவர்கள் நியமிப்பார்.



© KTBS Not to be republished

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.**

1. நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகள் யாவை ?
2. இராஜ்ய சபை எவ்வாறு அமைக்கப் படுகிறது ?
3. மக்களவை உறுப்பினர்களுக்கான தகுதிகள் யாவை ?
4. குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் முறையை விவரிக்க.
5. பிரதம மந்திரியின் அதிகாரங்களைப் பட்டியலிடு.
6. மைய அமை ச்சரவை அமைப்பு மற்றும் அதனுடைய பொருப்புகளை எழுதுக.

**III. செயல்பாடு :**

1. மைய நாடாளு மன்றத்தைப் போன்று பள்ளியில் மாதரி நாடளுமன்றத்தை அமக்கவும்.
2. உங்கள் மைய நாடாளுமன்ற உறுப்பினருடன் அவருடைய செயல்கள் பற்றி விவாதிக்க.

**III. செயல்திட்டம் :**

1. நாடாளுமன்றத்தின் படத்தைத் தயாரித்து பள்ளியில் வைக்கவும்
2. நாளேடுகளில் வரும் உயர் நீதிமன்றங்களின் தீர் ப்புக்கு தொடர்ப்புள்ள விவரங்களை சேகரித்து ஆல்பம் தயாரிக்கவும்.

*****

©KTBS Not to be republished

## அத்தியாயம் - 3

# மாநில அரசு

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிகிறோம் :**

- மாநில சட்ட மன்றத்தில் சட்டசபை மற்றும் மேலவைய அமைப்பு, உறுப்பினர், செயல்நிர்வாகம்.
- மாநில அரசு செயல்பாடுகளில் மாநில ஆளுநர், அவருடைய தகுதிகள் மற்றும் செயல்கள்.
- முதல் அமைச்சர் நியமனம் செயல்கள்.
- வெவ்வேறு நிலை கீழ் நீதிமன்றங்கள், செயல்கள்.
- மக்கள் நீதிமன்றங்களின் அமைப்பு மற்றும் பொருப்புகள்.

இந்தியா 29 மாநிலங்களையும் 6 மைய அரசு நிர்வாகப் பிரதேசங்களையும் உட்கொண்ட கூட்டமைப்பு நாடாகும். மத்திய (மைய) அரசு மாதரியைப் போன்றே மாநிலங்களும் கூட தங்களுடையதான சட்டமன்றம், செயலகங்களைக் கொண்டுள்ளன மாநில அரசு மாநில பட்டியலிலுள்ள விஷயங்களுக்கு சட்டங்கள் இயற்றி அவைகளை செயல் வடிவத்திற்கு கொண்டுவரும் அதிகாரத்தைக் கொண்டுள்ளன. நாடாளுமன்றத்தைப் போன்றே மாநிலங்களும் இரண்டு சபைகளை சில மாநிலங்களில் கீழ்சபை (சட்டமன்றம்) மட்டுமே கொண்டுள்ளன. மேலவை (விதான பரிஷித்) மட்டுமே கொண்டுள்ளன. மேலவை (விதான பரிஷித்) இருப்பதில்லை.

*அறிந்துகொள் :*

*கர்நாடகம், உத்திரபிரதேசம், ஆந்திரபிரதேச மாநிலங்களில் இரு சபை முறை உள்ளது. தமிழ்நாடு, மேற்கு வங்காளம், அஸ்ஸாம், அருணாச்சலப் பிரதேச மாநிலங்கள் ஒரு சபையைக் கொண்டுள்ளன.*

### மாநில சட்டமன்றம்

மாநில சட்டமன்றம் மாநில ஆளுநரை உட்கொண்டுள்ளது. அதில் இரண்டு சபைகள் அல்லது ஒரே சபை இருக்கலாம். மேலவையை விதான பரிஷித் (Legislative Council) என்றும் கீழ்சபையை (Legislative Assmbly) என்றும் அழைக்கப்படுகிறது. சட்டசபை மாநில மக்களை பிரிதிநிதித்தால், மேல்சபை வெவ்வேறு பகுதிகளை பிரதிநிதிக்கும்.

©KTBS Not to be republished

**சட்டமன்றம் (Legislative Assembly)**

சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அம்மாநிலத்தின் எண்ணிக்கையை ஆதரித்திருக்கும். அதேவிதமாக மேல்சபை உறுப்பினர்களின் எண்ணக்கை அம்மாநில சட்ட மன்ற உறுப்பினர் $\frac{1}{3}$ பாகம் அளவு இருக்கு ம், எந்த ஒரு மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 500 ஐ விட அதிகமாக இருக்கக் கூடாது. 60 ஐ விட குறைந்திருக்கக் கூடாது ஆனால் சிறிய மாநிலங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. எ.டு. : மீஜோராம், கோவாவில் தலா 40 உறுப்பினர்கள். கர்நாடக சட்டமன்றம் 225 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. 224 உறுப்பினர்கள் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள், மீதமுள்ள ஒரு உறுப்பினர் ஆங்கிலோ - இந்தியரை மாநில ஆளுநர் சட்டமன்ற உறுப்பினராக நியமிப்பார்.



விதான சௌதா - பெங்களூரு

*செயல்பாடு :*

*விதானசபை (அசெம்பளி) கூடும் சமயத்தில் சென்று பார்த்து அங்கு நடை பெறும் விவாதங்கள் பற்றி சிறுகுறிப்பு தயாரிக்கவும்.*

*செயல்பாடு :*

*உங்கள் தொகுதி சட்டமன்ற உறுப்பினரைக் கண்டு அவருடைய செயல்கள் பற்றி விவரமாகக் கூறுமாறு கேக்கவும்.*

**உறுப்பினர்க்குரிய தகுதிகள் :**

1. இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்
2. 25 வயது நிறைவுப் பெற்றவராக இருக் வேண்டும்.
3. அவர் அரசுப் பணியாளராக இருக்கக் கூடாது.
4. நீதிமன்றத்தின் மூலம் குற்றம் சமத்தப்பட்டவராகவும் இருக்க கூடாது.
5. நல்ல மன நலம் குன்றியவராக இருக்கக் கூடாது.
6. திவாலனவராக (Insolvent) இருக்கக் கூடாது.
7. நாடாளுமன்றம் அவ்வப்பொழுது வரையறுக்கும் இதர தகுதிகளைப் பெற்று இருக்க வேண்டும்.

KTBS
Not to be published

***பதவிக்காலம் :*** *சட்ட சபையின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் பதவிக்காலத்திற்கு முன் அமை ச்சரவையின் யோசனைப்படி கலைக்கப்படலாம். இச்சந்தர்ப்பத்தில் மாநிலத்தை குடியரசுத் தங்களுடைய இடத்தில் முன்தொடர விருப்பமில்லாவிடில் சபாநாயகருக்கு இராஜினாமாவை அளிக்கவேண்டும்.*

*தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவர் சபைத்தலைவராகவும் மற்றொருவரைத் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். சபையின் செயல்கள் இவருடைய தலைமையில் நடைபெறும் சபையில் அமைதி, ஒழுங்கைக் காப்பாற்றும் பெருமையை அதிகப் படுத்தும் சபையை அழைப்பது, தள்ளிவைப்பது, உறுப்பினர்களின் உரிமை பாதுகாப்பளிப்பது, சபையில் சம ஓட்டுக்கள் விழும் சூழ்நிலை ஏற்படும்போது தீர்மான ஓட்டையளித்து செயல்களை நிர்வகிப்பது சபாநாயகரின் செயலாகும்.*

***அதிகார செயல்கள் :***

*தற்போது தெரியப்படுத்திய மாநிலப் பட்டியல்* (State List) *ஒத்துள்ள பட்டியல்* (Concurrent list)*ல் வரக்கூடிய விஷயங்கள் மீது சாசனங்கள் செய்யும் அதிகாரம். சாசனங்கள் சட்டங்களாக்க வேண்டுமானால் இரண்டுசபைகளின் ஒப்புதல் பெற்று மாநில ஆளுநர் கையெழுத்தைப் பெறவேண்டும். மாநில ஆளுநர் சில மசோதாக்களை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பிவைப்பார்.*

***நிதித் தொடர்பான அதிகாரம்*** **(Financial Power)** *: நிதித் தொடர்பான விஷயங்களில் சட்டசபைக்கு அதிக அதிகாரமுள்ளது. நிதி மசோதாவை சட்டசபையில் முதலில் தாக்கல் செய்ய வேண்டும். சட்டசபை ஒப்புதல் அளித்த மசோதாவை மேலவைக்கு அனுப்பிவைக்கப் படுகிறது. மேலவை மசோதாவை நிராகரிக்கும் அதிகாரமிருந்தாலும் 14 நாட்கள் வரைத் தடை செய்யலாம்.*

> ***விவாதிக்க:***
>
> *உங்கள் கிராமம்/வார்டு உறுப்பினர்களுடன் உங்கள் தொகு பாராளுமன்ற உறுப்பினருடன் வெவ்வேறு மக்களுக்கான நிதிகளின் பெயர்களை பட்டியலிடு.*

***நிர்வாகத்துறை அதிகாரங்கள்*** **(Administrative Powers)** *: மாநில நிருவாகத்துறை சட்டசபைக்கு பொருப்பாக இருக்கும். சட்ட சபையின் நம்பிக்கையுள்ளவரை அமைச்சரவை அதிகாரத்தில் தொடர்ந்திருக்கும். நம்பிக்கையை இழந்தால் இராஜினாமா அளிக்கவேண்டும். அமைச்சரவையில் ஒவ்வொரு அமைச்சரும் தனித்தனியாக மற்றும் மொத்த அமைச்சரவை சமூகமாக சட்டசபைக்கு பொருப்பாக இருப்பார்கள்.*

©KTBS Not to be republished

***ஓட்டளிக்கும் - அதிகாரங்கள்* (Electoral Power) :** *குடியரசுத் தலைவர், இராஜ்யசபை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், சட்டசபைத்தலைவர் (சபாநாயகர்) சட்டசபை உபதலைவர் (துணை சபாநாயகர்) தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கும் அதிகாரம் சட்டசபைக்கு உள்ளது.*

***மற்ற அதிகாரங்கள் :*** *சில விஷயங்களுக்கு தொடர்புள்ள மைய நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்த மசோதாப் பற்றி சட்டசபையில் விவாதத்திற்காக வந்தபோது தனஅனுடைய அதிகாரத்தைச் செலுத்துகிறது. மாநில அரசு பணியாளர் தேர்வின் அறிக்கை மற்றும் இதர அறிக்கைகளை சபையில் விவாதிக்கும் அதிகாரமுள்ளது.*

**மேலவை (Legislative Council)**

*விதான பரிஷித் மாநில சட்ட மன்றத்தில் மேலவையை சட்டமன்ற மேலவை என்று அழைக்கிறார்கள். இதனுடை உறுப்பினர்களின் எண்ணிக்கை 60ஐ விட குறைவாக இருக்கக் கூடாது. இதனால் சில மாநிலங்களில் மேல் சபை இருப்பதில்லை. கர்நாடக மாநிலத்தின் மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 75. இவ்வுறுப்பினர்கள் 5 துறைகளை பிரதிநிதிக்கிறார்கள் சட்டசபை உறுப்பினர்களால், உள்ளாட்சி மன்றங்களால், பட்டதாரி தொகுதிகளிலிருந்து, ஆசிரியர் தொகுதிகளிலிருந்து, சிலர் கலை, இலக்கியம், பொதுமக்கள் சேவை, கல்வி, அறிவியல் போன்ற துறைகளில் ஆற்றிய சேவையைப் பாராட்டி மாநில ஆளுநர் உறுப்பினர்களாக நியமிக்கிறார். மேலவை நிரந்தமாந அவையாகும். ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கொரு முறை ஆறு ஆண்டுகள் பணி முடித்தவர்கள் ஓய்வு பெறுவார்கள்.*

**உறுப்பினர்களுக்கான தகுதிகள் (Qualification of the MLCs)**

1. *இந்தய குடிமகனாக இருக்க வேண்டும்.*
2. *30 வயது நிறைந்திருக்க வேண்டும்.*
3. *சட்டசபை உறுப்பினராவதற்கான அனைத்துத்தகுதிகளும் இருக்க வேண்டும்.*

*தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக் கொருமுறை மூன்றில் ஒரு பாகம் உறுப்பினர்கள் ஓய்வு பெறுவார்கள். இவர்களில் ஒருவர் சபாநாயகராகவும் மற்றொருவரை, துணை சபாநாயகராகவும் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். சபா நாயகர் சபைத் தலைமையை வகித்துக் கொண்டு சபை நடவடிக்கையை வெற்றிகரமாக நிர்வாகித்துக் கொண்டுச் செல்லும் அதிகாரத்தைப் பெற்றுள்ளர்.*



©KTBS Not to be republished

அதிகாரங்கள் சட்டங்கள் இயற்றுவதில் மேலவையும்கூட அதிகாரத்தைப் பெற்றுள்ளது. பொது மசோதாவை இரண்டு சபைகளில் தாக்கல் செய்யப்படுகிறது. ஒரு சபை ஒப்புதல் அளித்த மசோதாவை மற்றொரு சபைக்கு அனுப்பிவைக்கப் படுகிறது. மேலவை மசோதாவை 3 மாதங்கள்வரை தடைச் செய்யலாம். இரண்டாவது முறை மறுபடியும் அனுப்பிவைத்தால் ஒரு மாதத்திற்குள் ஒப்புதல் அளிக்க வேண்டும். இல்லாவிடில் இரண்டுசபைகளால் ஒப்புக் கொள்ளப்பட்டது என்றுபாவித்து மாநில ஆளுநருக்கு ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்படும்.

**சட்டம் இயற்றும் அதிகாரம் :**

***அறிமுக வாசிப்பு :*** *1)* சபையில் மசோதாவை தாக்கல் செய்பவர் மசோதாவை பலமாக வாசிப்பார்கள் *2)* இரண்டாம் வாசிப்பில் மசோதாவைப் பற்றிய விவாதம் நடைபெறலாம் அல்லது மசோதாவை சம்பந்தப்பட்ட சபைக்கு அனுப்பி வைக்கப்படும். சபை நன்கு விவாதித்து ஒரு அறிக்கையை தயாரித்து சட்டமன்றத்துக்கு திருப்பி அனுப்புவார்கள். சட்டமன்றம் அறிக்கையை விவாதித்து ஓட்டெடுப்பிந் மூலமாக ஒப்புக் கொள்ளலாம் இல்லையென்றால் நிராகரிக்கப்படலாம். *3)* மூன்றாவது வாசிப்பில் மசோதாவை குரல் ஓட்டெடுப்பின் அல்லது வாய்வழி விவாதம் செய்யலாம். பிறகு மசோதா ஒப்புக் கொள்ளப்பட்டு மற்றொரு சபைக்கு அனுப்பப்படுகிறது. அச்சபையிலும் மேற்கூறப்பட்ட அனைத்து செயல்களும் நடைபெற்று மாநில ஆளுதரின் கையெழுத்தைப் பெற அனுப்பப் படுகிறது. ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளிக்கலாம் இல்லாவிடில் குடியரசுத்தலைவரின் கையெழுத்தைப் பெற அனுப்பப்படுகிறது. ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளிக்கலாம் இல்லாவிடில் குடியரசுத் தலைவரின் கையெழுத்துக்கு அனுப்பபடும்.

***நிதி அதிகாரங்கள் :*** நிதிப்பற்றி சட்டசபை அதிக அதிகாரத்தைப் பெற்றுள்ளது. மேலவைக்கு 14 நாட்களுக்குள் தடையிடும் அதிகாரம் உள்ளது. 14 நாட்களை விட அதிக காலம் தடை செய்தால் இரண்டு சபைகளிலிருந்து ஒப்புதல் பெறப்பட்டது என்று அறிந்து மாநில ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப் படுகிறது.

> **விவாதிக்க:**
> மாநில அரசின் உத்தரவுகளை ஆளுநரின் உத்தரவின்படி நாட்டின் உத்தரவுகளின்படி என்று வெளியிடப் படுகிறது ஏன்? ஆசிரியருடன் விவாதிக.

©KTBS Not to be republished

***நிருவாகத்துறை அதிகாரங்கள் :*** *இது நிருவாகத்தின் மீது குறைந்த கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. உறுப்பினர்கள் அமைச்சர்களுக்கு கேள்விகளை கேட்பதன் மூலம் விவரங்களைப் பெறமுடியும். விடை பொருத்தமாகவும் சரியாகவும் இல்லை யென்றால் அமைச்சரின் இராஜினாமாவுக்குக் கட்டாயப் படுத்துவார்களே தவிர நம்பிக்கை இல்லா தீர்மானத்தை தாக்கல் செய்வதற்கில்லை.*

***விவாதிக்கும் அதிகாரங்கள் :*** *அரசாங்கத்தின் செயல்பாடுகளை நீதிமுடிவுகள் மேலும் மசோதாக்கள் பற்றி விவாதிக்கப் படலாம். இது மூத்தவர் சபையாக இருப்பதினால் விவாதம் மிகவும் பெருத்தன்மையாக இருக்கும்.*

**மாநில செயலகம் (State Excutive)**

*மாநில செயலகம் ஆளுநர், முதலமைச்சர் மேலும் அமைச்சரவையை உட்கொண்டிருக்கும் மாநில ஆளுநர் சட்டங்களுக்குட்பட்டவர், முக்கியமானவர், நிருவாகத் தலைவர், முதலமைச்சருடன் சேர்ந்த அமைச்சரவையே உண்மையான செயலகம். மாநில ஆளுநர் தானாகவோ அல்லது தன்கீழ் பணியாற்றும் அதிகாரிகள் மூலமாக வோ அதிகாரத்தைச் செலுத்தலாம்.*

***மாநில ஆளுநர் :***

*மைய அரசின் பிரதம மந்திரி மற்றும் அமைச்சரவையின் பரிந்துரையின் பெயரில் மாநில ஆளுதரை குடியரசுத்தலைவர் நியமிப்பார். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு ஆளுநர் இருக்க வேண்டுமென்று விதிகள் உள்ளன. ஆனால் இரண்டல்லது அதற்கும் அதிகமான மாநிலங்களுக்கு ஒருவரையே ஆளுநராக நியமிக்கப்படலாம்.*

***தகுதிகள், பதவிக்காலம் மற்றும் சம்பளம் சௌகரியங்கள்*** **(Qualifications, Term of office, Salary and Perquisites)** *: (1) இந்திய குடிமகனாக இருக்கவேண்டும். (2) 35 வயது நிறைந்தவராக இருக்க வேண்டும். (3) அரசுப் பணியில் இருக்கக் கூடாது. (4) நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினராக இருத்தல் கூடாது. உறுப்பினராக இருப்பிந் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டவுடன் உறுப்பினர் பதவியைத் துறக்கவேண்டும். (5) மாநில ஆலுநரின் பதவிக் காலம் 5 ஆண்டுகள் ஆனால் அடுத்த மாநிலர நியமிக்கப்படும் வரையில் பதவியில் தொடருவார்.*

©KTBS Not to be republished

மைய அமைச்சரவையின் பரிந்துரையின் படி குடியரசுத்தலைவர் மாநில ஆளுநரை அவருக்கு முன்பாகவே திரும்ப அழைத்துக் கொள்ளலாம். இவருக்கு நாடாளுமன்றம் குறிப்பிட்டுள்ள சம்பளம், படி, வாடகை இலலா அலுவலக குடியிருப்பு (official Residence) (ராஜ்பவன்)ஐ அளிக்கப்படுகிறது. இவருடைய அதிகார செயல்களை நீதிமன்றங்களில் வினா எழுப்புவதிற்கில்லை. மேலும் குற்றப் பின்னனியுள்ள வழக்குகளையும் தொடுக்கமுடியாது. அதிகார செயல்கள் (Excutive Power) சட்டத்திற்குட்பட்ட அனைத்து அதிகாரங்களும் மாநில ஆளுநருக்கு உள்ளது. ஆனால் உண்மையான அதிகாரங்கள் முதல் அமைச்சர் உட்கொண்ட அமைச்சரவையிடம் உள்ளது. ஆனாலும் மாநில ஆளுநரின் அதிகாரங்கள் வருமாறு.

***செயலாற்றும் அதிகாரம் :*** இவர் செயல்துறையின் முக்கிய மானவராவார். மாநிலத்தின் முதல் அமைச்சர் மற்றும் அவர் பரிந்துரையிந்படி மற்ற அமைச் சர்களை நியமிக்கிறார். மாநில அரசு பணியாளர் கழகத்தின் தலைவர், அனைத்துப் பல்கலைக் கழகங்களின் வேந்தராக இவரே இருப்பதினால் பல்கலைக் கழகங்களின் வேந்தராக இவரே இருப்பதினால் பல்கலக் கழகங்களின் துணை வேந்தர் மற்றும் இன்னும் பிற அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரத்தைப் பெற்றுல்ளார்.

***சட்டமன்ற அதிகாரங்கள் :*** சட்டமன்றங்களை கூட்டவும், தள்ளிவைக்கவும் மற்றும் முதல் அமைச்சரின் பரிந்துறையின் பேரில் சட்டமன்றத்தை கலைக்கும் அதிகாரங்களும் உள்ளன. சட்டமன்றத்துக்கு ஒருவரையும் மேலவைக்கு $\frac{1}{6}$ பாகம் உறுப்பினர்களையும் நியமிக்கும் அதிகாரங்களையும் கொண்டுள்ளர். நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்த மசோதாவுக்கு தன்னிடமே நிருத்திக்கொள்ளும், தடைசெய்யும், ஒப்புக் கொள்ளும் அதிகாரம் உள்ளது. தேவை ஏற்படின் குடியரசுத் தலைவரின் முடிவுக்கு அனுப்பிவைக்கப் படும்.

***நிதி அதிகாரங்கள் :*** மாநில அளுநரின் ஒப்புதல் இல்லாமல் நிதி மசோதாவை சட்ட மன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது. மாநிலத்தின் நிதிக்குழு, திட்டக்குழுக்களை நியமிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார். மாநிலத்தின் அவசரக்கால நிதி இவர் வசமிருக்கும், பஞ்சம், வெள்ளம், நில நடுக்கம், தவிர்க்க முடியாத நிகழ்வுகளை இந்நிதியின் மூலமாக நிவாரணம் அளிக்கும் அதிகாரமுள்ளது.

***நிதித்துறை அதிகாரம் :*** குற்றங்கள் செய்து தண்டனைக்கு உட்பட்டவர்களுக்கு மன்னிப்பு அளிக்கும், குறைக்கும், தள்ளிவைக்கும் அல்லது தண்டனையை

©KTBS Not to be republished

மாற்றும் அதிகாரம் இவருக்குள்ளது. மாநிலத்தின் அட்வகேட் ஜெனரல் மற்றும் மாவட்ட நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரமுள்ளது.

***விமர்சித்து செயல்படும் அதிகாரம்*** **(Discretionary Power)** ***:*** மாநில முதல் அமைச்சரை நியமனம் செய்யும்போது யோசித்து செயல்படும் அதிகாரத்தையும் பெற்றுள்ளார். சட்டமன்றம் ஒப்புதல் அளித்த மசோதாவை குடியரசுத் தலைவரின் கையெழுத்தைப் பெற அனுப்புவது, மாநிலத்தில் சட்ட மன்றத்தில் சிக்கல்கள் அல்லது தோல் விடையும்போது குடியரசுத் தலைவருக்கு அறிக்கையை சமர்ப்பித்து குடியரசுத்தலைவர் ஆட்சி அமைக்கக் கோரலாம். மேலும் முதல் அமைச்சர், அமைச்சரவையை தகுதியிழுக்கவும், சட்டசபையை கலைக்கவும் முடியும்.

***மாநில அமைச்சரவை :***

நம்முடைய அரசியல் அமைப்பு மாநிலத்தில் முதல் அமைச்சரின் தலைமையில் அமைச்சரவைக்கு வாய்ப்பு அளித்துள்ளது. அமைச்சரவை மாநில ஆளுநரின் நிருவாகத்திற்கு உதவி அளிக்கிறது மற்றும் மாநில சட்ட சபைக்கு பொருப்பாக இருக்கும் இவ்வமைச்சரவை அனேக செயல்களை நிர்வகிக்கிறது. அவைகள் :

1. நிதி நிலை அறிக்கையும் பல்வேறு பட்டியல்களையும் (Various bills) தயார் செய்து சட்டமன்றத்தின் முன்வைத்து ஒப்புதல் பெற வேண்டும்.
2. நிர்வாகத்தை ஆட்சித்திறம் உடையதாய் கட்டுப்பாட்டுடன் செயல்பட வேண்டும். கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்களின் நிர்வாகம், செயல்கள் குறித்த கேள்விகளுக்கு உரிய விடைகளைத் தருதல் வேண்டும்.
3. ஒவ்வொரு அமைச்சரும் நம்பிக்கையுடன் தாம் பொருப்பேற்ற துறைகளின் செயல்களை நிறைவேற்று□வதில் கவனமாய் இருத்தவ் வேண்டும். எவ்வாறாயினும் எல்லா அமைச்சர்களும் சட்டமன்றத்திற்குத் கடமைப்பட்டவர்களே, அம்மன்றத்தின் நம்பிக்கையை இழப்பார்களேயானால் அவர்கள் அனைவரும் பதவியிலிருந்து விலகிட வேண்டும்.
4. அமைச்சர்கள் மாநிலத்தில் பயணங்கள் செய்து மக்களின் குறைகளையும், அவைகளைந் நடத்திடும் வழிமுறைகளையும் புரிந்து பணியாற்ற வேண்டும்.

©KTBS Not to be republished

5. அவ்வப்போது அமைச்சரவைக்கூடி நிர்வாகத்திற்குத் தேவையான முடிவுகளை எடுக்க வேண்டும்.

> **செயல்பாடு:**
> நம் மாநிலத்தில் இதுவரையில் பணியாற்றிய முதல் அமைச்சர்கள் மற்றும் ஆண்டுகளை பட்டியிலிடு.

***முதல் அமைச்சர் :*** முதல் அமைச்சர் மாநில அரசில் முக்கியமானவராவார். மாநில அரசின் வெற்றி அல்லது தோல்வி இவரின் தனிப்பட்ட திறமையைப் பொருத்தது. மாநிலத்தின் அனைத்து அதிகாரங்கள் எல்லாம் இவரைச் சார்ந்தது. இவர் அமைச்சரவை, சட்டமன்றம் மற்றும் பெரும்பான்மைபால்ம் பெற்ற கட்சியின் தலைவராக இருப்பார். முதல் அமைச்சரானவர் மாநில சட்டமன்றங்களில் ஏதாவது ஒன்றின் உறுப்பினராக முதல் அமைச்சராக இருக்கலாம் ஆனால் ஆறுமாதங்களுக்குள் ஏதாவது ஒரு சபையில் உறுப்பினர் பொருப்பை ஏற்று இருக்க வேண்டும்.

***முதல் அமைச்சரின் செயல்பாடுகள் :***

1. அமைச்சர்களின் பட்டியல் தயாரித்து மாநில ஆளுநருக்கு பரிந்துரை செய்வது.
2. அமைச்சர்களுக்கு துறைகளை பங்கீடு செய்வது மற்றும் மாற்றுமாறு பரிந்துரையளிப்பது.
3. அரசுக்கு உண்மையாக செயல்படாமல், அமைச்சர்களுக்கு ஏதிராக செயல்படும், அல்லது குற்ற பின்னனி உடைய அமைச்சர்களை நீக்க ஆளுநருக்கு சிபாரிசு செய்தல்.
4. அரசின் தலைவராக முக்கிய பங்காற்றுவார், செயல் முறைகளை முறைப்படுத்துவார்.
5. அமைச்சரவைக்குத் தலைமையேற்பது, சபையயை அழைப்பது, தள்ளிவைப்பது, ஆகிய அதிகாரங்களைக் கொண்டுள்ளார்.
6. வெவ்வேறு துறைகளின் செயல் தலைமையை பரிசீலித்து அவைகளின் இடையே ஒற்றுமையை உண்டாக்கும் செயலை செய்வார்.
7. குறிப்பிட்ட கால அளவுக்கு (term) முன்பாகவே சட்டசபையை கலைக்குமாறு மாநில ஆளுநருக்கு சிபாரிசு செய்வார்.
8. மாநில ஆளுநர் மற்றும் அமைச்சரவையின் இடையே போக்குவரவு பாலமாக செயலாற்றுவார்.
9. மாநில ஆளுநருக்கு ஆலோசனையாளராக இருந்த, வெவ்வேறு பதவிகளுக்கு நியமனத்திற்கு தஙகேளுடைய சிபாரிசை அளிப்பார்.

©KTBS Not to be republished

## பயிற்சிகள்

**I. விடுப்பட்ட இடங்களை சரியான சொற்களால் நிரப்புக.**

1. இந்தியா ______________ மாநிலங்கள் மற்றும் ______________ மைய அரசாளும் பிரதேசங்களை உட்கொண்டுள்ளன.
2. மாநில சட்டசபைக்கு ஒரு ஆங்கிலோ இந்தியரை ______________ அவர்கள் நியமிப்பார்.
3. கர்நாடக மாநில சட்டமேலவை ______________ உறுப்பினர்களை உட்கொண்டது.
4. மாநில அமச்சரவை ______________ மற்றும் ______________ ஐ உட்கொண்ட நிஜ நிர்வாகத்துறையைக் கொண்டுள்ளது.
5. மாநில ஆளுநரை ______________ அவர்கள் நியமிப்பார்.
6. மாநிலத்தின் அட்வகேட் ஜெனரலை ______________ நியமிப்பார்.

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.**

1. மாநில சட்டசபை அமைப்பை விவரிக்கவும்.
2. மாநில சட்ட மேலவை உறுப்பினர்கள் எந்தெந்த துறைகளிலிருந்து பிரிதிநிதித்துவம் அளிக்கிறார்கள்?
3. மாநில ஆளுநரின்தகுதிகள், அதிகார காலத்தை விவரிக்க.
4. முதலமைச்சரைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

**III. செயல்பாடு:**

1. கர்நாடக சட்டசபை மற்றும் சட்டமேலவைக்குச் சென்று சபை நடவடிக்கைகளை கவனித்து குறிப்பெழுதுக.
2. மாநில சட்டசபையைப் போன்று உங்கள் பள்ளியில் அமைத்து பங்கேற்கவும்.

**IV. செயல்திட்டம்:**

1. உங்கள் தொகுதியின் அமைச்சருடன் சட்டபை நிகழ்வுகளை விவாதிக்கவும்.
2. இதுவரையில் கருநாடக மாநிலத்தில் சேவையாற்றிய முதல் அமைச்சர்களின் படங்களை சேகரித்து ஒரு ஆல்பம் தயாரிக்கவும்.

*****

© KTBS Not to be republished

## சமுதாயயில்
## அத்தியாயம் 1
## குடும்பம்

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிகிறோம்.**

- குடும்பத்தின் பொருள்
- குடும்பத்தின் பண்புகள்
- குடும்பத்தின் வகைகள்
- கூட்டுக்குடும்பத்தின் பண்புகள்

**குடும்பம்**

மனிதர்கள் தம்முடைய அடிப்படைத் தேவைகளை ஈடேற்றிக் கொள்ளும் நோக்கங்களினால் பல்வேறு சமுதாய அமைப்புகளை உருவாக்கிக் கொண்டார்கள். இம்மாதரி அமைப்புகளில் குடும்பம் மிகவும் முக்கியமானது .குடும்பம் மிகவும் சிறிய அமைப்பாகிருந்தாலும், அது சமுதாயத்தின் ஒரு அடிப்படை அமைப்பாகும். சமுதாயத்தின், அனைத்து செயல்பாடுகள் நடைபெறுவது குடும்பத்தின் ஆதாரத்தில், உள்ள ஒவ்வொருவரும் குடும்பத்தின் உறுப்பினர்கள் ஆவார்கள். குடும்பத்தின் பண்புகளை புரிந்து கொள்வதின் மூலமாக குடும்பத்தின் விவரங்களை அறியலாம்.

குடும்பத்தை ஆங்கிலத்தில் 'ஃபேமிலி' என்று, அழைப்பார்கள். ஃபேமிலி என்னும் சொல் 'பேமுலஸ்' என்ற லத்தின் வார்த்தையிலிருந்து வந்தது. பேமுலஸ் என்றால் ஆட்சி என்று பொருள், முற்காலத்தில் குடும்பங்களில் கணவன் - மனைவி மற்றும் குழந்தைகளோடல்லாமல் மற்ற உறுப்பனர்களும் இருந்தனர் என்று அறிய முடிகிறது. இன்று மற்ற குழந்தைகள் இல்லா தந்தை தாய் மட்டும் உள்ள குடும்பங்கள் மற்றும் தத்துக் குழந்தைகளைக் கொண்டுள்ள குடும்பங்களும் கூட உள்ளன.

குடும்ப உறுப்பினர்களுக்குள்ளே உள்ள தொடர்பு ஒரே இரத்த சம்பந்தத்தின் மீது தீர்மானிக்கப்படுகிறது. திருமணம்., இரத்தத் தொடர்பு, அல்லது தத்து ஸ்வீகாரத்தை உட்கொண்டுள்ளது. இச் சமூகத்தின் உறுப்பினர்கள் ஒரே வீட்டில் வசிப்பார்கள். கணவன் - மனைவி, தந்தை - தாய், மகன்-மகள், சகோதர-சகோதரிகளின் சம்பந்தத்தை கொண்டு, தம்முடைய ஸ்தானத்திற்கு முழுமையான பங்களிப்பை நிர்வகித்து, பொதுவான கலாச்சாரங்களை உருவாக்குவதில் உதவியாக இருப்பார்கள். குடும்பம் என்றால் பொதுவாக பலகாலம் சந்ததிகளுடன் சந்திகளில்லாமல், கணவன் மனைவியின் சமூக வாழ்க்கை என்றும் கூறலாம். மற்ற முக்கிய ஆதாரங்களென்றால் இரத்த தொடர்பான மற்றும் எண்ணங்களாகும். குடும்பம் சாதாரணமாக சந்தான உற்பத்தி மட்டும் சீராட்டுதல்

©KTBS Not to be republished

மட்டுமல்லாமல் சமுதாயமாக்கல் செயலாக்கத்தின் மூலமாக தன்னுடைய உறுப்பனர்கள் விரிவாக்க சமுதாயத்தின் உறுப்பனர்களாக்கும் செயலாக்கங்களில் ஈடுபட்டிருப்பார்கள். சமுதாயத்தின் நடவடிக்கைகளான உடுப்பது - நடப்பது, ஆச்சார - விச்சாரங்கள் முதலான விஷயங்களை அதிகாரப் பூர்வமான குடும்பங்கள் நிர்வாகிக்கின்றன.

குடும்பத்தின் பண்புகளை புரிந்து கொள்வதன் மூலமாக குடும்பத்தின் மகத்துவத்தை நாம் அறியலாம்.

குடும்பம் அனைத்து இடங்களிலும் பரவியிருக்கும் : உலகின் அனைத்து சமுதாயங்களிலும் அந்தந்த - காலங்கள், அந்தந்த பரதேசத்திற்கு ஏற்ற வகையிலும் சிறிதளவு வேறுபாடுகளிருந்தாலும் நாம் அனைத்து சமுதாயங்களில் குடும்பங்களைக் காணமுடியும். திருமணம், பொறுப்பு, காப்பாற்றுவது, உறவினர், சொத்து, விஷயங்களில் ஒரு அறிந்த விதியை குடும்பங்கள் கடைப்பிடித்து வருகின்றன. பொதுவாக அந்தந்த குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பனர்கள் அனைவரும் ஒரே இடத்தில் அல்லது ஒரே கூரையின் கீழ் வாழ்வார்கள்.

**சமுதாயத்தின் அனைத்து செயல்பாடுகளின் அடிப்படை அலகு:**

எவ்விதமான சமுதாய சமூக அமைப்புகளின் செயல்பாடுகள் தொடங்குவதே குடும்பங்களிலிருந்தேயாகும். சமுதாயத்தில் அரசியல், பொருளாதாரம், கல்வி, மற்றுமுள்ள செயல்பாடுகள் மூலமாக உண்டாவது குடும்பங்களிலிருந்தேயாகும். இதற்கு முன் சமுதாயத்தின் முக்கிய வேலைகளுக்கு முடும்பங்கள் தன்னுடைய உறுப்பினர்களை அனுப்பிவைத்தது. இன்றைய வெவ்வேறு வகையான சமூதாயத்தில் தன்னுடைய சில செயல்களை சமுதாயத்தின் மற்ற அமைப்புகளுக்கு விட்டுத்தருகின்றன.

**நிரந்தரமான பொறுப்பு மற்றும் சமுதாயத்தின் பொறுப்பாளர்**

சமுதாயத்தின் மற்ற அமைப்புகளுடன் வெவ்வேறு சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் மற்றும் எவ்விதமான பொருறுப்புகளை நிர்வகிக்க வேண்டும் என்று குடும்பம் தன்னுடைய உறுப்பினர்களுக்கு சொல்லிக் கொடுக்கிறது. குழந்தைகளுக்கு அண்டை அயலாருடன் பொருந்திக் கொண்டு எவ்வாறு வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று சொல்லித்தருகிறது. எடுத்துக்காட்டாக பொதுமக்களுக்கு குடிநீரை அளிப்பதில் மாசுகள் கலவாமல் எச்சரிக்கை வகிக்க வேண்டும் என்பதை தெரியபடுத்துகிறது.

**பேணுதல் மற்றும் பாதுகாத்தல் :**

குடும்பங்களின் முதல் நிலையில் குழந்தைகள் தொடர்பான உரிமைகள் - பொறுப்புகளை உருவாக்குகிறது. அல்லாமல் அவற்றின் பாதுகாப்புக்கு



©KTBS Not to be republished

செயலாற்றுகிறது. குழந்தைகளை சீராட்டி பாதுகாக்க மற்றும் எழுத்து பக்கம் வழிகாட்டுகிறது. நற்பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுபதில் குடும்பத்திலுள்ள பெரியோர்கள் (தாத்தா - பாட்டி, தந்தை - தாய்) சீராட்டுதல் - பேணுதல் - சேவை செய்தல் மற்றும் அவர்களை பாதுக்கப்பது அந்தந்த குடும்பங்களின் கடமையாகும்.

சமுதாயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கம் முதலியவற்றை

சொல்லித்தருகிறது. சமுதாய வளர்ச்சியின் நிலைகளில் குழந்தைப்பருவம். இளமைப்பருவம் முக்கியமானது குழந்தை குடும்பத்தாருடன் பேசக்கூடிய தாய் மொழியை முதலில் அறிந்து கொள்கிறது. அதன் உதவியோடு அடிப்படை சமுதாய விஷயங்களையும், பொருட்களையும் அறிந்து கொள்கிறது. குடும்பத்தின் சுற்று முற்றிலும் உள்ள சமுதாய சுற்றுச் சூழலின் சூழ் நிலைகளில் வளரும் குழந்தைகள் அதற்கேற்றவாறு குண இயல்புகளை வளர்த்துக் கொள்கிறது. சமவயது குழந்தைகளுடன், பெரியோர்களுடன், குழுக்களுடன் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை குடும்பம் சொல்லி கொடுக்கிறது. என்றால் சமுதாய நடவடிக்கைகள் - தேவைகள் - கட்டுப்பாடுகள் குழந்தையின் மீது ஒரு தலைபட்சமாக தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பாலபருவம் - இளமைப்பருவம், நடுத்தர வயது மற்றும் வயது முதிர்வில் நட்பு, சுதந்திரம், பாதுகாப்பு மேலும் மற்ற நடவடிக்கைகளை குடும்பம் சொல்லித்திருகிறது தலை முறைகள் பரம்பரையை தெரியபடுத்துகிறது.

குடும்பம் பல்வேறு தலை முறைகள், இரத்தத் தொடர்புகளை அறிமுகப்படுத்துகிறது. தாத்தா - பாட்டி, குழந்தைகளின் சம்பந்தங்களை விவரிக்கின்றது. தாத்தா, பாட்டி பெரும் காப்பாளர் (Grand parents) முதல் தலை முறையை சேர்ந்தவர்கள். அப்பா, அம்மா, காப்பாளர் (Parents) இரண்டாம் தலை முறையைச் சேர்ந்தவர்கள். குழந்தைகள் மூன்றாம் தலை முறையை சேர்ந்தவர்கள் என்று சொல்லித் தருகிறது. இவ்வாறு தலை முறைகளின் சம்பந்தங்கள் மற்றும் பரம்பரையை முதலாவதாக சொல்லித்தருகிறது.

1. தாய் - தந்தை மற்றும் குழந்தைகள் வசிக்கும் குடும்பம் இரண்டு தலைமுறைகள் குடும்பம் என்று அழைக்கப்படுகிறது.

2. தாத்தா - பாட்டி : தாய் - தந்தை, குழந்தைகள் சேர்ந்த சம்பந்த முள்ளது மூன்று தலை முறைகள் கூடிய குடும்பம் என்பார்கள்.

3. தாத்தா - பாட்டி, குழந்தைகள், பேரக்குழந்தைகளுடன் சேர்ந்துள்ள குடும்பம் நான்கு தலை முறையை விசால குடும்பம் என்பார்கள்.

©KTBS Not to be republished

**குடும்பங்களின் அமைப்புகள்**

குடும்பங்களில் அந்தந்த சமுதாயங்கள் மற்றும் பிரதேசங்களின் முறைகள் பிறப்பெடுத்துக் கொண்டுள்ளன. சமுதாய இயல் அறிஞர்கள் மற்றும் மனித இயல் அறிஞர்கள் குடும்பங்களின் அமைப்பு ஆதாரத்தில் குடும்பங்களின் பிரிவுகளை நிருபித்துள்ளனர். இது வரையில் கூறியதுபோன்று தலை முறைகளின் ஆதாரத்தின்படி குடும்பங்கள்அறியப்பட்டுள்ளன. கணவன் - மனைவி ஒன்றாக கூடி வாழ்ந்து வரும் குடும்பங்களில் பிறந்த குழந்தைகளுக்கு அது மைய குடும்பமாக இருக்கும். அதிக தலைமுறைகளின் இரத்த சம்பந்தங்கள் வசித்து வந்தால் அதனை கூட்டுக் குடும்பம் என்று அழைக்கிறோம்.

திருமண முறைகளின் ஆதாரத்தில் குடும்ப முறைகள் நிர்ணயிக்கப் படுகின்றன. இவ்வாதாரத்தில் ஒரு மனைவியுள்ள (ஒரு தாரமுள்ள) குடும்பம் மற்றும் இரு மனைவியர் (இருதாரம்) உள்ள குடும்பம் மற்றும் பல மனைவிகளின் (பலதாரம்) குடும்பங்களென்று 3 வகைகள் உள்ளன.

1. இரத்த சம்பந்தத்தை ஆதாரமாக்க கொண்ட குடும்பம்.
2. கூட்டாளி வாழிடங்களை ஆதாரமாகக் கொண்ட தாய்வழிக் குடும்பம் மற்றும் தந்தை வழி குடும்பம்.
3. அதிகார மையத்தின் ஆதாரத்தில் தாய் முன்னிலை மற்றும் தந்தை முன்னிலைக்குடும்பங்கள் என பரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே வம்சங்களின் ஆதாரத்தில் தாய்வம்சம் மற்றும் தந்தை வம்ச குடும்பம் என இரு வகைகள் உள்ளன.

**தாய் முன்னிலைக் குடும்பங்கள்:**

தாய் முன்னிலைக் குடும்பத்தில் சொத்தின் மீது உரிமை மற்றும் வாரிசுதாரர்கள் உரிமை பெண்களிடம் இருக்கும். பொதுவாக தாயே இங்கு குடும்பத்தின் தலைவி, அவள் பெயரிலேயே சொத்தின் கணக்கு வழக்குகள் நடைபெறும், கருநாடகத்தின் கடற்கரைப் பிரதேசத்திலுள்ள ஒரு சமுதாயத்தில் தாய் முன்னிலை நிர்வாகம் இன்றும் காணப்படுகிறது. அவ்வாறே தாய் முன்னிலை குடும்பங்கள் கேரள மாநிலம் மலபாரிலுள்ள நாயர் மற்றும் வடகிழக்கு இந்தியாவில் சில பழங்குடி சமுதாயத்திலும் தாய் வழிமுன்னிலைக் குடும்பங்கள் காணப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் தாய்வழி முன்னிலை குடும்ப நிர்வாக மென்றால் பெண்தலைமை. கணக்கு வழக்குகள் மற்றும் பெண்ணை அனுசரிக்கும் பரம்பரை, அதிகாரம் மற்றும் உரிமைகள் தாயிடமிருந்து குழந்தைகளுக்குக் கிடைக்கும்.

©KTBS Not to be republished

**தந்தை முன்னிலைக்குடும்பம்:**

தந்தை முன்னிலை குடும்பத்தில் தந்தையே குடும்பத்தில் முக்கியமானவர். சொத்துரிமை மற்றும் மற்ற உரிமைகள் ஆண் மையமாகியுள்ளன. தந்தை முன்னிலை குடும்பத்தில் திருமணமான பெண்கள் கணவன் வீட்டில் வசிப்பார்கள். இக்குடும்பத்தின் நிர்வாகத்தில் குடும்பத்திலுள்ள பெரியவர்கள் மூத்தமகனுக்கு மத சடங்குகளில் முக்கிய இடமிருக்கும். தந்தை முன்னிலை குடும்ப நிர்வாகம் கிரேக்கம், ரோமன், இந்தியா மற்றும் பக்கத்து நாடான சீனா போன்ற நாடுகளில் முற்காலத்திலிருந்தே நடை முறையிலுள்ளது. இன்றும் கூட நடை முறையிலுள்ளது.

**தற்கால நவீன மைய குடும்பங்கள்:**

குடும்பத்தின் அமைப்பு மற்றும் அதில் வசிக்கும் சந்ததியினரின் எண்ணிக்கை ஆதாரத்தின் மீது குடும்பங்களை மைய குடும்பம் கூட்டுக் குடும்பம் மற்றும் தனிக்குடும்பம் என்று வகைப்படுத்தியுள்ளோம். தந்தை, தாய் மற்றும் அவர்களின் திருமணமாக குழந்தைகள் மட்டும் உறுப்பினர்களாக உள்ள குடும்பத்தை மையக் குடும்பம் என்று அழைக்கிறோம். மையக்குடும்பங்கள் நவீன சமுதாயத்தில் அதிகமாகியுள்ளன. தனிமனிதத்துவம், தனிமனித சந்தோஷம், சுகம், சொத்தில் உரிமை மாறிவரும் சமுதாய முறை, அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நட்பஅறிவில் உண்டான முன்னேற்றம், நகரமையம் மற்றும் சமமான தத்துவங்கள் போன்ற அனேக அம்சங்கள் மையக்குடும்பங்கள் பெருகியதற்கான காரணங்களாகும். மையக் குடும்பங்களில் காணப்படும் முக்கிய பண்புகள் கீழ்க் காணுமாறுள்ளன.

1. அளவில் சிறியது.
2. எளிய சமுதாய கட்டுப்பாடு
3. நவீன நட்பு
4. உறுப்பினர்களுக்கு அதிகளவில் சுதந்திரம்
5. கட்டடங்களின் தொகுப்பு.

**கூட்டுக் குடும்பம்**

கூட்டுக் குடும்பத்தில் தாத்தா - பாட்டி அவர்களுடைய பிள்ளைகள் பேரக் குழந்தைகள், கொள்ளுப் பேரக் குழந்தைகள், சில சந்தர்ப்பங்களில் இன்னும் விரிவாக இரண்டு தலை முறைகளை விட அதிக மக்கள் இருப்பார்கள். இவர்கள் அனைவரும் ஒரே சமையல் அறையில் தயாரிக்கும் சமையலை உண்பார்கள். மொத்த குடும்பம் ஒரே வகையான மதசடங்குகளை கொண்டிருப்பார்கள். கூட்டுக் குடும்பம் பொதுவாக இரத்தத் தொடர்பானவர்களால் கூடிய அமைப்பாகும்.

©KTBS Not to be republished



கூட்டுக் குடும்பம்

**செயல்பாடு:**
உங்கள் குடும்பத்தை ஆதாரமாக வைத்துக் கொண்ட உங்கள் பாட்டி, தந்தை, தாய், சகோதர/ சகோதரிகள் அண்ணி, அத்தை இவர்கள் நிர்வாகிகின்ற காரிய செயல்பாடுகளை பட்டியல் செய்யுங்கள்.

**கூட்டுக் குடும்பத்தின் பண்புகள்:**

(அ) கிராமத்தில் பெரியது : இரண்டு தலை முறைகளை விட அதிக மக்கள், ஒரே வீட்டில் வசிப்பதினால் இக்குடும்பத்தின் உறுப்பனர்களின் எண்ணிக்கை அதிகமாகிருக்கும். அதனால் குடும்பத்தின் அளவு பெரியதாகிருக்கும்.

**செயல்பாடு :** நீயே செய்க உன் முப்பாட்டன் காலத்திலிருந்து இன்று வரை வம்சாவளியை குடும்பத்திலுள்ள **பெரிய வர்களுடன்** விவாதித்து **வம்சா வளி** மரத்தை அமைக்கவும்.

**கூட்டுறவு சமபங்கு:**

கூட்டுக் குடும்பத்தில் உறுப்பனர்கள் ஒரு வருக்கொருவர் ஒற்றுமையுடன அன்றாட செயல்பாடுகளில் இணைந்து எல்லா செயல்களையும் செய்து வருவார்கள்.

குடும்பத்தின் தலைவர் முக்கியமானவனாக வேலை செய்தாலும் கூட இவர் குடும்பத்தின் மொத்த உறுப்பினர்களுடன் விவாதித்து சில தீர்மானங்களைக் கைக்கொள்வார். குடும்பத்தின் அனைத்து செயல்பாடுகளுக்கும் மற்றும் சடங்குகளில் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்கள் பங்கேற்பதை நாம் காணலாம், வயது, பாலினம் மற்ற

சிரமத்தின் ஆதாரத்தின் படி வேலைகளில் பிரிவுகளை நாம் காணலாம்.

**வாழிடம் மற்றும் சமையல் அறை:** கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒரே கூறையின் கீழ் வசிப்பார்கள். வெவ்வேறு காரணங்களுக்காக (தொழில், உழைப்பு, கல்வி) தனி இடங்களில் குடி அமைத்து வசித்து வந்தாலும் கூட மதசம்பிரதாய சடங்குகளின் சந்தர்ப்பங்களில், பண்டிகை விழாக்களில் அனைவரும் மூல குடும்பத்துடன் தொடர்பைக் கொண்டு பங்கேற்று சிறப்பிப்பதை

©KTBS Not to be republished

நாம் கண்டு வருகிறோம். இல்லாமல் கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர்களனைவரும் ஒரே சமையல் அறையில் உணவைத் தயாரித்து உண்பார்கள்.

***மதம் :*** கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர்களனைவரும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாகிருப்பார்கள் மற்றும் கொண்டாடுவார்கள். இவர்களுடை பூஜை சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் ஒரே விதமாக இருக்கும்.

***சுய தேவை அலகு :*** கூட்டுக் குடும்பம் சுய தேவை அலகாக காணப்பட்டு வருகின்றன. தன்னுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு தேவையான பெரும்பாலான தேவைகளை அளிக்கிறது.

***அதிகார அமைப்பு:*** கூட்டுக் குடும்பத்திலுள்ள மூத்த உறுப்பினர்களின் அதிகார அமைப்பு மற்றும் பொறுப்புக்களைக் கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு குடும்ப விஷயங்களில் முக்கிய தீர்மானங்களை எடுக்கும் அதிகாரமிருக்கும். அதிகாரத்தை மற்றவர்களுக்கு அளிப்பது கூட சம்பிரதாயமாக வீட்டின் தலைமையின் ஆதாரத்தின்படி மாற்றபடும்.

***செயல்பாடு:*** *உன்னுடைய தாத்தாவின் காலத்திலிருந்து உங்களுடைய கூட்டுக் குடும்பத்திலிருந்து உறுப்பினர்களின் எண்ணிக்கை (ஆண்கள் - பெண்கள்) மற்றும் அவர்கள் செய்து வந்த செயல்கள், பொறுப்புகளைப்பற்றி உங்கள் தந்தையுடன் விவாதித்து விவரங்களைப் பெறுங்கள்.*

**பயிற்சிகள்**

**I. கோடிட்ட இடங்களை சரியான சொற்களால் நிரப்புக.**

1. குடும்பம் என்னும் சொல் லத்தின் மொழியின் ____________________ சொல்லிலிருந்து வந்தது.
2. சமுதாயத்தின் உயிர்நாடி __________________ ஆகும்.
3. தந்தையே குடும்பத்தின் தலைவனாக உள்ள குடும்பம் __________________ என்றழைக்கிறார்கள்.
4. கேரளாவின் மலபார் நாயர்களில் ____________________ குடும்பம் காணப்பட்டு வருகிறது.

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.**

1. குடும்பம் சமுதாயத்தின் ஒரு அலகு எவ்வாறு ?
2. குடும்பங்களின் அமைப்பைக் கூறுக.

©KTBS Not to be republished

3. கூட்டுக் குடும்பம் என்றால் என்ன?

4. மையக் குடும்பம் என்றால் என்ன?

5. குடும்பத்தின் பண்புகள் யாவை?

6. தனிமனித சமுதாயத்தின் வளர்ச்சியின் நிலைகளில் குடும்பங்களின் பங்களிப்பைக் கூறுக.

7. கூட்டுக் குடும்பத்தின் பண்புகள் யாவை?

8. தனிக் குடும்பங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கக் காரணங்கள் யாவை?

**III.**

1. செயல்பாடு : தாய் முன்னிலை - தந்தை முன்னிலை குடும்பங்களின் அனுகூலம் மற்றும் அனுகூலமற்றத் தன்மைகள் பற்றி விவாதிக்கவும்.

2. பழங்குடி குடும்ப நிர்வாகம் பற்றி அறிய, பழங்குடியினர் வாழிடங்களுக்குச் சென்று பேட்டியளிக்கவும்.

**IV, செயல் திட்டம்:**

1. தாய் முன்னிலை - தந்தை முன்னிலை குடும்ப முறையைப் பற்றி அதிக விவரங்களை சேகரிக்கவும்.

2. உங்கள் முப்பாட்டன் காலம் முதல் இன்றுவரையில் உள்ள வம்சாவளியை குடும்பத்தின் மூத்தோர்களுடன் விவாதித்து வம்சாவளி மரத்தை எழுதுக.

*****

©KTBS Not to be republished

## அத்தியாயம் 2
## சமுதாயமாக்கல்

**இவ்வத்தியாயத்தின் நோக்கம் கீழ்க்காணும் அம்சங்களை அறிவதாகும்.**

- *சமுதாயமாக்கலின் செயல்கள்*
- *சமுதாயமாக்கலின் பொருள்*
- *சமுதாயமாக்கலின் செயல்கள் / சாதனங்கள்*
- *பாலினம் மற்றும் சமுதாயமாக்கல்*

**சமுதாயமாக்கலின் பொருள் :**

*சமுதாயம் இருப்பது மனிதர்களின் சமூக வாழ்க்கைக்காக, மனிதன் ஒரு சமூக உயிரி. மனித சிசு பிறந்தபோது, ஒரு உயிரியாக, பிராணியாக இருப்பான்/ள். பிறகு சமூக உயிராக உருவாகிறார்கள். சிசு குழந்தையாக வளரத்தொடங்கிய நொடியில், சமுதாய நடத்தைகளை கற்கத் தொடங்குகிறது. சமுதாய நடவடிக்கைகளைக் கற்கும்-கிரமம் என்றால் சமுதாயம் தனிமனிதனை உருவாக்கும் செயலை 'சமுதாயமாக்கல்' என்று அழைக்கிறார்கள். குழந்தை பேசும் சக்தி மற்றும் யோசிக்கும் சக்தியைப் பெற்றுக் கொண்ட நொடியிலேயே சமுதாயத்தில் உள்ள மற்ற தனி மனிதர்களினிடையே நட்புடன் கூடி உறவுமுறையை வளர்த்துக் கொண்டு வருகிறது. பேசுவதற்கு அங்கிகாரமாக முயற்சிக்கிறது. விளையாடுவதன் மூலமாக தன் அருகிலுள்ளவர்களை, அனுகரணம் செய்யத் தொடங்குகிறது. இவ்வாறு அது படிப்படியாக சமுதாய சூழலின் பிரபாவத்திற்கு உட்படுகிறது. இச்செயல்களால் தனிமனிதன் மற்றும் சமுதாயத்தை சார்ந்து வாழ்வது காணப்படுகிறது.*

*சமுதாயமாக்கல் என்றால் சமுதாயத்திலுள்ள உயிரிகளில் ஒருவருக்கொருவர் சார்ந்து வாழ்வது மற்றும் அவர்கள் அனைவரும் தம் தம் பொறுப்பு மற்றும் கடமைகளை அறிந்து வாழும் வாழ்க்கையே செயல் கிரமமாகும்.*

*சமுதாயமாக்கலின் செயலாக்கங்களில் பிறப்பு முதல் இறப்பு வரை நடைபெறும் நிரந்தர சமுதாய செயலாகும். மனிதன் பிறந்தது முதல் வரும் சாதாரண ஈடுபாடுகளின் தாக்கத்திற்கு உட்பட்டு சமுதாய நிலைகளுக்குத் தக்கவாறு உருவாகுகின்றான். இதனையே சமுதாயமாக்கல் என்று அழைக்கிறார்கள்.*

**சமுதாயமாக்கலின் செயல்கள் :**

1. *மனித உயிரியை சமுதாய உயிராக மாற்றுகிறது.*

©KTBS Not to be republished

2. வெவ்வேறு திறமைகளான கற்றல், அனுசரணை மற்றும் பழகுவதற்கு வாய்ப்பை அளிக்கிறது.

3. சமுதாயத்திற்கு தொடர்புகளை வளர்ச்சியடையச் செய்கிறது மற்றும் சமுதாய நிர்வாகத்தின் விதிகளுக்கு மற்றும் ஆதரவை அளிக்கிறது.

4. தனிமனித வளர்ச்சிக்கு உதவி செய்கிறது.

5. பரம்பரை வளர்வதற்கு உதவிகரமாக அமைகிறது.

**சமுதாயமாக்கலின் செயல்கள் / சாதனங்கள்**

சமுதாயமாக்கலின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் அம்சங்களில் முக்கியமாக இரண்டு வகைகளைக் குறிப்பிடலாம். முதலாவதாக வயது, அனுபவம் மற்றும் பெரியவர்களின் மீது விழும் தாக்கம். இரண்டாவது சமவயதினர் உண்டாக்கும் தாக்கம். முதலாவது பகுதியில் தாய், தந்தை, குரு பெரியோர் மற்றும் மற்றவர்களை சேர்க்கலாம். இரண்டாவது பகுதியில் நண்பர்கள் மற்றும் சமவயதினர் முதலியவர்களை சேர்க்கலாம். மற்ற ஆதாரமான கீழ்க்காணும் அம்சங்களை சமுதாயமாக்கலின் செயல்களென்று குறிப்பிடலாம்.

**1. குடும்பம் :**

குழந்தையின் சமுதாயமாக்கலில் குடும்பம் மட்டும் மிகவும் முக்கியமானது. தந்தை - தாய் குழந்தைக்கு நேரடியாக இரத்த சம்பந்தம் உள்ளவர்களாகிறார்கள். தாயே குழந்தையின் முதல் ஆசான் (குரு) என்னும் பழமொழி எழுத்தால் உண்மையாகும். தாய் - தந்தை, நடை, உடை, பழக்க வழக்கங்கள், செயல்பாடுகள், வியாபாரம் செய்வது முதலான அம்சங்கள் குழந்தையின் எண்ணங்களுக்கு வளர்ச்சியின் மேல் மிகவும் தாக்கத்தை உண்டாக்குகிறது. அன்பு, கருணை, விசுவாசம், தாழ்மை, சகிப்புத்தன்மை, நல்ல மனம், கூட்டுறவு முதலான வாழ்க்கைத் திறன்கள், முதல் பாடங்களாக வீட்டிலேயே கற்கிறது. குடும்பத்தின் புகழ்ச்சிகள் அவள் / அவனுடைய செயல்பாடுகளுக்கு உற்சாகத்தை அளிப்பதாக இருக்கும். தந்தை - தாயின் வயதில், அனுபவத்தில், அதிகாரத்தில் பெரியவர்களாகிருப்பதினால் குழந்தைகள் பணிவுடன் நடந்து கொள்வார்கள். தாய் - தந்தையின் சண்டைச் சச்சரவு, சூழ்நிலைகளால் மனதில் அழுத்தத்தை அடைகிறார்கள். இவ்வாறு குழந்தைகள் மனது சமுதாயமாக்கலினால் மலர்கிறது. மேலும் வளர்ச்சியடைகிறது. இவைகள் அனைத்துக்கும் ஆதாரமாக அமைந்திருப்பதே குடும்பமாகும்.

**செயல்பாடு:**
உங்கள் குடும்பத்தை ஆதாரமாக வைத்துக் கொண்ட உங்கள் பாட்டி, தந்தை, தாய், சகோதர/ சகோதரிகள் அண்ணி, அத்தை இவர்கள் நிர்வாகிக்கும்/கின்ற காரிய செயல்பாடுகளை பட்டியல் செய்யுங்கள்.

©KTBS Not to be republished

**2. சமவயதினர் குழுக்கள் :**

சமுதாயமாக்கலில் மிக முக்கியமான செயல்களென்றால் சமவயதினரின் குழுக்களாகும். நண்பர்களுடன் ஆட்டக்காரர்கள் மற்றும் தோழர்கள் இக்குழுவிலிருப்பார்கள். இச்சம்பந்தம் உதவுதல் மற்றும் ஒருவருக்கொருவர், ஒன்றுபட்டிருப்பதை ஆதரிக்கிறது. இவர்கள் பொதுவாக ஒரே வயதினராக இருப்பார்கள். தன்னுடைய பெற்றோர்களிடமிருந்தும் மற்றும் ஆசிரியர்களிடமிருந்தும் அறிய முடியாத சமுதாய நடவடிக்கைகளை நண்பர்கள் மூலமாக குழந்தை அறிந்து கொள்கிறது. இவ்வறிவு சமுதாயத் தொடர்புகளையும் மற்றும் நடத்தைகளின் பார்வையில், மிகவும் அவசியம் மற்றும் மகத்துவமானதாகும்.

**3. சமயம் :**

சமுதாயமாக்கல் செயலாக்கங்களில் சமயத்தின் பங்கு உள்ளது. மனிதர்கள் நம்பிய சமயம், சமுதாய வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைகிறது. நீதியுடனான வாழ்க்கையை நடத்த போதனையை அளிக்கிறது. தந்தை - தாய், பெரியோர்கள், சம்பந்தமுள்ளவர்கள், சமயத் தொடர்பான இடங்களுக்கு செல்வதோடல்லாமல் நம்பிக்கை, பூஜை, பண்டிகை, திருவிழா, உற்சவங்கள் முதலிய சமுதாய செயல்பாடுகள் நடைபெறுவதில் பங்கேற்பதின் மூலமாக சமயத் தொடர்பான செயல்பாடுகளை குழந்தைகளில் ஒன்றுபடும் தன்மையை உண்டாக்குகிறது. இதனை அனைத்து மதங்களிலும் வெவ்வேறு வகைகளில் செய்வார்கள்.

**4. பள்ளி :**



குழந்தையின் சமுதாயமாக்கலில் பள்ளியின் பாத்திரம் மகத்துவமானது. பள்ளியில் கல்வியுடன் சகமாணவர்கள் மற்றும் நண்பர்களிடம் தனிமனிதத் தன்மைக்கு உட்படுவார்கள். கல்வியினால் குழந்தையின் சமுதாய நடத்தை அறிவு மற்றும் அனுபவங்கள் ஏற்படுகின்றன. குழந்தையின் ஆத்ம சக்தியின் திறன்கள் வளர்ச்சியடைகின்றன. அவன்/ள், வாழ்க்கையை விசாலமாக்கி சமுதாய வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைகிறது. குழந்தையின் சமுதாயமாக்கலில் ஆசிரியர்களின் பாத்திரம் மகத்துவமானது. நல்ல பழக்க வழக்கங்கள் நன்னடத்தை, நல்லெண்ணம், சமமான தன்மை போன்ற குணங்களை ஆசிரியரின் நடை உடை பாவனை தனித்துவத்தின்

©KTBS Not to be republished

மூலமாக குழந்தைகளுக்கு அன்பு, நன்றி, பொறுத்துக்கொள்ளும் தன்மை, சமமான வாழ்வு, பெறுமாறு செய்ய வேண்டும். அதனுடன் குழந்தைகளின் பாடபுத்தகங்களுக்கு அப்பார்பட்ட, படைப்புதிறன் செயல்பாடுகளில் பங்கேற்குமாறு செய்ய வேண்டும்.

> ***நீயே யோசிக்க:***
> *சமுதாயமாக்கலின் பின்னணியில் சிறுவர் சிறுமிகளுக்காக பள்ளியில் நீங்கள் நிர்வாகிக்கும் பாத்திரங்களின் செயல்களை யோசிக்கவும்.*

**5. *சமூக ஊடகங்கள் :***

நவீன சமுதாயத்தில், சமூக ஊடகங்கள் சமுதாயமாக்கலில் முக்கிய செயலாற்றி வருகின்றன. ரேடியோ, தொலைக்காட்சி, சினிமா, செய்தி பத்திரிக்கைகள், கேளிக்கைகள், நாடகங்கள் முதலான சமுதாய ஊடகங்கள் இலக்கியங்களை பெருமளவில் பயன்படுத்துகின்றன. விளம்பரங்கள், வானொலி (ரேடியோ) நிகழ்ச்சிகள், கதை, கவிதை, கட்டுரைகள், நாவல்கள், நாடகம், நாட்டிய நாடகம், சங்கீதம் (இசை) சுவரொட்டிகள், பெரும் அறிஞர்களின் சிறப்புரைகள், அனுபவ பேச்சுக்களால் நம் மனதில் வெகுவாக பதியவைக்கப்படுகிறது. செய்திகள், வினா-விடைகள், பேட்டிகள், சொற்பொழிவுகள், பட்டிமன்றம், வெவ்வேறு இடங்களின், செய்தித் தொகுப்புடன் ஒளிப்படங்கள், கார்ட்டூன், கேலி சித்திரங்கள் முதலியவைகளால் சமூக ஊடகங்கள் பயன்படுகின்றன. அவ்வாறே சிறந்த மக்களை உருவாக்க உதவியாகிறது. கல்வி மருத்துவமனை செயல்கள், மகத்துவமான விளைவை சமுதாய நிலைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

> ***கவனிக்க:***
> *உங்கள் அருகில் உள்ள பக்கத்து வீட்டினருடன், உங்கள் வீட்டின் தொடர்பைப் பற்றி ஆய்க.*

> ***நீங்களே யோசியுங்கள்***
> *சமுதாயமாக்கலின் பின்னணியில் சிறுவர்/மியர்களுக்காக பள்ளியில் நீங்கள் நிர்வகிக்கும் பங்களிப்பையும், செயலாக்கங்களையும் யோசிக்க.*

**6. *அண்டை அயலார்* (Neighbour hood) :**

அண்டை அயலார் என்றால் அக்கம் பக்கத்திலுள்ளவர் என்று பொருள். இது சமுதாயமாக்கல், குண இயல்புகளைக் கொண்டிருக்கும் ஒரு சிறிய சமூகமாகும். அண்டை அயலாரின் அளவு சிறியதாக இருக்கும். இங்குள்ள மக்கள் பரஸ்பரம் தொடர்பு கொண்டு இருப்பார்கள். உள்ளூரில் வசிக்கும் மக்களுக்கு பல்வேறு வகைகளில் தேவையான உதவி செய்வார்கள். அண்டை அயலாரின் பங்கு, கிராமம் மற்றும் நகரப் பிரதேசங்களிரண்டிலும் காணப்படுகிறது. அண்டை



©KTBS Not to be republished

அயலில் உள்ள மக்கள் கஷ்ட-சுகங்களில், சந்தோஷமான விழாக்கள் போன்றவைகளில் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டு, ஒரே குடும்பத்தினரைப் போன்று வாழ்வார்கள். ஆர்வம், சுவை, விழா, திருவிழா, திருமணம், மதத்தொடர்பான சந்தர்ப்பங்களில் ஒருவருக்கொருவர் வாழ்த்திக் கொள்வார்கள். கிராமிய சூழ்நிலையில் எவ்விதமான சந்தர்ப்பதிலும் அண்டை அயலார் உள்ளனார் என்னும் எண்ணத்துடன் நகர சூழலில் இம்மாதிரியான எண்ணங்களுக்கு, கஷ்ட-சுகங்களுக்கு அண்டை அயலார் உள்ளனர் என்னும் எண்ணம் குறைவாகிருக்கும். பொதுவாக நகரங்களில் அண்டை அயலாரை நம்மவர்கள் என்று நினைப்பதைவிட தனியொருவராக அடையாளம் காண்பதே அதிகம்.

உங்களுடைய பக்கத்து வீட்டுடன் உங்கள் வீட்டினரின் சம்பந்தத்தை கூறுக.

**பாலினம் மற்றும் சமுதாயமாக்கல் :**

இதுவரையில், அறிந்தவகையில் சமுதாயமாக்கல் ஒவ்வொரு மனித உயிருக்கும் அவசியமானதாகும். சமுதாயமாக்கல் செயலாக்கம் அனைத்து குடும்பங்களிலும் ஒரே மாதிரியாக நடைபெறுவதில்லை. பெற்றவர்கள், ஆச்சாரங்கள், சடங்குகள், கல்வி தகுதி, ஆசை-நிராசை, சுவைகள், முன்னுரிமைகள் முதலியன சமுதாயமாக்கல் செயலாக்கங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். இதனால் சமுதாயமாக்கல் செயலாக்கத்தில் அறிந்தோ அல்லது அறியாமல் மதிப்புகளை ஆச்சாரம்,சடங்குகள், பின்ன-பின்ன விதத்தில் தம்முடைய குழந்தைகளுக்கு தெரியப்படுத்திக்கொண்டே இருப்பார்கள். எடுத்துக்காட்டாக : மகளானவள் நேரங்கழித்து வீட்டுக்கு வந்தால் அதட்டுவது, மகன் விளையாடிவிட்டு நேரங்கழித்து வீட்டுக்கு வந்தால் 'வந்து விட்டாயா மகனே' என்றால் மகளின் விருப்பத்திற்கு தடைசெய்து இருட்டுவதற்கு முன் வீட்டுக்கு வரவேண்டும் என்று கூறிக் கொண்டிருப்பார்கள். சிறப்பாக இந்தியாவில் சமையலுக்கு மற்றும் குடும்பத்தின் சேவைகளுக்கு மகள் உதவி செய்ய வேண்டும் என்று விரும்புவார்கள். ஆனால் மகனிடம் இதை எல்லாம் எதிர்பார்ப்பதில்லை. அதே விதமாக பெண்குழந்தைக்கு விளையாட, பொம்மைகளையும், மகனுக்கு 'கிரிக்கெட் பேட்டை' அளிப்பார்கள். இவ்வாறு வேறுபாடாக பாலின ஆதாரத்தில் சமுதாயமாக்கல் செயலாக்கம் சாதாரணமாக நடைபெற்று வருகிறது. இதனை வேறுபாட்டைக் காட்டும் சமுதாயமாக்கல் என்பார்கள்.

> **செயல்பாடு**
>
> சிறப்பு சாதனைகளை செய்து வரும் பெண்களைப் பற்றி விவரங்களை சேகரிக்கவும்.

©KTBS Not to be republished

இன்றைய நவீன போக்குவரவு சமுதாயத்தில் பெண்களின் இட அமைப்புகள் கௌரவமாக மாறுபாடு அடைந்து வருகின்றன. இவை காலத்திற்கு காலம், நாட்டிலிருந்து நாட்டிற்கு மாறுபட்டுள்ளன. இந்தியாவில் தேசிய மற்றும் மக்களிடையே எச்சரிக்கை. புதிய பொருளாதார நிர்வாகம்,நவீன கல்வி, பெண்களை மற்றவர் ஆதினத்திலிருந்து விடுதலை செய்து புதிய வடிவம் அளிக்கப்பட்டுள்ளது. முதலில் ஆண்கள் மட்டுமே பெற வேண்டியிருந்த சில உரிமைகளை பெண்கள் தற்போது பெற்றுக் கொண்டு வருகிறார்கள். சுரங்க வேலை, எஃகு தொழிற்சாலைகளில் வெட்டும் தொழில், கடல் ஆழத்திலிருந்து செல்வ வளங்களை எடுக்கும் வேலை போன்ற செயல்துறைகளிலும், பெண்களுக்கு தற்போது வாய்ப்புகள் பெற்று வருகிறார்கள். மருத்துவத்துறை, வழக்கறிஞராக, பல்கலைக்கழகங்கல் அளவில் ஆராய்ச்சி, தொழிற்சாலைகளிள் செயல்படுதல், போர் படைகளுக்குத் தேவையான யுத்த தளவாடங்களை உற்பத்தி செயல்களில் பெண்கள் பங்கேற்று வருகிறார்கள். சமீபத்தில் சமுதாயமாக்கல் செயலாக்கங்களில் நடைபெற்று வருவது சமமான நிலை மற்றும் சமவாய்ப்பு பார்வையில் முக்கியமானதாகும். அதிலும் விடுதலைக்குப் பிறகு, இந்தியாவில் காணப்பட்டு வரும் தத்துவ நடைமுறை, பெண் குழந்தைகளின் கல்விக்காக அரசு மேற்கொண்டு வரும் விசேஷ செயல்கள், பொருளாதார முன்னேற்றம் மற்றும் மாற்றமடைந்துவரும் சமுதாய முறைகள், சமுதாயமாக்கலில் பாலின சமத்துவத்தைக் கொண்டு வருவதில் முக்கிய பங்காற்றி வருகின்றன.

### பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்களை சரியான சொற்களால் நிரப்புக.**

1. மனித சமுதாயத்திற்கு தனி மனித செயலாக்கத்தை ................. என்கிறோம்.
2. தாயே குழந்தையின் முதல் .............
3. சமுதாயமாக்கலின் முக்கிய கடமை ...............

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விவாதித்து விடையளி.**

1. சமுதாயமாக்கலில் பள்ளியின் பங்கை விவரிக்கவும்.
2. குடும்ப உறுப்பினர்களுடன் குழந்தை கற்கும் நன்னடத்தைகள் யாவை?
3. சமுதாயமாக்கல் செயலாக்கங்களின் மகத்துவத்தை எழுதுக.
4. சமுதாயமாக்கல் எதனைக் குறிப்பிடுகிறது?
5. சமுதாயமாக்கல் செயலாக்கங்களில் சமூக ஊடகங்களின் பாத்திரம் யாது?

©KTBS Not to be republished

6. சமுதாயமாக்கல் செயலாக்கங்களில் அண்டை அயலாரின் பங்களிப்பை விவரிக்கவும்.

**III. செயல்பாடு.**

1. அனைவரும் சேர்ந்த வாழக்கூடிய சமுதாயமாக்கலின் பங்களிப்புப் பற்றி, கட்டுரை அல்லது விவாத மேடையை ஏற்படுத்தவும்.
2. ஊடகங்களில் சமுதாயமாக்கல் பற்றி வரும் கார்ட்டூன் படங்களை சேகரித்து விவரிக்கவும்.

**IV. செயல் திட்டம்.**

குடும்பம், பள்ளி, சமூக ஊடக சமுதாயமாக்கலின் படங்களை வரையும்படி கூறுவது.

*****

©KTBS Not to be republished

## பூவியியல்

### அத்தியாயம் - 1

# நமது மாநிலம் - கர்நாடகம்

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்ச"ங்களைப்பற்றி அறிகிறோம்.**

- நமது நாட்டின் பெருமை - மரபு மற்றும் பரம்பரைகளைப் பற்றியும்.
- கருநாடகம் - என்னும் பெயரின் பின்னணி மேலும் கருநாடக மாநிலம் உருவானதைப் பற்றியும்.
- கருநாடகத்தின் நில அமைப்பு, இருப்பிடம், பரப்பளவு மற்றும் நீர் எல்லைகள் மேலும் அண்டை மாநிலங்கள் பற்றி அறிவது.

கடந்த வகுப்பில் இயற்கையான புவியியல் அமைப்பைப் பற்றி கற்று இருக்கிறீர்கள். தற்போது நம்முடைய நாடு, கன்னட நாடு, என்று அழைக்கப்படும். கருநாடகத்தைப் பற்றி நீங்கள் கற்று இருக்கிறீர்கள். இது தனக்கே உரியதான பெருமை, மரபு மற்றும் பரம்பரைகளைக் கொண்டுள்ள இந்திய மாநிலங்களில் ஒன்றாகும். தலைசிறந்த அமைப்பு, வெவ்வேறு வகையான நில அமைப்புகள் தாவரங்கள் மற்றும் விலங்குவகைகள் வெவ்வேறு வகையான மண், நீர்மூலங்கள், தாதுவளம் மற்றும் மனித வளத்தை முழுமையாகக் கொண்ட சிறந்த நாடு. இலக்கியம், கலை கலாச்சாரம், மதச்சம்பந்தமான, புனிதமான (ஆன்மிகமான) வரலாற்றுத் தொடர்பான புகழ்பெற்ற புனிதத் தலங்களைக் கொண்ட நாடு இயற்கை அழகு மற்றும் வனவிலங்குகள் நிறைந்த விஷயங்களில் உலகபரம்பரை வரிசையில் பிரசித்திபெற்ற புகழ் நமது மாநிலத்திற்குள்ளது.

***பெயரின் பின்னனி :*** கர்நாடகம் என்னும் பெயர் மிகப் பழங்காலத்திலிருந்தே பயன்பாட்டிலிருந்தது. இதனை கருநாடு (கரு+நாடு-என்றால் கருமண்ணுள்ள நாடு) என்று அழைத்து வந்தனர். தமிழில் உள்ள ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் பழமையான நூலில் 'கருநாட' என்னும் சொல்லிலிருந்து கர்நாடக என்று அழைத்திருப்பது தெரியவந்துள்ளது. கருநாட என்றால் உயர்ந்த அல்லது உயரமான இடத்திலுள்ள நாடு என்று பொருள். இது முன்பு காவேரி நதியிலிருந்து கோதாவரி நதிவரை பரவியிருந்தது என்று நிருபதுங்கரின் ஆஸ்தான கவிஞர் ஸ்ரீவிஜயனின் அலங்கார நூலான கவிராஜமார்க்கத்தில் கூறியுள்ளார். இந்தியா விடுதலை அடைந்த பிறகு அனேக மாநிலங்களாக பிரிக்கப்பட்டன. மைசூரு அரசர்களின் ஆட்சியில் தெற்கிலிருந்த 9 மாவட்டங்களை உட்கொண்டு 1947ல் மைசூரு இராச்சியம் தோன்றியது.

©KTBS Not to be republished

பிறகு மொழிவாரியாக பலபகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. பம்பாய், ஹைதராபாத், மதராஸ் மேலும் கொடகு பகுதிகளில் பிரிந்திருந்த கன்னட மொழி பேசும் மக்களின் பிரதேசங்களை ஒன்று கூட்டியதினால் 1956ல் நவம்பர் முதல் நாளன்று 'விசால மைசூர் மாநிலம்' நடைமுறைக்குவந்தது. இதனுடை நினைவாக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் 'ராஜ்யோத்ஸவ' தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. கன்னட மக்களின் விருப்பமான நம்முடைய மாநிலத்தை 'கர்நாடக' என்று 1973 நவம்பர் முதல் நாளன்று மறுபெயர் சூட்டப்பட்டது. திரு தேவராஜ அர்ஸ் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்.

**பூகோள இட அமைப்பு :**

இந்தியாவிலுள்ள 29 மாநிலங்களில் கர்நாடகமும் ஒன்றாகும். இது இந்தியாவின் தென் பகுதியிலுள்ளது. இந்திய தீபகற்பத்தின் மேற்கில் நடுப் பகுதியில் அமைந்துள்ளது. இது $11^0$-$31^0$ மற்றும் $18^0$-$45^0$ வடக்கு அட்சரேகைகளிலும் மேலும் $74^0$-$12^0$ மற்றும் $78^0$-$40^0$ கிழக்கு தீர்கரேகைகளின் இடையே பரந்துள்ளது. வடக்கு முனையில் பீதர் மாவட்டத்திலுள்ள ஔராத் தாலுக்காவிலிருந்து தென் முனையான சாமராஜ நகர் மாவட்டம் வரை மொத்தம் 750 கி.மீ. நீளமுள்ளது.

மேற்கிலிருந்து கிழக்குவரை 400 கி.மீ. அளவு அகலமாக உள்ளது. வடகன்னட மாவட்டத்திலுள்ள கார்வார் மேற்கில் உள்ளது. கோலார் மாவட்டத்தின் முளபாகில் தாலூக்கா கிழக்கு முனையிலுள்ளது. கர்நாடக மாநிலம் நிலம் மற்றும் நீர் எல்லைகளைக் கொண்டுள்ளது. மேற்கில் அரபிக்கடலும் வடக்கில் மகாராஷ்டிரமும், வடகிழக்கில் தெலுங்கானா கிழக்கில் ஆந்திரபிரதேசமும் தெற்கு மற்றும் தென் கிழக்கில் தமிழ்நாடு, தென் மேற்கில் கேரளம் வடமேற்கில் கோவா ஆகிய மாநிலங்கள் எல்லைகளாக அமைந்துள்ளன. உருவத்தில் கர்நாடக மாநிலம் முந்திரி பருப்பைப் போன்றுள்ளது.

**பரப்பளவு :**

கர்நாடக மாநிலம் 1,91,791 சதுர கிலோமீட்டர் அளவு பரப்பளவைக் கொண்டுள்ளது. பரப்பளவில் இந்திய மாநிலங்களில் எட்டாவது பெரிய மாநிலமாக உள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 6,11,30,704 மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. மக்கள் தொகையில் ஒன்பதாவது மாநிலமாக உள்ளது. இந்திய புவியியல் அமைப்பில் அதன்பரப்பளவு 5.83% பாகமாக உள்ளது.

©KTBS Not to be republished




**இந்தியாவில் கருநாடகத்தின் இட அமைப்பு**

2011ல் இருந்ததுப் போன்று நமது மாநிலத்தில் 30 மாவட்டங்கள் உள்ளன. இம்மாவட்டங்களில் 176 தாலுக்காக்களும். 769 ஹோப்ளிகளும், 347 பட்டணங்கள் மற்றும் நகரங்களும் 29340 கிராமங்களும் உள்ளன. பெளகாவி மாவட்டம் பரப்பளவில் மிகவும் பெரியது. பெங்களூரு நகர் பகுதி மாவட்டம் மிகவும் சிறியது. ஆட்சி நிர்வாகத்தை மனதிலிருத்தி கருநாடகத்தை நான்கு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர் அவைகள் பெங்களூரு, மைசூரு, பெளகாவி மற்றும் கலபுரகி பிரிவுகள்.

> **உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும் :**
> மைய அரசின் சிறப்பிடத்தைப் பெற்றுள்ள ஹைதராபாத் - கருநாடகத்தின் மாவட்டங்கள் பீதர், ராயச்சூர், கலபுரகி, கொப்பல், யாதகிரி, பள்ளாரி.

©KTBS Not to be republished




Not to be republished ©KTBS

## பயிற்சிகள்

**I. விடப்பட்ட இடங்களை சரியான வார்த்தைகளால் நிரப்புக :**

1) கன்னட ராஜ்யோத்சவா ____________ நாளன்று கொண்டாடுகிறோம்.

2) கர்நாடகமென்று மறுபெயர் சூட்டிய ஆண்டு ____________.

3) கர்நாடகத்தின் கிழக்குப் பகுதியில் ____________ மாநிலமுள்ளது.

4) கர்நாடகத்தின் ____________ மாவட்டம் பரப்பளவில் மிகவும் பெரியதாக உள்ளது.

5) கர்நாடகம் இந்தியாவின் ____________ பகுதியில் உள்ளது.

**II. கீழ்காணும் வினாக்களுக்கு விடையளி :**

1) கர்நாடகத்தில் பாய்ந்தோடும் அட்சரேகைகள், தீர்கரேகைகள் பரப்பளவை எழுது.

2) உங்களுடைய அண்டை மாநிலங்களின் பெயர்களை எழுது.

3) கர்நாடகத்தின் நான்கு ஆட்சிப் பிரிவுகள் யாவை ?

4) இந்தியாவில் கருநாடகத்தின் பூகோள இட அமைப்பை எழுதுக.

**III. செயல் பாடுகள் :**

1) கர்நாடகத்தின் வரைப்படத்தை வரைந்து மாவட்டங்களை குறிப்பிடு, பெயர் எழுதுக. அட்ச ரேகைகள் தீர்கரேகைகளைக் குறிப்பிடு.

**IV. செயல் திட்டம் :**

1) நமது மாவட்டம் / நகரத்தின் வரைப்படத்தை தயாரித்து, அட்ச ரேகைகள், தீர்க ரேகைகளையும் இட அமைப்பையும் அண்டை மாவட்டம் மற்றும் இதரப் பிரதேசங்களை உங்கள் ஆசிரியரின் உதவியுடன் தயாரிக்கவும்.

*****

©KTBS Not to be republished

அத்தியாயம் - 2

# கர்நாடகத்தின் இயற்கைப் பிரிவுகள்

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்ச"ங்களைப்பற்றி அறிகிறோம்.**

- கர்நாடக இயற்கை அமைப்பின் சிறப்புகள்.
- கர்நாடக இயற்கைப்பிரிவுகள்.
- நமது மாநிலத்தின் மலைகள், உயரமான சிகரங்கள் பற்றி அறிவது.

கர்நாடக மாநிலம் இந்திய தீபகற் பத்தின் ஒரு பாகமாக உள்ளது. பல விதமான இயற்கைப் பண்புகளைக் கொண்டுள்ளது. இதனுடைய தென்பகுதி உயர்ந்தும் தாழ்ந்தும் உள்ள புவி அமைப்புகளைக் கொண்டுள்ளது. வடபகுதி பரந்தும் விரிந்தும் உள்ள சமவெளிப் பகுதிகளைக் கொண்டுள்ளது. கடற்கரை மற்றும் மலைப்பகுதிகள் மிகப் பெரும் வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. கிழக்கில் பொதுவாக சரிந்துள்ளது மற்றும் மேற்கு நோக்கி சரிந்த மலைப்பகுதி உள்ளது. அங்காங்கு மலைத் தொடர்களுடன் இடையில் குறுகிய கணவாய்களும் சம வெளிகளும் காணப்படுகின்றன. மாநிலத்தில் பெருமளவுப் பகுதிகள் கடல் மட்டத்திலிருந்து சுமார் 450 முதல் 900 மீட்டர் உயரத்தில் உள்ளன. சிலப் பகுதிகள் 1800 மீட்டர்களுக்கும் அதிகமான உயரத்தைக் கொண்டுள்ளன.

நில அமைப்பு மற்றும் மேற் பகுதிகளின் பண்பை அனுசரித்து கர்நாடகத்தை மூன்று முக்கிய இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. 1) கடற்கரைச் சமவெளி, 2) மலைநாடு, 3-) சமவெளிப் பிரதேசம்.

### 1. கடற்கரைச் சமவெளி

மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டதின் பலனாக கர்நாடக மாநிலத்திற்கு கடற்கரைகளும், கடற்சமவெளிப் பகுதிகளும் கிடைக்கப் பெற்றது. இவ்வியற்கைப் பகுதி அரபிக் கடல் முதல் மலைநாடு வரையில் நீண்டும் பரந்துமுள்ளது. இது தெற்கில் மங்களூரிலிருந்து வடக்கில் கார்வார் வரையில் 320 கி.மீ. நீளத்திற்கும் அமைந்துள்ளது. மேலும் 12 முதல் 64 கி.மீ. அகலமாகவும் உள்ளது. தெற்கு பகுதியில் அகலமாகவும் வடக்குப் பகுதியில் குறுகியும் சரிந்தும் காணப்படுகிறது. இதன் உயரம் கடல் மட்டத்திலிருந்து 200 மீட்டர்களுக்கும் அதிகமாக உள்ளது. இதனை **கெனரா அல்லது கர்நாடக கடற்கரை** என்று அழைக்கிறார்கள். இப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பினால் சில நதிகள் வேகமாகப் பாய்கின்றன. அவைகள் ஆழம்குறைந்த

©KTBS Not to be republished

உப்பு நீர் ஏரிகளை உண்டாக்குகின்றன. ஆனால் அவைகளினால் நதி முகத்துவாரங்களை உண்டாக்க முடிவதில்லை.

கடற்கரையின் நீளத்திற்கும் அனேகத் துறைமுகங்கள் அமைந்துள்ளன. அவைகளில் நவமங்களூர் துறைமுகம் கருநாடகத்தில் மிகப் பெரிய துறைமுகமாக உள்ளது. பட்கல், மல்பே, கார்வார், குமட்ட, பேலேகெரெ மற்றும் ஹொன்னாவரம் போன்றன மீன்பிடித்துறைமுகங்களாகும். இப்பகுதியில் அனேக அழகிய கடற்கரைகள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. அவைகள் மங்களூருக்கு அருகிலுள்ள சோமேஸ்வர, உள்ளால, ஹொன்னாவரத்திற்கு அருகிலுள்ள ஓம் பீச் முக்கியமானவைகள். கடற்கரைப் பகுதிகளில் அனேக சிறிய, சிறிய தீவுகள் அமைந்துள்ளன. அவைகளில் மல்பேவுக்குப் பக்கத்திலுள்ள செயின்ட் மேரிஸ் தீவு (கோக்கனட் தீவு) கார்வாருக்கு அருகிலுள்ள அஞ்ஜ தீவு, தேவகட, காஞ்ஜிகுட்ட தீவுகள்முதலியன. கடற்கரைப்பகுதிகளில் வாழும் மக்களின் முக்கியத் தொழில் மீன்பிடித்தலாகும். மீன்பிடித்தலுடன் வேளாண்மையையும் மற்றொரு முக்கியத் தொழிலாக செய்கிறார்கள். இங்கு முந்திரி, தென்னை, ஏலக்காய், நெல் முதலிய விளைப் பொருட்களை விளைவிக்கிறார்கள். தென் கன்னட, உடுப்பி மற்றும் வடகன்னட மாவட்டங்கள் கடற்கரை மாவட்டங்களாக உள்ளன.

## 2. மலைநாடு (அ) மலைப் பிரதேசம்

நமது மாநிலத்தின் மேற்கு மலைகளை மலைநாடு என்று அழைக்கிறார்கள். அவைகளை சயாத்ரி மலைத் தொடர்கள் என்றழைக்கிறார்கள். மலை நாடு வடக்கு தெற்காக கடற்கரைக்கு சமமாக பரந்து உள்ளது. மேற்கு பகுதி குறுகிய சரிவுகளைக் கொண்டு கிழக்கு முகமாக மெல்லச் சரிந்து காணப்படும். அதனால் இதனை 'காட்ஸ்' என்று அழைக்கிறோம். இதனுடைய நீளம் 650 கி.மீ. மற்றும் அகலம் 50-76 கி.மீ.கள். சராசரி உயரம் கடல் மட்டத்திலிருந்து 900 முதல் 1500 கி.மீட்டர்கள். இது அரபிக் கடலிலிருந்து வீடும் மழைமேகங்களை தடுத்து 200 செ.மீ.க்கும் அதிகமான மழையைப் பெருகிறது. இங்கு மிக உயரமான மலைச் சிகர மென்றால் முள்ளயன கிரி, குதிரைமுக, கலஹத்தகிரி, ருத்ரகிரி, தேவீரம்மன பெட்ட, இவைகள் சிக்கமகளூர் மாவட்டத்திலுள்ளன. இவையல்லாமல்

**உங்களுக்கு தெரிந்திருக்கட்டும் :**

- *கருநாடகத்தின் வாயில் நவ மங்களூரு துறைமுகம்.*
- *செயின்ட் மேரிஸ் தீவை உள்ளூர் வாசிகள் ' தோன்ஸ்பார் ' என்று அழைக்கிறார்கள்.*
- *முருடேஸ்வருக்கு அருகில் 'நேத்ராணி' தீவு உள்ளது. இங்கு புறாக்கள் அதிகமாக உருப்பதினால் இதனை 'பீஜின் ஐலண்டு' என்று அழைக்கிறார்கள்.*

©KTBS
Not to be republished

பல்லாளராயன துர்க, மெர்த்தி குட்ட, புஷ்பகிரி, கூடசாத்ரி மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மற்ற சிறந்த மலைச்சிகரங்கள் இவைகளில் முள்ளையன கிரி (1913 மீ) மாநிலத்தில் மிகவும் உயரமானது.




கர்நாடகத்தின் கிழக்கு சமவெளிப் பகுதிகளிலிருந்து மேற்கு மலைத் தொடர்களைக் கடந்து கடற்கரைச் சமவெளிக்குச் செல்லும் வழியை மலைத்தொடர் அல்லது கட்ட வழி என்று கூறுவார்கள். முக்கிய மலைவழிகளென்றால் :

1. ***சார்மாடி காட் :*** – மங்களூரு மற்றும் சிக்கமகளூருக்கு இடையே போக்குவரத்துக்கு உதவுகிறது.
2. ***சிராடி காட் :*** ஹாசன் – சக்கலேஸ்புரம் மங்களூருக்கு இடையே – போக்குவரவிற்கு பயன்படுகிறது.
3. ***ஆகும்பே காட் :*** சிவமொக்கா மற்றும் உடுப்பியின் இடையே போக்குவரவிற்கு பயன் படுகிறது.
4. ***ஹுலிகல் காட் :*** சிவமொக்கா – குந்தாபுரத்திற்கு இடையே போக்குவரவை உண்டாக்குவது.

மலைநாடு அதிகளவு மழையைப் பெறுவதால் பசுமை மாறா அடர்ந்த காடுகளுடன் கூடி அழகிய மலை வாழிடங்களையும் கொண்டுள்ளன. இது கர்நாடகத்தின் பலநதிகளின் பிறப்பிடமாக உள்ளது. இங்கிருந்து குறுகிய மலைச்சரிவுகளிலிருந்து வெகுவேகமாகபாயும் அனேக நீர் வீழ்ச்சிகள் உள்ளன. அவைகளில் இந்தியாவிலேயே மிக உயரமான 'ஜோக்' நீர் வீழச்சி (சராவதி நதி) சேர்ந்த உன்ச்சள்ளி, மாகோடு, கோக்காக், சிவனசமுத்திர 'அப்பி' நீர்வீழ்ச்சிகள் மிகவும் முக்கியமானவைகளாகும்.

©KTBS Not to be republished

இதனுடன் கணவாய் மற்றும் சமவெளிகளை அமைத்துள்ளன. இங்கு காபி, தேயிலை, ரப்பர் மற்றும் வாசனைப் பொருட்களையும் பெருமளவில் விளைவிக்கப்படுகிறது. பெருமளவில், காபியை விளைவிக்கப் படுவதால் சிக்க மகளூரை **காபிநாடு** என்பார்கள். குடகு மாவட்டத்தில் குளிர்ந்த காலநிலை நிலவுவதால் '**கருநாடகத்தின் காஷ்மீர்**' என்று அழைக்கிறார்கள். இன்று மலைநாடுப் பிரதேசத்தை '**ஜீவிவைவித்யாதம்**' என்று அழைக்கிறார்கள். மேலும் இங்கு கிச்சிலிப் பழங்கள் அதிகமாக விளைவதினால் '**கித்தளே நாடு**' என்று அழைக்கிறார்கள். ஹாசன், குடகு, சிவமொக்கா, சிக்கமகளூரு முதலியன மலைநாடு மாவட்டங்கள் ஆகும்.

**இதனை அறிந்துகொள் :**
*பாபாபுடன்கிரியின் மற்றொரு பெயர் 'சந்திர தோரண் மலை.*

### 3. சமவெளிப் பிரதேசம்

மலைநாட்டின் கிழக்கு திசையில் பரந்த சமவெளியாக சராசரி **450** முதல் **760** மீட்டர் உயரத்தில் உள்ளது. இது கிருஷ்ணா, துங்கபத்திரா மற்றும் காவேரி நதிகளின் நீர்ப்பாசனத்தைப் பெறும் பிரதேசங்களைக் கொண்டுள்ளன. இங்கு பல்வேறு இடங்களில் மலைத் தொடர்கள் காணப்படுகின்றன. இது கிழக்கு முகமாக சரிந்துள்ளது. வடக்கிலிருந்து தெற்கில் உயரம் அதிகமாகக் காணப்படுகிறது. அவைகள் : (i) வடக்கு சமவெளி மற்றும் (ii) தெற்கு சமவெளிகள்.

**செயல்பாடு:**
*உங்களுடைய மாவட்டம் எந்த இயற்கைப் பிரிவில் வருகிறது? உங்கள் மாவட்டத்தின் அண்டை மாவட்டங்களின் பெயர்களைக் கூறுக மற்றும் சிறப்புப் பண்புகளைப் பட்டியலிடவும்.*

(i) **வடக்கு சமவெளிப்பிரதேசம் :** இது கருமண்ணால் அமைந்த பரந்த சமவெளிப்பிரதேசம் மற்றும் விசாலமான பீடபூமியாகும். கடல் மட்டத்திலிருந்து சராசரி **365** முதல் **610** மீட்டர்கள் அளவு உயரமாக உள்ளது. ஆங்காங்கு மலைக்குன்றுகள் காணப்படுகின்றன. அவற்றில் நரகுந்தமலை, பரசகுடகுன்று, இளக்கல் குன்று, முக்கியமானவை. சவ்தத்தி மற்றும் பாதாமி சுண்ணாம்புகற்களினால் பலபாகங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் பெருமளவு ஏற்றத்தாழ்வுகள் நில அமைப்புகளுக்கு காரணமாயின சுமார் **62** மீட்டர் உயரத்திலிருந்து குதிக்கும் கட்டப்பரபா நதியின் கோகாக் நீர்வீழ்ச்சி இங்கு புகழ் பெற்றுள்ளது. இவையல்லாமல் சாயபகவதி மேலும் சொகல் நீர்வீழ்ச்சிகள் வடக்கு சமவெளிப்பிரதேசத்தில் உள்ளன. பீதர், விஜயபுரா, கலபுரகி, யாதகிரி, கதக், கொப்பள, ராயச்சூரு, பல்லாரி, ஹாவேரி, பாகல் கோட்டை, தாரவாட் மற்றும் பெளகாவியின் சில பாகங்கள் வடக்கு சமவெளிப்



©KTBS Not to be republished

பிரதேசத்தில் உள்ள மாவட்டங்கள் கோடைக் காலத்தில் அதிக வெப்பமாக இருப்பதினால் இதனை வெய்யில்நாடு (பிசிலு நாடு) என்பார்கள். வறட்சி வேளாண்மையின் விளைப்பொருட்களான சோளம், கரும்பு, கடலை, பருத்தி பருப்புவகைகள் விளைவிக்கப் படுகின்றன.



முள்ளயன கிரி



மதுகிரி ஒரேகல் மலை

**செயல்பாடு:**

உங்கள் மாவட்டத்தின் இயற்கைச் சிறப்புகள் பற்றி ஒரு கட்டுரை எழுதவும்.

(ii) ***தெற்கு சமவெளிப் பிரதேசம் :*** இது வடக்கில் துங்க பத்திராவிலிருந்து தெற்கில் சாமராஜ நகர் மாவட்டம் வரை வியாபித்துள்ளது. இது பெருமளவு சிவப்பு மண்ணினால் அமைந்த பீடபூமி. இப்பிரதேசம் ஏற்றத் தாழ்வுகளுடன் கூடியுள்ளது. 900-975 மீட்டர் உயரமுள்ளது. வடக்கு சமவெளிப் பிரதேசத்தைவிட உயரமாகிருந்து கிழக்கு முகமாக சரிந்துள்ளது. இங்கு அனேக மலைகள் உள்ளன. அவைகள் சித்திரதுர்காவின் மலைகள். பெங்களூரு மாவட்டத்தின் நாராயணதுர்கா, சாவனதுர்கா, சிவகங்கெ, துமகூரு மாவட்டத்தின் மதுகிரி மலை ஆசியாக் கண்டத்திலேயே ஒரே கல்லால் அமைந்த மலையாகும். சிக்கபள்ளாபுர மாவட்டத்தில் உள்ள நந்தி மலை வாழிடம், சென்ன கேசவன மலை, கவலேதுர்கா மேலும் ஸ்கந்தகிரி (ஹரி ஹரேஸ்வரமலை) மன்டிய மாவட்டத்திலுள்ள ஆதிசுஞ்சனகிரி மலை, சாமராஜநகர் மாவட்டத்திலுள்ள **பிளிகிரி ரங்கன மலை, மலெமஹதேஸ்வர மலை,** மைசூரு மாவட்டத்திலுள்ள சாமுண்டிமலை, முதலியன முக்கியமானவைகள். இப்பிரதேசம் மழை மறைவு பிரதேசமாகும். காவேரி, பாலாறு, பென்னாறு இங்கு பாயும் முக்கிய நதிகள். கேழ்வரகு, நெல், கரும்பு, கடலை மல்பரி, காய்கறிகள், பழவகைகள் போன்றன முக்கிய விளைப் பொருட்கள். தாவணகெரெ, சித்தரதுர்கா, துமகூரு, கோலார், சிக்கபள்ளாப்பூர், மன்டியா, மைசூரு, சாமராஜநகர் மாவட்டங்கள் தெற்கு சமவெளிப் பிரதேசத்திலுள்ளன.

©KTBS Not to be republished

## பயிற்சிகள்

**I. விடுபட்ட இடங்களில் சரியான சொற்களால் நிரப்புக :**

1) மல்பேக்கு அருகில் ____________ தீவு உள்ளது.

2) சயாத்ரி என்று ____________ களை அழைக்கிறார்கள்.

3) ஆகும்பே காட் ____________ மற்றும் ____________ இடங்களை இணைக்கிறது.

4) கர்நாடகத்தின் காஷ்மீர் என்று ____________ மாவட்டத்தை அழைக்கிறார்கள்.

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி :**

1) கர்நாடகத்தின் முக்கிய இயற்கைப் பிரிவுகள் யாவை ?

2) மலைநாடு பிரதேசத்தின் பண்புகளை எழுதுக.

3) கர்நாடகத்தின் கடற்களைச் சமவெளிகளைப் பற்றி எழுது.

4) தெற்கு சமவெளிப் பிரதேசத்திலுள்ள மலைகளின் பெயர்களை எழுது.

5) மேற்கு மலைத் தொடர்களிலுள்ள முக்கிய கணவாய்களின் பெயர்களை தெரிவிக்கவும்.

**III. பொருத்தி எழுதுக :**

| | அ | | ஆ |
|---|---|---|---|
| 1) | ஜோக் நீர்வீழ்ச்சி | அ) | மங்களூரு |
| 2) | ஓம் பீச் (கடற்கரை) | ஆ) | வடக்குசமவெளிப் பிரதேசம் |
| 3) | நந்தி மலைவாழிடம் | இ) | சராவதி நதி |
| 4) | ஒருகல் மலை | ஈ) | கோக்கர்ண |
| 5) | வெய்யில் நாடு | உ) | சிக்கபள்ளாப்புர |
| | | ஊ) | மதுகிரி மலை |

**IV. செயல்பாடு :**

1) மலைநாடு மற்றும் கடற்கரை மாவட்டங்களை கருநாடக வரைப்படத்தில் குறிக்கவும், கருநாடகத்தின் முக்கிய நீர்வீழ்ச்சிகளின் படங்களை சேகரிக்கவும்.

*****



©KTBS Not to be republished

*அத்தியாயம் - 3*

# கர்நாடகத்தின் தட்ப வெப்பநிலை, மண் இயற்கைத் தாவரங்கள் மேலும் விலங்கு வளம்

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்ச''ங்களைப்பற்றி அறிகிறோம்.**

- கருநாடகத்தின் தட்ப வெப்ப நிலைகளின் முக்கிய சிறப்புக்கள்.
- கருநாடகத்தின் பருவங்களின் மாற்றங்கள், தட்பவெப்ப நிலையின் நிலமை.
- கருநாடகத்தின் பருவமழையின் பங்கீடு மற்றும் பலன்கள்.
- கருநாடகத்திலுள்ள மண்ணின் வகைகள் மற்றும் பகிர்வு.
- கருநாடகத்தின் இயற்கைத் தாவரங்கள், வகைகள், விலங்குவளம்.

## கருநாடகத்தின் தட்பவெப்பநிலை

கர்நாடகத்தில் வெப்பமண்டல பருவகாற்று தட்ப வெப்பம் மற்றும் ஈரப்பதம் உள்ள கோடை மேலும் குளிர்ச்சியான மற்றும் வறண்ட குளிர்காலம் இத்தட்ப வெப்ப நிலையின் முக்கிய சிறப்புகள். ஆனால் தட்பவெப்பநிலையில் மாறுபாடுகள் உள்ளன. இதற்கு புவியியல் இட அமைப்பு, கடல்கள் நில அமைப்பு இயற்கைத் தாவரங்கள் மேலும் பருவக்காற்றுகளின் தாக்கம் முக்கிய காரணங்கள். ஆண்டின் வெப்பநிலை மற்றும் மழைப் பகிர்வு மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை.

**தட்பவெப்பநிலை:** பருவங்கள் இந்தியவைப் போன்றே கர்நாடகத்திலும் ஆண்டின் தட்பவெப்பநிலையை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவது.

1) கோடைக் காலம் (மார்ச்சு முதல் மே)
2) மழைக்காலம் (ஜுன்முதல் செப்டம்பர்)
3) பருவக்காற்று பின்னடையும் காலம் (அக்டோபர் முதல் நவம்பர்)
4) குளிர்க்காலம் (டிசம்பர் முதல் பிப்ரவரி)

***1. கோடைக்காலம் :*** இப்பருவத்தில் தட்பவெப்பநிலை மிகவும் வெப்பமாகவும் வறண்டும் இருக்கும். மார்ச்சு மாதத்திற்கு பிறகு மாநிலம் முழுவதும் வெப்பநிலை ஒரே விதமாக உயர்ந்து ஏப்ரல் மே மாதங்களில் அது அதிகளவை அடைகிறது. ராய்ச்சூரில் பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் **45.6** செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளதினால் அது நம்முடைய

©KTBS Not to be republished

மாநிலத்திலேயே அதிகவெப்பத்தை பதிவு செய்துள்ள பிரதேசமாக உள்ளது. வடக்கு சமவெளிப் பிரதேசத்தில் உள்ள மற்ற மாவட்டங்களிலும் வெப்பம் அதிகமாக இருக்கும். பொதுவாக இக்காலத்தில் கர்நாடகம் முழுவதும் அதிக வெப்பமாக இருக்கும். வடக்கு சமவெளிப் பிரதேசத்தில் ஈரத் தன்மையின் அளவு தெற்கு சமவெளிப் பிரதேசத்தைவிட குறைவாகிருக்கும். கோடைக் காலத்தில் அதிக வெப்பத்தினால் மழை மேகங்கள் ஏற்பட்டு இடி, மின்னலுடன், இடி முழக்கத்துடன் வெப்பச்சலன மழைப் பொழியும். சில இடங்களில் ஆலங்கட்டிகள் விழும். இது சாதாரணமாக மாலை நேரத்தில் சிறிது நேரமே பொழியும். இது காபி செடிகள் பூ பூப்பதற்கு உதவுவதால் இதனை ‘காபி பூ மழை’ (Cherry Blossom Rain) என்றும் அழைக்கிறார்கள். இப்பருவத்தில் மாநிலத்தின் ஆண்டு மழைப் பொழிவில் 7% பாகம் மழைப் பெய்கிறது.

**2. மழைக் காலம் :** இதனை தென் மேற்கு பருவகாலக் காற்றுகள் என்றும் அழைப்பார்கள். அரபிக் கடலிலிருந்து வீசும் ஈரமுள்ள காற்றுகளை மலை நாட்டின் மலைத் தொடர்கள் தடுத்து அதிக மழைப் பொழிகிறது. கிழக்கு பக்கம் செல்லச் செல்ல மழையின் அளவு குறைந்து விடுகிறது. இவ்விதமாக கிழக்குச் சமவெளிப் பகுதி மழைப் மறைவுப்பகுதியாகும் இடமாகும். மேற்கு மலைத் தொடரிலுள்ள ஆகும்பே மிக அதிகமழை பொழியும் இடமாகும் எனவே ...... இதனை தென் இந்தியாவின் சிரபுஞ்சி என்பார்கள்.




Not to be republished ©KTBS

பாகமண்டலம் மற்றும் ஹுலிகல்லு மற்ற அதிகமாக மழையைப் பெறும் இடங்களாகும். சித்திரதுர்க சள்ளகெரெக்கு அருகிலுள்ள நாயக்கன ஹட்டி மிகக் குறைந்த அளவு மழைப் பொழியும் இடங்களாகும். இச்சமயத்தில் மாநிலம் முழுவதும் வெப்பளவு அதிகமாவுதடன் ஈரத்தன்மை அதிகமாகிருக்கும். மேகங்கள் சூழ்ந்த நிலையைக் காணலாம். இப்பருவத்தில் கர்நாடகத்திற்கு 80% அளவு மழைப் பெய்கிறது. மாநிலத்தில் ராபி விளைச்சல் வேளாண்மைக்கு இக்காலம் உதவிகரமாக அமைகிறது.

**3. பருவக்காற்று பின்னடையும் காலம் :** இதனை வடகிழக்கு பருவக்காற்று காலம் என்றும் அழைக்கிறார்கள். வட இந்தியாவில் வெப்பநிலைக் குறைந்து காற்றழுத்தம் அதிகமாவதால் வடகிழக்கு பருவக்காற்றாகி தென் மேற்கு நோக்கி பலமிழக்கும். நிலப் பகுதியிலிருந்து வீசும் இக்காற்றுகள் மழையை அளிப்பதில்லை. ஆனால் வங்கக் கடலிலிருந்து வீசும்போது தெற்கு சமவெளிப் பிரதேசத்தில் உள்ள மாவட்டங்களில் சிறிது மழைப் பெய்யும். வங்கக் கடலில் உருவாகும் புயல்காற்றுகளின் பலனால் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் மழைப் பெய்யும் இப்பருவத்தில் 12% மழை மாநிலத்தில் பெய்யும்.

**4. குளிர்க்காலம் :** இக்காலத்தில் குறைவான வெப்பநிலை, ஈரத் தன்மை, குறைந்தளவு மழைப் பொழிவு மேலும் நிர்மலமான ஆகாயம் ஆகிய தட்பவெப்பநிலையைக் காணலாம். சராசரிவெப் பநிலை $25^0$ முதல் $27^0$ செல்சியஸ். ஜனவரி மாதத்தில் மிகக்குறைந்தளவு வெப்ப நிலை பதிவாகும். இதனை 'கர்நாடகத்தின் சுற்றுலாமாதம் என்பார்கள். அப்பொழுது பௌகாவியில் குறைந்தளவு வெப்பநிலை $6.7^0$ செல்சியஸ் இருக்கும். வடக்கு மாவட்டங்களில் குறைந்த வெப்பநிலை காணப்படும். விஜயபுர, கலபுரகி மற்றும் பீதர், பௌகாவியில் மழைப் பகிர்வு மிகவும் குறைவு மாநிலத்தின் மொத்த மழையளவில் 1% பாகம் விழுகிறது. சிலசமயங்களில் காலை நேரங்களில் அடர்ந்த மூடுபனி காணப்படும்.

> **செயல்பாடு :**
> *கோடைக் காலம், குளிர்காலம் மற்றும் விரும்பும் காலம் எது? ஏன் என்பதற்குக்க காரணம் கொடுக்கவும்.*

***மழைப் பகிர்வு :*** மலைநாடு, கடற்கரைப் பகுதிகள் அதிகளவு மழையைப் பெறும் பிரதேசங்களாகும். கிழக்குப் பகுதியில் உள்ள சமவெளிகளில் குறைந்தளவு மழையைப் பெறும் பிரதேசங்கள் ஆகும். காலம் தவறிய மற்றும் சமமற்ற மழைப் பகிர்வால் மாநிலத்தில் அவ்வப்போது பஞ்சம் மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் சம்பவங்கள் நடைபெறுகின்றது.

© KTBS Not to be republished

## கர்நாடகத்தின் மண் வகைகள்

பூமியின் மீதுள்ள மெல்லிய அடுக்கே மண்ணாகும். வேளாண் வளர்ச்சிக்கு வளமான மண் அவசியம். கர்நாடகத்தில் வெவ்வேறு வகையான மண்கள் உள்ளன. அவைகளில் நான்கு வகையான மண்கள் உள்ளன. அவைகளை நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 1) செம்மண், 2) கருப்புமண், 3) சிவப்பு கப்பிக்கல் மண் (ஒருவகை செம்மண்), 4) கடற்கரை வண்டல் எண்.

**1. செம்மண் :** இது கிரானைட், மங்கனீஸ் மற்றும் இரும்பு ஆக்ஸைடுகளால் இம்மண் சிவப்பாக உள்ளது. இந்த மண்ணில் அதிகளவு சுண்ணாம்பு மற்றும் உப்பின் அளவும், நைட்ரஜன் அம்சம் குறைந்தும். எளிதான (மென்மையான) அடுக்குகள் உள்ள இந்த மண் வளமான மண் அல்ல. ஈரத்தைத் தக்க வைத்துக் கொள்ளும்திறன் குறைவு. இம்மண்ணில் வறட்சி பயிர்களான கேழ்வரகு, திணை, கம்பு, சோளம், பருப்புவகைகள் முதலியனவும் புகையிலை, இருவிதை தானியங்கள், நிலக்கடலைப் போன்ற மழையை நம்பி விளையும் விளை பொருட்கள் விளைவிக்கப் படுகிறது. நீர்ப்பாசன வசதியுடைய இடங்களில் நெல், கரும்பு உருளைக்கிழங்கு, காய்கறிகள், வாழை, தென்னை, பாக்கு முதலியன விளைவிக்க ஏற்ற மண், துமகூரு, பெங்களூரு, ராமநகரம், சிக்கபள்ளாப்புர, கோலார், சாமராஜ நகர், மன்டியா மற்றும் மைசூரு மாவட்டங்களில் இம்மண் அதிகமாகக் காணப்படுகிறது.

**2. கருப்பு மண் :** இந்தமண் பசால்ட் பாறைகள் சிதிலம் அடைவதனால் ஏற்பட்டமண். இதில் அதிகளவு மக்னீசியம் அலுமினியம் மற்றும் இரும்பு ஆக்ஸைடுகள் இருக்கும். இதனுடைய நிறம் கருப்பு. இதனை ‘எரெமண்’ அல்லது ‘கருமண்பருத்தி மண்’ (Block cotton soil) என்றும் அழைப்பார்கள். இதற்கு அதிக நாட்கள் ஈரத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் குணம் உள்ளது. இம்மண்ணில் பருத்தி சோளம், சூரியகாந்தி, மிளகாய், மக்காச் சோளம், பருப்பு வகைகள், கரும்பு, வெங்காயம் மற்றும் நெல் விளைவிக்கிறார்கள். இந்த மண் வடகர்நாடக மாவட்டங்களில் பரவலாகக் காணப்படுகிறது. தார்வாட், கதக், பள்ளாரி, கொப்பல், கலபுரகி , யாதகிரி, பாகல் கோட்டை, சித்ரதுர்கா மற்றும் சாமராஜநகர் மாவட்டங்களில் கருப்பு மண் பகிர்வு உள்ளது.

**3. சிவப்பு கப்பிக் கல்மண் :** அதிகளவு வெப்பம் மற்றும் அதிகளவு மழைப் பெய்யும் பாகங்களில் இவ்வகையான மண் காணப்படுகிறது. நீரில் கரையும் சுண்ணாம்பு மற்றும் சிலிக்கெட்டுகள் மழைநீரில் கரைந்து மண்ணின் கீழ் அடுக்குகளில் சேர்ந்துவிடும். கரையாத இரும்பு மற்றும் அலுமினியங்கள் மேல் அடுக்கில் இருந்துவிடுகின்றன. இது மழைக்காலங்களில் மிருதுவாகவும்

©KTBS Not to be republished

கோடைக்காலத்தில் உலர்ந்து கடினமாகி லைட்ரைட் கல்லாகிறது. அதனை கட்டிசங்கள் கட்டுவதற்கு பயன் படுத்துகிறார்கள். இந்த மண்ணில் முந்திரி, காபி, தேயிலை ஏலக்காய், மிளகு, ரப்பர், தென்னை போன்ற விளைப் பொருட்கள் விளைவிக்கப் படுகிறது. வடகன்னடம், உடுப்பி தென் கன்னடம், குடகு, சிக்கமகளூரு, சிவமொக்கா, பௌகாவி போன்ற மலை நாடு மாவட்டங்களில் அதிகமாகக் காணப்படுகிறது.




**4. கடற்கரை வண்டல் மண் :** நதி, கடல்களின் அலைகளினால் கொண்டுவரப்படும் மண், கடல்/ சமுத்திரக்கரைகளில் சேருகின்றது. இவ்விதமாக மாநிலத்தின் கடற்கரை மாவட்டங்களான உடுப்பி தென் கன்னடம் மற்றும் வடகன்னடம் மாவட்டங்களில் இம்மண் காணப்படுகிறது. இதில் மணல் மற்றும் களிமண் கலந்திருப்பதோடு அழுகிய அங்கக உயிரிகள் நிறைந்து காணப்படுகின்றன. நெல், முந்திரி, தென்னை, பாக்கு, வாழை போன்ற விளைச்சல் விளைவதற்கு இது மிகவும் அவசியம்.

## இயற்கைத் தாவரங்கள்

இயற்கையாக விளையும் வெவ்வேறு வகையான தாவர சமுதாயத்தை 'இயற்கைத்தாவரங்கள்' என்பார்கள். கர்நாடகமும் வேறு வேறு வகையான தாவரங்களைப் பெற்று சிறப்புடன் திகழ்கிறது. சுற்றுச் சூழலின் சமநிலையைக் காப்பாற்றுவதில் தாவரங்கள் முக்கிய பங்கை ஆற்றுகின்றன. தாவரங்கள் மரச்சாமான்கள், தொழிற்சாலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருட்கள். விறகு, மூலிகைகள், தேன் மூங்கில், பிரம்பு முதலியவற்றை அளிக்கிறது.

©KTBS Not to be republished

இக்காடுகளில் விலங்குகள் வசிக்கின்றன. யானை, புலி, சிங்கம், சிறுத்தை காட்டெருமை, மான், மயில் போன்றன கருநாடக காடுகளில் வாழ்கின்றன. பொழுது போக்கு மற்றும் சுற்றுலா மையங்களை ஏற்படுத்தியுள்ளனர். சுற்றச் சூழல் மாசடைவதைத் தடுக்கின்றன. கர்நாடக காடுகளில் விசேஷமாக சந்தன மரங்கள் வளர்கின்றன. இதிலிருந்து வாசனை திரவியம், கலை வேலைப்பாடுகளுடன் கூடிய பல்வேறு பொருட்கள், சோப்புகள், மருந்து வகைகள் தயாரிக்கப்படுகின்றன. இவை உலகப்புகழ் பெற்றுள்ளன. உள் நாட்டிலும் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன. நமது நாட்டுக்கு பொருட்களை அளிப்பதோடு, அனைத்துலக அளவில் நமது சந்தனப் பொருட்களுக்குத் தேவை அதிகமாக உள்ளது. வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. அதனால் கருநாடகத்தை (ஸ்ரீகந்தத நாடு) சந்தன நாடு என்றே புகழ் அடைந்துள்ளது.

***தாவரங்களின் வகைகள்***

மழையளவு, நில அமைப்பு, மண்வளம் போன்றவைகளை அனுசரித்து கருநாடகத்தின் தாவரவகைகளை நான்கு வகையாக பிரிக்கப் பட்டுள்ளது. அவை 1) பசுமை மாறாக்காடுகள், 2) இலை உதிரும் தாவர வகைகள் கொண்ட காடுகள், 3) கலப்புக் காடுகள் மற்றும் 4) புல்வெளிக் காடுகள்.

***1. பசுமை மாறாக் காடுகள் :*** ஆண்டுக்கு 250 செ.மீ.க்கும் அதிகமான மழையைப் பெறும் பகுதிகளில் இக்காடுகள் வளர்கின்றன. அதிகளவு மழை மற்றும் அதிகளவு வெப்பத்தினால் இங்கு மரங்கள் உயரமாகவும் அகலமான மரக்கிளைகளுடன் வளர்கின்றன. இக்காடுகள் அடர்த்தியாக இருக்கும் சில நேரங்களில் சூரியக்கிரணங்கள் நிலத்தில் வீழ்வதில்லை. இங்கு முக்கியமாக பீட், தேக்கு, மத்தி, நந்தி, மஹாகனி, ஹொன்னெ, துப்பா, ஹெப்பலசு போன்ற உயரமான மரங்கள் வளர்கின்றன. இவ்விதமான காடுகள் வடகன்னடம், உடுப்பி தென் கன்னடம், சிவமொக்கா, ஹாசன் சிக்கமகளூரு, சாமராஜநகர் மற்றும் குடகு மாவட்டங்களில் காணப்படுகிறன்றன.

***2. இலையுதிர் காடுகள் :*** குளிர் காலத்திற்கு பின் ஈரத்தன்மை குறைந்து மரங்களின் இலைகள் உதிர்ந்து விடுகின்றன மறுபடியும் வசந்த காலத்தில் துளிர்க்கின்றன. இவைகளை 'இலைகளை உதிர்க்கும் தாவரவகைகள்' என்பார்கள். ஆண்டு மழையளவு 60-120 செ.மீ. மழைப் பெய்யும் பகுதிகளில் இவ்விதமான தாவரவகைகள் இருக்கும். இக்காடுகள் சிக்கமகளூரு, மைசூரு, சாமராஜநகர், ஹாசன் மாவட்டங்களின் கிழக்கு பகுதிகளிலும், துமகூரு, சிக்கபள்ளாப்புர, கோலாரின் தெற்கு பாகங்களிலும் மண்டியா, ராமநகரம்

©KTBS Not to be republished

மற்றும் பெங்களூரு கிராமபுர மாவட்டத்தில் காணப் படுகின்றன. தேக்கு, ஹொன்னெ, மத்தி, வேம்பு, மா, பலா, முத்தக, பாகே, ஆலமரம், சந்தனம் மற்றும் மூங்கில் போன்றன இங்கு விளையும் முக்கியமான மரங்களாகும். இவைகள் அடர்த்தியாக வளர்வதில்லை.




**3. கலப்பு வகைக் காடுகள் :** பசுமை மாறாக்காடுகள் மற்றும் அகலமான இலைகளுள்ள இலை உதிரும் மரங்கள் விளையும் தாவரங்கள் உள்ள இடமே கலப்பு வகைக்காடுகள். ஆண்டுகள் 120-150 செ.மீ. மழை பொழியும் பாகங்களில் இவ்வகையான தாவரங்கள் காணப்படுகின்றன. இவ்வகையானக் காடுகள் உடுப்பி, தென் கன்னடம் வடகன்னடத்தின் சில பாகங்களில் , குடகின் கிழக்கு பாகம் மேலும் சிக்கமகளூர், ஹாசன் மற்றும் மைசூரு மாவட்டங்களின் பகுதிகளில் காணப் படுகின்றன. தேக்கு, ஹொன்னெ, மத்தி, நந்தி, தின்டக, சந்தனம், பலா மற்றும் மூங்கில்கள் இங்கு விளையும் முக்கிய மரங்களாகும்.

**4. புல் வெளிக்காடுகள் மற்றும் வறண்டத் தாவரங்கள் :** கர்நாடகத்தில் ஆண்டுக்கு 60 செ.மீ. குறைவான மழையைப் பெறும் பிரதேசங்களில் இவ்வகையானத் தாவர வகைகள் உள்ளன. மழைக் குறைவு மற்றும் வறண்ட காற்றினால் சிறுமுட்செடிகள் மற்றும் சிறு குறு செடிகள் வளர்கின்றன. எடுத்துக்காட்டு : கள்ளி கற்றாழை, கரிஜாலி, வேலம், ஈச்சம், ஹன்ச்சி மற்றும் குந்திபுல் முதலியன. அங்காங்கு ஆலம், வேலம், அரளி, பனைமரம் முதலியன வளர்கின்றன. இவ்வகைத்தாவரங்கள் பீதர், கலபுரகி, யாதகிரி, ராயச்சூர், கொப்பள, விஜயபுர, பள்ளாரி, சித்தரதுர்கா முதலிய மாவட்டங்களில் காணப்படுகின்றன.

©KTBS Not to be republished

கடற்கரையொட்டி உள்ள வளைகுடா நதிமுகத்து வாரங்களில் உள்ள ஆழமற்ற உப்புநீர் ஏரிகள், மணற் திட்டு பகுதிகளில் உள்ள தாவரங்களின் வேர்கள் காற்றிலுள்ள ஈரத்தை ஈர்க்கும் இவைகள் உப்பு நீரில் வளரும் சிறப்பான திறன் உடையன. இதனை மங்குரோவ் தாவரங்கள் என்பார்கள். இவ்வகையானத் தாவரங்களின் பதிர்வு குறைவு.

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும் :**

- பெங்களூருக்கு அருகில் உள்ள ராமோ ஹள்ளியில் மிகப் பெரிய ஆலமரம் உள்ளது.
- சிட்லகட்டெ டி வெங்கடபுர பக்கத்தில் மிகப் பெரிய வேப்பமரம் உள்ளது.
- சவனூருக்கு அருகில் மிகப் பெரிய புளிய மரம் உள்ளது.

சுமார் 1400 மீட்டர்களுக்கும் அதிக உயரமுள்ள பாகங்களில் குளிர்ச்சியான தட்ப வெப்பநிலை உள்ளது. குதிரைமுகம், பாபாபுடன்கிரி பிளகிரி ரங்கன் மலை, குடகின் பிரம்மகிரி மலைத் தொடர்களின் புல்வெளிச் சரிவுகள். ஆழமான பள்ளத்தாக்குகளில் பலநீரோடைகள் சிறு சிறு நீர்வீழ்ச்சிகள் உள்ளன. இப்பகுதிகளில் நாம் ஷோலா காடுகள் விளைகின்றன.

**காடுகளின் பகிர்வு**

அனைத்துக் காடுகளையும் உட்கொண்ட கர்நாடகத்தில் பதிவு செய்யப்பட்ட காட்டு பிரதேசங்கள் 43.4 லட்ச சதுர கிலோமீட்டர்கள் இது மாநிலத்தின் பூகோள பிரதேசத்தில் 22.6% பாகம் உள்ளது. இந்தியாவில் உள்ள காடுகளில் கர்நாடகம் ஏழாம் இடத்தில் உள்ளது. வடகன்னடம் அதிக காட்டு பிரதேசங்களை உட்கொண்ட மாவட்டம். அதற்கடுத்த இடத்தில் சிவமொக்கா மற்றும் மூன்றாம் இடங்களில் உள்ளன. விஜயபுர மிகக் குறைந்தளவு காடுகள் உள்ள மாவட்டமாகும்.

## விலங்கு வளம்

தாவரங்கள் மற்றும் மரங்கள் காட்டு விலங்குகளின் வளம் கருநாடக மாநிலத்தில் உள்ளது. இதற்கு அடர்ந்த காடுகள் முக்கிய காரணமாகும். உலகில் குறிப்பிடப்பட்ட உயிரிகளில் வேறுபட்ட உல்லாச உறைவிட (Hot spots) ங்கள் மாநிலத்தின் சயாத்ரி மலைத் தொடர்களை சேர்ந்துள்ளன. தற்போது அது ஒரு உலகப் பரம்பரை சொத்து என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள மொத்த யானைகளில் 25% மற்றும் புலிகளில் 10% பாகம் நமது மாநிலத்தில் உள்ளன. இது அல்லாமல் சிறுத்தை, காட்டுப் பன்றி, காட்டெருமை, கலைமான், மான் கரடி, முள்ளம்பன்றி போன்ற விலங்குகள் வாழ்கின்றன. மேலும் பல்வேறு பாம்பினங்கள் மற்றும் பலவண்ணமயமான பறவைகளும் கூட காணப்படுகின்றன.

©KTBS Not to be republished

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்.**

- கர்நாடகத்தில் இரண்டு முக்கிய புலிகள் காப்பக மண்டலங்கள் உள்ளன. பண்டிப்பூர், நாகரஹொளெ அபயாரண்யங்கள்.
- கர்நாடகத்தில் மிகப்பெரிய பறவைகள் சரணாலயம் உள்ள இடம் ரங்கனதிட்டு.




மேற்குமலைத்தொடரின் நடுப்பகுதியான மலைநாடு பாகம் மட்டும் தன்னுடைய இயற்கை உயிர் வேற்றுமை, பரம்பரையை தக்கவைத்துக் கொண்டுள்ளது. இப்பகுதியில் வன விலங்குகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது. வனவிலங்குகளின் நிலையை உட்கொண்ட மாநிலத்தின் காடுபிரதேசங்களை 6 பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது. அவைகள் : வடகன்னடம் மற்றும் பெளகாவியின் பாகங்களை உட்கொண்ட கடற்கரைப்பகுதி. சயாத்ரி மலைநாட்டின் மலைத் தொடர்கள். எடுத்துக்காட்டு : பாபாபுடன்கிரி தொடர், பிளகிரி ரங்கன மலை, மலை மாதேஸ்வர மலை, கபாலசுவாமி மலை, போன்றவைகளில் உள்ள தெற்கு சமவெளிப்பிரதேசம். ராணிபென்னூரின் வடக்கு சமவெளிப்பிரதேசம் முக்கியமான வானவிலங்கு வாழிடங்களாகும். இன்று கர்நாடகத்தில் 5 தேசிய பூங்காக்களும் மற்றும் 17 வன விலங்கு சரணாலயங்கள் உள்ளன.

### பயிற்சிகள்

**I. விடுபட்ட இடங்களில் சரியான சொற்களால் பூர்த்தி செ–ய்யவும்.**

1) கோடைக்காலம் __________, __________ மாதங்களில் இருக்கும்.

2) மிக அதிக மழைப்பெய்யும் பருவம் ______________ ஆகும்.

©KTBS Not to be republished

3) வடக்கு கர்நாடகத்தில் ______________ மண் அதிகமாகக் காணப்படுகிறது.

4) பசுமை மாறாக் காடுகள் ______________ பிரதேசத்தில் உள்ளது.

5) மிக அதிகளவு காடுகள் உள்ள பிரதேசம் ______________ மாவட்டத்தில் உள்ளது.

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.**

1) கர்நாடகத்தின் நான்கு பருவங்களின் பெயர்களை எழுது.

2) கர்நாடகத்தில் மழைக்காலத்தைப்பற்றி எழுதுக.

3) கர்நாடகத்தில் உள்ள மண்ணின் வகைகளை தெரிவிக்க.

4) கர்நாடகத்தின் வெவ்வேறு இயற்கை தாவரங்களைக் கூறு.

5) கர்நாடகத்தை சந்தன நாடு என்று ஏன் அழைக்கிறார்கள்?

6) நமது காடுகளில் உள்ள முக்கிய வனவிலங்குகளின் பெயர்களை எழுதுக.

**III. பொருத்தி எழுதுக.**

| அ | ஆ |
|---|---|
| 1) ஆதி சுஞ்சனகிரி | அ) பறவைகள் சரணாலயம் |
| 2) மந்தகத்தெ | ஆ) தேசிய பூங்கா |
| 3) நாகரஹொளெ | இ) இலையுதிர்காடு |
| 4) சந்தனமரம் | ஈ) மயில்கள் சரணாலயம் |
| | உ) சிவப்புமன் |

**IV. செயல்பாடுகள்**

கர்நாடகத்தில் உள்ள வனவிலங்குகளின் படங்களை சேகரித்து ஆல்பம் தயாரிக்கவும். பறவைகள் சரணாலயம், வனவிலங்கு சரணாலயங்களின் பட்டியல் தயாரிக்கவும்.

**V. செயல்திட்டம்:**

உங்கள் மாவட்டத்தில் காணப்படும் தாவரங்களின் வகைகள் பற்றி, குழுக்களில் விவாதிக்கவும் விரங்களை எழுதவும்.

*****

©KTBS Not to be republished

*அத்தியாயம் - 4*

# கர்நாடகத்தின் நீர்வளங்கள்

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்ச''ங்களைப்பற்றி அறிகிறோம்.**

- கர்நாடகத்தின் முக்கிய நதிகள்.
- கர்நாடகத்தின் நீர்ப்பாசன முறைகள்.
- நீர்மின்சக்தி உற்பத்திமையங்களின் முக்கியத்துவத்தை அறிவது
- கர்நாடகத்தின் முக்கிய அணைக்கட்டுகள்
- கர்நாடகத்தின் நீர்பங்கிடு சச்சரவு மேலும் நதி நீரின் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை அறிவது.

## கர்நாடகத்தின் நதிகள்

நதிகள் நீர்வளத்திற்கு முக்கிய ஆதாரமாகும். கர்நாடகத்தில் பல நதிகள் பாய்கின்றன. கர்நாடக நதிகளை இருவகையாகப் பிரிக்கலாம். அவைகள் கிழக்கு முகமாக பாயும் நதிகள் மற்றும் மேற்கு நோக்கி பாயும் நதிகள்.

**உங்களுக்கு தெரிந்திருக்கட்டும்**

*காவேரி தன்னுடைய நதிப்படுகையில் மூன்று நீர் வீழ்ச்சிகளை (சுஞ்சன கட்டெ சிவன சமுத்திர மற்றும் ஹோகனேகல்) மற்றும் மூன்று தீவுகளை ஏற்படுத்தியுள்ளது. (அரங்கம்) ஏற்படுத்தியுள்ளது.*

**உங்களுக்குத் தெரியுமா ?**

- கூடல சங்கமத்தில் மலப்பிரபாநதி கிருஷ்ணா நதி, ஒன்று கூடுகின்றன.
- கூட்லீ துங்கா மற்றும் பத்திரா நதிகள் சந்திக்கும் இடங்கள்
- கிருஷ்ணராஜ சாகர் பக்கத்தில் ஹேமாவதி நதி காவேரியை அடைகிறது.




©KTBS
Not to be republished

**1. கிழக்கு நோக்கிபாயும் நதிகள் :** கிருஷ்ணா, காவேரி, பென்னார் மற்றும் பாலாறு நதிகள் கிழக்கு நோக்கி பாய்ந்து வங்கக்கடலை அடையும் முக்கிய நதிகளாகும்.

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும் :**
*பென்னார் நதிக்கு மற்றொரு பெயர் பினாகினி. தமிழ் நாட்டில் தென்பென்னை நதியை (தெற்குபினாகினி) பென்னையார் என்று அழைக்கிறார்கள்.*

கிருஷ்ணா நதி தென் இந்தியாவில் இரண்டாவது முக்கியநதி. இது மகாபலேஸ்வர என்னுமிடத்தில் பிறந்து (உற்பத்தி) 1932 கி.மீ. தூரம் கிழக்கு நோக்கி பாய்ந்து வங்கக்கடலைச் சேருகிறது. ஆனால் இது கர்நாடகத்தில் 480 கி.மீ. தூரம் பாய்கிறது. பீமா துங்கபத்திரா, கட்டப்பிரபா மற்றும் மலப்பிரபா இதனுடைய உபநதிகள். கிருஷ்ணா நதி வட கர்நாடகத்தில் நீர்ப்பாசனம் மற்றும் நீர்மின்சாரம் தயாரிக்க உதவுகிறது.

காவேரி கர்நாடகத்தின் மிக முக்கிய நதியாகும். தட்சின கங்கை என்று புகழ் பெற்றுள்ளது. குடகு மாவட்டத்தில் தலைக் காவேரியில் பிறக்கிறது. கருநாடகம் மற்றும் தமிழ் நாட்டில் கிழக்குமுகமாக 804 கி.மீ. தூரம் பாய்ந்து சென்று வங்கக்கடலில் கலக்கிறது. கர்நாடகத்தில் 380 கி.மீ. தூரம் பாய்கிறது. இந்நதியுடன் பல உபநதிகள் சேருகின்றன. எடுத்துக்காட்டு : ஹேமாவதி, ஹாரங்கி, லோக்கபாவனி, அர்க்காவதி, சிம்ஷா, லக்ஷமண தீர்த்தா, கபிலெ, குடி நீர் தேவையை பூர்த்தி செய்கின்றது. இந்நதி மிகவும் உபயோகமாக உள்ளது.

பென்னாறு மற்றும் பாலாறு நதிகள் கோலார், பெங்களூரு மாவட்டங்களில் பாய்ந்து பிறகு ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழ் நாட்டிற்குள் நுழைகின்றன. வடபென்னாறு மற்றும் தென் பென்னாறு என் என்னும் இரண்டு தனி ஆறுகள்.

**2. மேற்கு முகமாக பாயும் நதிகள் :** இந்நதிகள் மலைநாட்டில் பிறந்து மேற்கு நோக்கி பாய்ந்து அரபிக்கடலில் கலக்கின்றன. எடுத்துக்காட்டு : சராவதி, காலி, சங்காவளி (பெட்தி) நேத்ராவதி, வராஹி, அகநாசினி, காளி, கங்காவளி (பெச்தி) நேத்ராவதி, வராஹி, அகநாசினி முதலியன. இவை உயர்ந்த பகுதிகளிலிருந்து பாய்ந்து

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும் :**
**கர்நாடகத்தின் முக்கிய பெரிய ஏரிகள்**
*முதுகர ஏரி (குடகு மாவட்டம்) தொண்ணுரு ஏரி (பண்டவபுர அருகில்), ராம சமுத்திர ஏரி (சிக்கபள்ளாபுர) , பைரசாகர ஏரி (குடிபன்டெ), கள்ளப் பெள்ள ஏரி (ஸிரா) பைரமங்கல ஏரி (பிடதி) முதலியன*

©KTBS Not to be republished

வருவதினால் நீர் வீழ்ச்சிகளை ஏற்படுத்துகின்றன. நீர் மின் சக்தியை தயாரிக்க உதவியாகின்றன. சராவதி நதி ஏற்படுத்தியுள்ள நீர் வீழ்ச்சி ஜோக் நீர் வீழ்ச்சியாகும் (253 மீ) மற்ற முக்கிய நீர்வீழ்ச்சிகள் கோகாக் (கட்டபிரபா பன்டாஜி (நேத்ராவதி) உன்ச்சள்ளி (அகநாசினி) சாயாபகவதி (தோணி நதி) சுஞ்சநகட்டெ, சம்ஷா, ககனசுக்கி, பரசுக்கி (காவேரி) மாகோடு நீர்வீழ்ச்சி (பெட்தி) முதலியன

### கர்நாடக நீர்பாசனம்



நீர்ப்பாசன நிலப்பகுதி அளவு சதவீதத்தல்

வேளாண்மை (விவசாயம்) செய்வதற்கு செயற்கை முறையில் நீரை அளிக்கும் முறைக்கு நீர்ப்பாசனம் ஆகும். காலம் தவறி மழைப் பெய்தாலும் மழைப் பொய்த்து விட்டாலும், மழையின் பகிர்வு குறைந்தாலும் வேளாண் முன்னேற்றத்திற்கு கைக் கொடுப்பது நீர்ப்பாசனமாகும். கர்நாடகத்தில் மிகப் பழங்காலமுதலே வெவ்வேறு நீர்ப் பாசனங்கள் முறைகளால் வேளாண்மை செய்வது நடை முறையிலிருந்து வந்துள்ளது. முக்கிய நீர்ப்பாசன முறைகளென்றால் கிணறு, கால்வாய், ஏரி நீர்ப்பாசனங்கள் முக்கிய மானவைகள். முன்பு கிராமங்களில் கிணறுகளை ஏற்படுத்தி நீர்ப்பாசனத்திற்கு பயன் படுத்தினர்.

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும் :**
*கருநாடகத்தில் முதன்முதலில் பெரிய நீர்த்தேக்கம் என்றால் அது வாணிவிலாஸ் சாகர் இதனை 1907 ஆம் ஆண்டில் ஹிரியூருக்கு அருகில் அமைத்தார்கள். மாரிக் கணவாய் திட்டம் என்று அழைக்கப் படுகிறது.*

ராயச்சூர் மாவட்டம் நமது மாநிலத்தில் மிக அதிக கால்வாய்ப் பாசனத்தைப் பெற்றுள்ளது. சிவமொக்கா மாவட்டம் அதிக ஏரிநீர்ப்பாசனத்தைப் பெற்றுள்ள பிரதேசமாகும். பெளகாவி மாவட்டம் மாநிலத்திலேயே பெருமளவு கிணற்று நீர்ப் பாசன வசதியைப் பெற்றுள்ளது. தற்காலத்தில் ஆழ்குழாய் கிணறுகளின் எண்ணிக்கை பெருகியுள்ளது. மாவட்ட அளவில் நீர்ப்பாசன பிரதேசங்களை கவனித்தோமானால் பெளகாவி மாவட்டம் முதலிடத்தைப் பெறுகிறது. குடகு மாவட்டம் மாநிலத்தில் இறுதி நிலையில் உள்ளது.

©KTBS Not to be republished

மாநிலத்தில் முக்கிய காலவாய் நீரப்பாசன திட்டங்கள் என்றால் கிருஷ்ணராஜ சாகர் நீர்த்தேக்கம், துங்கபத்திரா, ஹேமாவதி, கபினி, ஹாரங்கி, வாணிவிலாஸ் சாகர் (மாரிக் கணவாய்) கிருஷ்ணா மேற்கரை, ஆலமட்டி, நாராயணபுர, மலப்பிரபா, காரஞ்ஜி, பெண்ணெத் தொரெதிட்டம், ஹிப்பரகிபேரேஜ், பத்ரா திட்டம், முதலியன.

### நீர்மின்சக்தி (புனல் மின்சக்தி)

இந்தியாவிலேயே முதன் முதலில் நீர் மின்சக்தியை தயாரித்து வெற்றிக் கண்ட பெருமை கர்நாடகத்தையேச் சாரும். நிலக்கரி மற்றும் பெட்ரோலியம் கிடைக்கப் பெறாத நம்மாநிலத்தில் நீர் மின் சக்தி தயாரிக்க பெருமளவு வாய்ப்புகள் உள்ளன. நமது மாநிலம் முழுமைக்கும் தேவையான மின்சாரம் தயாரிக்க நதிகளும், பள்ளத்தாக்குகளும் உள்ளன. கிழக்கு நோக்கி பாயும் நதிகளை விட மேற்கு நோக்கிபாயும் நதிகளில் நீர்சக்தி திறன் அதிகமாக உள்ளது.

கோலாரின் தங்க சுரங்கத்திற்கு மின்சக்தியைக் கொண்டு செல்ல 1902ல் சிவன சமுத்திரத்தில் நீர்மின் சக்தி நிலையம் அமைக்கப்பட்டது. இது காவேரி நதியில் அமைக்கப்பட்ட ஒரு திட்டமாகும். இதற்கு அருகிலேயே மாநிலத்தில் இரண்டாவது நீர் மின்சக்தி திட்டத்தை 1940ல் சிம்ஷா நதியில் நீர் மின்சக்த நிலையம் அமைக்கப்பட்டது. அதிகமாக மின்சாரத்சேவையை அளிக்க சராவதி நதியில் ஜோக் நீர் வீழ்ச்சிக்கு அருகில் மகாத்மாகாந்திஜி நீர் மின்சக்தி திட்டம் (1947) தொடங்கப்பட்டது. பிறகு ஐந்தாண்டு திட்டங்களில் இன்னும் சில நீர் மின்சக்தி திட்டங்கள் முன்னேற்றமடைந்தன. இதன் பலனாக கர்நாடகம் நீர்மின்சக்தி உற்பத்தியில் இந்தியாவிலேயே முதன்மையாக உள்ளது.

***கர்நாடகத்தின் முக்கிய நீர்மின் சக்தி திட்டங்கள் :*** சிவன சமுத்திரம் சிம்ஷா (காவேரி நதி) சராவதி, லிங்கனமுக்கி, கேருசொப்பே மற்றும் மகாத்மா காந்திஜி நீர் மின் சக்தி மையம் (சராவதி நதி) ஸுப்ப, நாகஜரி, கத்ர மற்றும் கொடஸள்ளி (காளி நதி) வராஹி மற்றும் ஆலமட்டி (கிருஷ்ணா நதி) திட்டங்கள்.

### நதி நீர் பகிர்வு

இந்தியால் அனேக நதிகள் இரண்டு மூன்று மாநிலங்களில் பாய்ந்து செல்லுகின்றன. அவைகளின் நீரை பயன்படுத்துவதில் விவாதங்கள் தலையெடுக்கின்றன. அவைகளில் கர்நாடக மாநிலத்தின் காவேரி மற்றும் கிருஷ்ணா நதிகளின் நீருக்கான விவாதங்கள் சேர்ந்துள்ளன. காவேரி நதியின்

©KTBS Not to be republished

உரிமைக் கொண்டாடுவோர் கர்நாடகம், தமிழ்நாடு, கேரளம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் பாய்ந்து செல்கிறது. கர்நாடகம் மற்றும் தமிழ் நாடுகளின் இடையே, நீர் பகிர்வின் தொடர்பாக விவாதங்கள் நூற்றாண்டு பழமையானது. இன்றும் இதொரு சர்ச்சைக்குறிய விஷயமாக உள்ளது. கிருஷ்ண நதியும் வெவ்வேறு மாநிலங்களில் பாயும் நதியாக உள்ளது. மகாராஷ்டிரம், கர்நாடகா மற்றும் ஆந்திர பிரதேசங்களில் பாய்கிறது. இதுவும் மற்றொரு கர்நாடக நதி நீர் விவாதத்திற்கு இடமளித்துள்ளது.

### *நதி நீர் ஒற்றுமை*

இந்தியாவில் அனேக நதிகள் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களில் பாய்கின்றன. எ.டு. : காவேரி நதி கர்நாடகம், தமிழ்நாடு, கேரளம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் பாய்கிறது. கிருஷ்ணா நதி மகாராஷ்டிரா, கர்நாடகம் மற்றும் ஆந்திரபிரதேசத்தில் பாய்கின்றன.

## *பயிற்சிகள்*

I. ***விடுப்பட்ட இடங்களை சரியான சொற்களால் நிரப்புக.***

1. காவேரி நதி குடகு மாவட்டத்தின் ____________ என்னுமிடத்தில் உற்பத்தியாகிறது.
2. புகழ்வாய்ந்த ஜோக் நீர் வீழ்ச்சி ____________ நதியிலிருந்து உண்டாகிறது.
3. கிருஷ்ணராஜ சாகர நீர்த் தேக்கம் ____________ மாவட்டத்தில் உள்ளது.
4. கர்நாடகத்தில் முதன் முதலில் நீர் மின்சக்தி உற்பத்தி மையம் ____________.
5. ஆலமட்டி நீர்த் தேக்கம் ____________ நதியில் கட்டடப்பட்டுள்ளது.

II. ***கீழ்க்காணும் வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளி.***

1. கர்நாடகத்தின் முக்கிய நதிகளின் பெயர்களை எழுது.
2. கிருஷ்ணா நதியைப் பற்றி குறிப்பு எழுதுக.
3. காவேரி நதியின் உபநதிகள் யாவை ?
4. கர்நாடகத்தின் நீர்ப்பாசன வகைகள் யாவை ?
5. நம்முடைய மாநிலத்தின் முக்கிய நீர்மின் சக்தி உற்பத்தி நிலையங்கள் பெயர்களை எழுது ?

©KTBS Not to be republished

6. நதிகள் மாநிலங்களுக்கு இடையே எவ்வாறு ஒற்றுமையை உருவாக்குகின்றன.

## III. பொருத்தி எழுதுக.

| அ | ஆ |
|---|---|
| 1) லிங்கனமுகி நீர்த்தேக்கம் | அ) நீர் மின்சக்தி திட்டம் |
| 2) ககனசுக்கி, பரசுக்கி, நீர்வீழ்ச்சிகள் | ஆ) நதி |
| 3) வாணி விலாஸ் சாகர் | இ) காளி நதி |
| 4) நாகஜரி | ஈ) காவேரி நதி |
| 5) பென்னாறு | உ) சராவதி |
| | ஊ) மாரிக் கணவாய் |

## IV. செயல்பாடுகள் :

1. கர்நாடகத்திலுள்ள நதிகள் மற்றும் அவற்றின் உப நதிகளை பட்டியலிடு.
2. கர்நாடகத்தின் முக்கிய நீர்மின் சக்தி உற்பத்தி நிலையங்களை எழுதுக.

## IV. செயல்திட்டம் :

1. நம்முடைய மாநிலத்திலுள்ள நீர்த்தேக்கங்களை கர்நாடக வரைப்படத்தில் குறிக்கவும் மற்றும் பெயர்களை எழுதுக.
2. உங்கள் ஊருக்கு அருகிலுள்ள ஏரி, கால்வாய், குளம், நதி, கடல், அங்கு சென்றுபார்த்து அங்குள்ள அழகின் மகத்துவத்தைப் பற்றி விவாதிக்க.

*****

©KTBS Not to be republished

## அத்தியாயம் - 5

# கர்நாடகத்தின் நில அமைப்பு

**இந்த அத்தியாயத்தைக் கற்றயின் கீழ்க்காணும் அம்சங்களைப்பற்றி அறிகிறோம்**

- கர்நாடகத்தின் நிலத்தின் பயன்பாட்டுவிதங்கள்.
- வேளாண்மைக்கு முக்கியத்துவம் விதங்கள்
- கருநாடகத்தின் முக்கிய விளைப்பொருட்கள் மற்றும் உற்பத்தி

கர்நாடக மாநிலம் பூகோள அமைப்பின்படி வளமாக உள்ளது. அது பல்வேறு நில அமைப்புகளைக் கொண்டுள்ளது. மண், தாவரங்கள், தாதுவளம், நதி மற்றும் நிலத்தடி நீர்வளம் முதலியவற்றை உட்கொண்டுள்ளது. இவ்வறான அபூர்வமான இயற்கை வளங்களில் நிலம் அபூர்வமாணது. அதனைப் பயன்படுத்தி மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு உதவுக.

### நிலத்தின் பயன்பாடு

பூமியை (நிலம்) பல்வேறு உபயோகங்களுக்குப் பயன் படுத்துகிறோம் இதனை நிலப்பன்பாடு என்பார்கள். இதில் வளமான நிலம், காட்டுப் பிரதேசநிலம், தரிசு நிலம், சாலை, இரயில்மார்கம். அணைக்கட்டு, கால்வாய் போன்றவைகளின் கட்டமைப்பிற்கு நிலம் பயன் படுத்தப் படுகிறது. நிலத்தை சரியாகப் பயன்படுத்தினால் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடித்தளம் அமைத்தது போன்றாகும்.

கர்நாடக மாநிலத்தில் மொத்தம் 19.05 லட்சம் ஹெக்டேர் பூபிரதேசத்தைக் கொண்டுள்ளது. அதனை கீழ்க்காணும் முக்கிய நோக்கங்களுக்காக பயன் படுத்தப்படுகிறது.




**வெவ்வேறு நிலப்பயன்பாடு சதவீதத்தில்**

©KTBS Not to be republished

**1. சாகுபடிசெய்யும் மொத்த நிலம் :** மொத்தம் சாகுபடிக்கு பயன்படுத்தப்படும் நிலம், மாநிலத்தின் அனைத்து பாகங்களிலும் ஒரே விதமாக இல்லை. கலபுரகி மாவட்டம் மாநிலத்திலேயே மிக அதிகமாக சாகுபடி நிலத்தைக் கொண்டுள்ளது. அடுத்த இடங்களில் பெளகாவி, விஜயபுர, துமகூரு, ராயச்சூர், பாகல்கோட்டை, பள்ளாரி, சித்திரதுர்கா மற்றும் மைசூரு, மாவட்டங்கள் வருகின்றன. நாகரீகம் பெருமளவில் பெருகி வருவதால் பெங்களூரு மாவட்டம் மிகக் குறைந்த சாகுபடி நிலத்தைக் கொண்டுள்ளது..

**2. காட்டுப்பிரதேசம் :** வடகன்னடம் மாவட்டத்தில் அதிக காட்டுப்பிரதேசங்கள் உள்ளன. சிவமொக்கா, சாமராஜநகர், சிக்கமகளூரு, குடகு, பெளகாவி, தென் கன்னடம், உடுப்பி, பள்ளாரி மாவட்டங்களிலும் காட்டுப் பிரதேசங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. விஜயபுர மாவட்டம் மிகக் குறைந்தளவு காட்டுப்பிரதேசத்தைக் கொண்டுள்ளது. பெங்களூரு, பெங்களூரு கிராமபுறமாவட்டம், ராயச்சூர், பீதர் மற்றும் கதக் மாவட்டங்களிலும் குறைவு.

**3. சாகுபடிக்கு பயன்படாத நிலம் :** இது வேளாண்மைக்கு பதிலாக மற்ற பல வேலைகளுக்கு பயன் படுவதை உட்கொண்டுள்ளது. இரயில் மார்கம் சாலைகள் வீடு கட்டுதல், தொழிற்சாலை, நீர்ப்பாசனதிட்டங்கள். இவைகளில் முக்கியமானவைகள். தற்காலத்தில் அபிவிருத்திக்கு இம்மாதரியான நிலங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. பெங்களூரு நகரமாவட்டம் முதலிடத்தில் உள்ளது. சிவமொக்கா, துமகூரு, பள்ளாரி, பெளகாவி, மைசூரு, தென்கன்னடம் மாவட்டங்களிலும் அதிகமாக உள்ளது. ஆனால் இது பீதர் மாவட்டத்தில் மிகக் குறைவு. இது மற்ற மாவட்டங்களில் சாதாரண அளவிலுள்ளது.

**4. சாகுபடிசெய்யாத மற்ற நிலங்கள் :** இது நிலையான மேய்ச்சல் நிலம், மரங்கள் மற்றும் தோப்புகள் சேர்ந்து உள்ளன. சிவமொக்கா, துமகூரு, கோலார், சிக்கமகளூரு மற்றும் சித்திரதுர்க மாவட்டத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. கதக், பாகல்கோட்டை மற்றும் தாரவாட், மாவட்டங்களில் குறைந்த அல்லது இம்மாதரியான நிலத்தை சீர்செய்து வேளாண் உபயோகத்திற்கு பயன் படுத்துவார்கள்.

**5. பயரிடப்படாத நிலம் (தரிசு நிலம்) :** இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளைவிட அதிககாலம் தொடர்ச்சியாக சாகுபடி செய்யாத நிலத்தை தரிசு நிலம் என்பார்கள். கலபுரகி மாவட்டத்தில் அதிக தரிசு நிலங்கள் உள்ளன. ராயச்சூர் பெளகாவி, விஜயபுர, கொப்பல், துமகூரு மாவட்டங்கள் அடுத்த

©KTBS Not to be republished

இடத்தைப் பெறுகின்றன. தென் கன்னடம், சிக்கமகளூரு குடகு, மைசூரு, வடகன்னடம் மற்றும் உடுப்பி மாவட்டங்களில் தரிசு நிலம் குறைவாக இருந்தாலும், இங்கும் அதனுடைய பரப்பளவு அதிகம் உள்ளது. இம்மாதரியான நிலத்தை திருத்தியமைத்துக்கொள்ளும் வாய்ப்புள்ளது.

## வேளாண்மை

நிலத்தை உழுது விதைவிதைத்து விளைச்சலை விளைவிப்பதை வேளாண்மை என்பார்கள். அல்லாமல் கால்நடைவளர்த்தல், கோழிவளர்ப்பது, தேன் சேகரித்தல், மீன் வளர்த்தல் மற்றும் பட்டு விவசாயமும் வேளாண்மையைச் சேரும். கர்நாடகத்தில் **61.4** பாகம் அளவு மக்கள் கிராமப்பிரதேசங்களில் வசிப்பினால் அவர்கள் வேளாண்மையையே தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

***முக்கியத்துவம் :*** கர்நாடகத்தின் பழம் பெருந்தொழில்களில் வேளாண்மையும் ஒன்றாகும். இது முக்கிய வாழ்வாதாரமான தொழில். நமது மாநில பொருளாதாரத்தின் முதுகெலும்பு. பொருளாதாரத்தின் முன்னேற்றம் வேளாண்மையைச் சார்ந்து உள்ளது. வாழ்க்கையை நடத்த தொழிலை அளித்துள்ளது. மக்களுக்கு உணவையும், தொழிற் சாலைகளுக்கு மூலப்பொருட்களையும் அளிக்கிறது. மாநிலத்தின் வருவாய்க்கு ஆதாரமாக உள்ளது. அந்நிய செலாவணியை அளிக்கிறது. காபி, பட்டு, வாசனைப் பொருட்கள், புகையிலை, பருத்தி போன்றன ஏற்றுமதி செய்யப்படும் வேளாண் உற்பத்திப் பொருட்கள். மூன்றவது தொழில்களான சாலைப்போக்குவரத்து வங்கி பண லேவாதேவி, காப்பீடு முதலியவற்றின் முன்னேற்றத்திற்கு ஆதாரமாக உள்ளது. மாநிலத்தின் சமூகம் மற்றும் அரசியலில் முக்கிய அங்கம் வகிக்கிறது.

***வேளான் வகைகள் :*** கர்நாடக மாநிலத்தில் வேளாண்மையுடன் வளமை, நீர்ப்பாசனம், மழையளவு, தட்பவெப்பநிலை, நில அமைப்பு, சந்தைகள் இவைகளுக்கு ஏற்றவாறு வெவ்வேறு விளைப்பொருட்கள் விளைவிக்கப்படுகின்றன. இவற்றை அனுசரித்து வேளாண்மை வகைகளைப் பிரிக்கப்பட்டுள்ளன. வாழ்வாதாரமான வேளாண்மை, நீர்ப்பாசன வேளாண்மை, வறட்சி வேளாண்மை, கலப்பு வேளாண்மை, இடமாற்றும் வேளாண்மை, வணிக வேளாண்மை, தோட்ட வேளாண்மை முதலியன.

***கர்நாடக நிலப்பகுதியில் பெருமைமிக்க விளைப்பொருட்கள்***

| | |
|---|---|
| நஞ்சன்கூடு | : ரஸ்த்தாளி (வாழை) |
| பேடகி | : மிளகாய் |
| திப்தூரு | : தேங்காய் |
| மைசூரு | : வெற்றிலை |
| பெங்களூரு | : நீல திராட்சை |
| தேவனஹள்ளி | : சக்கோத்தா (சகோத்ரி) |
| ஈரநகர | : கத்தரிக்காய் |
| நிப்பாணி | : புகையிலை |

©KTBS Not to be republished

கால்வாய், ஏரி, கிணறு மூலங்களிலிருந்து நீரைப் பயன்படுத்தி சாகுபடி செய்யும் தொழிலுக்கு நீர்ப்பாசன வேளாண்மை என்பார்கள். நெல், கரும்பு, நீர்ப்பாசன விவசாயத்தில் முக்கிய விளைப்பொருட்கள். மழையை நம்பி செய்யப்படும் வேளாண்மை ஈர மற்ற அல்லது வறட்சி வேளாண்மை என்பார்கள்.

**உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும் :**
*நெல் பொயேசி புல் வகையான தாவரம், இதன் அறிவியல் பெயர் ஓரைசா சடைவா.*

பரந்துள்ள சாகுபடி செய்யும் நிலத்தில் பணம் சம்பாதிப்பதற்காக சில ஆண்டு விளைப்பொருட்களை சாகுபடி செய்வதே தோடபயிர்கள் வேளாண்மை (பிளான்டேஷன்) எ.டு : காபி, தேயிலை, ரப்பர், கோகோ, முதலியன. உள்நாட்டு பயன்பாட்டுக்கல்லாமல் அயல் நாட்டு சந்தைகளை கவனத்தில் கொண்டு செய்யும் வேளாண்மையே வணிகவேளாண்மை எ.டு : புகையிலை, பருத்தி, சணல் முதலியன. விவசாயிகள் தங்கள் வாழ்வாதரத்திற்காகவும், வணிகத்திற்குமல்லாமல், விளைச்சலை விளைவிக்கும் வேளாண்மை முறைக்கு வாழ்வாதார வேளாண்மை என்பார்கள். இது பழங்கால மாதரி வேளாண்மை.




தற்காலத்தில் கலப்பு வேளாண்மை பெரும்பாண்மையாக நடைபெற்று வருகிறது. விளைப் பொருட்கள் விளைவிப்பதுடன் அதனோடு கால் நடைகளை வளர்ப்பு கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு போன்ற துணைத்தொழில் நிர்வாகிப்பதை கலப்பு வேளாண்மை என்பார்கள்.

©KTBS Not to be republished

### கர்நாடகத்தின் முக்கிய விளைப்பொருட்கள்.

முதலில் விவரித்தைப் போன்று வேளாண்மையின் வேவ்வேறு வழிமுறைகளில் கர்நாடகத்தின் விளைப் பொருட்களில் வேறுபாடுகள் உள்ளன. இதற்கு வெவ்வேறு நில அமைப்புகள், தட்ப வெப்பநிலை, மண்ணின் வளம், நீர்ப்பாசன அளிப்பு, விவசாயிகளின் சம்பிரதாயங்கள் வேளாண் உற்பத்திக்காக உள்ள சந்தைகள் முதலானவ காரணமாகின்றன.




கர்நாடகத்தின் விளைப்பொருட்களை இவ்விதமாக வகைப்படுத்தலாம். உணவு விளைப் பொருட்கள். நெல், கேழ்வரகு, மக்காச்சோளம், சோளம், இருவிதை தானியங்கள் முதலியன வர்த்தக விளைப்பொருட்கள் பருத்தி, புகையிலை, கரும்பு, மல்பரி முதலியன. எண்ணெய் வித்துக்கள் நிலக்கடலை, எள், பேயெள், சூரியகாந்தி, முதலியன. தோட்டவிளைப்பொருட்கள் காபி, தேங்காய் பாக்கு, ரப்பர், வாழை முதலியன. இதுவல்லாமல் கர்நாடகத்தில் வேவ்வேறு தோட்டத்துறை மற்றும் பூ விளைச்சலும் கூட விளைவிக்கப்படுகிறது.

இதன்பிறகு கர்நாடகத்தின் முக்கிய விளைப் பொருட்கள் பற்றி விவரமாக அறிவோம்.

**உணவுப் பயிர்கள் :**

***1. நெல் :*** இது கர்நாடகத்தின் மிக முக்கியமான உணவுப்பயிர். மாநில மக்கள் அரிசியை முக்கிய உணவாக பயன்படுத்துகிறார்கள். மொத்த சாகுபடியில் 28.2 பாகத்தில் நெல் விளைவிக்கப்படுகிறது. நீர்ப்பாசனம், இரசாயன உரங்கள் மேலும்

©KTBS Not to be republished




அதிக விளைச்சலை அளிக்கும் கலப்பு இனம் (ஹைப்பிரீட்) பயன்பாட்டால் நெல் சாகுபடியில் தற்போது முன்னேற்றம் கண்டுள்ளது.

நெல் வெப்பமண்டல பயிர். இதனுடைய வேளாண்மைக்கு அதிக மழை மற்றும் வெப்பநிலை வேண்டும். மழைக் குறைவாக உள்ள பிரதேசங்களில் நீர்ப்பாசன வசதி அவசியம். நெல் விளைச்சலுக்கு சமதளமான நிலம் இருக்கவேண்டும். வளமான களிமண் கலந்து இருக்கவேண்டும். மேலும் வண்டல் இப்பயிருக்கு மிகவும் அவசியம். பசுந்தழை உரம், இலைகள், பெரும் எண்ணிக்கையில் தொழிலாளர்கள் கூட நெல் வேளாண்மைக்கு அவசியம். சுமார் 70% அளவு அறுவடை ஜுன் ஆகஸ்டு மாதங்களில் நட்டு நவம்பர் டிசம்பர் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. இதனை காரிப் விளைப்பொருள் என்பார்கள் கோடைக் காலத்தில் நீர்ப்பாசன வசதி கிடைக்கும் பிரதேசங்களில் நெல் விளைவிப்பார்கள் (பிப்ரவரி ஜுன்) இதனை ராபி பருவவிளைப்பொருள் என்பார்கள் நெல்லை மலை நட்டுப்பகுதிகளில் விதைக்கும் முறைகளிலும் மற்றும் சமவெளிகளில் நடும் முறைகளிலும் நெல் பயிரிடப்படுகிறது.

நெல் விலையும் பிரதேசங்கள் : நெல் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் விளைவிக்கப்படுகிறது.

கிருஷ்ணா துங்கபத்திரா பள்ளத்தாக்கு, காவேரிநதி பள்ளத்தாக்கு மேலும் கடற்கரை மாவட்டங்கள் நெல் உற்பத்திக்கு பெயர்பெற்றவை. ராயச்சூர் மாவட்டம் நெல் உற்பத்தியில் முன்னிலையில் உள்ளது. அதற்கடுத்து

©KTBS Not to be republished

தாவணகெரெ, மைசூரு, சிவமொக்கா, மன்டியா, கொப்பல் வடகன்னடம், கலபுரகி மாவட்டங்கள் முதன்மையானவைகள். மாநிலத்தின் மற்ற நெல் விளையும் முக்கிய பிரதேசங்களென்றால் : துமகூரு, ஹாசன், சிக்கமகளூரு, குடகு மற்றும் பெளகாவி மாவட்டங்கள் நீர்ப்பாசனங்களில் விளையும் நெல் சிறந்த குணம், மகசூல்அதிகமாகிறது.

**செயல்பாடுகள் :**
உங்கள் மாவட்டத்தில் விளையும் உணவுப் பயிர்கள் மற்றும் வணிகப் பயிர்களைப் பட்டியலிடவும்.

**2. சோளம் :** நெல்லுக்கு அடுத்து சோளம் கர்நாடகத்தின் இரண்டாவது விளைச்சலாகும். முதன் முதலில் நெல்விளையும் பிரதேசங்களை விட சோளம் விளையும் பகுதிகள் அதிகமாக இருந்தது. தற்போது சோளம் விளையும் பிரதேசம் குறைந்துள்ளது. மொத்தம் சாகுபடியாகும் நிலத்தில் 26% பாகம் சோளத்தின் விளைச்சலுக்கு பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவிலேயே கர்நாடகத்தில் சோளம் விளைச்சலில் இரண்டாம் இடத்திலுள்ளது. மகாராஷ்டிரம் முதலிடத்திலுள்ளது.

சோளம் வடகர்நாடக மக்களின் உணவு தானியமாகும். இதனை அதிகமாக ரொட்டி தயாரிக்க பயன்படுத்துகிறார்கள். சோளத்தட்டை கால் நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்துகிறார்கள். தெற்கு கர்நாடகத்தில் சோளத்தை கால்நடைகளுக்கு தீவனமாக அளிக்கிறார்கள். தென் கர்நாடகத்தில் சோளத்தை தீவனத்திற்காக மட்டுமே விளைவிக்கிறார்கள்.

இதுவும் கூட புல் இனத்தைச் சேர்ந்த ஒரு தாவர வகை. இதனை அறிவியல் பூர்வமாக பொர்காம் வள்கர் என்று அழைக்கிறார்கள். இது வெப்ப மண்டலத்தில் விளையும் விளைச் சலாகும். இதனைப்பயிரிட சாதாரண மழை, வறண்ட காற்று, கலப்பு மண் இருந்தால் போதுமானது. இதை விதைக்கும் விதானம் மழையை நம்பி விளைவிக்கப்படுகிறது.

***விளையும் பிரதேசங்கள் :*** தெற்கு கர்நாடகத்தின் சில மாவட்டங்களைத் தவிர்த்து மற்றெல்லா மாவட்டங்களிலும் விளைகிறது. விஜயபுர, கலபுரகி, பாகல்கோட்டை, ராயச்சூர், பெளகாவி, பீதர், பள்ளாரி, தாவணகெரெ, கொப்பல் மற்றும் கதக் மாவட்டங்களில் சோளத்தின் வேளாண்மை அதிகமாக உள்ளது. கலபுரகி மாவட்டம் சோள உற்பத்தியில் மாநிலத்திலேயே முதல் இடத்தை வகிக்கிறது. சித்ரதுர்கா, சிவமொக்கா, சாமராஜநகர், ஹாஸன், துமகூரு மற்றும் மண்டியா மாவட்டங்களிலும் சிறிதளவு சோளத்தை விளைவிக்கிறார்கள்.

©KTBS Not to be republished

***3. கேழ்வரகு :*** *இது நல்ல சத்துக்களைக் கொண்ட உணவு தானியமாகும். இதனுடைய அறிவியல் பெயர் யெலியுஸின் கொரகான. கேழ்வரகிலிருந்து களி, கஞ்சி, ரொட்டி, மாவுமால்ட் தோசை போன்ற உணவுப்பண்டங்களை தயாரித்துப் பயன் படுத்துகிறார்கள். கர்நாடகத்தில் நெல் மற்றும் சோளத்திற்கு அடுத்து முன்றாவது முக்கிய உணவு தானியமாகும். எளிய விலைக்குக்கிடைக்கிறது. வெகு காலம் சேர்த்துவைக்கக்கூடிய தானியமாகும். ராகிபுல் கால் நடைகளுக்கு தீவனமாக அளிக்கப்படுகிறது.*

*இது வெப்பமண்டலத்தில் விளையும், அதிக வெப்பம், சாதாரண மழை, செம்மண், வண்டல் கலப்பு மண் சிறப்பானது. வறட்சி காலங்களிலும் விளையக்கூடியது. சில இடங்களில் நீர்ப்பாசனதிலும் கேழ்வரகை விளைவிக்கிறார்கள். கேழ்வரகை நடுவதற்கு, களை எடுப்பதற்கு, கொய்வதற்கு, ஒன்று கூட்ட முதலியவைகளுக்கு தொழிலாளர் எண்ணிக்கை, அதிகமாக வேண்டும். இது முக்கியமாக தென்மேற்கு பருவ மழைகாலத்தில் விளையும் பயிர். கோடைக் காலத்திலும் இதனை நீர்ப்பாசனத்தின் உதவியுடன் விளைவிக்கப்படுகிறது.*

***விளையும் பிரதேசங்கள் :*** *கேழ்வரகு உற்பத்தியில் இந்தியாவிலேயே கர்நாடகம் முதலிடத்திலுள்ளது. கேழ்வரகு பயன்பாடு தற்போது குறைந்து வருகிறது. இதன் பலனாக கேழ்வரகு விளையும் பகுதிகள் குறைந்து விட்டன. மொத்தமுள்ள சாகுபடி நிலத்தில் 14% பாகம் கேழ்வரகு விளைவிக்கபடுகிறது. தெற்கு சமவெளிப்பிரதேச மாவட்டங்களில் கேழ்வரகு விளைவிக்கும் பிரதேசங்கள் மையமாக உள்ளன . இது பழைய மைசூரு பிராந்தியத்தில் சாம்பிரதாய பயிர். வடகர்நாடகத்தில் கேழ்வரகு முதன்மையானது. கர்நாடகத்தில் துமகூரு மிக அதிகமாக கேழ்வரகு விளைவித்தல் மற்றும் உற்பத்தியில் முதன்மை மாவட்டம். அடுத்த இடங்களில் ராமநகர, ஹாசன், மன்டியா பெங்களூரு கிராமப்பகுதி, கோலார், சிக்கபள்ளாப்பூர், சிவமொக்கா, சிக்கமகளூரு மற்றும் தாவணகெரெ மாவட்டங்கள் கேழ்வரகு விளைச்சலுக்கு புகழ்பெற்றவை.*

***வார்த்தக விளைப்பொருட்கள்***

***1. கரும்பு :*** *இது கர்நாடகத்தின் முக்கிய வாணிக மேலும் தொழிற்பயிராகும். கர்நாடகம் கரும்பு உற்பத்தியில் இந்திய அளவில் நான்காவது இடத்திலுள்ள மாநிலமாகும், இது வெப்பமண்டலப்பயிர். அதிகவெப்பம் மற்றும் அதிக மழை*

©KTBS Not to be republished

பெய்யும் அல்லது நீர்ப்பாசன வசதியுள்ள பகுதிகளில் விளைகிறது. கரும்பு வேளாண்மைக்கு மணல் கலந்த வண்டல் மண், செம்மண் உத்தமமானது. கரும்பை வெட்டிய உடனே பயன்படுத்த தொழிற்சாலைகளுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் சரியான சாலை வசதி அமைந்திருக்க வேண்டும்.

இதுவும் புல் இனத்தைச் சேர்ந்த ஒரு தாவரம். இது சுமார் மூன்று மீட்டர் உயரம் வளரும் தன்மையுடையது. இதனுடைய அறிவியல் பெயர் சக்யாரம் அபிஸிநேரம், இதில் சர்க்கரை அம்சமிருந்து, வெல்லம், சர்க்கரை தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. இது பல ஆண்டு பயிராக இருப்பதினால் நீர்ப்பாசன வசதி அவசியமானது.

***விளையும் பிரதேசங்கள் :*** பெளகாவி மாநிலத்திலேயே அதிக அளவில் கரும்பு உற்பத்தி செய்யும் மாவட்டமாகும். ஆலமட்டி திட்டத்தினால் நீர்ப்பாசன வசதி பெற்றுள்ள பாகல் கோட்டை இரண்டாமிடதில் உள்ளது. மன்டியா, மைசூரு , விஜயபுர, பள்ளாரி, சிவமொக்கா, தாவணகெரெ, ஹாஸன், கொப்பல், ஹாவேரி இவை கரும்பு விளைவிக்கும் மற்ற மாவட்டங்கள். நாட்டின் விடுதலைக்கு முன் பிருந்தே கரும்பு விளைச்சலில் மன்டியா மாவட்டம் பெயர்பெற்றிருந்தது.

***2. பருத்தி :*** பருத்தி ஒரு நார் பயிர், பருத்திநெசவுத்தொழிலுக்கு மூலப்பொருளாகும். இதனை ஜமக்காளம், கயிறு, படுக்கை தலையணை தயாரிப்புக்கும் பயன் படுத்தப்படுகிறது.

இது வெப்பமண்டலம் மற்றும் மித வெப்பமண்டலங்களில் விளையும் வணிக விளைச்சல். சாதாரண மழை. அதிகவெப்பளவு, மேலும் கருப்புமண் பருத்தி விளைவதற்கு ஏற்றது. நமது மாநிலத்தில் பன்னெடுங்காலமாக பருத்தியின் பயன்பாடு வழக்கத்திலிருந்து வந்துள்ளது. நீண்ட, நடுத்தர மற்றும் குட்டை இழை பருத்திகள் என பலவகைகள் உள்ளன. ஆனால் கர்நாடகத்தில் அதிகமாக நடுத்தர இழை, குட்டை இழைப்பருத்தி விளைவிக்கிறார்கள். பருத்தியை கர்நாடகத்தில் ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நடுவதற்குத் தொடங்குகிறார்கள். இதனை மழைக்காலத்தில் பயிரிடுவதே அதிகம். நீர்ப்பாசனத்தின் உதவியுடன் பருத்தி விளைவிக்கப்படுகிறது.

***விளையும் பிரதேசங்கள் :*** மாநிலத்தில் பருத்தி உற்பத்திசெய்யும் முதன்மை மாவட்டங்களென்றால் : ஹாவேரி, தார்வாட், கதக், மைசூரு, பள்ளாரி, ராயச்சூர், கலபுரகி, பெளகாவி, தாவணகெரெ, சித்திரதுர்க, கொப்பல் மற்றும் விஜயபுர. இவைகளில் ஹாவேரி மாவட்டம் பருத்திஉற்பத்தியில் மாநிலத்திலேயே முதல் இடத்தில் உள்ளது. தார்வாட மாவட்டம் இரண்டாம் இடத்திலுள்ளது.

©KTBS Not to be republished

பருத்தி வேளாண்மையில் பூச்சிகள் மற்றும் நோய்கள் கட்டுப்படுத்துவது பெரிய பிரச்சனையாக உள்ளது. நோயைக் கட்டுப்படுத்த மற்றும் உயர் ரக கலப்பின பருத்தியை மகசூல் செய்வதற்கு வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் (Agricultural Research Institute) ஆராய்ச்சி செய்து வருகிறது. தற்காலத்தில் பருத்தி உற்பத்தியில் அதிக மகசூல் பெற்று வருவதை நாம் கண்டு வருகிறோம்.

**3. புகைகயிலை** (Tobacco) **:** இது நிக்கோட்டின் பிரிவைச் சேர்ந்தது. இதில் நிக்கோட்டின் என்னும் போதையூட்டும் பொருள் உள்ளது. புகையிலையை புகைபிடிக்க என்றால் பீடி, சிக்ரெட், சிகார் மற்றும் முக்குத்தூள், போன்றவைகள் தயாரிப்பில் பயன் படுத்தப்படுகிறது. போர்ச்சுகீசியர் 17 ஆம் நூற்றாண்டில் புகையிலையை இந்தியாவில் அறிமுகப் படுத்தினர். பிறகு கர்நாடகத்தில் பயிரிடத் தொடங்கினர். தற்போழுது கர்நாடகத்தின் முதன்மையான வாணிகவிளைப் பொருட்களில் ஒன்றாக உள்ளது. இதனை சாதாரணமான மழை மற்றும் அதிக வெப்பமுள்ள மணற் கலப்பு மண்ணுள்ள பிரதேசத்தில் விளைவிக்கிறார்கள்.

கர்நாடகத்தில் வர்ஜீனியா, பீடி புகைஇலை மற்றும் மெல்லக் கூடிய புகையிலையை விளைவிக்கிறார்கள். வர்ஜீனியா புகையிலை உத்தமமான வகுப்பைச் சேர்ந்தது. அது அனைத்துலக மட்டத்தில் தேவை அதிகமுள்ளது. இதனால் அன்னிய செலாவணி பெற மற்றும் உள்நாட்டு பொருட்கள் மீது போடப்படும் தீர்வையினால் மாநில கருவூலத்திற்கு தேவையான அளவு வருமானம் கிடக்கிறது.

**விளையும் பிரதேசங்கள் :** கர்நாடகம் இந்தியாவில் முக்கிய புகையிலை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் நானகாவது இடத்தில் உள்ளது. மைசூரு மாவட்டம் புகையிலை உற்பத்தியில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. ஹாசன், சிவமொக்கா, குடகு, பெளகாவி, பல்லாரி, சித்திரதுர்கா, ராயச்சூரு, தாவணகெரெ, துமுகூரு, கதக் மாவட்டங்களிலும் புகையிலை வேளாண்மை செய்யப்படுகிறது. பெளகாவி மாவட்டத்தின் நிப்பாணி நாட்டிலேயே பீடி புகையிலையை உற்பத்தி செய்து, உலகசந்தையில் புகழ்பெற்றுள்ளது. கர்நாடகத்தில் விளையும் புகையிலை அன்னிய செலாவணியை அதிகளவில் ஈட்டிக் தருகிறது. வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகிறது.

**செயல்பாடு :**
பள்ளிக்கு விவசாயிகளை வரவழைத்து அவர்கள் விளைவிக்கும் முறை மற்றும் விற்பனைப்பற்றி விவாதம் நடத்தவும்.

**4. காபி (Coffee) :** காபியும் கர்நாடகத்தின் புகழ் பெற்ற தோட்டப்பயிர் மற்றும் பானப் பயிர் **(beverage)** கருநாடகம் இந்தியாவில் காபி

©KTBS Not to be republished

உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது. கி.பி. 1670ல் பாபாபுடன் என்னும் இஸ்லாமியதுறவி சிக்கமகளூரின் மலைத்தொடரில் காபி செடிகளை வளர்த்தார். அதனால் அம்மலைகளை பாபாபுடன்கிரி என்பார்கள். ஆனால் அதிகாரப்பூர்வமாக வேளாண்மை 1826ல் ஆங்கிலேயர் ஆட்சியில் ஆரம்பமாயிற்று. இன்று கர்நாடகத்தில பரந்த இடத்தில் காபி தோட்டங்கள் காணப்படுகின்றன.

கர்நாடகம் அரெபிக்க மேலும் ரூபுஸ்ட் என்னும் இரண்டு வகையான காபியை உற்பத்தி செய்கிறது. இதில் அரெபிகா சிறந்துவிளங்கி உலக சந்தையில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. காபி உற்பத்தி அதிகமழைப்பொழியும் மலைகளின் சரிவுகளில் விளையும் பயிராகும்.

களிமண்கலப்பு மண் இந்த பயிருக்கு சிறப்பானது. காபி செடிக்கு சூரியனின் நேரான கதிர்கள் விழாமல் நிழல்தரும் மரங்களை வளர்க்க வேண்டும். மழைநீர் பாய்ந்து செல்லுமாறு இருக்கவேண்டும். இவ்வேல்லா அம்சங்களையும் கொண்டுள்ள கர்நாடகத்தின் மலைநாட்டில் காபி விளைந்து வருகிறது.

**காபி விளையும் இடங்கள் :** நாட்டின் காபி உற்பத்தியில் 70% பாகம் கர்நாடகத்தில் உற்பதியாகிறது. குடகு மாவட்டம் காபி உற்பத்தியில் முதலிடத்தை வகிக்கிறது. சிக்கமகளூரு ஹாசன் முக்கியானவை. சிவமொக்கா, சாமராஜநகரம் மற்றும் தென் கன்னட மாவட்டங்களில் சிறிதளவு காபி பயிரிடப் படுகிறது.

> **செயல்பாடு :**
> உயிரியல் வேளாண்மைப் பற்றி அதிக விவரங்களை சேகரிக்கவும்.

கர்நாடகத்தில் விளையும் காபி நல்லதரமானது. சுவையும் மணமும் உடையது,மேலும் உற்சாகத்தையும் அளிக்க வல்லது என்று பெயர் பெற்றுள்ளது. இதனால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் காபி உலகசந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இதனால் கர்நாடகம் காபியின் நாடு என்றே புகழப் பெற்றுள்ளது.

### பயிற்சிகள்

**I. விடுப்பட்ட இடங்களை சரியான சொற்களால் நிரப்புக.**

1) நிலத்தை வெவ்வேறு நோக்கங்களுக்கு பயன் படுத்துவதை ______________ என்பார்கள்.

2) மிக அதிகளவில் சாகுபடிபூமியை ______________ மாவட்டம் பெற்றுள்ளது.

©KTBS Not to be republished

3) சொர்காம்வலகர் என்பது ____________ பயிரின் அறிவியல் பெயராகும்.

4) கர்நாடகத்தில் மிக அதிகளவில் கரும்பு விளைவிக்கும் மாவட்டம் ____________

5) புகையிலையில் ____________ என்னும் போதைப் பொருள் உள்ளது.

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.**

1) கர்நாடகத்தின் நிலப் பயன் பாட்டின் மாதிரிகளைக் கூறுக.

2) கர்நாடகத்தின் வேளாண்மையின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதுக.

3) நீர்ப்பாசன வேளாண்மை என்றால் என்ன ?

4) கலப்பு வேளாண்மை என்றால் என்ன ? அதன் முக்கிய பண்புகளைக் கூறுக.

5) கேழ்வரகின் உபயோகங்களைக் கூறுக.

**III. பொருத்தி எழுதுக.**

| | அ | | ஆ |
|---|---|---|---|
| 1) | காபி | அ) | வர்த்தக பயிர் |
| 2) | பருத்தி | ஆ) | கலப்பு வேளாண்மை |
| 3) | கரும்பு | இ) | புகையிலை |
| 4) | நிப்பாணி | ஈ) | நார்ப் பயிர் |
| 5) | ஆடுவளர்த்தல் | உ) | தோட்டப்பயிர் |

**IV. செயல்பாடுகள் :**

1) கர்நாடகத்தில் விளையும் வெவ்வேறு உணவு மற்றும் இருவிதை தானியங்களை சேகரியுங்கள்.

2) சோளம், கேழ்வரகு, மற்றும் இதர பயர்கள் விளையும் பிரதேசங்களை கருநாடக வரைப்படத்தில் குறியுங்கள்.

**V. செயல்திட்டம்**

1) நிங்கள் வசிக்கும் சுற்று முற்றுப் பகுதிகளில் சாகுபடியாகும் விளைப் பொருட்களைக் குறித்து குறிப்பு எழுதுவது. தொடர்பான படங்களை சேகரித்தல்.



*****

©KTBS Not to be republished

# பொருளாதாரம்
## அத்தியாயம் - 1
## இயற்கை செல்வ வளங்கள்

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிகிறோம்.**

- வளங்களின் குறைபாடு
- வளங்களின் பாதுகாப்பின் மகத்துவம்
- நம்முடைய சுற்றுச் சூழல் பெருகிவருவதை குறைக்கும் வழி முறைகள்

அனைவரின் விருப்பங்களை ஈடேற்ற இப்பூமியில் அனைத்தும் உள்ளது. ஆனால் பேராசைகளால் அல்ல - மகாத்மா காந்தியடிகள்.

இதற்கு முன் நீங்கள் நம்முடைய விருப்பங்கள் முடிவில்லாதது அவற்றை தீர்த்துவைக்க உள்ள வளங்கள் குறைவாக உள்ளன. இக்குறைபாடே பிரச்சனைகளுக்கு காரணமாகிறது என்பதை அறிந்து கொண்டுள்ளீர்கள். வளங்கள் என்பது ஒரு பரந்த பொருளுள்ள பதமாக உள்ளது; மனிதர்கள் தாங்கள் கைகொள்ளும் அனைத்து பொருளாதார செயல்பாடுகளான உற்பத்தி வினியோகம், மற்றும் அனுபோகங்களில் பயன்படுத்தும் அனைத்துப் பொருட்களையும் குறிப்பிடுகிறது. வெவ்வேறு வளங்களில் இயற்கை வளங்கள் மனிதனின் பயன்பாட்டுக்கு கிடைக்கக் கூடிய மிக அதிகளவில் முதன்மையானவைகளாக உள்ளன. நீங்கள் இயற்கையின் கொடைகளாக உள்ளவைகள் இல்லாமல் மனிதன் வாழ்வது சாத்தியம் இல்லை. சூரிய சக்தி, நீர், காற்று, காடுகள், மண், பலவிதமான உயிர்வாழ்விகள், தாதுக்கள் போன்றவைகள் மனித வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானவைகளாகும். ஆனால் உலகளவில் மக்கள் தொகை ஏழுநூறு கோடிகளையும் கடந்து பெருக்கமடைந்திருப்பதால் பெரும்பாலான மக்களுக்கு குறைந்தளவிலான தேவைகளை நிறைவேற்ற முடியாது நிலை ஏற்படும். இவ்வத்தியாயத்தில் நீங்கள் வளங்களின் குறைபாடு சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் நம்முடைய சுற்றுச்சூழலில் அதிக அடையாளங்களின் அளவு குறைந்ததைக் குறித்து ஆய்வு செய்ய உள்ளீர்கள்.

**செல்வ வளங்களின் பொருள் மற்றும் வகைகள் :**

இயற்கையாக கிடைக்கவுள்ள உருவத்திலேயே மதிப்பீடுதல் என்று கணக்கெடுத்துக் கொள்ளும் பொருட்களை இயற்கை வளங்கள் என்று அழைக்கப்படுகிறது. அவ்வாறே உணவுப் பொருட்கள் விளைய தேவையான மண், நம்முடைய பல்வேறு வகையான செயல்களுக்கு அடிப்படையாக உள்ளது நீர் பல சேவைகளை அளித்து, மரம், செடி, கொடிகள் உயிர்கள் சுவாசிக்கக் காற்றை

©KTBS Not to be republished

அளிக்கிறது நம்முடைய பல்வேறு உற்பத்திகளுக்கு மூலப்பொருட்களான தாதுக்கள் மற்றெல்லாவற்றையும் நாம் செல்வ வளங்களென்று அழைக்கிறோம். இவைகள் இல்லையென்லால் நம்முடைய வாழ்க்கை இவ்வளவு இனிமையாகவும் வசதியாகவும் இருப்பதில்லை.

இயற்கை செல்வ வளங்களை பொதுவாக திரும்பப் பெறும் வளங்கள் மற்றும் தீர்ந்து போகும் வளங்கள் என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவைகளைப் பற்றி தற்போது அறியலாம்.

### தீர்ந்து போகா அல்லது திரும்ப திரும்பப் பெறும் வளங்களைக் கொண்டுள்ள வளங்கள் :

சில இயற்கை செல்வ வளங்களை நாம் பயன்படுத்திக் கொண்டே சென்றாலும் அவை மறுபடியும் தம்முடைய மூல வடிவைப் பெற்றுக் கொண்டு நிரந்தரமாக நம்முடைய பயன்பாட்டுக்கு கிடைக்கின்றன. இம்மாதிரியான செல்வ வளங்களை புதுப்பித்தல் அல்லது புனருத்துவத்தைப் பெற்றுள்ளன அல்லது வற்றாத செல்வ வளங்கள் என்று அழைக்கின்றோம். இவற்றை நாம் பயன்படுத்திக் கொண்டே சென்றாலும் இயற்கை நிலை தன்னுடைய இயற்கை செயல்மூலம் அவற்றை நிறைந்து கொடுக்கும். நீர், பூமி, காடுகள் , காற்று, சூரிய வெப்பம் போன்றன முடிவற்ற செல்வ வளங்கள் ஆகும்.

### தீர்ந்து போகும் அல்லது வற்றிப் போகும் செல்வ வளங்கள் :

சில இயற்கை செல்வ வளங்கள் நாம் பயன்படுத்திக் கொண்டே சென்றால் முறையாக படிப்படியாக குறைந்து கொண்டே இறுதியில் இல்லாமலாகிவிடும். அல்லது வற்றிவிடும் தண்மையைக் கொண்டிருக்கும் அவற்றை உருவாக்கவது முடியாத செயலாகும். இம்மாதிரியான செல்வ வளங்களை தீர்ந்து போகும் அல்லது வற்றும் செல்வ வளங்கள் என்கிறோம்.

இரும்புத்தாது, செம்பு, பொன், மங்கனீசு, பாக்ஸைட் போன்ற கனிம வளங்கள், நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை அமிலம், யூரேனியம், தோரியம் போன்ற எரிபொருட்கள் பயன்படுத்திக் கொண்டே சென்றால் தீர்ந்து போகும். இவற்றை இயற்கை தன்னுடைய செயல் மூலம் மறுபடியும் நிறைவு செய்ய சாத்தியமில்லாததினால் இவற்றை புதுப்பிக்க இயலாத செல்வ வளங்கள் என்று அழைக்கிறோம்.

செல்வ வளங்களை உயிர் மற்றும் உயிரற்ற செல்வ வளங்கள் என்றும் பிரிக்கலாம். உயிரிகளால் பெறப்படும் செல்வ வளங்களை உயிர் செல்வ வளங்கள் என்றும், உயிரற்ற பொருட்களால் பெறக்கூடிய செல்வ வளங்களை உயிரற்ற செல்வ வளங்கள் எனப் பிரிக்கலாம். தாவரங்கள் மற்றும் பிராணிகள் (விலங்குகள்)

©KTBS Not to be republished

உயிருள்ள செல்வ வளங்களான நீர், மண், தாதுப் பொருட்கள் போன்றன உயிரற்றப் செல்வ வளங்களாகும்.

**2. செல்வ வளங்களின் பற்றாக்குறை :**

நம்முடைய அனைத்து அடிப்படைத் தேவைகளான உணவு, இருப்பிடம், உடை போன்றவைகளை வெவ்வேறு இயற்கை செல்வ வளங்களான காற்று, நீர், மண், கனிம பொருட்கள், நிலக்கரி,பெட்ரோலியம், விலங்குள் மற்றும் தாவரக் குழுக்கள் முதலியவைகளால் நிறைவேற்றிக் கொள்கிறோம். ஆனால் இன்னும் எவ்வளவு நாட்கள் வரை விலை மதிக்க முடியாத அரிய செல்வ வளங்கள் நமமுடைய பயன்பாட்டுக்குக் கிடைக்கும் என கூற இயலாது. ஏற்ற இறக்கங்களிலுள்ள மக்கள் தொகையல்லாமல் தீவிரமடைந்து வரும் வேலை வாய்ப்பின்மை மேலும் நகரமையமாக்கல் செல்வ வளங்களின் தேவை வானுயரத்துக்கு பெருகியுள்ளது. அதிலும் எப்பொழுதும் மனிதனின் விருப்பங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் செல்வ வளங்கள் மிகவும் குறைவான அளவில் உள்ளன.

தீர்ந்து போகக்கூடிய செல்வ வளங்களை குறிப்பிட்ட அளவில் கிடைக்கப்பெற்று பயன்பாடு அதிகரித்தால் அவற்றின் அளவு சுருங்கிக் கொண்டே போகும். மறு தேவைக்குக் கிடைக்கும் செல்வ வளங்கள் அவற்றில் கிடைக்கப் பெறும் அளவுக்கு தகுந்தவாறு தீவிரமாக அவற்றைப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறைபாட்டை அதிகரிக்கக்கூடிய முக்கிய அம்சங்களென்றால்,

**அ. அளவுக்குதிகமான மக்கள் தொகை :**

அளவிட முடியாத அளவில் அதிகரித்து வரும் மக்கள் தொக்கு உணவு மற்றும் இருப்பிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளை அளிக்க பெருமளவில் நிலம் வேண்டும். இதனால் காடுகளை வேளாண் நிலங்களாகவும், வேளான் நிலங்களை இருப்பிடம், வணிகம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நிலத்தை மாற்றியமைத்து நிறைவேற்றிக் கொள்கிறோம்.

**ஆ. பெருகி வரும் தொழிற்சாலைகள் :**

தொழில்கள் பெருகப் பெருக தாதுவளங்கள், கச்சா எண்ணெய் மற்றும் நீரை உறிஞ்சி வெளிக் கொணர்வது அதிகரித்து பல்வேறு சுரங்கங்கள், எண்ணெய் பிரிவுகள் மற்றும் நீரின் மூலங்கள் வற்றி விட்டன.

**இ. பரவி வரும் நகரப் பகுதிகள் :**

ஒரு குறிப்பிட்ட நிலப் பிரதேசத்தில் மிக அதிகளவில் மக்கள் வசித்து வரும் நிலையை நாம் நகரப் பிரதேசம் என்கிறோம். அப்பிரதேசத்தில் சாதாரணமாக

©KTBS Not to be republished

செல்வ வளங்கள் பயன்பாடு மற்றும் கழிவுகளின் உற்பத்தியளவு அதிகமாகிருக்கும். இது செல்வ வளங்களின் அளவு குண இயல்புகள் இரண்டையம் குறைத்து விடுகிறது. நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர்கள் தொலைவிலிருந்து நீரைப் பெற்று, அத்தூய்மையான நீரினை குடும்பங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் பயன்படுத்தி அதனை அசுத்த நீராக மாற்றும் சங்கடங்களை பயன்படுத்திக் கொண்டு நகரமயம் ஆதலின் பரிணாமங்களை புரிந்து கொள்ள வேண்டியதாகிறது.

**இ. காற்று மாசடைதல் :**

பயன்பாட்டில் மிகுந்த எரிப்பொருட்களான நிலக்கரி, டீசல், மற்றும் பெட்ரோல் இவைகளை எரிப்பதால் அபாயத்தை உண்டாக்கும் அம்சங்களான கார்பன்டை ஆக்ஸைடு, ஹைட்ரஜன் சல்பைடு, புகை, தூசுகளை மாசடையச் செய்கின்றன. இதனால் தூய்மையான காற்று கிடைப்பது குறைந்து வருகிறது.

உணவு மற்றம் வேளாண்மை குழும் ஆய்வு அறிக்கையின்படி, நகரங்களை சுற்றியுள்ள எல்லா வகையான காடுகள், வேளாண்மை மற்றும் தொழிற் சாலை நிலங்களை ஒவ்வொரு நூறுக்கு 50க்கம் அதிகமான பாகம் மாற்றமடைந்து, கடந்த பத்தாண்டுகளில் சுமார் 130 மில்லியன் ஹெக்டேர்கள் அளவு காடுகள் நாசமடைந்துள்ளன. (உலக காடுகள் நிலை 2012, எப்.ஏ.ஒ)

**ஈ. நீர் மாசடைதல் மற்றும் நிலம் வளம் குறைதல் (அரிப்பு):**

மனிதர்கள், மருத்துவ நிலையங்கள் தொழில் நிறுவனங்கள் மேலும் இவற்றின் கழிவுகளை வெட்ட வெளியில் கொட்டுவதினால் அங்குள்ள நிலம் மற்றும் நீரின் பயன்பாடு குறைந்து விடுகிறது. வேளாண்மை மற்றும் குடும்பங்களின் செயல்பாடுகளால் அங்குள்ள நீரும் கூட மாசடைந்துவிடுகிறது. இவற்றின் காரணங்களினால் நிலம் தன்னுடைய வளம் குறைந்து உற்பத்தியில் நட்டம் ஏற்படுகிறது.

இவ்வாறு பெருகி வரும் மக்கள் தொகையாலும் அவர்களின் செயல்பாடுகளினால் செல்வ வளங்களில் குறைபாடுகள் அதிகரித்து அவற்றின் குண அளவு நட்டத்திற்குக் காரணமாக அமைகிறது.

ஆனால் இக்குறைபாட்டைக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயல்களை கடைப்பிடிப்பதால் தடை செய்யலாம்.

அ. செல்வ வளங்களின் புதிய வளங்கள் ஆய்வு மற்றும் கண்டுபிடிப்பு

ஆ. இடைவிடா மற்றும் மாற்றுப் பொருட்களை கண்டுபிடித்தல்

(எ.கா. நிலக்கரியை ஆதாரமாகக் கொண்ட எரிப்பொருட்களுக்கு மாற்றாக சூரிய மற்றும் காற்று சக்தி, டீசலுக்கு மாற்றாக எத்தினால், மர சாமன்களுக்கு மாற்றாக பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துதல் போன்றன)

©KTBS Not to be republished

இ. செல்வ வளங்களின் திறன் பாயன்பாடுகளை அதிகரிப்பது (எ.கா. 2 ஸ்ட்ரோக் இஞ்சினுக்க பதிலாக

4 ஸ்ட்ரோக் இஞ்சின்களை பயன்படுத்தி குறைந்த எரிசக்தியை / எண்ணெயை பயன்படுத்துகிறோம்.)

ஈ. செல்வ வளங்களின் பெரும்பயன்பாட்டைத் தடுக்க மாசுடைதலைக் கட்டுப்படுத்த அரசின் விதிகளை பின்பற்றுதல்.

உ. அன்றாட செயல்பாடுகளில் செல்வ வளங்களைக் காத்து மாசடைவதை தடுக்கும் செயல்களை பழக்கப்படுத்திக் கொளவதினால் மக்களை எச்சரிக்கை செய்வதாகும்.

### 3. செல்வ வளங்களை காப்பது.

செல்வ வளங்களின் பயன்பாட்டில் தீவிரமான ஏற்ற இறக்கங்கள் அதிகம். அவைகளின் மாசுகள் மனித இனத்திற்கே மிகபெரிய வடிவத்தில் பிரச்சனைகளை உண்டாக்குகிறது. நமக்கு குடிக்க தூய்மையான நீர் கிடைக்காமலிருக்கலாம். சுவாசிக்க தூய காற்று இல்லாமலிருக்கலாம். பல்வேறு செல்வ வளங்கள் அரியதாகி விடும். உயிர்களின் வேற்றுமை அதிகமாகி இந்த உலகமே மாசுக்களால் நிறைந்துவிடும். இப்பிரச்சனைகளை எவ்வாறு எதிர்கொள்வது? இதனை செல்வ வளங்களை பாதுகாப்பதன் மூலமாக செயல்படுத்த முடியும்.

செல்வ வளங்களை பாதுகாப்பது என்றால், அவைகளை அளவற்று பயன்படுத்துவதை குறைத்து அவற்றை நியாயமான முறையில் பயன்படுத்த ஊற்சாகமூட்டி சுற்றுச் சூழல் மற்றும் செல்வ வளங்களின் பயன்பாட்டின் இடையில் சமநிலையை காப்பாற்றிக் கொள்வதாகும். ''மனித இனத்தை இன்றைய தலைமுறையினரின் ஆசைகளை நிறைவேற்றுவது சாத்தியமாகும் வகையில் இவ்வுயிர் கோளத்தை நிர்வாகிக்கும் செயல்களாகும்'' என்று பாதுகாப்பை விரிவாக்கம் செய்யப்படுகிறது. காப்பாற்றல் இயற்கை செல்வ வளங்களை முறையாக நிர்வாகித்தலை தொடர்புபடுத்தி அவை மிகுதியாக பயன்படுத்துதல் அபாயம் மற்றும் அநீதிகளை தடுக்கும் ஒரு செயலாகும். அது செல்வவளங்களினால் கிடைக்க வேண்டிய அனைத்து நன்மைகளையும் பெற்றுக் கொள்வதுடன், அவற்றின் அளவு மற்றும் குண அளவை காப்பாற்றிக் கொண்டு செல்ல பயன்படுத்தும் செயல்பாடுகள் ஒரு பூங்கொத்தாகும்.

செல்வ வளங்களை காப்பது நம் அனைவரின் கடமையாகும். அவற்றை எவ்வாறு உருவாக்குவது? அதனை நான்கு R விதானங்கள் மூலம் நிறைவேற்ற முடியும். அந்நான்கு R கள் யாவை? அவை

REDUCE - செல்வளங்களின் பயன்பாட்டை குறைப்பது

©KTBS Not to be republished

REUSE - செல்வ வளங்கள் மறு சுழற்சி செய்வது

RECHANGE (REGENERATE) - செல்வ வளங்களை மறு சீரமைப்பு செய்வது (செல்வ வளங்களை மறுபடியும் உண்டாக்குவது)

RESEARCH - ஆய்வு செய்வது

தற்போது இவைப் பற்றி விரிவாக அறிவோம்:

**அ. செல்வ வளங்களின் பயன்பாட்டை குறைப்பது (REDUCE):**

செல்வ வளங்களை முடிந்த வரையில் குறைந்தளவில் பயன்படுத்துவதோடல்லாமல் அவற்றை பாழாக்காமல் குறைத்துக் கொள்ள வேணடும். எந்த வேலைக்கும் தேவையான இயற்கை செல்வளங்களின் பயன்பாட்டைக் குறைத்துக் கொண்டு செயலாற்ற முயற்சி மேற்கொள்ள வேண்டும். அதனால் மொத்தத்தில் மாசடைதல் குறையும். எ.கா. ஒவ்வொரு முறையும் மோட்டார் பைக்கை பயன்படுத்துவதற்கு பதிலாக சைக்கிளை பயன்படுத்துவது அல்லது நடந்து செல்வது ஒவ்வொருவரும் சொந்த வாகனங்களில் திரியாமல் பொதுமக்கள் போக்குவரத்தைப் பயபன்படுத்த வேண்டும். இதனால் பெட்ரோல் மற்றும் டீசல் பயன்பாடு குறைவதோடல்லாமல் காற்று மாசடைதலும் வெகுவாக குறையும்.

**ஆ. செல்வ வளங்கள் மறு சுழற்சி செய்வது (REUSE):**

இது செல்வ வளங்களை காப்பதற்கு ஒரு எளிய மிகவும் பயனுள்ள வழியாகும். ஒவ்வொரு செல்வ வளங்களையும் வெவ்வேறு வேலைகளுக்கல்லாமல் பலமுறை பயன்படுத்தப்படுகிறது. எ.கா. குளிப்பதற்கு பயன்படுத்திய நீரை தோட்டத்திற்கு பாய்ச்ச வேண்டும். பயன்படுத்திய காகிதங்களை பிறபொருட்கள் தயாரிக்க பயன்படுத்த வேண்டும்.

**இ. செல்வ வளங்களை மறு சீரமைப்பு செய்வது (RECHANGE) (செல்வ வளங்களை மறுபடியும் உண்டாக்குவது) (REGENERATE):**

நம்முடைய அறிவு பூர்வமான முயற்சிகளினால் செல்வ வளங்களை விருத்தி செய்யும் செயல்கள் இவ்வகைகளில் வருகின்றன. நிலத்தடி நீரை மறுசீரமைப்பு செய்யும் செயல்கள், காடு வளர்ப்பதினால் மரஞ்செடி கொடிகளின் எண்ணிக்கை விருத்தியடையும். மேலும் தன்மூலம் உயிர்வேறுபாடுகள் பெருக்கம் இங்கு அளிக்கப்படுவது எடுத்துக்காட்டுகளாக உள்ளது.

**ஈ. ஆய்வு செய்வது (RESEARCH) :**

வற்றிப்போகும் செல்வ வளங்களுக்கு பதிலாக பயன்பாடு செய்ய வேண்டியது புதுபிக்கப்பட வேண்டிய பொருட்களின் ஆய்வு நிரந்தரமாக

©KTBS Not to be republished

நடைபெற வேண்டும். நாம் தற்போது பயன்படுத்திவரும் எரிபொருட்களுக்கு சூரிய சக்தி மற்றும் காற்று சக்திகள் சிறப்பான மாற்றாகும்.

**செயல்பாடு :** உங்கள் வீடு மற்றும் பள்ளியில் பயன்படுத்திக் கொண்டு வரும் 4 R களின் பட்டியல் தயாரிக்க.

கீழ்க்காணும் குறிப்பிட்ட அம்சங்களை நீங்கள் செல்வ வளங்களை காப்பாற்ற என்ன செய்ய வேண்டுமென்பதை தெரியப்படுத்துகிறோம்.

- ✦ குறைந்தளவிலான சரக்குகளை வாங்கி (தற்போது இருப்பவைகளை எவ்வளவு நீண்ட கால அளவில் பயன்படுத்தி, புதியதை வாங்கியபோது அது அவசியமானதா என்று வினாவை எழுப்பு)
- ✦ அவசியமற்ற பேக்கிங்குகளை தவிர்க்க (எ.கா. பாட்டில் நீர் வாங்குவதற்கு பதில் குழாய்களில் வரும் நீரை குடியுங்கள்.
- ✦ மெட்டல் நட்பாக்கள், பழைய செல்போன்கள் மற்றும் பிளாஸ்டிக் பாட்டில்களை மறு சுழற்சி பயன்பாட்டிற்கு கொண்டு வருதல்.
- ✦ கைகளால் தயாரிக்கப்பட்ட சரக்குகளை அதிகமாக வாங்கவும்.
- ✦ தட்பவெப்பநிலைகளை மாசடைய செய்யாமல் நீர் மற்றும் காற்றை தூய்மையாக வைக்கவும்.
- ✦ மண் வளமிழப்பதைக் தவிர்க்கவும்.
- ✦ ஒரு மரத்தை தவிர்க்க முடியாமல் வெட்டும்போது அதற்கு பதிலாக மற்றொரு மரக்கன்றை நட வேண்டும்.
- ✦ சொந்த வாகனத்தை குறைவாக ஓட்டி, பொதுமக்கள் போக்குவரத்தை பயன்படுத்துக. சைக்கிளை உபயோகிக்கவும் அல்லது நடக்கவும்.
- ✦ வீட்டில் எரிப்பொருளை சேமிக்க. (எகா. விளக்குகளை அவசியம் இல்லா இடங்களில் அணைக்கவும்.)

இதே பாதுகாப்பு அம்சத்தை உலகின் ஏறக்குறை அனைத்து நாடுகள் 'சுசிஸ்திரா வளர்ச்சி' யின் தத்துவத்தை கடைப்பிடித்து வருகின்றன. இதன் மூலமாக உருக்கொடுக்க முயற்சிக்கிறோம். சுஸ்த்திர வளர்ச்சியென்றால் வரும் சந்ததி சிறப்பான வாழ்க்கை அளவு கிடைக்க செல்வ வளங்களை நியாயமான முறையில் பயன்படுத்துதல், பாதுகாப்பு மற்றும் அவைகளின் குண இயல்பை காப்பாற்றிக் கொண்டு செல்ல ஒரு வழியுள்ளது.

**நம்முடைய வாழ்க்கைச் சுற்றுச் சூழலில் அதிக அடையாளங்களை குறைப்பது:**

மனித இனம் விருத்தி சுற்றுச் சூழலின் மீது போடப்பட்டுள்ள மொத்த அழுத்தத்தின் அளவுஎவ்வளவு? இதனை அளவிட ஏதாவது ஒரு சாதனமுள்ளதா?

©KTBS Not to be republished

வொர்ல்டு லைஃப் பண்டு (World life Fund - WWF) என்னும் நிறுவனம் வாழ்க்கைச் சூழலை 'காலடி அடையாளம்' என்னும் சாதனத்தை தயாரித்து அதன் மூலம் ஒரு நாடு அல்லது எதாவது ஒரு நாட்டின் தனிமனிதனின் செல்வ வளங்களின் பயன்பாடு மற்றும் கழிவு உற்பத்தியின் அளவின் மூலமாக சுற்றுபுற சூழலின் மீது விழும் அழுத்தத்தை அளக்கிறது.

தற்காலத்திலுள்ள தொழில் நுணக்கத்தை பயன்படுத்தி ஒருவர் எவ்வளவு வெளிப்படையான பிரதேசத்தை பயன்படுத்தி வாழ்கிறான் என்பதை குறிப்பிடும் சாதனமே சுற்றுச் சூழலின் காலடி அடையாளமாகும். இவ்வெளிப்படை பிரதேசம் ஒரு மனிதனின அவசியமான உணவு, நீர், எரி பொருட்கள், உடை மற்றும் கட்டிடங்களை நிர்மாணிக்கத் தேவையான உபகரணங்கள் உற்பத்தி செய்யும் உயிரி பிரதேசமல்லாமல் அம்மனிதன் உண்டாக்கும் கழிவுகளை ஈர்ப்பதற்கு தேவையான பிரதேசமாக உள்ளது என்றால் ஒரு மனிதன் வாழ உயிரி திறன்களின் தேவையின் மூலமாக சுற்றுச் சூழலின் காலடி அடையாளமாக அளக்கப்படுகிறது.



WWF என்னும் நிறுவனம் ஒரு நாட்டின் உயிர் சூழலின் காலடிகளை அந்நாட்டில் பயன்படுத்தும் உணவு, உடை மற்றும் உற்பத்தி செய்ய தேவையான அனைத்து வேளான், கால்நடைகள் மேய்ப்பதற்காக காடுகள் மற்றும் மீன் பிடிப்பதற்கு தேவையான பூமியின் அளவு அல்லாமல் ஈர்த்துக் கொள்வதற்கு தேவையான நிலம் மற்றும் அடிப்படை வசதிகளை உண்டாக்க தேவையான மொத்த நிலத்தின் அளவு என்று வியாக்கியானம் செய்யப்படுகிறது.

இதே நிறுவனம் தன்னுடைய 2014 -ல் Living Planet Report -ல் 2010 ஆம் ஆண்டில் மொத்தம் உலக உயிர் சுற்றுச்சூழலின் காலடி அடையாளத்தின் அளவு 18.1 நூறு கோடி (சத கோடி) ஹெக்டேர்கள் அல்லது தலைக்கு 2.6 ஹெக்டேர் அளவு என்று தோராயமாகக் கூறியது. ஆனால் இரண்டாம் உயிரி திறமையை 1200 நூறு கோடி (12 சத கோடி) காலடிகள் அல்லது தலைக்கு 1.7 ஹெக்டேர்கள் மட்டும் உள்ளது. இதன் பொருள் ஒவ்வொருவரும் தற்போதையவாழ்க்கை முறையை பின்பற்றிக் கொண்டு செல்ல 18 நூறு கோடி (18 சத கோடி) ஹெக்டேர்கள் அளவு நிலப்பிரதேசம் தேவையாகிறது. இருப்பது 12 நூறு கோடி ஹெக்டேர்கள் அளவு மட்டுமே என்றால் 2010 -ல் மனிதர்கள் இயற்கைக்கு அளிக்க வேண்டிய செல்வ வளங்களை விட 50 சதவீத அளவு அதிகமான அளவில் செல்வ வளங்களை ஒன்றரை மடங்கு பூமியை பயன்படுத்தி வந்திருக்கின்றனர் என்று பொருள். நாம்

©KTBS Not to be republished

இதே விதத்தில் நம்முடைய செல்வ வளங்களை பயன்படுத்திக் கொண்டே சென்றால், சில நாட்களிலேயே பூமியின் மறு பிறப்புத்திறன் மீறி வருவதோடல்லாமல், நம்முடைய வாழ்க்கையை நடத்த இதைப் போன்ற ஐந்து பூமிகள் தேவைப்படும் என்று தோராயப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் என்ன செய்ய வேண்டும்? இச் செய்தியை நம்முடைய வாழ்க்கை முறையில் மாற்றமில்லாமல் குறைவான செல்வ வளங்களை பயன்படுத்த தெளிவான செய்தியை அளித்துள்ளது.

நம்மில் ஒவ்வொருக்கும் உயிர் சுற்றுச் சூழல் காலடி அடையாளம் உள்ளது. மொத்தத்தில் காலடி அடையாளத்திற்கு கொடை அளித்து வருகிறோம். அதனால் உயிர் சூழலில் காலடி அடையாளத்தை குறைவுபடுத்த வேண்டுமென்றால் நாமே முதலில் அதனை தொடங்க வேண்டும். இங்கு அதன் பன்முகமாக செய்தி என்னவென்றால் இதனைப் பற்றி நாம் அறிந்து கொண்டு, நம்முடைய அக்கம் பக்கத்திலுள்ளவர்களுடைய மனதை மாற்ற வேண்டும். மக்களிடையே மொத்தமாக அறிவுத்திறன் அதிகமாகியுள்ளது. இதன்மூலம் நம்முடைய மணம் உணர்வு பூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் உள்ளது. எ.கா, கழிவுப் பொருட்களை மறுபயன்பாட்டுக்கு நீங்கள் தொடங்கி, உங்கள் வீட்டிலுள்ளவர்களுக்கு அதனைப் பற்றி எச்சரிக்கை செய்தால், அவர்களும் அதனை நடைமுறைக்குக் கொண்டு வருகிறார்கள். இச் செய்தியை அக்கம்பக்கத்திலுள்ளவர்களுக்கு பரவச் செய்வது. இது ஒரு சிறிய முயற்சியாக இருந்தாலும் பரந்தளவில் பலனளித்து வருகிறது என்பதாகிறது.

**உணவு :**

- உயிருள்ள அங்கக அல்லது உள்ளூரில் விளைந்த உணவுப் பொருட்களையே வாங்குகள்.
- ஒரு கைத் தோட்டத்தை அமைத்து விளையுங்கள் (இதன் மூலமாக நீங்கள் உணவு இரசாயன பொருட்களால் உண்டாகும் மாசுகளையும், இரசாயன பொருட்களின் பயன்பாடு, பொட்டணங்களின் அவசியத்தை குறைக்க வேண்டியதோடுமட்டுமல்லாமல், உங்களுக்கு பச்சையான , தூய்மையான காய்கறிகள் கிடைக்கிறது.
- கடைகளுக்கு உங்கள் கைத் தோட்டத்திலிருந்து கொண்டு செல்லுங்கள். முடிந்த வரையில் குறைந்தளவில் தூய்மையான உணவையே பயன்படுத்துங்கள்.
- பழரச பொட்டலங்களை வாங்குவதற்க பதிலாக பழங்களையே வாங்குங்கள்

©KTBS Not to be republished

✦ மாமிசம் மற்றும் செய்ரி உற்பத்திகளின் பயன்பாட்டை குறையுங்கள். உங்களுக்கு வேறு மூலங்களிலிருந்தும் புரோட்டீன்கள் கிடைக்கிறது.

✦ வெளியிடங்களிலிருந்து வாங்குவதைத் தவிர்த்து வீட்டிலேயே தயாரித்துக் கொள்ளுங்கள்.

**எரிபொருள் / மின்சக்தி :**

✦ பயன்பாடு முடிந்தவுடன் அனைத்து மின் விளக்குகளை அனைத்து விடுங்கள்.

✦ இரவு வேளைகளில் ஏர்கண்டிஷனர் மற்றும் ஹீட்டர்களை அனைத்து விடுங்கள்.

✦ வீட்டை விட்டு வாருங்கள். நீங்கள் உல்லாசமாக இருக்க இயற்கையை அனுபவியுங்கள். குறைந்த எரிபொருளைப் பயன்படுத்துங்கள்.,

✦ வீடு / காரை குளிர்ச்சியாக வைத்திருக்க அல்லது வெப்பமாகியிருக்க வீட்டிலேயே தயாரிப்பது சிறந்தது.

**போக்குவரத்து :**

✦ பள்ளிக்கு நடந்து வாருங்கள் அல்லது சைக்கிளை பயன்படுத்துங்கள்.

✦ பொது மக்கள் போக்குவரத்தைப் பயன்படுத்துங்கள்

✦ வெளியில் செல்லும்போது அல்லது நடக்கும் தூரமாக வெகு தூரம் இருக்கும்போது காரை பயன்படுத்துங்கள்.

**குறைந்தளவு கழிவுகளை உண்டாக்குவது :**

✦ முடிந்தளவு குறைந்த பாக்கெட்டுகளில் உள்ள பொருட்களை வாங்குவது.

✦ அவசியமில்லாதபோது பைகளை கேட்காமலிருப்பது.

✦ முடிந்தளவு மறுபயன்பாட்டுக்கு மாறுவது மற்றும் மறுபயன்பாட்டு பொருட்களை வாங்குவது.

✦ உடைந்த சாமான்களை சரிசெய்து பயன்படுத்துவது

✦ மறுபடியும் மறுபடியும் பயன்படுத்தக்கூடிய பொருட்களை வாங்குவது.

**நீர் :**

✦ பல் தேய்க்கும்போது குழாயை மூடி பயன்படுத்துவது.

✦ சாக்கடைகளில் விஷமுள்ள பொருட்களைப் போடக்கூடாது.

✦ பாத்திரம் மற்றும் துணி கழுவும் இயந்திரங்களை நிரப்பி (புல்லோடு) பயன்படுத்துவது.



©KTBS Not to be republished

- ✦ கழிவறை (ப்ளஷ்) தொட்டியில் ஒரு செங்கல்லை வைப்பதினால் போதுமான அளவு நீரை பயன்படுத்தலாம்.
- ✦ இந்திய மாதரியான கழிவறையை பயன்படுத்தவும்.

**சமுதாயம் :**

- ✦ சமுதாய மக்களுக்கு சுற்றுச் சூழல் காலடி அடையாளத்தைப் பற்றிய விவரங்களை அளிப்பது. குறைப்பதற்கு என்ன செய்ய வேண்டும் எனக் கூறுவது.
- ✦ உள்ளூர் நீர் நிலைகளை காப்பது, தூய்மைபடுத்துவது, ஏதாவது சங்கங்கள் மற்றும் நிறுவனங்களிருந்தால் அவர்களை உறுப்பினர்களாக்குவது.
- ✦ மறுபயன்பாடு செயல்களில் பங்கேற்பது.
- ✦ நம்முடைய பள்ளியின் எரிபொருளை தணிக்கை செய்து எந்த செயல்மூலம் மின்சாரம் மேலும் பணம் சேமிப்பு செய்வது என்பதை கவனியுங்கள்.
- ✦ பள்ளியின் காலடி அடையாளங்களை கணக்கிட முயற்சிக்கவும்.

இவ்வாறு எளிய செயல்களினால் செல்வ வளங்களை காப்பதில் மிகவும் மகத்துவமான பங்கு உள்ளது. ஏனென்றால் மகாத்மா காந்தியடிகள் கூட ''மற்றவர்களில் காண விரும்பும் மாற்றத்தை முதலில் நீயே அதுவாகி காட்டு'' என்று கூறியுள்ளார்.

**பயிற்சிகள் :**

**I. கீழ்க்காணும் கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. இயற்கை செல்வ வளங்களை பயன்படுத்துவது ...... ஆகும்.
2. ......... செல்வ வளங்களை குறிப்பிட்ட காலத்தில் மறுபயன்பாட்டுக்கு பயன்படும்.
3. இரும்புத்தாது .............. செல்வ வளமாகும்.
4. செல்வவளத்தின் அவசியம் அதனுடைய தேவையை விட அதிகமாகும் போது ......... உண்டாகிறது.
5. வரும் தலைமுறையினருக்கு தேவைகளை அளிப்பது சாத்தியமாகும் வளர்ச்சி உபாயத்தை -------- வளர்ச்சி என்று அழைக்கிறோம்.
6. 2010 ல் மனிதர்கள் தம் தம் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்ள ---------- பூமியளவு பிரதேசத்தின் பயன்பாடு செய்து வந்துள்ளனர்.

©KTBS Not to be republished

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி:**

1. இயற்கை செல்வ வளங்களென்றால் என்ன?
2. திரும்பப் பெறும் இரண்டு செல்வளங்களுக்கு எ.கா. தருக.
3. உயிரி செல்வ வளங்களுக்க இரண்டு எ.கா. தருக.
4. பத்திரப்படுத்துதல் என்றால் என்ன?
5. உயிர் சூழலின் காலடி அடையாளம் என்றால் என்ன?
6. திரும்ப பயன்பாட்டுக்கு (திரும்ப பெறும்) வரும் பொருள் என்றால் என்ன?

**III. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஐந்தாறு வரிகளில் விடையளி:**

1. திரும்ப பெறும் மற்றும் காணாமல் போகும் செல்வ வளங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
2. இயற்கை வளங்கள் குறைபாடு அதிகரித்து வருவதற்கான காரணங்கள் யாவை?
3. 4 R கள் என்றால் என்ன? காக்கும் விதத்தை கூறுக.
4. உங்கள் வீடு மற்றும் பள்ளிகளில் எரிபொருள் சேமிப்புக்கு எந்த செயல்களை மேற்கொள்கிறீர்கள்.
5. உயிர் சுற்றுச்சூழல் காலடி அடையாளத்தை குறைக்க எந்தெந்த செயல்களை மேற்கொள்கிறீர்கள்.

**IV. செயல்திட்டம் :**

நீங்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களை பட்டியலிட்டு அவைகளில் 4 R களின் ஆதாரத்தின் மீது பிரிக்கவும்.

**V. செயல்பாடு :**

உங்கள் பள்ளியில் எரிபொருள்தணிக்கை செய்து எரிபொருளின் பயன்பாட்டை எவ்வாறு மற்றும் எங்கு சேமிப்பு செய்ய முடியும் என்பதை கவனிக்கவும்.

*****

©KTBS Not to be republished

# அத்தியாயம் - 2

# இந்தியாவின் மனித செல்வ வளங்கள்

**இவ்வத்தியாயத்தில் நீங்கள் கீழ்க்காணும் அம்சங்கள் குறித்து கற்பீர்கள்:**

★ மனித செல்வ வளங்கள் பொருள் மற்றும் முக்கியத்துவம்

★ இந்திய மக்கள் தொகையின் குண இயல்புகள் மற்றும் எழுத்தறிவு அளவு, பாலின விகிதம், நகரங்கள் - கிராமிய மற்றும் வயதளவு

★ மக்கள் தொகையில் மாற்றங்கள் மற்றும் பொதுக் கருத்து.

★ சந்ததிகள் ஆரோக்கியம் மற்றும் மக்கள் தொகையின் குண இயல்பு சுதாரிப்பதற்கான தொடர்புள்ள அம்சங்கள்

**1. அறிமுகம் :**

இயற்கை வளங்களைப் போன்றே மக்கள் தொகையும் கூட ஒரு நாட்டின் செல்வம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டில் வாழும் மக்கள் அந்நாட்டின் மக்கள் தொகையாகிருந்து அவர்களில் குழந்தைகள், இளைஞர்கள், மூத்த குடிமக்களும் இருப்பார்கள். 14 ஆண்டுகள் வயதுக்குட்பட்டவர்கள் குழந்தைகள் என்றும் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்டு 60 வயதுக்குட்பட்டவர்கள் பருவத்தினர் மற்றும் 60 ஆண்டுகளுக்கு மேற்பட்டவர்கள் மூத்தகுடிமக்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். பருவத்தினர் உழைக்க கூடிய திறன் உடையவர்கள். இவர்களை உழைக்கும் மக்கள் என்கிறோம் தற்போது நாட்டிலுள்ள உற்பத்தி அறிவு, அறிவுத்திறன், மற்றும் திறன்களுடைய உழைக்கும் மக்களை மனித செல்வ வளம் என்று அழைக்கப்படுகின்றனர். தற்காலத்தில் இந்தியாவில் இளைஞர்களே பெருவாரியாகிருப்பதினால் உழைக்கும் சக்தி அதிகமாக உள்ளது.

மனித செல்வ வளத்திற்கு சிறந்த கல்வி, பயிற்சி மற்றும் ஆரோக்கிய நலன்களை அளிக்கப்பட்டால், அவர்கள் மனித முதலீடாக மாற்றமடைகின்றனர். இவர்கள் நாட்டின் வருமானம் பெருகுவதற்கு காரணமாவர். சமுதாய மாற்றத்தைக் கொண்டு வரும் திறன்களைக் கொண்டுள்ளனர். குழந்தைகள் கல்வி மற்றும் ஆரோக்கியத்தின் மீது அதிக பணம் முதலீடு செய்வதினால் எதிர்காலத்தில் அவர்கள் அதிக வருமானத்தை தருவார்கள். சமுதாயத்திற்கு சிறந்த கொடையை அளிப்பார்கள். அதனால் அரசுகள் தன் குடிமக்களுக்கு சிறந்த கல்வி மற்றும் ஆரோக்கியத்தை அளிப்பதற்கு உழைக்கின்றது.

**2. செல்வ வளங்களாக மக்கள் :**

கல்வி மற்றும் பயிற்சி பெற்ற ஆரோக்கியுமுள்ள மக்களிடம் உழைக்கும் திறன் அதிகமாகி இருப்பதை நம்முடைய சுற்றுச் சூழலில் நாம் கவனித்திருக்கலாம்.



©KTBS Not to be republished

இதனால் நாட்டின் வருமானம் அதிகமாகிறது. அவ்வப்பொழுது கற்றவர்கள் மற்றும் ஆரோக்கியமுள்ளவர்கள் உழைக்கும் மக்களே நாட்டின் மனித செல்வமாகும். சரக்கு-சேவைகள் உற்பத்தியில் இயற்கைவளம் மற்றும் பௌதிக முதலீட்டைவிட மனித செல்வம் அதிக மகத்துவம் பெற்றுள்ளது. மனித செல்வத்திற்கு உற்பத்திக்குத் தேவையான அறிவு மற்றும் உழைப்பு சக்தியை அளிக்கிறது. வேளாண்மை, தொழிற்துறை மற்றும் சேவை மக்களின் உழைப்பு சக்தி என்கிறோம். மனித செல்வத்தின் உழைப்புக்கு தேவையான உழைப்புசக்தியை அளிக்கிறது. மனிதமுதலீடு அதிக ஆய்வுகளைக் கொண்டு மக்கள் சமுதாயத்திற்கு அதிக வசதிகளை ஏற்படுத்தி அளிக்கிறது. நாம் பெற்றுவரும் மின்சக்தி, தொலைக்காட்சி, கணினி செல்லிடப் பேசி (மொபைல்), வாகனங்கள் போன்றவை மனித இனத்தின் கொடையாக உள்ளது.

பலகாலம் வரையில் இந்தியாவில் அதிகளவில் மக்கள் தொகை நாட்டிற்கு சுமை என்று பாவித்தனர். ஆனால் சீனாவின் பொருளாதார வெற்றிக்கு பின் மக்கள் தொகையை செல்வவளமாக கண்டனர். கல்வி, பயிற்சி, மற்றும் ஆரோக்கிய வசதிகளை அளிப்பதின் மூலமாக மக்களை நாட்டின் உற்பத்தி செல்வமாக மாற்றமடைய சாத்தியமுள்ளது. ஆனால் நாட்டில் மக்கள் தொகை மிதமான அளவில் இருப்பதைக் காண முடிகிறது.

**உங்களுக்கு தெரிந்திருக்கட்டும் :**

- ✦ எழுத்தறிவு பெற்றவரின் எண்ணிக்கை பெருகியதோடு ஏழைகளின் எண்ணிக்கை குறைவாகிக் கொண்டு வருகிறது.
- ✦ பெண்களின் கல்வி பெருகியதோடு பிறப்பு விகித அளவு குறைந்து வருகிறது.
- ✦ வேளாண் கல்வி பெருகியதோடு வேளாண் உற்பத்தி பெருகி வருகிறது.
- ✦ தனி மனிதனின் கல்வியளவு பெருகியதுடன் அவன் பெறும் ஆதாயம் பெருகி வருகிறது.

**3. இந்திய மக்கள் தொகையின் பண்புகள் :**

மக்கள் தொகையின் பண்புகளென்றால் அதன் அளவு அமைப்பு, அடர்த்தி, குண இயல்புகள், முதலியவைகளுக்குத் தொடர்பான அம்சங்களாக உள்ளன. எந்த ஒரு நாட்டின் மக்கள் தொகை தொடர்பான பிரச்சனைகள் அறிய அதனுடைய பண்புகளின் முழுமையான விவரங்களைக் கொண்டிருப்பது அவசியமாகும். இந்தியாவில் மக்கள் கணக்கெடுப்பு (என்றால் ஒவ்வொரு குடிமகனின் விவரங்களைக் சேகரிப்பது) ஒவ்வொரு பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது. தற்போதுள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2011 ல் நடைபெற்றதாகும்.

©KTBS Not to be republished

***அ) தீவிர அளவிலான மற்றும் தீவிரமான வளர்ச்சி :***

*2011-ல் 121.1 கோடி மக்களைக் கொண்ட இந்தியா சீனா நாட்டின் அளவில், உலகிலேயே இரண்டாவது மிக அதிக மக்களைக் கொண்ட நாடாக உள்ளது. உலகின் ஒவ்வொரு ஆறாவது மனிதன் இந்தியனாகிருப்பான். ஆண்டுக்கு ஒவ்வொரு சதத்திற்கு 1.8 அளவு தரத்தில் வளர்ந்துவரும் மக்கள் தொகையினால் இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஆஸ்திரேலியா நாட்டிலுள்ளது போல மக்கள் சேர்ந்து விடுகின்றனரென்றால் அதன் ஆழத்தை நீங்கள் கவனிக்கலாம். இந்நிலையில் நிலைமையை ''மக்கள் தொகை வெடிப்பு'' என்று அழைக்கப்படுகிறது. 2022 ஆண்டு வேளையில் நாம் உலகில் அதிக மக்களுள்ள நாடாகி இருக்கும்.*

***ஆ) மக்கள் தொகை மாற்றத்தின் இரண்டாம் நிலை:***

*இந்தியா தற்போது மக்கள் தொகை மாற்றத்தில் இரண்டாம் நிலையிலுள்ளது. இறப்பு விகிதம் (ஒவ்வொரு ஆயிரம் மக்கள் தொகைக்கு இறந்த மக்களின் அளவு) குறைவாகி வருகிறது. பிறப்பு விகிதம் (ஒவ்வொரு ஆயிரம் மக்கள் தொகைக்கு பிறந்த குழந்தைகளின் அளவு) இன்னும் அதிகமாகவே உள்ளது. 2010-ல் ஆண்டில் பிறப்பளவு 22.1 இருந்தால், இறப்பின் அளவு 7.2 இருந்தது. என்றால் அந்த ஆண்டு ஒவ்வொரு ஆயிரம் மக்கள் தொகைக்கு 15 க்கும் அதிகமான மக்கள் சேர்ந்துள்ளனர் . இதனை மிக அதிகமென்றே பாவிக்கலாம்.*

***இ) தீவிரமாக பெருகிவரும் அடர்த்தி :***

*ஒரு சதுர கி.மீ. பிரதேசத்தில் வசித்து வரும் மக்களின் சராசரி எண்ணிக்கைக்கு மக்களடர்த்தி என்கிறோம். ஒரு நாட்டிலுள்ள மொத்த ஜனத்தொகையை அங்குள்ள நிலப்பரப்பினால் வகுப்பதன் மூலமாக கணக்கிடுகிறார்கள். 2011-ல் இந்தியாவின் மக்களடர்த்தி 382 இருந்தது. மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டால் இது மிகவும் அதிகமாகும். இந்தியா உலகின் 2.4 சதவீதம் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. உலகின் 16.7 சதவீதம் மக்களைக் கொண்டுள்ளது.*

***ஈ) அனுகூலமற்ற பாலின வேறுபாடு:***

*ஒவ்வொரு ஆயிரம் ஆண்களுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கையே பாலின வேறுபாடு என்று கூறப்பட்டுள்ளது. 2011-ன் மக்கள் தொகைக் கணக்கின்படி பாலின வேறுபாடு 943 இருந்தது. இது பெண்களின் சமமற்ற நிலை மற்றும் ஆரோக்கியமான சமூக வளர்ச்சியின் பின்னணியில் அனுகூலமற்ற நிலையிலுள்ளது.*

©KTBS Not to be republished

**உ) கீழ்வயதினர் அதிகமுள்ள வயதளவு அமைப்பு :**

இந்திய ஜனத்தொகை அமைப்பில் கீழ் வயதினர் என்றால் 0-14 வயதளவுள்ள குழந்தைகளின் அளவு அதிகமுள்ளது. 2011-ன் மக்கள் தொகையின்படி இவ்வயதளவு உள்ளவர்களின் மக்கள் தொகை 30.7 சதவீத்மிருந்தது. இது அதிகளவில் சார்ந்து வாழும் மக்கள் தொகை அளவைக் காட்டுகிறது. மற்றும் இதனை பிற்பபு விகிதம் கட்டுப்படுத்துவதன் மூலம் குறைக்கப்படலாம்.

**ஊ) அதிக கிராமிய மக்கள் தொகை அளவு:**

ஒரு நாட்டிலுள்ள நகரம் - கிராமிய மக்கள் தொகை விகிதம் அந்நாட்டின் தொழில்மயம் குறுப்பிட்டளவில் மாற்றமடையும். இந்தியாவின் மக்கள் தொகை முக்கியமாக கிராமியப் பகுதிகளில் வசிக்கின்றனர். 2011-ல் 68.8 சதவீதம் மக்கள் கிராமத்தில் வசிப்பவர்களாகிருந்தனர். இது இந்தியாவின் நகரமயமாதலின் செயல் குறைவு மற்றும் நிதான அளவிலுள்ளது என்பதை எதிரொலிக்கிறது.

**எ) மக்கள் தொகை பயனற்ற பண்புகள் :**

மக்கள் தொகையின் பண்பை அவர்களின் பண்பை அவர்களின் கல்வி, செயல்கள் மற்றும் ஆரோக்கியம் நிலைகளினால் என்றால் குறிப்பிடப்பட்ட எழுத்தறிவு,விலை, திறன்கள், பெறுதல் மற்றும் எதிர்நோக்கும் வாழ்நாட்கள் மூலமாக அளவிடப்படுகிறது.

1. **எழுத்தறிவு குறைபாட்டின் அளவு :** இந்தியா இன்னும் நூற்றுக்கு நூறு அளவு எழுத்தறிவைப் பெறவில்லை. எழுத்தறிவு என்றால் படிக்க மற்றும் எழுதத் தெரிந்த மக்களின் ஒவ்வொரு நூற்றுக்கான அளவு. 2011-ல் 74 சதவீத அளவு மக்கள் மட்டுமே படிக்க - எழுத அறிந்தவர்களாகிருந்தனர். சுமார் 31 கோடியை விட அதிகமக்கள் எழுத்தறிவு அற்றவர்களாகி இருந்தனர் என்பதை அது காட்டுகிறது. பெண்களின் எழுத்தறிவு இன்னும் குறைவாக இருக்கிறது. அது 65 சதவீத அளவு பெண்கள் எழுத்தறிவு பெற்றவர்களாகி இருக்கின்றனர்.
2. **மிகக் குறைந்தளவிலான கல்வி மற்றும் பயிற்சி :** இந்தியால் 20-25 வயதுள்ளவர்களின் உயர் கல்வியில் பதிவான மனிதர்களின் அளவு 20.4 சதவீதம் இருந்தது. இது மிகவும் குறைவான அளவாகும். இதே நிலை நீடித்தால் நாட்டிலுள்ள அளவில் கால்பாகம் மட்டுமே அல்லது இந்தியாவில் ஒவ்வொரு ஆயிரம் மக்களுக்கு கிடைக்கும் மருத்துவர்களின் அளவு 0.7 இருக்கிறது. இன்ஜினிர்களின் அளவு 210 உள்ளது. இது திறமைகளில் சமமற்ற மற்றும் குறைவான அளவைக் குறிப்பிடுகிறது.

©KTBS Not to be republished

**3. குறைவான வாழ் நாட்கள் :** *ஒரு மனிதன் வாழ வேண்டிய சராசரி ஆயுளை வாழ்நாட்கள் என்று அழைக்கிறோம். இந்தியாவில் 65.8 ஆண்டுகளாகிருந்து அது வேறு நாடுகளுடன் ஒப்பிட்டால் மிகவும் குறைவாகும்.*

**ஏ) வேலைகளில் பங்கேற்பது குறைவான அளவு:**

வேலையாற்ற முடிந்த மக்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் ஒவ்வொரு நூற்றுக்கும் கணக்கிடும்போது அம்மக்கள் தொகை வேலையில் பங்கற்பதின் அளவு கிடைக்கிறது. 2011-ல் 39.8 சதவீத வேலையற்று இருந்து, வேலை செய்பவர் மீது அதிகளவில் சார்ந்துள்ள மக்கள் அளவை இது காட்டுகிறது.

**ஐ) பெரும் - மக்கள் தொகை :**

உணவுத் தானியங்களின் உற்பத்தி தேவையான அளவில் பெருகியிருந்தாலும் கூட நாட்டில் வறுமை, பசி, பட்டினி போன்றவை தாண்டவமாடி வருகின்றன. ஊட்டசத்துகுறைவு, வேலை வாய்ப்பின்மை, குறைந்த வருமானம், சுகாதாரமற்ற குடிசை பிரதேசங்களில் வாழும் மக்களின் அளவு போன்றவைகளை நோக்கும்போது, இந்தியாவின் மக்கள் தொகை அதனுடைய பிடிப்பு சக்தியையும் மீறி வளர்ந்துள்ளது என்றும் கூறப்படுகிறது. இவையனைத்தும் பெருக்கமடைந்த மக்கள் தொகையின் மாற்றங்களாகும்.

**மக்கள் தொகையில் மாற்றம் :**

பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்கள் தொகைப் பெருக்கத்தின் இடையில் நிகரமான தொடர்புள்ளது. நாடு பொருளாதார வளர்ச்சி கொண்டிருந்தால், அந்நாட்டின் மக்கள் தொகை குறைவாகிக் கொண்டே செல்லும். இதனை மக்கள் தொகை மாற்றத்தின் கொள்கைகள் மூலமாக விவரிக்கப்படுகிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி மூன்று நிலைகளில் பாயந்தோடுகிறது. அவை பின்தங்கிய நிலை, முன்னேற்றமடைந்துவரும் நிலை மற்றும் முன்னேற்றமடைந்த நிலை முதலியன.

**அ. பின்தங்கிய நிலை:** ஒரு நாடு பொருளாதார வளர்ச்சியில் பின் தங்கியபோது அங்கு வறுமை, வேலை வாய்ப்பின்மை அதிகரித்திருக்கும். மக்களுக்கு கல்வி மற்றும் ஆரோக்கிய வசதிகள் பரவுவதில்லை. மக்கள் மூட நம்பிக்கையைக் கொண்டுள்ளவர்கள். சம்பிரதாயங்களுக்கு அடிமையாகி இருப்பவர்கள். இதனால் மக்கள் அளவு மற்றும் இறப்பளவு இரண்டும் அதிகமாகியிருக்கும். மக்கள் தொகை வளர்ச்சியின் அளவு குறைவாகிருக்கும்.

**ஆ. முன்னேற்றமடைந்து வரும் நிலை:** பின் தங்கிய நாடு பொருளாதார வளர்ச்சியை மேற்கொள்ள அல்லது சாதிக்க தீவிரமான முயற்சிகளை மேற்கொள்கிறது. அரசு முதலில் மக்களுக்கு கல்வியளிக்க, ஆரோக்கிய வசதிகளை

©KTBS Not to be republished

ஏற்படுத்தியளிக்க முன் வருகிறது. தொற்று நோய்கள் பரவுவதைக கட்டுப்படுத்துகிறது. ஆனால் பிறப்பு விகிதம் அதிகமாகவே இருந்தது. இறப்பு விகிதம் குறைவாகிருந்தது. அது நிதானமாக குறைந்து கொண்டே வருகிறது. இவ்வாறு இந்நிலையில் பிறப்பு விகிதம் அதிகரித்து இறப்பு விகிதம் குறைவதினால் மக்கள் தொகை வளர்ச்சியின் அளவு அதிகரிக்கிறது.தற்போது இந்தியாவின் இந்நிலை உள்ளது. அவ்வப்போது இங்கு மக்கள் தொகை வளர்ச்சி அதிகமாக உள்ளது.

**இ. முன்னேற்றமடைந்த நிலை :** முன்னேற்றமடைந்த ஒரு நாடு வளர்ச்சி செயல்பாடுகளின் தீவிரம் கொள்வதின் மூலம் சிறப்பாக முன்னேறிய நாடாக மாற்றமடைகிறது. அப்பொழுது நாட்டிலுள்ள அனைத்து மக்களும் கல்வியறிவு பெற்றவர்கள் மற்றும் அறிவு பூர்ணமான பொது அறிவுள்ளவர்களாகிருப்பார்கள். அனைவருக்கும் ஆரோக்கியம் மற்றும் தூய்மையான வசதிகள் கிடைக்கும். இதனால் இந்நிலையில் மக்கள் அளவு மற்றும் பிறப்பு அளவு - இறப்பு அளவுகளிரண்டும் மிகவும் குறைவாகக் காணப்படும். மக்கள் தொகை வளர்ச்சியும் குறைவாகியிருக்கும். மொத்தத்தில் பின்தங்கிய நாடு பொருளாதார வளர்ச்சியில் ஏற்றம் பெற்று கிரமமாக முன்னேற்றம் அடைந்த நாடாக ஏற்றம் பெற்று முன்செல்கிறது. அங்குள்ள மக்கள் தொகை வளர்ச்சியில் மாற்றம் ஏற்படுகிறது; எந்த ஒரு நாடும் பொருளாதார வளர்ச்சி கொள்வதின் மூலம் மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

> **நினைவிற்கு :** பின்தங்கிய நாடு - பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதம் அதிகரித்து மக்கள் தொகை வளர்ச்சியின் அளவு குறையும்.
>
> முன்னேற்றமடைந்து வரும் நாடு - பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதம் குறைந்து, மக்கள் தொகை வளர்ச்சியில் அளவு அதிகரிப்பு.
>
> முன்னேற்றமடைந்த நாடு - பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதம் குறைந்து, மக்கள் தொகை வளர்ச்சியில் அளவு குறைவு.

**5. குழந்தை பிறப்பு மற்றும் மக்கள் தொகையின் பண்புகள் :**

ஆரோக்கியம் மனிதனுக்கு மிக முக்கியமான சமுதாய அடிப்படை வசதிகளாகின்றன. சிறப்பான ஆரேக்கியம் மக்களின் வாழ்க்கை பண்புகள் மற்றும் அவர்களுடைய வேலையின் பண்புகளை அதிகரிக்கிறது. அதனால் பொருளாதார வளர்ச்சியை தீவிரப்படுத்த வேண்டியதாகிறது. நாட்டின் மக்களின் ஆரோக்கியம் அளவை மேற்கொள்ளும்போது அவசியமாகிறது.

குழந்தை பிறப்பு உயிர்களின் முதன்மையான பண்புகளில் ஒன்று. மக்கள் தொகையின் குண இயல்பு வாழும் குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும்

©KTBS Not to be republished

அவைகளின் ஆரோக்கியத்தின் மீது வெகுவாக சார்ந்துள்ளது. ஆரோக்கியமுள்ள குழந்தைகள் ஆரோக்கியபூர்வமான இளைஞர்களாக வளர்ந்து நாட்டின் வளர்ச்சிக்கு அதிக கொடையை அளிப்பார்கள். தாய் கர்ப்பம் தரித்தது முதல் - குழந்தைக்கு பிறப்பு அளிக்கும் வரையில் அவளுடைய ஆரோக்கியம் மற்றும் சத்துக்களில் அதிகம் கவனம் செலுத்த வேண்டியதாகிறது. பிரசவத்திற்கு பிறகு தாய் மற்றும் சிசுவிற்கு சரியான பராமரிப்பு அளிக்க வேண்டும். பெண்கள் ஆரோக்கியமுள்ளவர்களாகவும் நோய்வாய்படாமலிருக்க வேண்டும். அவ்வாறிருந்தால் குழந்தைகள் கூட ஆரோக்கியமுள்ளவர்களமாக பிறந்து வளர்வதை எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் ஆரோக்கிய வசதிகளில்லாமல் நோய்களைத் தடுபப்பதற்காக தடுப்பூசிகளும், சத்துள்ள அம்சங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. மற்றும் அனுபவசாலிகளான சிப்பந்திகளின் மேற்பார்வையில் பிரசவிப்பதினால் தாய் சேய் ஆரோக்கிய கண்ணோட்டத்தில் மிகவும் மகத்துவமானதாகும்.

இவ்வாறு எல்லா நாடுகளிலுள்ள அரசுகள் இவ்வசதிகளை அனைவருக்கும் ஏற்படுத்தும் முயற்சிகளை செய்வதினால் சந்தான விருத்தி ஆரோக்கியமான வசதிகளுடன் குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் உயிருடன் வாழ்வது சாத்தியமாகும். குழந்தைகள் பிறப்பின் அளவு குறைவாகியிருக்கும். மேலும் இது மக்கள்தொகை கட்டுப்பாட்டிற்கு உதவியாகிறது. இவையல்லாமல் குழந்தைகள் கர்ப்பினிகள் மேலும் பிரசவமானவர்களுக்கு சத்துள்ள உணவு வளர்ச்சிக்கு பல்வேறு செயல்களை மேற்கொள்ளப்பட்டு குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் இறப்பின் அளவு குறைவாகும்.

இந்தியாவில் 1997-98 ல் 298 அளவு தாய்மார்களின் இறப்பின் அளவு (ஒவ்வொரு 10,000 உயிரோடுள்ள பிறப்புகளுக்கு ஒரு ஆண்டிக்குள் இறந்த கர்ப்பினிகளின் எண்ணிக்கை) மீது அறிந்த அனைத்து காரணங்களினால் 2012-ல் 167 க்கு குறைந்தது சமாதானமாகும். அதே வகையில் சிசுக்களின் இறப்பின் அளவு (ஒவ்வொரு 1000 உயிருடனான பிறப்புகளுக்கு இறந்த ஒரு ஆண்டுக்குள்ளாகுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை) 1990-ல் 80 அளவும், 2012-ல் 47 அளவுக்கும் இறங்கியது. அவ்வாறே குழந்தைகள் இறப்பின் அளவு (ஒவ்வொரு 1000 குழந்தைகளுக்கு இறந்த ஐந்து அண்டுகட்குள்ளாக உள்ள குழந்தைகள் எண்ணிக்கை) 1991-ல் 115 அளவுக்கு இருந்தது. ஆனால் 2010-ல் அது 59 ஆக குறைந்தது.

ஆனால், சத்துக்களில் இந்தியாவின் நிலை ஆதங்கத்தை ஏற்படுத்தி மிகப்பெரும் அளவில் குழந்தைகள் சத்துக்களற்ற நிலையினால் இறப்பைத் தழுவுகிறார்கள். மக்கள் தொகை ஆய்வுகளின் படி அனைத்துலக

©KTBS Not to be republished

நாடுகளின்நிறுவனத்தின் பரிசீலனையின் 2008-09 -ல் 40% சதவீதம் அளவு குழந்தைகள் குறைந்த எடையைக் கொண்டுள்ளனர். அதே வீதமாக பாதியளவு கர்ப்பினிகள் இரத்தமற்று இரத்த சோகையினால் அல்லல்படுவதும் காணப்படுகிறது.

யூனிசெப்பின் அறிக்கையின்படி இந்தியா ஐந்து ஆண்டுகளுக்குள் உள்ள குழந்தைகளின் இறப்பில் பெருமளவு பங்கைக் கொண்டுள்ளது. அவர்களினால் பாதிபாகமளவு குழந்தை சத்துக்களற்று மரணத்தைத் தழுவுகிறார்கள். உலகின் சுமார் பாதி அளவு ஐந்து ஆண்டுகளுக்குள் உள்ள குழந்தைகளின் இறப்புகள் ஐந்து நாடுகளில் சம்பவித்துள்ளன. இந்தியா, நைஜீரியா, காங்கோ, பாகிஸ்த்தான் மற்றும் சீனாவாகும். இந்தியா உலகின் இவ்விறப்புகளில் 22 சதவீதமளவு கொண்டிருந்தால் நைஜீரியா 13% சதவீமளவு கொண்டுள்ளது.

இந்திய நாட்டின் ஆரோக்கிய நீதி மக்களின் ஆரோக்கியம் காப்பது, குடும்பநலம் மற்றும் சத்துக்களை அளிக்கும் சேவைகளை சிறப்புற செய்யும் குறியை கொண்டுள்ளது. அதிலும் வசதிகளற்ற ஏழைகளின் மற்றும் மலைவாழ் மக்களின் ஆரோக்கியம் காப்பதில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. கடந்த சுமார் 60 ஆண்டுகளில் பரந்தளவில் ஆரோக்கியம், அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதின் மூலமாக மக்களின் குண இயல்புகளை வளர்ச்சியுறச் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசின் இச்செயல்களால் மக்களின் குணஇயல்பு சாதாரணமாக உள்ளது. எதிர்நோக்கும் ஆயுட்காலம் அதிகமாகிறது. சிசு இறப்புகளின் அளவு குறைவாகிறது. எதிர்நோக்கும் ஆயுட்காலத்தின் அளவு பெருகியது. மக்களின் வாழ்க்கை குண நலன்களில் ஏற்பட்டு வரும் மாற்றங்களில் தூய குறிப்பாகும். தாய் குழந்தைகளின் பாதுகாப்பு சத்து அம்சங்கள் அளிக்கும், நோய்களினால் குழந்தைகளை காப்பது போன்ற செயல்களினால் மாற்றமாகி சிசு இறப்பளவு குறைந்து வருகிறது.

தற்போது தேசிய ஆரோக்கிய இயக்கத்தில் இந்திய அரசு சிசு மற்றும் தாய்மார்களின் இறப்புகளை குறைவுறச் செய்வதற்கு பல செயல்கள் மேற்கொண்டுள்ளது. அவைகளில் முதன்மையான அவைகளாவன :

அ) பிரசவ காப்பு திட்டதனடியில் சாம்ஸ்திக பிரசவங்களுக்கு ஆதரவளிப்பது. கர்நாடக அரசும்கூட தன்னுடைய 24x7 இலவச ஆம்புலன்சுகள் மூலமாக சாம்ஸ்திக பிரசவங்களை அதிகரிக்க முயற்சித்து வருகிறது.

ஆ) ஆரோக்கிய துணை-மையங்களை ஆரம்ப சுகாதார மையங்கள் சமுதாய ஆரோக்கிய மையங்கள் மேலும் மாவட்ட மருத்துவமனைகளை மாற்றியமைத்து அவைகளிலும் கூட பூரண பிரசவம் மேலும் சிசுபராமரித்தல் வசதிகளை அளித்துள்ளது.

©KTBS Not to be republished

இ) மக்கள் ஆரோக்கிய சேவைகளை பயன்படுத்தும் முன்னேற்றத்திற்கு நல செயலாற்றாளர்களை நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஈ) ஆரோக்கியம் மற்றும் போஷனைப் பற்றிய கல்வி, எச்சரிக்கை அளித்து உணவில் இரும்பு சத்து அதிகமுள்ளதாக செய்யும் செயலாக்கங்கள்.

உ) சிறப்பான தடுப்பூசிகள் அளித்து குழந்தைகளை பாதிக்கும் மரணத்தை ஏற்படுத்தும் நோய்களை கட்டுப்பாட்டில் வைப்பது.

ஊ) கர்பிணிகளுக்கு மற்றும் குழந்தைகளுக்கு முழுமையான சத்துக்களை அளித்து சத்துக்களற்றத் தன்மையை குறைப்பது. குழந்தைகள் வளர்ச்சி திட்டத்திலும் இதற்கு கொடை அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வெல்லா செயல்களும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியம் விருத்தியடைவதோடு இறப்பு அளவுகளை இன்னும் குறைப்பதில் உதவியாகிறது.

**ஆரோக்கிய குறிப்புகள் :**

ஒரு நாட்டு மக்களின் ஆரோக்கிய நிலைகளை அறிந்து கொள்ள சில குறிப்புகளை பயன்படுத்துகிறார்கள். எதிர்நோக்கும் ஆயுட்கால அளவு, சிசு இறப்பின் அளவு, குழந்தைகளின் இறப்பு அளவு மற்றும் தாய்மார்களின் இறப்பளவு.

**அ. எதிர்நோக்கும் ஆயுள்கால அளவு :** பிறந்த ஒவ்வொரு குழந்தை வாழந்துவரும் தோராய ஆண்டு.

**ஆ. சிசு இறப்பு அளவு :** ஒவ்வொரு ஆயிரம் பிறப்புகளில் ஒரு வருடத்திற்குள்ளாக இறப்புக்கு உள்ளாகும் சிசுக்களின் சராசரி எண்ணிக்கை

**குழந்தைகளின் இறப்பளவு :** ஒவ்வொரு ஆயிரம் மக்களில் ஐந்து ஆண்டுகட்குள்ளாக இறப்பை தழுவும் குழந்தைகளின் சராசரி எண்ணிக்கை

**தாய்மார்களின் இறப்பளவு :** ஒவ்வொரு இலட்ச மக்களில் இறப்பை தழுவும் தாய்மார்களின் சராசரி எண்ணிக்கை

**பயிற்சிகள்**

**I. கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை பூர்த்தி செய்க:**

1. தற்போது நாட்டிலுள்ள உற்பத்தி அறிவு, திறன் மற்றும் திறன்கள் பெற்றுள்ள உழைக்கும் மக்களை ---------- என்று அழைக்கிறோம்.
2. 2011-ல் இந்தியா பாலின விகிதம் -----------
3. இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஒவ்வொரு ------- ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறுகிறது.
4. ஒரு நாட்டின் மக்கள் தொகையின் குணஇயல்பை ------ மற்றும் -----ஐ சார்ந்துள்ளது.

© KTBS Not to be republished

5. ஒரு ஆண்டில் பிறந்த ஒவ்வொரு ஆயிரம் குழந்தைகளில் இறப்பைத் தழுவும் சிசுக்களின் சராசரி எண்ணிக்கையை -------- என்கிறோம்.

6. இந்தியாவில் பிறப்புகளின் அளவு -------- அமைந்திருப்பதினால் மக்கள் தொகை வளர்ச்சியின் அளவு அதிகமாகியுள்ளது.

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு வரியில் விடையளிக்கவும்.**

1. உழைக்கும் மக்கள் என்று யாரை குறிப்பிடுவார்கள்?
2. மனித செல்வ வளம் என்றால் என்ன?
3. 2011-ன் மக்கள் தொகையின்படி இந்தியாவின் மக்கள் தொகை எவ்வளவு?
4. பிறப்பளவு என்றால் என்ன?
5. 2011-ன் இந்தியாவின் பக்காவற்ற பிறப்பின் அளவு 22 மற்றும் பக்காவற்ற இறப்பு 6 உள்ளது. அவ்வாறெனில் பக்காவற்ற மக்கள் தொகை வளர்ச்சியை எவ்வாறு கண்டுபிடியுங்கள்.
6. 2011-ன் கணக்கெடுப்பின்படியின்படி இந்தியாவின் மக்களடர்த்தி எவ்வளவு?
7. முன்னேற்றமடைந்த நாடுகளில் மக்கள் தொகை வளர்ச்சியின் அளவு குறைந்துள்ளது.ஏன்?

**III. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஐந்தாறு வரிகளில் விடையளிக்கவும்.**

1. மக்களடர்த்தி என்றால் என்ன? ஒரு நாட்டின் மக்களடர்த்தியை எவ்வாறு கணக்கிடுகிறார்கள்?
2. உற்பத்திகளில் மனித மூலதனம் மிகவும் சிறந்தது என்று ஏன் கூறப்படுகிறது.?
3. மனித மூலதனத்தை ஏற்படுத்துவதில் ஆரோக்கியம் மற்றும் கல்வியின் பங்கு யாது?
4. முன்னேற்றமடைந்து வரும் நாடுகளில் மற்றும் மக்கள் தொகை வளர்ச்சி அதிகமாகியிருக்கும் ஏன்?
5. மக்கள் தொகையின் குணஇயல்பை அதிகரிக்க நீங்கள் எவ்விதமான செயல்களைக் குறிப்பிடுவீர்கள்?

**V. செயல் திட்டம்**

யாதாவது ஒரு கிராமத்திற்கு சென்று அங்குள்ள மக்கள் தொகையை கணக்கீடு செய்யுங்கள். அவர்களில் பெண்கள் மற்றும் ஆண்களின் எண்ணிக்கையை பிரித்து பாலின வேற்றுமையைக் கண்டுபிடியுங்கள்.

*****

©KTBS Not to be republished

## வணிகயியல்

### அத்தியாயம் - 1

# வணிக நிர்வாகம் (Management of Business)

**இவ்வத்தியாயத்தில் கீழ்க்காணும் அம்சங்களை அறிவீர்கள்.**

- வணிக நிர்வாகத்தின் பொருள்
- வணி நிர்வொகத்தின் கொள்கைகள்
- முடிவெடுக்கும் திறன் மற்றும் அதனுடைய முக்கியத்துவம்
- நிர்வாகத்தின் செயல்பாட்டு அளவு மற்றும் அதன் பரப்பளவு

***நிர்வாகத்தின் பொருள் மற்றும் விவரங்கள் :*** நிர்வாகம் என்னும் சொல்லின் பொருளை வெவ்வேறு வகைகளில் பயன் படுத்தப்படுகிறது. சாதரணமாக, நிர்வாகம் என்னும் சொல் ஒரு நிறுவனத்தின் செயல்பாடுகளை, ஒரு செயல்முறையை நிர்ணயிக்கும் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. நிர்வாகம் என்னும் சொல் கற்பது, அல்லது அறிவின் பிரிவு என்னும் பொருளிலும் பயன் படுத்தப்படுகிறது. ஜே.எல். ஹெயிஸ் அவரின் கூற்றுப்படி நிர்வாகம் என்பது மற்றவரிடமிருந்து வேலையை செய்விப்பது என்பதே ஒரு கலையாகும் ஜார்ஜ் ஆர் டெரி (George R Terry) அவரின்படி வேற்று" நிர்வாகம் செய்தல் என்பது மக்கள், மற்றும் வளங்களை பயன்படுத்தும் நிறுவனத்தின் நோக்கங்களின் முடிவுகள், மற்றும் ஈடேற்றுவதற்கான திட்டம், ஒழுங்குபடுத்துதல், தூண்டுதல், மற்றும் கட்டுப்பாடுகள் உள்ளடக்கிய ஒரு தனித்துவ செயலாக்கம் ஆகும்".

மேற்கண்ட விவரத்தின்படி தீர்மானிப்பது யாதெனில் நிர்வாகம் என்பது, நிறுவனத்தின் முன் எடுத்த முடிவுகளின் நோக்கங்களை ஈடேற்றுவதற்காக, மக்களின் முயற்சிகளை ஒன்று திரட்டி அவற்றை நிர்வகிப்பதின் மூலம் திட்டம், விதத்தில் ஒழுங்குபடுத்துதல் உழியர்களைசேர்த்தல். வழிகாட்டடல், Co-ordinating மற்றும் கட்டுப்படுத்துதல் ஒன்று கூட்டடல் போன்ற முக்கிய செயல்களை தொண்டிருக்கும்.

***நிர்வாகத்தின் கொள்கைகள்*** (Principles of Management) ஒரு வணிக நிறுவனம் சுமூகமாகவும், சிறந்தவிதத்தில் நிர்வாகம் செய்ய வேண்டுமெனில் சில கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டியது மிக முக்கியம். என்று ஹேன்றி பயோல் (Henry Fayol) குறிப்பிட்டுள்ளார்.

***1. செயற்பிரிவு*** (Divisin of Work) ***:*** தொழிலாளி அல்லது வேலையாட்களின் இடையில் அவர்கள் செய்யவேண்டிய வேலைகளை சரியான முறையில் பிரித்தளிக்க வேண்டும். இதனால், உற்பத்தி அதிகமாகும், இலாபம் அதிகம் சம்பாதிக்க ஏதுவாகிறது. உற்பத்தியில் உண்டாகும் இழப்பு (நஸ்ட்டம்)

©KTBS Not to be republished

குறைவாகும். இக் கொள்கையை நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

***2. அதிகாரம் மற்றும் பொறுப்பு*** (Authority and responsibility) ***:*** இக்கொள்கை அதிகாரம் மற்றும் பொறுப்புக்கு தொடர்புள்ளது. இவ்விரண்டு அம்சங்கள் நிர்வாகியின் அதிகாரம் மற்றும் தொழிலாளர்களிடம் உள்ள பொறுப்பைக்காட்டுகின்றன. இந்த அம்சங்கள் நிர்வாகிகளின் புத்திக்கூர்மைக்கு, இன்றைய அனுபவம், முன் அனுபவம் மற்றும் இயற்கை குணம் போன்றவைகள் கலந்திருக்கும்.

***3. ஒழுங்கு*** (Discipline) ***:*** இக்கொள்கை அதிகாரிகளுக்கு தொழிலாளிகளுக்கும் இடையில் செயலாற்றும் பண்புகளின் அனைத்து நிலைகளையும் பிரதிபலிக்கிறது. இப்பண்புகளின், ஒற்றுமை, சாதனைகளை அளிக்கிறது. மூத்த அதிகாரிகள் ஒழுக்கம் தூய்மை மற்றும் பராபட்ச மற்று இருக்கவேண்டும். இது சட்டத்திட்டங்களுக்குட்பட்டதாகவும். அபராதம் விதிப்பதாகவும் இருக்கவேண்டும்.

***4. கட்டளையின் ஒருங்கிணைப்பு*** (Unity of Commond) ***:*** இக்கொள்கையின்படி தொழிலாளர்கள் யாராவதும் ஒரு உயர் அதகாரியின் கட்டளைக்கு பணிந்து சொல்வதை குறிப்பிடுகிறது.

***5. வழிக்காட்டலின் ஒருங்கினைப்பு*** (Unity of Direction) ***:*** இக் கொள்கை ஒரே நோக்கத்துடன் கூடியுள்ள செயற்குழுவிற்கு ஒரு உத்தரவு வழங்க அறிவிக்கப்படுகிறது.

***6. தனிமனித நலனை பொதுநலனாக மாற்ற விரும்புதல்*** (Sub-ordination of Individual interest to General Interest) ***:*** இக் கொள்கை நிர்வாகத்தில் தனிநபர் நலனை முடிந்தளவு குறைப்பதில் ஒற்றுமையின்மையை பொது நோக்கங்களை அடைவதில் பிரதிபலிக்கக் கூடாது என்று கூறுகிறது.

***7. தொழிலாளர்களின் சம்பளம்*** **(Renumeration of Personnel)** ஊழியர்களுக்கு அளிக்கப்படும் சம்பளம் நேர்மையுடன்கூடியதாகவும் அனைத்துக் தொழிலாளர்களுக்கும் திருப்தி அளிப்பதாக இருக்கவேண்டும் என இக் கொள்கை கூறுகிறது.

***8. மையபடுத்தும் நிர்வாகம்*** (Centralisation) ***:*** இக்கொள்கையின்படி அதிகாரம் மையப்படுத்தி வியாபார குழுவுக்கு சிறந்தபலன் அளிக்கப்படுவதாக இருக்கவேண்டும்.

***9. உட்சங்கிலி*** (Scalar Chain) ***:*** இக் கொள்கையின்படி ஒவ்வொரு குழுமத்திலும் அதிகாரவர்கத்தின் நிலைகள் இருக்கவேண்டும்.

©KTBS Not to be republished

அதிகாரநிலைகள், அதிகார வர்க்கங்கள் மற்றும் கீழ் செயலாற்றுபவர்கள் இடையில் தெளிவான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

***10. சமம்*** (Equity) ***:*** இக்கொள்கையின்படி அதிகாரவர்க்கத்தினர் மற்றும் சாதாரண ஊழியர்களின் இடையில் சமபாவனை மற்றும் ஒன்றுபடும் தன்மைப் போன்ற குணங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

***11. ஊழியர்களின் அதிகார காலவரம்பு ஸ்திரம்*** (Stability of tenured Personnel) ***:*** வியாபாரக் குழுமங்கள் ஊழியர்களின் வேலையில் ஒரு திடநிலை இருக்கும் கொள்கைகளைக் கொண்டிருக்க வேண்டும். ஊழியர்களுக்கு வேலையில் ஸ்திரமின்மை, கெடுதியான குழுமங்களை ஏற்படுத்தக்கூடாது. ஊழியர்களுக்கு விரைவில் கெடுதல் உண்டாக்கும் குழுமங்களால் கெடுதல் உண்டாகிறது.

***12. பூர்வாங்க வேலைத்தொடக்கம்*** (Initiative) ***:*** நிர்வாகத்தின் மேற்பார்வை சமாதானமாகிருக்க வேண்டும். நிர்வாகம், அடிப்படை ஏற்பாடுகளை முழு அளவில் சிறப்பான திசையில் மேற்கொண்டு செல்லவேண்டும்.

***13. ஒற்றுமையில் பலம்*** (Espriative De-Corps) ***:*** இக் கொள்கையின்படி ஒரு நிர்வாகக்குழுமம் அனைத்து ஊழியர்களும் ஒன்றாக, தம்முடைய வேலையென்றும், குழும வேலையென்றும் செயல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

***தீர்மானங்களை மேற்கொள்வதன் முக்கியத்துவம் :*** வர்த்தக நிறுவனங்களில் உண்டாகும் அநேக பிரச்சனைகளுக்கு நல்லதீர்மானங்கள் பரிகாரம் அளிக்கின்றன. நல்ல தீர்மனித்தினால் குழுமங்கள் நல்ல இலாபத்தைப் பெற்று சமமான விதத்தில் நடந்துகொண்டு செல்கிறது. அவ்விதமே தவறான தீர்மானங்கள் குழுமத்தின் நட்டத்திற்குக் காரணமாகிறது. தீர்மானங்களை எடுத்துக் கொள்ளும் முன்னர், இவ்வம்சங்களை கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். அவைகள் சந்தர்ப்பம், அனுபவம், தீர்மானம், தைரியம் மற்றும் தெளிவு ஆகும்.

ஏதாவது ஒரு பிரச்சனையை தெளிவுப்படுத்தவேண்டுமென்றால் நல்ல தீர்மானம் மேற்க்கொள்வதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும். அதற்கு கீழ்க்காணும் அம்சங்களை கடைப்பிடிக்கவேண்டும்.

- பிரச்சனையை ஆராய்வது (Analysing the problem)
- செயல்களை மேற்கொள்ள திட்டங்களை ஏற்படுத்துவது.
- வீரம் மற்றும் பொறுமையை கடைப்பிடிப்பது.
- முன் ஆலோசனையை மனதில் கொள்ள வேண்டும்.



©KTBS Not to be republished

- *தீர்மானங்களை விரைவில் முடிவெடுக்கும் திறன்களைப் பெறுவது.*

***நிர்வாகச்செயலாற்றும்பகுதி*** (Functional areas of Management) :

*நிர்வாகத்தில் மற்றவர்களின் கடின உழைப்பின் மூலம் வேலை பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு செயலாகும். மற்றவர் மூலமாக வேலைகளை பெற நிர்வாகிக்கும் சொயல்பாடுகளை ஒரு முறையான விதத்தில் கடைப்பிடிக்கவேண்டும். இம்முறை செயல்பாடுகளை நிர்வகிக்கும் ஒழுங்குமுறை செயல்கள் என்பார்கள்.*

*நிர்வாக உழைப்புசெயல்களை வெவ்வேறு துறைகளின் மூலமாக நிர்வாகிக்க வேண்டும். இவைகளில் முக்கியமானவை*

*1)* திட்டமிடல் (Planning)

*2)* ஒழுங்குபடுத்துதல் (Organising)

*3)* ஊழியர்ளை அறிதல் (Staffing)

*4)* வழிகாட்டுதல் (Directing)

*5)* ஒன்றுகூட்டுதல் (Co- ordinating)

*6)* கட்டுப்பாடு (Controlling)

*1)* ***திட்டமிடல் :*** *இது நிர்வாக செயல்களில் ஒருமுக்கியமான பாகமாகும். திட்டமிடல் என்றால் வருங்கால வைப்பு செயல்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாக தீர்மானிப்பதாகும். திட்டமிடல் செயல்கள் நிறுவனத்தின் சாதனைக்கான நோக்கங்களுக்கு உத்தேசங்களின் தீர்மானம், நீதி செயல் நுணுக்கங்கள், செயற்திட்டம், காரியத்திட்டம் செயல் முறை மற்றும் அட்டவணை வரையறை முதலியற்றை பெற்றிருக்கும்.*

***குழுமம் :*** *குழுமம் என்றால் மனிதசக்தி மற்றும் இயற்கை வளங்களை ஒரே இடத்தில் சேர்ப்பதாகும். சில இயந்திரங்கள், மற்றும் இயந்திர உபகரணங்களின் இயற்கை வளங்கனை மனிதவளத்துடன் இணைத்து, செயலாற்றி நிறுவனத்தின் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதே குழுமத்தின் முக்கிய பணியாகயிருக்கும். இவ் அம்சத்திற்கு பிரதிநிதியை நியமித்து, துறைகளின் பிரதிநிதிகளுக்கு, பிரதிநிதியை நியமித்து, துறைகளின் பிரதிநிதிகளுக்கு பௌதிக சௌகரியங்களை அளித்து வெவ்வேறு ஊழியர்களுக்கு படிப்படியாக சம அளவில் செயலாற்ற பின்பற்றும்படி செய்யும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.*

**3.** ***ஊழியர்களின் தேவையை நிரப்புதல் :*** *இது குழுமத்தின் சரியான விதத்தில் நடந்த தேவையான ஊழியர்களை நியமனம் தேர்வு செய்தல்,*

©KTBS Not to be republished

இடமளிப்பு, பயிற்சி, வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் இவைகள் அனைத்தும் குழுமத்தின் உறுப்பினர்களுக்கு முக்கியமானவைகளாகும்.

4. ***வழிகாட்டல் :*** இவ்வம்சம் நிறுவனத்தின் நோக்கங்களின் சாதனைகளுக்காக நிறுவனத்தில் பணியாற்றும் மக்களுக்கு குறிப்புகளை அளித்தல், வழிகாட்டல், விசாரணை நடத்துதல் மேற்ப்பார்வையிடல் போன்றவைகள் இவர்களின் செயல்களாக இருக்கும். கீழ்க்காணும் நிலைகளில் செயல் ஆற்றுபவர்களுக்கு குறிப்புகள் மற்றும் கட்டளைகள் அளிக்கும். மற்றும், அக்கட்டளைகள் செயல்படுத்தப் படுகின்றனவா? மற்றும் செயல்களை வெற்றிகரமாக திட்டமிடப்படுகின்றணவா? என்பதை அறிவது.

5. ***ஒன்றுகூட்டல் :*** இவை திட்டமிடப்பட்ட நோக்கங்களின் சாதனைகளுக்காக வெவ்வேறு துறைகளின் அறிஞர்களின் மிக நுண்மையான கருத்துக்கள் ஒன்று கூட்டப்பட்டதாகிருக்கும். செயல்கள் ஒற்றுமையைபடிப்படியாக அமுல்படுத்தும் செயலை இவ்வம்சம் உட்கொண்டிருக்கும்.

6. ***கட்டுப்பாடு :*** இவ்வம்சம் குழுமத்தின் முக்கியமான செயல்களுக்கு தொடர்புடைய அம்சமாக உள்ளது. இது நிர்வாக செயல் மற்றும் அனைத்து செயல்பாடுகளிலும் பரவியுள்ளது. நிறுவனத்தின் ஒவ்வொரு கட்டுரையாளரும் அல்லது பிரதிநிதிகள் இங்கு செயலாற்றப்பட வேண்டியவர்களாகிறார்கள். இந்த அம்சத்தின் முக்கியநோக்கங்கள் வருமாறு:

   எ) நிறுவன ஒழுக்கத்தில் ஒரு சுற்றுச்சூழலை உருவாக்கி, செயல்பாடுகள் சரியான முறையில் ஒன்றுபட்டு நடைபெற பார்த்துக்கொள்வது.

   பி) திட்டங்களை உறுதிசெய்வதற்குமுன் மற்றும் நிரந்தரமாக செயல்பாடுகளை முன்நடத்திச் செல்வது.

   சி) நிறுவனத்திற்கு பயன்தரத்தக்க புத்திக்கூர்மையை அதிகரிக்கும்

## குழுமங்களின் தீர்மானம் செயற்பாடுகளில்

செயல் திறன் மற்றும் முடிவெடுக்கும் நிர்வாகத்தை நிர்ணயிக்கும் ஒரு மகத்துவ செயலாகும். இச்செயல்பாட்டில் மிகச்சிறப்பான ஒரு செயல்பாட்டை தேர்ந்தெடுத்துக் கொள்வதாகும்.

***தீர்மானங்களை எடுக்க வேண்டியதின் அவசியம்*** (Dicision making) ***:*** தீர்மானங்களை நிர்ணயங்கள் என்றும் கூறுவார்கள். ஒவ்வொரு வர்த்தக

© KTBS Not to be republished

குழுமமும் தனதேயான நோக்கம் மற்றும் உத்தேசங்களைக் கொண்டிருக்கும். இந் நோக்கம் மற்றும் உத்தேசங்களை ஈடேற்றிக் கொள்ள ஒரு தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். சிறிய விஷயங்களிலும் கூட அநேக வகையான தேர்ந்தெடுத்தல் இருக்கும். எடுத்துக்காட்டாக ஒரு வியாபாரி பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். அவனுக்கு பொருட்களை கொண்டு செல்ல லாரி, டெம்போ, இரயில் அல்லது விமானங்கள் மூலமான வாய்ப்புகள் உள்ளன. அவன் இவைகளில் எது மிகவும் சரியானது, குறைந்த செலவில் சேதமற்று கொண்டு செல்ல முடியுமோ அதனைத் தேர்வு செய்து கொள்கின்றான். இத்தேர்வை முடிவுசெய்வது அல்லது தீர்மானம் என்றுகூறுகிறோம். இத்தீர்மானங்கள் வியாபாரத்தில் மிகவும் முக்கிய பங்கை வகிக்கின்றன. உத்தம தீர்மானங்களை எடுப்பது வியாபாரப் பார்வையில் மிகவும் சரியான செயலாகும். தற்போது இந்தியாவில் முன்னேற்றம் கண்டுள்ள வெவ்வேறு வகையான வர்த்தக நிறுவனங்கள் நடைமுறைகள் வந்துள்ளன. வரும் ஆண்டுகளில் இன்னும் அதிகளவு விலையில் சந்தைகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் திட்டங்களை பகுதிகளாகக்குவதும் குழுமத்திற்கு வாய்ப்பு அதிகமுள்ளது. அதனால் உத்தமமான முடிவுகளை மேற்கொள்ளும் அவசியம் அதிகமுள்ளது தீர்மானங்களை பின்பற்றும் வகைகளை பரந்தநோக்கத்துடன் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1) தனிநபர் தீர்மானங்கள் 2) குழு தீர்மானங்கள்

தனிநபர் உரிமையுள்ள சிறிய அளவிலான வர்த்தகக் குழுமங்களில் தனிநபர் ஒருவரே தீர்மானங்களை மேற்கொள்கிறார். இவைகளை தனிநபர் தீர்மானங்கள் என்று கூறுகிறோம். இத்தீர்மானங்கள் தனிநபரின் திறன்களுக்கு அடிப்படையாக இருக்கும்.

ஒரு குழுவினர் மேற்கொள்ளும் தீர்மானங்களை குழு தீர்மானங்கள் என்று கூறுகிறோம். கூட்டாளி நிறுவனங்களிலும் கூட முதலீடு நிறுவனங்கள் கூட்டுறவு நிறுவனங்கள், மேற்கொள்ளும் தீர்மானங்களும் குழுத்தீர் மானங்களாகும்.

தீர்மானங்களை மேற்கொள்ள கடைப்பிடிக்கவேண்டிய அடிப்படைக் கொள்கைகள் :

- நோக்கங்களை ஸ்திரபடுத்துவது
- நோக்கங்களின் செயல்
- மாற்று தீர்மானங்களை கண்டறிவது
- திட்டங்களை விருத்திசெய்தல்
- விவேகமான பகுத்தறிவுள்ள திட்டங்களை யோசித்தல்
- நிலை
- ஆய்வு செய்வது



©KTBS Not to be republished

## பயிற்சிகள்

1. கீழ்க் காணும் வினாக்களுக்கு ஓரிரண்டு வாக்கியங்களில் விடை எழுதுக.
   1) நிர்வாகம் என்றால் என்ன?
   2) தீர்மானம் மேற் கொள்வது என்றால் என்ன?
   3) தனிநபர் தீர்மானம் அல்லது குழு தீர்மானங்கள் என்றால் என்ன?
   4) நிர்வாகக் கொள்கைகள் அதிகாரம் மற்றும் பொறுப்பு இவற்றின் கொள்கைகள் யாவை?

2. கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கு அல்லது ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக.
   1) ஹென்றி பயோலரின்படி நிர்வாகத்தின் கொள்கைகள் யாவை?
   2) நிர்வாகத்தின் செயல்கள் யாவை? பெயர் எழுது.
   3) அதிகாரம் மற்றும் பொறுப்பு, விருத்திசங்கிலி மற்றும் மையப் படுத்தப்பட்டக் கொள்கைகள் நிர்வாக நிறுவனக் கொள்கைகளை எழுது.
   4) வர்த்தக நிர்வாகத்தில் தீர்மானங்கள் பெற்றுகொள்வதன் முக்கியத்துவம் யாது?
   5) தீர்மானச் செயல்களில் இயற்கை சக்திகள் பற்றி முக்கிய அடிப்படைக் கொள்கைகள் யாவை?
   6) தீர்மானங்கள் மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் யாவை?
   7) திட்டங்கள் மற்றும் குழுமங்கள், தீர்மானங்களில்முக்கிய செயல்களில் கொண்டுள்ள பங்குயாது?
   8) கட்டுப்பாடு நிர்வாகச்செயல்களில் மிகவும் முக்கியமானது எது?
   9) கட்டுப்பாடு மிகமுக்கிய நோக்கங்கள் யாவை?
   10) வழிகாட்டல் மற்றும், பொருந்துதல், வர்த்தகம், நிர்வாகத்தில் முக்கிய பங்கை வகிக்கின்றன எவ்வாறு?

**செயல்பாடு :**

1) உங்கள் அருகாமையில் உள்ள யாராவது தனிமனித நலனின் வியாபாரியை சந்தித்து அவர்மூலமாக நாள்தோரும் எவ்வாறு தீர்மானங்களை மேற்கொள்கிறார் என்பதை அறிந்து கட்டுரை எழுது.

*****



©KTBS Not to be republished